T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XLIV. NO: 4 and 5

March 12 and 14. 1983

D
V211,31 'N83
N83.44.4&5
135994

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1983, மார்ச் 12

மாசி 28, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.''

தாம் இன்பம் அடைவதற்குக் காரணமான கல்வியால், உலகமும் இன்புறுவதைக் கண்டு கற்றறிந்த அறிஞர் மேன் மேலும் அக் கல்வியையே விரும்புவர்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### திருநெல்வேலி மேற்கு மின்திட்ட கோட்டப் பொறியாளர் அலுவலகம்

*வினா எண். 383—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மேற்கு மின்சாரக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை அம்பாசமுத்திரத்தில் செயல்படுத்த எடுக்கப்பட்ட முடிவை ஆண்டு பலவாகியும் இதுவரை அமுலுக்கு கொண்டு வரப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இக்கோட்டப் பொறியாளர் அலுவலகம் திருநெல்வேலியிலிருந்து மாற்றப்பட்டு 24—1—1983 முதல் கல்லிடைக் குறிச்சியில் இயங்கி வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, மேற்கு மின்சாரக் கோட்டப் பொறியாளருடைய அலுவலகத்தை அம்பாசமுத்திரத்திலே செயல்படுத்த வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டு எப்போது உத்தரவிடப்பட்டது? இப்போது 24—1—83 முதல் கல்லிடைக்குறிச்சியில் இயங்குவதாகச் சொல்கிறார்கள். அம்பாசமுத்திரத்திலே செயல்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இது குறித்து வேறு விவரங்கள் என்ன இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்திற்கு மாற்றப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படவில்லை. அம்பாசமுத்திரத்தில் கோட்ட அலுவலகம் வைக்க வேண்டுமென்று 27—9—1979 அன்று நடந்த தென் திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் பரிந்துரைத்தது. ஆனால் அது திருநெல்வேலியில் இருப்பது தான் நிர்வாகத்திற்கு உகந்தது என்று மின்வாரியம் முடிவு எடுத்திருக்கிறது. வருவாய்த் துறை பிரிவு, பொறியியல் பிரிவு இரண்டையும் சேர்த்து ஒரே மையமாக ஆக்கவேண்டுமென்று அண்மையில் மேற்கொண்ட கொள்கை முடிவின்படி வருவாய்ப் பிரிவு அலுவலகம் எங்கெங்கு இருக்கின்றதோ அங்கு கோட்ட மின்பொறியாளர் அலுவலகமும் மாற்றப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையிலே கல்லிடைக்குறிச்சியில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்திற்கு வராவிட்டாலும் இந்த அலுவலகம் கல்லிடைக்குறிச்சி வந்ததற்கு மகிழ்ச்சி. நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இந்த அலுவலகம் 79-லே அங்கே ஆரம்பிப்பது என்ற நிலை எடுத்ததற்கு பிறகு, நான்கு ஆண்டு காலம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே இருப்பதை விட இங்கே இருப்பது தான் நல்லது என்று சொல்வதைவிட அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் நகரத்தை விட்டு வருவதற்கு தயாராக இல்லை. அந்த நிலை காரணமாகத்தான் காலதாமதம் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அரசு போட்ட உத்தரவை காலதாமதப் படுத்திய அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதம் எப்போது வருகிறதென்றால் முடிவு எடுத்த பிறகு நிறைவேற்றுவதில் வருகிறது. ஆனால் இங்கே அம்பாசமுத்திரத்திற்கு மாற்றுவதாக முடிவே எடுக்கப்படவில்லை. அந்த அலுவலகம் திருநெல்வேலியில் இருப்பதே நிர்வாக வசதிக்கு ஏற்றது என்கிற நிலையை மின்வாரியம் கடை பிடித்து வந்தது. ஆகவே காலதாமதம் என்கிற பிரச்னையே இல்லை. நாம் அண்மையில் எடுத்த கொள்கை முடிவின்படி தமிழ் நாடு முழுவதும் எங்கெங்கு ரெவின்யூ யூனிட் இருக்கின்றதோ அங்கே டிவிஷனல் ஹெட் குவார்ட்டர்ஸ் இருக்கவேண்டுமென்ற அமைப்பிலே நாம் முடிவு எடுத்ததற்கு ஏற்ப இப்போது மாற்றப்பட்டிருக்கிறது.

## வேலூர் மின்வாரியம் மேற்கொள்ளும் மின் பயனீட்டளவை அட்டைப்பட்டியல் கணக்கீட்டு முறை.

*வினா எண். 384—திரு. ஏ. என். பூங்காவனம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூரில் மின்சார வாரியம் எடுக்கும் மின் கணக்கீட்டை எடுக்கக்கூடாது என்று நீதிமன்றத்தில் தடை வாங்கியுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) வடஆற்காடு மாவட்ட மின் நுகர்வோர் சார்பாக வடஆற்காடு மாவட்டத்தில் மின் பயனீட்டளவை அட்டைப் பட்டியல் முறையில் கணக்கிட்டு வசூலிப்பதை நிறுத்தக் கோரி வேலூர் மாவட்ட முன்சீப்கோர்ட்டில் 27—2—1982 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவில் கூறப்பட்ட வாதங்கள் சரியில்லாததால் மேற்படி மனு, கூடுதல் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அட்டைப்பட்டியல் முறையை அமுல்படுத்துவதை நிறுத்தி வைக்க, தடை உத்தரவு வேலூர் முதன்மை கூடுதல் துணை நீதி மன்றத்தில் மேற்படி மனுதாரர் பெற்றுள்ளார். இந்த இடைக்கால தடை உத்தரவை நீக்குவதற்காக மேற்கொண்டு எடுக்கப்பட்ட துரித நடவடிக்கையின் காரணமாக இந்த உத்தரவும் நீக்கப்பட்டுள்ளது. அதற்கு பிறகு உயர்நீமன்றத்திற்கும் அவர் சென்றார். உயர்நீதிமன்றத்திலேயும் தளளுபடி செய்யப்பட்டது.

D 1
V2I1,31 N83
N83-84-4 F5

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகம்
135994
சென்னை-600 009.

S.No-141/55(i)

உள்ளடக்கம்.

12—3—1983.

| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்—<br>உடுக்குறியிட்ட வினாக்கள். | 469—503 |
| 2. | தகவல் கோரல்— | |
| | (அ) மகாத்மா காந்தி திரைப்படம் காண நிருபர்களுக்கு பாஸ். .. .. | 503 |
| | (ஆ) விடுதியில் உறுப்பினர்களுக்கான வசதிகள் .. .. .. .. | 503—505 |
| | (இ) நாளேடுகளில் அவையின் நடவடிக்கை வெளியிடப் பெறுவது. .. .. | 505—506 |
| | (ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. .. .. | 506 |
| 3. | ஒத்திவைப்புத் தீர்மானம்—<br>கோவில்பட்டி வெங்கடசாமி நாயுடு கல்லூரி மாணவர்கள் போராட்டம் .. | 507—513 |
| 4. | கவன ஈர்ப்பு—<br>சென்னை, இராயபுரம் பவர்குப்பம் தீ விபத்து | 514—518 |
| 5. | வரவு—செலவுத் திட்டம், 1983-84—பொது விவாதம்— தொடர்ச்சி. | 518—560<br>571—602 |
| | திரு. ப. நெடுமாறன் | 518—531, 555 |
| | திரு. குமரி அனந்தன் | 532—551 |
| | திரு. சோ. அழகர்சாமி | 552—560<br>571—577 |
| | திரு. என். சங்கரய்யா | 578—601 |
| 6. | ஒழுங்குப் பிரச்சினை—<br>வெளியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அவையில் விவாதிப்பது .. .. | 561—570 |
| 7. | அறிவிப்பு—<br>பேரவை அலுவல் .. .. .. | 603 |
| 8. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 604 |

[1983 மார்ச் 12

**திரு. என். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை வாங்கியதன் காரணமக அந்த மாவட்டத்தில் மின்சார பாக்கிகள் எவ்வளவு இருக்கின்றன? இப்போது அதை வசூலிப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தடை ஒரு நேரத்தில் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து இப்போது வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆகையினால் நிலுவை என்று செல்வது சரியல்ல.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தடைக்காலத்தில் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் மின் கட்டணத்தை காலாகாலத்தில் செலுத்துவதில் சங்கடங்கள் எற்பட்டிருக்கிற காரணத்தால் மின் பாக்கி கூடியிருப்பதை இன்றைக்குக் கணக்கில் எடுத்துக் கொண்டு சென்றமாதம் கூட என்னுடைய தொகுதியில் பள்ளிக்குப்பம் ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதியிலே விவசாயிகளுடைய மின் இணைப்புகளை எல்லாம் துண்டித்திருக்கிறார்கள். மொத்த பாக்கியையும் வசூலிக்கவேண்டும் என்று அங்கே நிர்ப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர்க்கிற முறையிலே அரசு மின் பாக்கிகளை கொஞ்சம் கொஞ்சமாக வசூலிப்பதற்கும் மின் துண்டிப்பைச் செய்யாமல் இருப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நீதி மன்றத்தின் தடை காரணமாக பணம் செலுத்த முடியாமல் போய் இருக்குமானால் அந்தப் பணம் விவசாயிகளிடத்திலே இருந்ததாகத்தான் பொருள். ஆகவே நீதி மன்றத் தடை நீங்கியபிறகு கட்டவேண்டியதுதான் நியாயம். அப்படி இருக்க, அதை நாங்கள் கட்டமாட்டோம் என்று சொல்லி, மின்சாரத்தை துண்டிக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. மொத்தமாக தொகை வருகிறது என்றால் மொத்தமாக வைத்திருந்து கட்டவேண்டியதுதான்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் கணக்கீட்டை எடுக்க தடை திருவண்ணாமலை மின் திட்டத்தையும் கட்டுப்படுத்துகிறதா? திருவண்ணாமலைப் பகுதியிலே மின்கணக்கீட்டு முறை சரியாக எடுக்கபடாமல் பல மாதங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படுகிறது. அதனால் பணம் கட்டுகின்ற விவசாயிகள் அதைச் சேர்த்து கட்டவேண்டிய ஒரு சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கையை வாரியம் எடுக்கப்போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மின் திட்டத்தை மட்டும்தான் இது கட்டுப்படுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது வேலூர் மின் வாரியத்தைப் பற்றிய கேள்வி. இதில் திருவண்ணாமலையை பற்றிக் கேட்டால் எப்படி அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். எனவே மூலக் கேள்வியை ஒட்டித் துணைக்கேள்விகள் கேட்கப்படவேண்டும்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, மின் வாரியத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய முயற்சியால் ஸ்பாட் பில்லிங் என்ற முறையிலே ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், உயர்நீதி மன்றத்திலே வழக்கைத் தொடுத்து, அதற்காகத் தடையும் வாங்கி அந்தப் பணியைச் செய்யாமல் — குறிப்பாக மின் வாரியத்திலே பணிபுரிகின்ற காசாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வேலை செய்யாமல் — சம்பளத்தை மட்டும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மின் வாரியம் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது உண்மை. சுமார் 1800 காசாளர்கள் வேலை செய்யாமல் சம்பளம் பெறுகின்ற நிலைமை இருக்கிறது. இது நீதிக்கு நாம் தரும் விலை.

**திரு. இல. பலராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்பாட் பில்லிங் முறையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லது உபயோகிப்பவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அறிவார்களா? அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டிய நன் அடிப்படை நோக்கம் என்ன? அவர்கள் ஏன் ஸ்டே வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது? என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? மேலும் சில இடங்களில் 4 மாதங்கள், 6 மாதங்கள் என்ற அளவுக்கு கூட மீட்டர் ரீடிங் எடுக்காமல் ஒட்டுமொத்தமாக பில்களை கொடுக்கிறார்கள். அதைத் தவணை முறையில் கட்டுவதற்கான ஒரு அறிவுறையை வேலூர் திட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 12

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறையினால் பாதிக்கப் பட்டார்கள் என்று சொல்லுவது சரியல்ல. ஏன் என்றால், ஏற்கனவே பில்களே அவர்களுக்கு வராமல் இருந்தது. அதனால் தான் இந்த முறையை மாற்றி, அங்கேயே கணக்கிட்டு பில் போட்டுத்தருகின்ற முறை வந்திருக்கிறது. (குறுக்கீடு). முறை யினால் தவறு இல்லை என்று சொல்கிறார்கள். இதில் என்ன குறை என்றால் ஒருசிலர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அவர் களுடைய சங்கங்களுக்கு இடையே இருக்கும் பிரச்னை காரண மாக, அதே நேரத்தில் ஏற்கனவே அவர்கள் போட்டு இருக்கின்ற ஒப்பந்தத்தை இது மீறியிருக்கிறது என்று காரணத்தைக் காட்டியும் அவர்கள் நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். நீதி மன்றத்தில் தடை கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்கக் கோரி நாமும் நம்முடைய வழக்கறிஞர்கள் மூலமாக வற்புறுத்தி வருகிறோம். இருப்பினும் கிட்டத்தட்ட இந்த முறை அமுலுக்கு வந்தது 15—9—82. அன்றிலிருந்து இன்று வரை இதில் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. விரைவிலே அதை எடுத்து பரிசீலிக்கவேண்டுமென்று நீதி மன்றத்தை நாம் வற்புறுத்தி வருகிறோம். இதுதான் இன் றைக்கு உள்ள நிலைமை.

### பூதூர் கிராம பால் உற்பத்தியாளர் சங்கம்.

*வினா எண். 385—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யுளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியம் பூதூர் கிராம பால் உற்பத்தியாளர் சங்கத்தில் முறைகேடுகள் நடந்திருப்பது குறித்து அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) உறுப்பினர் குறிப் பிட்டுள்ள பூதூர் கிராமப்பால் உற்பத்தியாளர் சங்கத்தில் முறைகேடுகள் நடந்திருப்பதாகத் தெரியவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1983 மார்ச் 12]

### கிண்டியிலுள்ள ரசாயனப் பரிசோதனை நிலையத்தை நவீனப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 386—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கிண்டியில் உள்ள ரசாயனப் பரிசோதனை நிலை யத்தை (C.T.A.L.) நவீனப்படுத்த திட்டம் உண்டா?

(ஆ) 1981-1982-ல் எத்தனை பரிசோதனைகள் நடத் தப்பட்டது?

(இ) அதன்மூலம் வருமானம் எவ்வளவு?

(ஈ) மதுரையில் உள்ள நிலையம் நவீனமாக புதுப் பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) கிண்டி யிலுள்ள ரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம் ஏற் கனவே நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டில் 10,176 பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.

(இ) 1981-82ஆம் ஆண்டில் கிண்டி ஆய்வகத்தில பரிசோ தனைக் கட்டணமாக வசூலான தொகை ரு. 1,94 இலட்சம் ஆகும்.

(ஈ) மதுரையிலுள்ள மண்டல பகுப்பாய்வுக் கூடம் 1972 ல் தொடங்கப்பட்டபோது, தொழிலகங்களின் பரிசோதனைத் தேவைகளை ஒட்டி இது நவீன முறையில் ஏற்படுத்தப்பட்டது. மேலும் இவ்வாய்வகத்தல் அவ்வப்போது தேவைப்படுகையில், கூடுதலாக நவீன சாதனங்கள் நிறுவப்படுகின்றன.

(முற்பகல் 9-10)

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிண்டியில் உள்ள இரசாயன பரிசோதனை நிலையத்தை நவீனப்படுத்தியிருப் பதாகத் தெரிவித்தார்கள். ஏராளமான பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு பண வசூல் அதிகமாக ஆகியிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் மாநகராட்சி மூலம் அனுப்பப் படுகிற பாலில் கலப்படம் செய்யப்படுகிறது, உணவில் கலப்படம் செய்யப்படுகிறது, அதேபோல சாராயத் தில்கூட கலப்படம் செய்யப்படுகிறது என்று அதிகாரிகள் அவற்றை பரிசோதனைக்கு அனுப்பினாலும் சம்பந்தப்பட் டவர்கள் பரிசோதனை செய்கிற இடத்திற்கே சென்று சுலபமாக அங்குள்ள அதிகாரிகளைக் கண்டு சரியான தகவல் கள் கிடைப்பதற்கான வழிவகை செய்யமுடியாததொரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதைக் கட்டுப்படுத்த அமைச் சர் அவர்கள் வழிவகுப்பார்களா?

[1983 மார்ச் 12

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அப்படி எந்த நிறுவனத்திலும் முறைகேடுகள் இருப்பதாக என்னிடம் தகவல் இல்லை. அப்படி தகவல்களைத் தெளிவாகக் கூறும்போது அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இன்று அன்றாட வாழ்க்கையில் கலப்படம் என்பது பிரிக்கமுடியாத ஒன்றாக அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருளாக — இதை பரம்பொருள் என்று சொல்வது பொருத்தமாயிருக்காது—எங்கும் நிறைந்திருக்கிற ஒன்றாகயிருக்கிறது மக்களின் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு துறைகளில். எனவே இந்த இரசாயன பரிசோதனை நிலையத்தை கொஞ்சம் பரவலாக்கி மாவட்டத்திற்கு ஒன்றாக அதிகப்படியாக ஏற்படுத்துவோமானால் அதன் மூலமாக ஏராளமான பரிசோதனைகள் செய்து மக்களுக்கு நன்மை கிடைக்க வாய்ப்பிருக்கிறது. எனவே சென்னையில் இருப்பது போல் மாவட்டத்திற்கு ஒன்றாக இப்படிப்பட்ட இரசாயன பரிசோதனை நிலையத்தை நிறுவ அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இப்போது சென்னையில் மட்டுமல்ல, மதுரையிலும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலனை செய்யப்படும்.

## நாகர்கோயிலிலுள்ள அருள்மிகு நாகராஜா கோயிலைச் சேர்ந்த தேரிலிருந்து களவு போன பொம்மைகள்

*வினா எண். 387—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பிரசித்திபெற்ற கோயிலான அருள்மிகு நாகராஜா கோயிலைச் சேர்ந்த தேரில் இருந்து விலை மதிக்க முடியாத மரச்சிலைகளும், பொம்மைகளும் திருடு போய் இருப்பதாக அரசுக்குத் தகவல் வந்ததா?

(ஆ) இதனால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

(இ) திருப்பி தேரில் மரச்சிலைகளையும், பொம்மைகளையும் வைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



1983 மார்ச் 12]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) குமரி மாவட்டம், நாகர்கோயிலுள்ள அருள்மிகு நாகராஜா கோயிலைச் சார்ந்த தேர் 12—1—1981 அன்று நடைபெற இருந்த தேரோட்டத்திற்காக 11—1—1981 அன்று தேர்ப்புரையை அப்புறப்படுத்தியபோது தேரிலிருந்த பொம்மைகளில் சுமார் 120 பொம்மைகள் களவாடப்பட்டு இருந்தன என்று தெரிய வந்தது. மேற்கண்ட பொம்மைகளின் உத்தேச மதிப்பு ரூ. 2,700 ஆகும். காவல் துறையில் வழக்கு ஒன்று பதிவு செய்யப் பெற்றுள்ளது.

(இ) புதிதாக பொம்மைகள் செய்து வைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்க ஆலய செயல் அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டு, நாகர்கோவிலில் தேர் யூனிட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டு பொம்மைகள் பொருத்தும் வேலை நடவடிக்கையில் உள்ளது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தேரோடும் வீதியில் தங்கியிருப்பதே சிறப்பு என்று ஆன்றோர்கள் சொல்வார்கள். ஆனால் தேரில் உள்ள சிலைகளை அல்லது பொம்மைகளை திருடுவது என்பது அனேகமாக அடிக்கடி நடைபெறுகிறதொரு வாடிக்கை நிகழ்ச்சியாக ஆகிவிட்டது. ஆகவே திருடு போயிருக்கிற இந்த மரச் சிலைகளை உடனடியாக திருப்பி அதிலே புதிதாக அமைப்பதற்குரிய ஏற்பாடுகளை அரசு விரைவில் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தேர் யூனிட்டுக்கு அந்த பொம்மைகள் செய்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றது என்று பதிலிலேயே தெரிவித்திருக்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேரில் திருடுபோன மரச் சிலைகளின் மதிப்பு ரூ. 2,700 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக, இந்த மரச் சிலைகளின் விலைகள் குறைவாக இருந்தாலும், இந்த மரச் சிலைகள் வெளிநாடுகளிலுள்ள 5 ஸ்டார், 6 ஸ்டார் போன்ற விடுதிகளிலும், அதேபோல் உயர்ந்த விடுதிகளிலும் அந்த மரச் சிலைகளுக்கு பெயின்ட் அடித்து, நவீனப்படுத்தி, ஒரு கலையம்சம் பொருந்திய நிலையில் அவைகள் உயர்ந்த விலைக்கு விற்கப்படுகின்றன. சமீபத்தில்கூட, ஸ்ரீரங்கத்தில் தேரில் மரப் பொம்மைகள் களவாடப்பட்டிருக்கின்றன. எனவே, இதற்கு நல்ல பாதுகாப்பு ஏற்பாட்டை அரசு செய்து, இனிமேல் இப்படிப்பட்ட திருடுகள் நிகழாமல் இருப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தேர்கள் எல்லாம் தெருவிலே நிறுத்தப்படுகின்றன. மேலும், அவைகளுக்கு மேலே கொட்டகைகள் அமைத்து, அவைகள் மூடி வைக்கப்பட்டிருக்கும். ஆகவே, அதற்குள்ளே ஆட்கள் சில நேரங்களில் நுழைந்து, அந்தப் பொம்மைகளை களவாடுகிறார்கள். சமீப காலத்தில்தான், தேரில் பொம்மைகள் களவாடப்படுகின்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முன்னாலே அப்படி இருந்திருக்கலாம். ஆனால், இப்போதுதான் அதிகமான செய்திகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும், இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு, தீவிரமாக இதைப் போக்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்ற அறிவுரை வழங்கப்பட்டிருக்கின்றது.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தேரைப் பாதுகாப்பதற்காக, திருவிழா முடிந்த பின்னா அதன்மேல் கூடாரம் அடிக்கிறார்கள். ஆனால் திருவிழா முடிந்த பின்னால் சாதாரணமாக சூதாட்டம் ஆடுபவர்களும் , கள்ளச்சாராயம் விற்பவர்களும், அதற்குள்ளே புகுந்து, தவறான காரியங்களில் ஈடுபடுகின்ற நிலைமை, சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையில் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நல்லமுறையில் பாதுகாப்பதற்காகத் தான் நடவடிக்கை எடுக்கிறோம். அப்படி செய்கின்றபோது, அதற்குள்ளே சில சமுதாய விரோதிகள் நுழைந்து சூதாடுவது அல்லது சாராயம் குடிப்பதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டால், அதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உட்பட, பொதுமக்கள் எல்லோருமே அதைப் பாதுகாப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டால், அதைத் தடுக்க முடியும்.

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், பிரசித்திபெற்ற நாகராஜசாமி கோவிலில் சிலைகளும், பொம்மைகளும் திருடு போனது சம்பந்தமாகச் சொல்லப்பட்டது. அந்தக் கோயிலில் இதைப் பாதுகாப்பதற்கு பாதுகாவலர் இல்லையா? அல்லது அந்தத் தேரைப் பாதுகாக்க, அதற்குமேல் கொட்டகையை அமைத்து, அதை பூட்டிவைக்க வேண்டுமென்று இனிமேலாவது ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முன்னர் தெரிவித்ததுபோல், தேரைப் பாதுகாப்பதற்காக காவலர் போடுவது இல்லை. காரணம், தேர்கள் தெருவிலே நிறுத்தப்படுகின்றன. இருந்தாலும், அவைகளுக்கு மேலே பெரிய கொட்டகைகள் போட்டு மூடப்பட்டிருக்கின்றன அல்லது ஒரு காம்பவுண்டைக் கட்டி பாதுகாக்கப்





படுவதற்கு இட வசதியை, பொருள் வசதியைப் பொறுத்து பந்தோபஸ்து அமைக்கப்படுகின்றது. இருந்தாலும், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருப்பதற்கு தக்க முன்னேற்பாடுகள் செய்யவேண்டுமென்று துறைக்கு அறிவித்திருக்கிறோம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேரில் இருக்கின்ற சிலைகளின் மதிப்பு ரூ. 2,700 என்ற அளவுக்கு திருடுபோனதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இது சம்பந்தமாக, காவல் துறைக்குப் புகார் 'கெய்யப்பட்டதா? யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, காவல் துறைக்குப் புகார் செய்யப்பட்டு, வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கின்றது என்று நான் பதிலிலேயே தெரிவித்திருக்கிறேன். ஆனால், காவல் துறையினர் இன்னும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

## மகாகவி பாரதியார் உருவம் பொறித்த நாணயம் வெளியிடும் திட்டம்

வினா எண் 388—**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாகவி பாரதியார் உருவம் பொறித்த நாணயம் வெளியிட வேண்டுமென்று மாநில அரசு மைய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) ஆம்.

(ஆ) மகாகவி பாரதியார் உருவம் பொறித்த நாணயம் வெளியிட வேண்டுமென்று மாநில அரசு, மைய அரசுக்கு பரிந்துரை செய்தது. அதற்கு தனி நபர்களின் உருவம் பொறித்த நாணயம் வெளியிடுவதில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு மகாகவி பாரதியார் உருவம் பொறித்த நாணயத்தை வெளியிட வேண்டுமென்று எழுதியும், அவர்கள் தனி மனிதர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பில்லை என்று மத்திய அரசு எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், மகாகவி பாரதியாரைப் பொறுத்தவரையில், 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று இந்த இந்திய நாட்டின் விடுதலைக்காக வித்திட்ட பெரியவர்களில் ஒருவர். ஆகவே, அவரை தனி மனிதர் என்று கருத வேண்டிய அவசியமில்லை. அவர் ஒரு மாபெரும் கவிஞர். விடுதலைக்காக போராடியவர்களில் அவரும் ஒருவராக இருக்கிறார். அந்த காரணத்தினால், அவரை ஒரு தனி மனிதர் என்று கருதாமல், அவரைச் சிறப்பிக்கும் வகையில் மீண்டும் நம் அரசு மத்திய அரசுக்கு எழுதி, அவரது உருவம் பொறித்த நாணயத்தை வெளியிட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியப் பிரதமர் உட்பட மத்தியிலே சம்பந்தப்பட்ட எல்லோருக்குமே தெரிவித்தாகிவிட்டது. அவர்கள் அதை கொள்கை முடிவாக ஏற்றுக்கொள்ள இயலாது என்று தெரிவித்தார்கள். ஆகவே மீண்டும் அதை வற்புறுத்துவதிலே பலன் இல்லை என்று அரசு முடிவு செய்துவிட்டது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த நூற்றாண்டு விழாவையொட்டி நாணயம் தான் வெளியிட முடியவில்லை என்ற நிலை இருந்தாலும்கூட தபால் தலை வெளியிட வேண்டுமென்று அரசாங்கம் ஏற்கெனவே ஆலோசனை கூறியது. அதைப்பற்றி ஏதாவது மத்திய அரசாங்கம் பதில் எழுதி இருக்கிறதா, அதன்மீது தமிழக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தபால் தலையைப் பொறுத்தவரை, மகாகவி பாரதியாருக்கு முன்பே ஒரு முறை மத்திய அரசு தபால் தலை வெளியிட்டிருப்பதால் இரண்டாம் முறை தபால் தலை வெளியிட இயலாது என்று சொல்லிவிட்டார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : அமைச்சரவர்கள் பதிலுரைக்கும்போது, தனியார் ஒருவருக்கு இப்படிப்பட்ட நாணயம் வெளியிட மத்திய அரசு விருப்பம் தெரிவிக்கவில்லை என்று சொன்னார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தி போன்ற வரலாற்றுத் தலைவர்களுக்கெல்லாம் நாணயம்



வெளியிட மத்திய அரசு அனுமதி கொடுத்துவிட்டு, தொடர்ந்து தென் மாநிலங்களுக்கு யாருக்காவது நாணயம் வெளியிட அனுமதி அளித்திருக்கிறதா? மீண்டும் அதை வலியுறுத்துகிற அளவில் சட்டசபையில், பாரதியாரின் நாணயத்தை வெளியிடுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு உத்தமர் காந்தி அடிகள் அவர்களுக்கும், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கும் உருவம் பொறித்த நாணயம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு வேறு தனிப்பட்டவருடைய உருவம் பொறித்த நாணயம் வெளியிடுவதில்லை என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இதிலே வட இந்தியத் தலைவர், தென்னிந்தியத் தலைவர் என்பது அல்ல. மகாகவி சுப்ரமண்ய பாரதியார் இந்தியா முழுவதிற்கும் கிடைத்த ஒரு மகத்தான தலைவர் என்பதை மத்திய அரசு உணர்ந்து கொண்டு, அவர்கள் நடவடிக்கையில் ஈடுபட முன்வந்தால் தான், அது நியாயமாக இருக்கும்—சரியாகவும் இருக்கும். ஆகவே இதிலே போய் தீர்மானத்தையெல்லாம் நிறைவேற்றி அவர்களை வற்புறுத்துவதில் பலன் இல்லை என்பதை இந்த அரசு முடிவாக்க கொண்டிருக்கிறது.

## பெருந்துறை வட்டத்திலுள்ள ராக்கியண்ணன் மாசிரியாத்தாள் கோவிலை அறக்கட்டளையின் கீழ் கொண்டுவரும் திட்டம்

*வினா எண் 389—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம் அப்பச்சிமார்மடம் என்ற ஊரிலுள்ள ராக்கியண்ணன்—மாசிரியாத்தாள் கோவிலை அறக்கட்டளையின் கீழ் கொண்டுவர அரசிற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ஒன்று *அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

*605ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவ ரவர்களே, பெருந்துறை கிராமத்திலுள்ள அப்பச்சிமார் மடம் என்று கூறப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே கேட்டிருக்கிற கேள்வி சரியில்லை என்று அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற வார்த்தைகள் சரியில்லை—என்று அமைச்சர் அவர்கள் உணர்ந்து முதலிலே அது சரியா, இல்லையா என்று சம்பந்தப் பட்ட இலாகாவிலிருந்து அறிக்கை வாங்கி அறிவிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரபபன் : கேள்வி, பெருந் துறை வட்டம் அப்பச்சிமார் மடம் என்ற ஊரிலுள்ள ராக்கி யண்ணன் மசிரியாத்தாள் கோவிலைப் பற்றியது. ஆகவேதான் அந்தக் கேள்வியே சரியாகயில்லை என்று இங்கே சொல்லியிருக் கிறார்கள். அப்பச்சிமார் மடம் என்று அழைக்கப்படுகிற ஒரு மடமும் கோயிலும் இருக்கிறதே தவிர, ஒரு கிராமம்— ஊர் இல்லை. அதைத்தான் இப்பொழுது இங்கே சொல்லி யிருக்கிறோம். ஊர் பெயர் திங்களூர்—அந்த கிராமத்தி லுள்ள அப்பச்சி மடம்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவ ரவர்களே, திங்களூர் தனி கிராமம். இந்த மடம் என்கிற பெயரில் அழைக்கப்படும் அப்பச்சிமார் மடம் என்பது தனி கிராமம். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்ளவதோடு 1969-ஆம் ஆண்டு கோயில்களை அரசு எடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்ட பின்பு, நூற்றுக்கணக்கான ஏக்கரும், லட்சக்கணக்கான வரு மானம் வரக்கூடிய அந்தக் கோயிலை காலதாமதமாக எடுப்பதற்கான காரணம் என்னவென்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வர் அவர்களே, இதே அப்பச்சி மடத்தைப் பற்றிய கேள்வி ஒன்று 1981ஆம் ஆண்டு கேட்கப்பட்டு அதற்கு விரிவான பதில் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அன்றைக்கு நான்மிகத் தெளிவாக இந்த மடத்தைப் பற்றியும் அதிலே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறவர் பற்றியும் எல்லாம் இந்த அவை யிலே தெரிவித்து இருக்கிறேன். அதற்குப் பின்னாலே. மீண் டும் ஒரு துணை ஆணையரிடத்தில், அதுபொது ஆலயம்அல்லஎன்று ஒரு தீர்ப்பைப் பெற்றிருந்தார். அதற்கு பிறகு, நாம் எடுத்த நடவடிக்கையின் பயனாக ஆணையர் அவர்கள் தன்னிச்சை யாகவே அது ஒரு பொது ஆலயம்தான் என்று அறிவிக்கை பிறப்பித்து, அதற்கான நடவடிக்கை எடுத்தார்கள். அதற்கு மேலேதான் திடீரென்று அவர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று





இப்பொழுது தடை ஆணை பெற்றிருக்கிறார். அந்தத் தடை ஆணை யில் ரிட் மனு மீது தீர்ப்பு வருகிற வரையில் இதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று அவர் தடை ஆணை பெற்றிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 390, 391 ஆகியவை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சருடைய வேண்டுகோளுக்குகிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

### சங்கனூர், கண்ணப்பநகர் பகுதியை மேட்டுப்பாளையம் சாலையோடு இணைக்கும் பணி.

*வினா எண் 392—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை நகராட்சிக்குட்பட்ட சங்கனூர் கண் ணப்பநகர் பகுதியை மேட்டுப்பாளையம் சாலையோடு இணைக் கின்ற சாலைப் பணி துவக்கப்பட்டு விட்டதா?

(ஆ) இப்பணியினுடைய திட்ட செலவு எவ்வளவு?

(இ) இத்திட்டம் எப்பொழுது முடிவுறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ), (ஆ) மற்றும் (இ) : கோவை மாநகராட்சிக்குட்பட்ட சங்கனூர், கண்ணப்ப நகர் பகுதியை மேட்டுபாளையம் சாலையோடு இணைக்கின்ற சாலைப் பணியினை கோவைநெடுஞ்சாலை கிராமப் பணித்துறை யினரிடம் Deposit work ஆக ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டப்பணிக்கு செலவு சுமார் ரூ. 6.50 இலட்சமாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான மேல் நடவடிக்கைகள் அத்துறையினரால் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இணைப்புச் சாலை அமைக்கப்பட்டால், கோவை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருக்கிற சங்கனூர் பகுதி — ஓரளவு பிற்படுத்தப்பட்ட பகுதியினுடைய வளர்ச் சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். ஆகவே, இந்தச் சாலைப் பணியை எவ்வளவுக் காலக் கெடுவில் செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்தப் பணியோடு இந்தப் பகுதியிலே வேறு எந்த சாலைப்பணிகள், அரசாங்கத் கத்தின் ஒப்படைப்பு மூலமாக, ஹைவேஸ் ஒப்படைப்பு மூலமாக செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தச் சாலைப் பணி இந்த ஆண்டிலே முடிவடையும். மேலும் மாநகராட்சிப் பகுதியிலே ஏறத்தாழ 15 சாலைகளை நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையின் மூலமாகச் செய்வதற்காக ஏறத்தாழ ரூ. 90 இலட்சம் செலவில் பல்வேறு சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, மாநகராட்சியினுடைய பகுதியிலுள்ள எல்லா சாலைகளையுமே புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிப் பகுதியில் போடப்படும் 'ஆஸ்பால் கான்கிரீட்' என்ற சாலை மிகச்சிறந்த முறையில் அமைந்திருக்கிறது. இது போன்ற சாலைகளுக்கும் அபிவிருத்தி பணிகளுக்கும் தமிழக அரசு மாநகராட்சிக்கு எவ்வளவு நிதி உதவி தந்திருக்கிறது? இதில் வேறு ஏதாவது திட்டங்களை நிறைவேற்றுவதற்கான உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆஸ்பால் கான்கிரீட் என்பது சாதாரணமாகப் போடக்கூடிய தார் ரோடுகளைக் காட்டிலும் ஏறத்தாழ 3 மடங்கு அதிக விலையுடையது. ஆகவேதான் இப்பொழுது போடக்கூடிய சாலைகள் எல்லாம் ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு இருக்கும் என்ற அடிப்படையில்தான் போடப்பட்டு வருகின்றன. அதுவும் குறிப்பாக, மாநகராட்சியைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தினுடைய மானியம் இதுவரையிலும் கொடுக்கப்படாவிட்டாலுங்கூட, இந்த அரசாங்கத்தின் மூலமாகப் பல்வேறு உதவிகளைப் பெற்று, மாநகராட்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மாநகராட்சியின் பணத்தின்மூலமாகத்தான் அவைகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9.30)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியோடு அண்மைக்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் ஏற்கெனவே அபிவிருத்தி அடையாத பகுதிகளாக பஞ்சாயத்துக்கள் இருந்தன. இந்த இடங்களுக்கு உடனடியாக ரோடுகள் தேவை என்ற கோரிக்கை மக்களிடத்திலிருந்து ஏராளமாக மாநகராட்சிக்கு வந்திருக்கிறது. இந்த சங்கனூர் ரோடை மேட்டுப்பாளையம் ரோடோடு இணைப்பது என்பது நீண்ட நாளைக்குத் தடைப்படுத்தாமல் உடனே நிறைவேற்ற வேண்டிய அளவு தொழிற்சாலைகள் நிறைந்த இடம் அது. அது நிறைவேற்றப்படுவதற்கும் புதிய ஆடட் ஏரியாக்களில், ரோடுக்காக வந்திருக்கக்கூடிய காரியங்களை நிறைவேற்றுவதற்கும் ஏதாவது குறிப்பான திட்டத்தை அரசு இந்த மாநகராட்சிக்குத் தெரிவித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவரவர்களே, இருக்கின்ற சிவானந்த நகர் பகுதியை அந்தச் சாலையோடு இணைக்கின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநகராட்சியோடு புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் இதுபோன்றவேலைகளைச் செய்வதற்கான திட்டங்களை அமல்படுத்த இருக்கிறோம். ஆனால் மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டபொழுது ஏறத்தாழ ஏழு பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அந்த ஏழு பஞ்சாயத்துக்களுக்கும் பழைய பஞ்சாயத்து வரிகளே இன்னமும் வசூலிக்கப்படுகின்றதே தவிர, மாநகராட்சி புதிய வரிகளை இன்னும் வசூலிக்கவில்லை. ஆனாலும், இந்த அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு புதிய வரிகளைப் போடுவது சரியாக இருக்கும் என்ற முறையை நாம் கையாண்டு வருகிறோம்.

*Over Bridge at Mettur Railway Crossing.*

* Q No. 393.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to State:

(a) Whether there are proposals under the consideration of the Government to construct an over bridge at Mettur Railway Crossing on the Kodai Road—Dindigul Section shortly; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இந்த இடத்தில் சாலை மேம்பாலம் கட்டும் திட்டங்கள் மத்திய அரசினால் 1976-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இரயில்வே வற்புறுத்தியதன் பேரில் திருத்தப்பட்ட நேர்பாட்டின் (alignment) அடிப்படையில் ரூபாய் 64 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் திருத்திய மதிப்பீடு முடிவாக்கப்பட்டு மத்திய அரசுக்கு தொழில் நுட்ப ஒப்புதலுக்கும் நிதி அனுமதிக்காகவும் அனுப்பப்பட்டு உள்ளது. இது விஷயம் மத்திய அரசுடன் கடிதப் போக்குவரத்தில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரையிலே திண்டுக்கல் நெடுஞ்சாலையில் இருக்கின்ற மேட்டூர் அருகே இருக்கின்ற இந்த இரயில்வே கேட் வழியாக மிக அதிகமான அளவிற்கு வாகனங்கள் செல்வதால் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகளுக்கு மிகுந்த இடற்பாடுகள் ஏற்படுகின்றன. எனவே, விரைவிலே இந்த மேம்பாலத்தைக் கட்டி முடிப்பதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே 1976ஆம் ஆண்டில் மைய அரசு ஒப்புதல் அளித்துவிட்டதாகச் சொன்னார்கள். இவ்வளவு காலதாமதத்திற்கு என்ன காரணம்?

[1983 மார்ச் 12

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவரவர்களே, காலதாமதத்துற்கு மத்திய அரசுதான் காரணம். ஏனென்றால், இந்த மேம்பால வேலை உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று பல்வேறு முறைகளில் நாம் கடிதம் எழுதினோம். ஆனால், அவர்கள் சில விதிமுறைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். முன்பு 25,000 ட்ரெயின் வெகிகிள் இருந்தாலே மேம்பாலம் கட்டலாம். ஆனால் மைய அரசு இதுபோன்ற இரயில்வே பாலங்களைக் கட்டும் பொழுது ஒரு லட்சம் ட்ரெயின் வெகிகிள் இருக்க வேண்டும் என்பதாக விதிமுறையை மாற்றினார்கள். ஆனால், நாங்கள் 25,000-மே இருக்கட்டும் என்று எழுதிக் கேட்டதற்குப் பிறகு 50,000 ட்ரெயின் வெகிகிள் என்ற அளவில் வைத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் சொன்னதால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு பல ஆண்டுகளாகியும் இவைகளுக்கு உடனடியாகப் பணம் கொடுப்பதில்லை. இது தேசீய நெடுஞ்சாலை நம்பர் 7-லே இருக்கிறது. இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று தனியாக நேரிலேயும் திரு. வீரேந்திர பாட்டீல் அவர்களிடத்தில் பேசினேன். ஆனால் அவர்கள் கூறுவது, இதுபோன்ற இரயில்வே மேம்பால்ங்களுக்கே லோ பிரையாரிட்டி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் போன்றவர்கள் நேரடியாக அமைச்சரைச் சந்தித்துக் கேட்கக் கூடிய வாய்ப்பினைப் பெற்றவர்கள். ஆகவே தயவு கூர்ந்து அவர்கள் மத்திய அமைச்சரிடத்திலிருந்து நிதியைப் பெற்றுத்தருவார்களேயானால் உடனடியாக வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பாலம் என்பதிலே இன்றைக்குக் கருத்து வேறுபாடு இல்லை. நான்சொல்வது 1976ஆம் ஆண்டிலே ஒப்புதல் அளிக்கப்பட்டு, சுமார் 64 இலட்சம் ரூபாய்க்குத் திருத்திய மதிப்பீடு முடிவாக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாள்தோறும் விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது. போக்குவரத்தும் மிக அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது எனவே, மத்திய அரசு மாநில அரசு என்று சொல்லிக்கொண்டிருப்பதை விட, இது தேசீய நெடுஞ்சாலையாக இருப்பதால் இதில் முனைந்து இந்த ஆண்டிலேயாவது, அதாவது 1983-84 ஆம் ஆண்டிலேயாவது தொடங்குவதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

---



1983 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவரவர்களே, தேசீய நெடுஞ்சாலகளைப் பொறுத்தவரையில் அதற்குரிய பணத்தைக் கொடுக்க வேண்டியது மைய அரசுதான். மாநில அரசு வேலைகளைச் செய்து முடிக்கிறதே தவிர, ஒரு ஏஜன்சி மாதிரி இவைகள் செய்யப்பட்டு வருகின்றனவே தவிர, மாநில அரசின் பணம் இல்லை. எனவே மத்திய அரசு எதையெதைக் கொடுக்க வேண்டுமோ அவைகளை உரிய காலத்தில் கொடுத்தால் நாம் நடவடிக்கைகளை உரிய காலத்தில் எடுத்து அந்தப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்படும்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த மதுரை—திண்டுக்கல் நெடுஞ்சாலைப் பகுதியிலே உள்ள இந்த மேட்டூர் பகுதி மிகவும் ஆபத்தான வளைவுகளைக் கொண்ட பகுதியாகவும், சமீப காலங்களில் மிக அதிகமான விபத்துக்கள் நடக்கின்ற பகுதியாகவும் இருக்கிறது. எனவே, இது 1976ஆம் ஆண்டிலிருந்து ஆய்வில் இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, இதற்கு முன்னுரிமை கொடுத்து அந்த மேம்பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கு நம்முடைய அரசு முன் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல பல்வேறு நேரங்களில் நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். It is a dangerous curve என்று அங்கேயே போர்ட் எழுதி வைத்து இருக்கிறோம். ஆகவே, அதை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லி, மத்திய அரசுக்குப் பல்வேறு முறைகளில் சொல்லியிருக்கிறோம். பண வசதி இல்லை. நிதி வசதி போதுமானதாக இல்லை என்று அந்த நிலைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற பணிகளுக்கு உடனடியாக உத்தரவிடுவது நல்லது. இந்த அவை மூலம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக அதற்கான உத்தரவுகளை இடவேண்டும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மெட்டூர் கேட், என்னுடைய சொந்த ஊரான நிலக்கோட்டையில் இருக்கிறது. 1975ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எமர்ஜென்சி இருந்த நேரத்தில் அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 1976-ல் அது ஒப்புக்கொள்ளப்பட்டு, மீண்டும் அது லாபகரமானதாக இல்லை என்ற அடிப்படையில் மத்திய அரசால் நிறுத்தி வைக்கப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக இதற்காகப் பெருமுயற்சி எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மத்திய அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மாநில அரசு இதற்காகச் சொல்லி இப்போது 80 லட்ச ரூபாய் அளவிற்கு சாங்சன் ஆர்டர் கொடுத்து, நில ஆர்ஜிதப் பணிகள் செய்ய

வேண்டும் என்று அரசாணை காப்பி எனக்கு வந்து இருக்கிறது. எனவே கனம் அமைச்சர் அவர்கள், கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது போல், வெகு விரைவிலேயே அந்தப் பால வேலைகளை ஆரம்பிக்கவேண்டுமென்றுமிகப் பணிவோடு கேட்டுக் கொள்வதோடு அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவர் அவர்களே, திட்டத்திற்கு ஒப்புதல் என்பது வேறு. நிதி ஒப்புதல் என்பது இன்னொன்று. ஆகவே, திட்டங்களுக்கு ஒப்புதல் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் நிதிகொடுக்கிற அந்த நிலைமைகளை அவர்கள பார்ப்பது இல்லை. உங்களுக்கு அனுப்பியிருக்கிற கடிதம் இங்கேயிருக்கும் தேசிய நெடுஞ்சாலைத்துறை பொறியாள ரிடமிருந்து அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று தான் வந்திருக்கும். நாம் எழுதியுள்ள கடிதத்தின் மூலம் 50,000 ட்ரெயின் வெஹிகிள் என்ற அடிப்படையில் பணம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அவர்கள் இந்த நிலைமைக ளையெல்லாம் அனுசரித்து உடனடியாக பண வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். எவ்வளவு சீக்கிர மாக அவர்களிடமிருந்து நிதிகளைப் பெறுகிறோமோ அவ்வளவு சீக்கிரமாக அந்தப் பணிகள் முடிவு அடையும்.

### திருவாரூரில் அமைக்கப்பட்டுவரும் மேம்பாலம்

வினா எண் 394—திரு. எம். செல்லமுத்து, திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் அமைக்கப்பட்டு வரும் மேம்பால வேலை காலதாமதமாகி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) பாலம் அமைக்கும் வேலை எப்போது முடியும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : (அ) ஆம்

(ஆ) ஒப்பந்தக்காரர் ஈட்டுக்கோரிக்கைகளுக்காக திருச்சி துணை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததன் பேரில், இத்துறை யின் ஒப்பந்த உடன்படிக்கை விதிமுறைகளின்படி இத்துறையின் நடுவரிடம் (arbitrato: முறையின்படி ஒப்பந்தக்காரர் நீதிமன்றத் தால் பணிக்கப்பட்டார். நடுவரின் தீர்ப்புக்கு பின்னரும் ஒப்பந்தக் காரர் வேலைகளைச் செய்யவில்லை. எனினும் நீதிமன்ற மரபுகளை பின்பற்றி, வேலைகளை முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கின்றது.

(இ) இவ்வேலை 1983 அக்டோபரில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



### தேவிப்பட்டினம்—தோட்டாமங்களம் சாலைப்பணி

*வினா எண். 395—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தேவகோட்டை தேவிப்பட்டினம் ரோட்டிலிருந்து தோட்டாமங்களம் ரோட்டிற்கு மெட்டல் கிராவல் அடித்து சுமார் பதினைந்து வருடங்கள் ஆகியும் இன்னும் பரப்பப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : (அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களே, முன்பு செய்யப்பட்ட சாலைப்பணிகளில் மெட்டல் கிராவல் போடப்படவில்லை. தாமதத்திற்குப் பொறுப்பான வர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் முறையான நிதி வசதி ஏற்படுத்தி இச்சாலைப் பணியை ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும்.

**திரு. செ. சிவசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, 15 வருஷங்களாக அந்த ரோட்டிலே கிராவலும் மெட்டலும் போடப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நான் பல நேரங்களில் அந்த ரோட்டில் சென்று பார்த்து இருக் கிறேன். அங்கே கிராவல் காணப்படவில்லை. மெட்டலும் காணப்படவில்லை. ஆகவே, அது இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, சில இடங்களில் மெட்டல் போடவேண்டும் என்று சாங்ஷன் பெற்று, அங்கே மெட்டல் போடாமல் பில் மட்டும் போடப்பட்டு இருக்கும். கண்மாய் கரை கட்டாமலேயே, கண்மாய்க் கரையைக் காட்டி பில் போடப்பட்டு இருக்கும். இந்த நிலைமைகளை நாம் நன்றாக அறிவோம். இப்படிப்பட்ட நிலைமை இந்த ரோடுக்குப் ஏற்பட்டு இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவர் அவர்களே, அங்கே போடப்பட்ட மெட்டல், கிராவல் போன்றவைகளை எல்லாம் இன்று புதையுண்டு போய் இருக்கின்றன என்ற தன் மையில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் 15 ஆண்டு காலத்திற்கு முன்பு போடப்பட்ட மெட்டல், கிராவல் போன்றவற்றையெல்லாம் புதை-பொருள் ஆராய்ச்சி மூலம் தான் தோண்டி எடுக்கவேண்டும் என்ற நிலைமை இருக் கிறது. அப்படி தோண்டியெடுப்பது அதிகச் செலவாகும்

என்பதால், புதிதாகவே மெட்டல் கிராவல் போட்டு அந்தச் சாலையை அமைத்து விடலாமா என்று அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, புதைபொருள் ஆராய்ச்சி செய்து அந்த மெட்டல், கிராவல் போட்டு இருக்கிறார்களா என்று புதைபொருள் ஆராய்ச்சி செய்துதான் கண்டுபிடிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட வேலையைச் செய்வதைவிட புதிதாக மெட்டல் கிராவல் போட்டு அந்தச் சாலையை அமைத்து விடலாம் என்று அரசு யோசித்து வருவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை விரைவாகச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நானும் அந்தப் பின்னணியில் தான் சொல்லியிருக்கிறேன். இதற்கு முன்பு இருந்த ஆட்சிக்காலத்தில் அந்தச் சாலை போடப்பட்டு இருக்கவேண்டும். ஆனால், போடப்படவில்லை. அதற்குப் பின்னால் வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசுதான் அந்தச் சாலையைப் போடுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. அந்த சாலையை இதுவரையில் போடாமல் காலதாமதம் செய்ததற்குப் பொறுப்பானவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இனிமேல் அங்கே போடப்பட்டுள்ளதா என்று தோண்டிப்பார்த்து புதைபொருள் ஆராய்ச்சி செய்வதை விட புதிதாகவே மெட்டல், கிராவல் போன்றவைகளைப் போடுவது சரியாக இருக்கும் என்ற எண்ணத்தைத்தான் நாமும் பிரதிபலித்துக் கொண்டு இருக்கிறோம்.

(முற்பகல் 9-40)

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்த போது அங்கே பல ரோடுகளுக்கு மெட்டல் போடுவதற்காக கொண்டுவந்து கொட்டி வைக்கப்பட்டிருந்தும் ரோடு போடப்படவில்லை. அது அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த மாதிரியான இடங்களில் உடனடியாக மெட்டல் போட்டு, அந்த ரோடுகளைச் செம்மையாகப் போட அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, முன்பெல்லாம் நெடுஞ்சாலைத் துறை (கிராமப்பணிகள்) யினர் மெட்டலையும் கிராவலையும் போடுவார்கள். 6 மாதம் அல்ல, ஓராண்டு காலம் ஆனாலும் அந்த மெட்டலும், கிராவலும் ரோட்டிலே போடப்படாமல், காற்றிலேயும் தண்ணீரிலேயும்



அடித்துச் செல்லும் நிலை இருந்தது. ஆனால், இப்போது அந்த நிலை இல்லை. எப்போது மெட்டல் கொண்டுவந்து கொட்டுகிறார்களோ அதிலிருந்து மூன்று மாதத்திற்குள்ளாக ரோட்டிலே போட்டு செம்மைப்படுத்திவிட வேண்டும். இல்லை என்றால், யார் யார் அதற்கான பொறுப்பிலே இருக்கிறார்களோ அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த தேவகோட்டை ரோடு ஏற்கனவே முன்பிருந்த ஆட்சியில் போடப்பட்டிருக்கவேண்டுமென்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். போட வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஜல்லியும், கிராவலும் போடப்பட்டு புதைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ரோடு போடாமல் அப்படி புதைந்து போவதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இது இராஜசிங்கமங்கலம் பற்றிய கேள்வி. வடாற்காடு மாவட்டத்திலே இருக்கிற கலசப்பாக்கம் தொகுதியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் கேள்வி போடுகிறார்கள். அதற்குக் காரணம் ஏதோ முன்பிருந்த ஆட்சி என்று சொன்னதால் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்தப் பணி இராஜசிங்கமங்கலத்தில் நிதிவசதி இல்லாத காரணத்தால் பணி முற்றுப்பெறவில்லை. பணவசதி இல்லாமலிருந்த போதிலும் மெட்டல், கிராவல் போடச்சொல்லி, காண்ட்ராக்டரிடம் விட்டுவிட்டார்கள். காண்ட்ராக்டர் மெட்டல், கிராவல் போட்டார்கள். அந்தப் பணி தொடர்ந்து நடந்திருக்க வேண்டும். ஆனால், பணம் இல்லாத நேரத்தில் போடப்பட்டதால், அந்தப் பணி விடுபட்டுவிட்டது. அதற்குக் காரணம் அதிகாரிகளே தவிர, அரசாங்கம் அல்ல என்பதைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதுதான் இது நடைபெற்றது. ஆனாலும்கூட உடனடியாக இந்தச் சாலைப் பணியை மேற்கொள்வதற்கான நடவடிக்கையை எடுக்கிறோம்.

### 1978-1979, 1979-1980 ஆம் ஆண்டுகளில் நர்ஸ் பயிற்சி பெற்றவர்களிடமிருந்து வேலை கேட்டு வந்த விண்ணப்பங்கள்

*வினா எண். 396— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நர்சு பயிற்சி பெற்றவர்களிடமிருந்து வேலை கேட்டு 1978-1979, 1979-1980 ஆம் ஆண்டுகளில் எத்தனை விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன?

(ஆ) எத்தனை பேர் இதுவரை நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) 1978 ஆம் ஆண்டில் 158 விண்ணப்பங்களும், 1979ல் 172 விண்ணப்பங்களும் , 1980ல் 231 விண்ணப்பங்களும் தேறிய செவிலியர்களிடமிருந்து கிடைக்கப்பெற்று அவர்கள் அனைவருக்கும் வேலை அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இந்த நர்சு பயிற்சி பெற்றவர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா? அவர்களுக்கு பணி தரப்படுகிற நிலைமை தற்போது எப்படி இருக்கிறது? விண்ணப்பம் செய்தவுடன் வேலை கிடைக்கும் நிலைமை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். மூலக்கேள்வி 1978, 1979 ஆம் ஆண்டுகளைப் பற்றியது. நான் 1980 ஆம் ஆண்டின் நிலைமையையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறேன். 1981-ல் யார், யார் விண்ணப்பம் கொடுத்தார்களோ அத்தனை பேர்களுக்கும் வேலை கிடைத்திருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, இந்த நர்சு பயிற்சிக்கு எடுக்கக்கூடிய மாணவிகள் 10வது வகுப்பு தேறியிருந்தால் போதுமா அல்லது பிளஸ் 2 முடித்தவர்கள்தான் எடுக்கப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பிளஸ் 2 ஆக மாற்றப்பட்டிருக்கிறது.



திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த நர்ஸ் பயிற்சிக்கு அதிகப்படியானவர்களே எடுக்கவேண்டும் என்றும், நர்ஸ்களுடைய சேவைக்கு ஆள் போடுவதில் பெரும் கஷ்டம் ஆஸ்பத்திரிகளில் இருப்பதாகவும் இருக்கக்கூடிய இந்த சூழ்நிலையில், இவ்வளவு குறைந்த அளவு விண்ணப்பங்கள் வருவதற்கு என்ன காரணம்? பயிற்சி எடுத்தவர்களே இவ்வளவு குறைவானவர்களா? அப்படியானால் இப்பயிற்சியை எடுக்க ஏன் அவர்கள் விரும்பி வருவதில்லை. பயிற்சிக் காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஸ்டைபண்ட் கூட மிகவும் குறைவாக இருக்கிறது என்பது உண்மையா? அப்படியானால் அரசு என்ன நடவடிக்கையை எடுக்கயிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதன் மூலக் கேள்வி 1978-79 ஆம் ஆண்டைப் பற்றியதாகும். தற்போது நிலைமைகள் மாறி இருக்கின்றன. தற்போது இருக்கக்கூடிய புள்ளி விவரத்தின் அடிப்படையிலே 1981 ஆம் ஆண்டிலே ஜனவரி மாதத்தில், ஸ்டைபண்ட் வாங்கியவர்கள் 410 பேர்கள் பயிற்சி பெற்றனர். ஜூன் மாதத்தில் ஸ்டைபண்ட், வாங்கி பயிற்சி பெற்றவர்கள் 280 பேர்கள், நான்-ஸ்டைபெண்டிரியாக ஜனவரி மாதம் 23 பேருக்கும், ஜூலை மாதம் 24 பேர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்பு 80 பேர்கள் 70 பேர்களுக்கு மட்டுமே பயிற்சி அளித்து வந்த நிலைமை மாறி, நமது புரட்சித் தலைவர் அவர்களது ஆட்சி வந்தபிறகு கிட்டத்தட்ட 690 பேர்களுக்கு ஸ்டைபண்ட் அளித்து பயிற்சி கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தனியாகத் தொழில் நடத்தி வரும் L.I.M., R.I.M.P., பதிவுபெற்ற மருத்துவர்கள்

*வினா எண். 397—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியாகத் தொழில் நடத்திவரும் L.I.M. R.I.M.P. பதிவு பெற்ற மருத்துவர்களை பயன்படுத்தி குடும்ப நலத் திட்டத்தைப் பரப்ப மாவட்டங்கள்தோறும் கருத்தரங்குகள் (Seminar) நடத்தப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில் அவர்கள் எந்தெந்த முறையில் அந்த பணிக்கு பயன்படுத்தப்படுவார்கள்?

[1983 மார்ச் 12

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) குடும்பநலத் திட்ட கருத்தரங்குகளில் பயிற்சிபெறும் தனியார் இந்திய மருத்துவர்கள், தங்களுக்குத் தெரிந்த வட்டாரங்களிலும், தங்களிடம் வரும் நோயாளிகளிடமும், குடும்பநலத் திட்டத்தின் அவசியம் பற்றி எடுத்துக் கூறி அதைப் பின்பற்றுவதற்கு ஆலோசனை வழங்கும் வாய்ப்புள்ளது. இத்துடன் இந்திய மருத்துவ முறைகளில் குடும்பத்தைக் கட்டுப்படுத்தும் முறைகளிருப்பின் அவைகளை நவீனப்படுத்தி மக்கள் மத்தியில் அவர்கள் பரப்ப இயலும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, எல். ஐ. எம்., ஆர். ஐ. எம். பி. போன்றவர்கள் சில இடங்களில் அந்த கருத்தடை சிகிச்சைகளில் ஈடுபட்டு மருத்துவம் பார்க்கின்ற காரணத்தால், தாய்மார்களே இறக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்கும் நல்ல பயிற்சியை அளித்து, அதற்குப் பிறகு அவர்கள் இந்த சிகிச்சைகளில் ஈடுபட வேண்டும் என்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி அந்தக் கருத்தரங்குகளில் அவர்கள் பங்கு பெற்று அதற்குப் பயன்படுத்தப்படுகிறார்களா? அதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பது. அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட கருத்தரங்குகளை நடத்திக் கொண்டு வருறோம் என்பதே அளிக்கப்பட்ட பதில்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதில் நான் புரிந்து கொண்டது சரியாக இருந்தால், எம்.டி. என்று சொல்லப்படுகிற மெடிகல் டெர்மினேஷன் ஆப் பிரக்னன்ஸியைப் பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப் பொருத்தவரையில் எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர்களே, அந்தத் துறையில் பயிற்சி இருந்தால்தான், அந்த மருத்துவச் சிகிச்சையில் ஈடுபட முடியும். பயிற்சி இருந்தால்தான், அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு வாய்புத்தர முடியும் என்று விதி இருக்கிறது.

சிங்கம்புணிரியில் பயன்படுத்தப்படாமலுள்ள மருத்துவமனைக் கட்டிடம்

*வினா. எண் 398—திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணிரியில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள அரசு மருத்துவமனைக் கட்டிடம் உபயோகப் படுத்தப் படாமல் உள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அக்கட்டிடத்தில் குழந்தைகள் பிரிவு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



1983 மார்ச் 12]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) இக்கட்டிடம் பழுதடைந்து உள்ளதால் இதனை பழுதுபார்க்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. பழுதுபார்க்கப்பட்டவுடன் தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் 1952-ல் பெருந்தலைவர் காமராசர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தக் கட்டிடத்திலே உள்ள ஜன்னல்களில்தான் பழுதுபார்க்க வேண்டிய நிலை இருக்கிறதேயொழிய பெரிய அளவில் பழுது ஒன்றும் இல்லாமல் நல்ல நிலைமையிலேயே இருக்கிறது. பி.டபிள்யூ.டி. துறைக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் இடையிலே இதனை யார் மேற்கொள்வது என்கிற வகையில் தகராறுகள் இருப்பதன் காரணமாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, குறுகிய காலத்தில் அந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அத்தகைய தகராறுகள் எல்லாம் தீர்க்கப்பட்டு, அந்தக் கட்டிடத்தைப் பழுதுபார்த்துக் கொண்டு வருகிறோம். இன்னும் 6 மாதங்களில் அது முழுமையாக ரிப்பேர் ஆகிவிடும் என்று நம்புகிறோம். அதற்குப் பிறகு, அக்கட்டிடத்தில் குழந்தைகள் பிரிவு ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்பதை பார்த்து, அதை நிச்சயமாக நிறைவேற்றுகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வாக்குறுதியாகத் தருகிறேன்.

பினாமி பெயரிலுள்ள பேருந்துகள்

*வினா எண். 399—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பஸ் முதலாளிகள் பினாமியாக பேருந்துகள் வைத்திருப்பது அரசு அறியுமா?

(ஆ) பினாமியாக வைத்திருப்பதை தடுக்க அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) மோட்டார் வண்டிகள் சட்டம் 48-ஏ பிரிவின் கீழ் பேருந்து உரிமம் வழங்குவதற்குமுன் அல்லது புதுப்பிப்பதற்கு முன் விண்ணப்பதாரரின் மனு பினாமியாக உள்ளது என்று தெரிய வந்தால், அதனை நிராகரிப்பதற்கான அதிகாரம் மாவட்டப் போக்குவரத்து அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது உரிமம் வழங்கிய பின் தெரியவந்தால் அந்த உரிமத்தை தற்காலிகமாக நீக்கவோ அல்லது நிரந்தரமாக நீக்கவோ, சட்டப்பிரிவு 60-ன் கீழ் உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, தனியார் பஸ் முதலாளிகள், 3 பஸ்களுக்கு மேல் வைத்திருக்கக்கூடாது என்று அரசு ஏற்கெனவே போட்டிருக்கக் கூடிய வரம்பை, சமீப காலத்தில் நீக்கி, அதிகமாக ஒன்றிரண்டு பஸ்களை கூட வைத்துக் கொள்ளலாம் என்று ஏதாவது உத்தரவை அரசு இட்டிருக்கிறதா?

(முற்பகல் 9-50)

அப்படி இருந்தும் கூட பினாமி என்ற பெயரால் வேறு நபர்களுடைய பெயரில் பேருந்துகளைத் துவக்குவதற்கு தொடர்ந்து முயற்சி செய்கிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றதா? அதன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 5 பேருந்துகள் வரை வைத்துக்கொள்ளலாம் என்ற அனுமதியினை நாம் கொடுத்திருக்கிறோம். அதற்குமேல் பினாமியாக வைத்துக் கொண்டிருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு உரிமை உண்டு. ஆனால், அந்த வகையில் புகார் வரவில்லை. அப்படி வந்தால் நிச்சயமாக கடுமையான நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் தயக்கம் காட்டுவதற்குத் தயாராக இல்லை. பினாமி என்ற வகையில் வேறு ஒருவருடைய பெயரில் வைத்துக் கொண்டு தனக்குச் சொந்தமாக பேருந்துகளை அவ்வாறு வைத்திருப்பார்களானால், அப்படி இருக்குமேயானால் அது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் பினாமியாக இருக்கின்ற அந்த பஸ் முதலாளிகளை உண்மையான முதலாளிகளாக உருவாக்குவதற்குரிய வாய்ப்பு அரசுக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் முதலாளிகள் தங்களுடைய மகன் பெயராலும் மகள் பெயராலும், பிள்ளைகள் பெயராலும் இன்னும் எத்தனை





பேர் குடும்பத்திலே இருக்கிறார்களோ அவர்கள் அனைவரின் பெயரிலும் ஐந்தைந்து பஸ்களை வைத்துக் கொண்டு ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, நிலச்சீர்திருத்தச் சட்டம் போன்று இந்தப் பினாமிகளையும் கட்டுப்படுத்துவதற்குரிய தனியான சட்டம் இயற்ற முடியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகன் குடும்பம் தனியாகவும், மகள் குடும்பம் தனியாகவும் இருந்தால் நாம் கேட்க முடியாது. ஆனால் அந்தக் குடும்பங்கள் ஒன்றாக வாழ்ந்து வருகின்ற நிலைமையில் அவர்களின் பெயர்களில் எல்லாம் பேருந்துகளை வைத்திருக்கின்ற நிலைமை இருக்குமேயானால் நாம் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை விழுப்புரம் இடையே மின்சார இரயில்விட பரிந்துரை செய்யும் திட்டம்.

*வினா எண். 400—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்து நெரிசலை சமாளிக்க சென்னையிலிருந்து விழுப்புரம் வரை மின்சார இரயில் விட மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தினுடைய ஜன நெருக்கடியைக் குறைக்க இந்த மின்சார இரயில் விட வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் சென்னையிலிருந்து விழுப்புரம் வரையில் ப்ராட்கேஜ் என்ற வகையில் மாற்றுவதற்கு மாநில அரசு மத்திய அரசினை வற்புறுத்துமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசியபோது செங்கற்பட்டுக்கு மேலே மின்சார இரயில் விடுவது என்பது சௌகரியமாக இருக்காது என்ற கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். காரணம் அது அதிக தூரமாக இருப்பதால் மின்சார இரயிலின் கழிவறை வசதிகள் போன்றவை இல்லாததன் காரணத்தால் பயணிகள் பயணம் செய்ய முடியாத நிலைமை இருக்கும் என்ற கருத்தினைச் சுட்டிக்காட்டி இருக்

கிறார்கள். எனவே, செங்கற்பட்டைத் தாண்டி மின்சார இரயில விடுவது நல்லதாக இருக்காது என்று சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலித்து மீண்டும் விவா திக்க இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள அலுவலகங்களில் வேலை செய்கின்ற பலர் இன்றைக்கு 50 மைல் 70 மைல் தூரத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வசதியாக இருப்பதற்காக இதனை மீண்டும் பரிசீலனை செய்து மத்திய அரசின் மாநில அரசு வற்புறுத்துவதற்கு வேண்டிய தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சிலவற்றைக் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நான் ஏற்கெனவே சொல்லியதைப் போல் பரிசீலித்து அரசாங்கம் தேவையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சுற்றுலாத் தலங்களில் காணப்படும் பிச்சைக்காரர்ளைப் பிடித்து மறுவாழ்வு இல்லங்களுக்கு அனுப்பும் திட்டம்.

*வினா எண். 401—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாட்டில் முக்கிய சுற்றுலா தலங்களான காஞ்சீபுரம், மகாபலிபுரம், வேடந்தாங்கல், மதுரை, திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் அதிகம் காணப்படும் பிச்சைக்காரர்களை பிடித்து மறுவாழ்வு இல்லத்திற்கு அனுப்பும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : சுற்றுலா தலங்களான, மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம், வேடந்தாங்கல், காஞ்சிபுரம், மதுரை ஆகிய இடங்களில் அலைந்து திரியும் பிச்சைக்காரர்களை 1945-ம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்பு தடுப்புச் சட்ட விதிகளின் படி அவ்வப்போது கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் அவர்கள்மீது வழக்கு தொடரப்படுகிறது. அவர்களை கண்டித்து எச்சரிக்கையுடன் விடுதலை செய்வது அல்லது தண்டித்து பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களுக்கு அனுப்புவது பற்றி நீதி மன்றங்கள் முடிவு செய்கின்றன. இதர இடங்களில் அலைந்து திரியும் பிச்சைக்காரர்கள் மீதும் மேற்கண்டவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.



திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே பிச்சை கொடுத்தால், தர்மம், புண்ணியம் என்று சிலபேர் பிச்சை கொடுக்கிறார்கள். அப்படி பிச்சை கொடுப்பதே தவறு என்று சட்டம் இயற்றப்படுமா? அதுமட்டுமல்லாமல் பிச்சைக்காரர்களை ஒட்டுமொத்தமாக அழைத்து கூட்டம் கூட்டி ஒரு மகாநாடு நடத்தி சர்வ கட்சித்தலைவர்களையும் அழைத்து பிச்சைக்காரர்களுக்கு என்னென்ன குறைபாடுகள், கோரிக்கைகள் இருக்கின்றன என்ற வகையில் அரசு அறிவதற்கு ஒரு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சை எடுப்பவர்களை தடுப்பதற்குத்தான் சட்டம் இருக்கின்றது. 1945ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்புத் தடுப்புச் சட்ட விதிகளின்படி பிச்சை எடுப்பவர்கள் காவல் துறையினரால் பிடிக்கப்பட்டு பிறகு நீதி மன்றங்களில் தண்டனை வழங்கப்பட்டு அதன் பிறகு இல்லங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். அதன்பிறகு அவர்கள் சுயமாக வாழ்வதற்குரிய வழிவகைகளைகொடுப்பது என்ற முறையினை அரசு கையாண்டு வருகின்றது. ஆனால் பிச்சை போடுபவர்களைப் பற்றி நாம் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. அது அவரவர்களுடைய விருப்பம். விருப்பம் இருந்தால் கொடுக்கிறார்கள். பொதுவாக நாம்சொல்லவேண்டும் என்றால் யாரும் பிச்சைகொடுக்காமல் இருந்தால் பிச்சைக்காரர்களை நாம் ஒழிக்க அது ஒரு வழிவகையாக இருக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். சர்வ கட்சி மாநாட்டை கூட்டவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதற்குதற்போது தடுப்புச் சட்டமே இருக்கிறது ஆகையால் இதற்குத் தனியாக மாநாடு தேவையில்லை. தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் தான் நாம் இன்றைக்கு காவல்துறையின் கீழ் இந்த பிச்சைக்காரர்களை ஒருமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தக் கருத்துக்களை அரசு தீர ஆராய்ந்து வருகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து அதிக அளவில் பிச்சைக்காரர்கள் தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? சாமியார் வேடத்தில் பிச்சை எடுக்கிறார்கள். இதை தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாமியார் வேடத்தில் பிச்சை எடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் மத கொள்கையின் அடிப்படையில் அவர்கள் பிச்சை எடுக்கலாம், அல்லது அதை தொழிலாக கொண்டு அவர்கள் பிச்சை எடுக்கலாம். அப்படி தொழிலாகக் கொண்டு பிச்சை எடுக்கும் அந்த நபர்களை தடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் நாம் காவல்துறை மூலமாக கைது செய்து, நீதிமன்றங்களில் நீதி வழங்கப்பட்டு இன்றைக்கு அவர்கள் தண்டனைப்பெற்று மறுவாழ்வு இல்லங்களுக்கு அவர்கள் அனுப்பப்படுகிறார்கள். வெளி மாநிலங்களிலிருந்து வந்து பிச்சை எடுப்பவர்களையும் நாம் 1945-ம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்புத் தடுப்புச் சட்ட விதிகளின்படி அவர்கள் பிடிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் செயல்பட்டு வரும் குழந்தைகள் காப்பகங்கள்.**

*வினா எண். 402—திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் செயல்படும் சமூக நலத் துறையின் கீழ் உள்ள குழந்தைகள் காப்பகங்களின் எண்ணிக்கையை ஒன்றியங்களில் ஜனத்தொகையின் அடிப்படையில் நிர்ணயம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களில் 2 லிருந்து 4 வயதற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு வேளை சத்துணவு அளிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் முறையே 1—7—1982 மற்றும் 15—9—1982 முதல் ''முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்'' செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 70 முதல் 150 குழந்தைகளுக்கு ஒரு மையம் என்ற கணக்கில் அனைத்து கிராமம் மற்றும் நகர்ப்புற மக்கள் பயன்பெறும் வகையில் மையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில ஊராட்சி ஒன்றியங்களில் முன்பு இருந்த குழந்தைகள் காப்பகங்களின் எண்ணிக்கையை விட இப்போது மக்கள் தொகை பெருகியிருக்கிற காரணத்தினால் பல்வேறு



135994 600 008

கிராமங்களில் குழந்தைகள் காப்பகங்கள் [illegible] இருக்கின்றன. குறிப்பாக கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் இருக்கின்ற பகுதிகளிலும், அரிசன மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலும் தனியாக குழந்தைகள் காப்பகங்கள் அதிகமாக ஏற்படுத்தித் தருகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 முதல் 150 குழந்தைகள் வரை எங்கே எந்த இடங்களில் அதிகமாக காணப்படுகிறார்களோ அந்த அடிப்படையில் தான் இன்றைக்கு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதோடு மட்டும் அல்ல தாழ்த்தப்பட்டவர்களுக்காக அதிகமாக அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். தாழ்த்தப்பட்ட 7,42,450 குழந்தைகள் இன்றைக்கு இந்த முதலமைச்சர் சத்துணவு மையங்களில் பயன்பெறுகிறார்கள். அதோடு மட்டும் அல்ல, கடலோரங்களில் உள்ள மீனவர்கள் வாழும் பகுதிகளில் சத்துணவு மையங்கள் அமைத்துக்கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். எங்கெங்கே குழந்தைகள் அதிகமாக அதாவது 70 முதல் 150 வரை காணப்படுகிறார்களோ அங்கெல்லாம் கண்டிப்பாக இந்த சத்துணவு மையங்களை அமைப்பதற்கு ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது. குழந்தைகள் காப்பகங்கள் இன்றைக்கு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையில் மீனவர்கள் குழந்தைகள் வாழும் பகுதிகளிலும் இந்தச் சத்துணவு காப்பகங்கள் அமைக்க வழிவகைகளை செய்ய இந்த அரசு ஆலோசனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10-00)

திரு. எஸ். ரெத்தினராஜ் : தலைவர் அவர்களே, 70 முதல் 150 வரை எண்ணிக்கையுள்ள குழந்தைகள் இருக்கின்ற இடங்களில்தான் இந்த மையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மாற்றி 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் எல்லாம் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்துவர வேண்டியநிலை இருக்கின்ற

காரணத்தினால், ஒரு எல்லை வரையறுத்து, குழந்தைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொள்ளாமல், குறிப்பிட்ட சதுர கிலோ மீட்டர் எல்லைக்குள் ஒரு காப்பகம் என்ற முறையிலே அமைக்கின்ற முறையிலே திட்டம் ஏதாவது ஆலோசனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஒரு சதுர கிலோ மீட்டர் என்ற முறையில் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில் அமைத்தால் குழந்தைகள் பயன் பெற முடியாது. குழந்தைகள் எங்கே அதிகமாக காணப்படுகிறார்களோ அங்கே குழந்தைகள் காப்பகங்கள் அமைத்துக் கொடுத்தால்தான் பயன்பெறமுடியும். கிலோமீட்டர் என்ற அடிப்படையில் அமைத்துக் கொடுத்தால் அது சிறப்பாக இருக்காது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலிலே 70 முதல் 150 வரை உள்ள குழந்தைகள் உள்ள ஊர்களுக்குத்தான் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டு சத்துணவுத் திட்டத்தை அமலாக்குவதாகத் தெரிவித்தார்கள். சமூக நலத்துறையிலேயும் 70 குழந்தைகளுக்கு மேல் இருக்கிற இடங்களில்தான் ஏற்படுத்தப்படுமென்றும், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திலேயும் 70 குழந்தைகளுக்கு மேல் இருக்கின்ற இடங்களில் தான் கொடுக்கப்படும் என்றால், அதற்குக் கீழே 65 குழந்தைகள் என்று இருந்தால், அந்த சிறிய சிறிய கிராமங்கள் எல்லாம் ஒதுக்கித் தள்ளப்படுகின்றனவே. அந்தக் கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கு எல்லாம் சமூக நலத்துறையின் மூலமாக புதிய குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, குறைவாக குழந்தைகள் காணப்பட்டால் சப்சென்டர் ஏற்படுத்தி குழந்தைகள் காப்பகங்கள் வைத்து அவை மூலமாக அந்தக் குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### (அ) மகாத்மா காந்தி திரைப்படம் காண—திருர்களுக்கு பாஸ்

திரு. ப. பொன்னுரங்கம் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், நேற்று இரவு தங்கள் மூலமாக எங்களுக்கு நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. அதாவது உத்தமர் காந்தியார் படத்தைப் போட்டுக் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையிலே நல்ல செய்தி சொன்னதற்காக நன்றி. அமருங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : சார், அடிஷனல் பெசிலிட்டிஸ் வேண்டும் என்று சொல்கிறேன். ஆனால், பஸ் பாஸ், ட்ரெயின் கூப்பன் இவைகளில் எல்லாம் எங்களோடு அடிஷனலாக ஒரு ஆள் கூட வரலாம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதிலே ஒருவர் மட்டும்தான் வரலாம் என்ற கருத்து தொனிக்கிறது. நம் மாதிரி சட்ட மன்றத்திற்கு வருகிற ரிப்போர்ட்டர்களும் ஸ்கூலுக்கு, காலேஜுக்கு வருகிற மாதிரி காலையிலே 9 மணிக்கே வந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு டிக்கட் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதாம். வருகிற நிருபர்களுக்கும் சேர்த்து ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்போதுதான் செய்தி போடுவார்கள் என்று நம்புகிறீர்கள் போலிருக்கிறது. மகாத்மா காந்தி பற்றிய திரைப்படம் திங்கட்கிழமை இரவு கலைவாணர் அரங்கத்திலே போட்டுக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் அங்கே 1000 இருக்கைகள் தான் இருக்கின்றன. ஒவ்வொரு உறுப்பினருக்கும் இரண்டு டிக்கெட்டுக்கள் அளிக்கப்படும். இரண்டு பேர்கள் வரலாம். ரிப்போர்ட்டர்களுக்கும் சேர்த்து சொல்லலாம். ஆனால் ரிப்போர்ட்டர்களுக்கு இரண்டு அல்ல, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றுதான். எம்.எல்.ஏ-க்கள் எம்.எல்.சி.-க்கள், ஆகியவர்களுக்கு இரண்டு கொடுக்கப்படும்.

### (ஆ) விடுதியில் உறுப்பினர்களுக்கான வசதிகள்

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் எங்கள் கடமையை செம்மையாக முறையாக ஆற்றுவதற்கு நாங்கள் தங்கியிருக்கின்ற விடுதியின்காரணமாக ஏகப்பட்ட தடங்கல்கள் ஏற்பட்டு நேற்றைக்கு பல பேர்கள் குளிக்க முடியாமல் காலையிலே 7 மணிக்கு தண்ணீர் நின்று விட்டது. தலைவர் அவர்களைப் போன்று காலையிலே எழுந்து இருக்கிறவர்கள் குளித்துவிட்டு வந்து விடுகிறார்கள், ஆனால் 7 மணிக்கு எழுந்திருக்கின்றவர்கள் குளிக்க

முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது, அது ஒன்று. அடுத்து தொலைபேசி தொடர்ந்து ஒரு மாதமாக செயல்படாமல் இப்போது நானும் எழுதிக் கொடுத்துவிட்டேன், ரிமூவ் பண்ணுங்கள் என்று. அவசரத்திற்கு வெளியே இருந்து எங்களுக்குபோன் பண்ணுகிறவர்களிடம் நாங்கள் இல்லை இல்லை என்று எக்ஸ்சேஞ்சிலே உள்ளவர்கள் பதில் சொல்லிவிடுகிறார்கள். நாங்கள் சொல்லியும் கேட்கவில்லை என்பதால் நான் அந்த போனையே எடுத்துக்கொண்டு வந்து ரிசப்ஷனிலே கொடுத்துவிட்டு வந்தேன். எங்களுடைய நடவடிக்கைகளை நாங்கள் ஆற்றுவதற்கு உதவி செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குளிப்பது பற்றி சொன்னார்கள். தினமும் 30, 40 லாரிகளில் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். சென்னையிலே இருக்கிற பிரச்சினைபற்றி உங்களுக்குத் தெரியும். கோவில்பட்டியிலே எப்படி இருக்கிறது. என்று உங்களுக்குத் தெரியும். கோவில்பட்டியை விட சென்னையிலே நன்றாக இருக்கிறது.

கோவில்பட்டிக்குப் போனால் குளிக்க முடியுமா என்பது தெரியாது இங்கே அதைவிட நிறைய வசதி இருக்கிறது. இருக்கிற நிலைமையைத் தான் சொல்கிறேன். 30, 40 லாரிகளில் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினர் அறையிலும் பத்து பேர்கள் குளிக்கவேண்டுமென்றால் எங்கேயிருந்து தண்ணீர்கொண்டுவர முடியும்? (குறுக்கீடு) எல்லா அறைகளிலும் அப்படி இருக்கிறது என்று சொல்லவில்லை. இருக்கிறகூட்டத்தைப் பாருங்கள். கூட்டத்தைக் குறைக்க வேண்டுமென்றுதான் கேட்டுக் கொண்டேன். நண்பர்களிடத்தில் சொல்லி, சென்னைக்கு இந்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வராதீர்கள் என்று கேட்டுக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். திரும்பவும் அதே வேண்டுகோளைத்தான் விடுக்கிறேன். இப்போது இருக்கிற சூழ்நிலையில் தண்ணீர் வெளியிலிருந்து கொண்டு வருகிறோம். கிடைக்கக்கூடிய அளவிற்கு கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். மாநகராட்சியும், 'டுவார்ட்' போர்டும் இந்த பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். வரும்போது குழாய்களை எல்லோரும் மூடிவிட்டு வரவேண்டும். உறுப்பினர்கள் அருள்கூர்ந்து இதில் ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

இரண்டாவது, தொலைபேசியைப் பொறுத்தவரையில் அலுவல் ஆய்வு குழுவில் ஏற்கெனவே முடிவு எடுத்தாகிவிட்டது. எல்லா உறுப்பினர்களுக்கும் தனித்தனியாக டெலிபோன் அவரவர்கள் பெயரிலேயே கொடுக்கப்படுகிறது. அதற்காக பணமும் கட்டி வேலையும் ஆரம்பித்தாகி விட்டது. அவரவர்களுக்கென்று தனியாக டெலிபோன் வர இருக்கிறது. அந்த மாதிரியான நிலைமையைச் செய்திருக்கிறேன். அந்த வகையில் உங்களுக்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கிறது.





திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராய நகரில் உம்மிடியார்ஸ் என்ற பாங்க் பல கோடி ரூபாய்களை மோசடி செய்துவிட்டு மூடிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாங்க் மூடினால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. அது பற்றி முறையாக கொண்டு வரப்பட வேண்டும்.

THIRU. K. S. G. HAJA SHAREEF: Raja (Vijaya Raghunatha Thondaman) has got a chem . I request yo to kindly listen to him.

(இ) நாளேடுகளில் அவையின் நடவடிக்கை வெளியிடப்பெறுவது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் பேசுகிற கருத்துக்களை பத்திரிக்கைகளில் போடவில்லை என்றால் மக்களுக்கு தெரியக்கூடிய வாய்ப்பு இல்லை. அதுவும் மாலை நேரங்களில் பேசுகிற உறுப்பினர்களுடைய பேச்சுக்கள் வரும்போது தே ஆல்சோ பார்ட்டிசிபிடேட்டட்' என்று போட்டு முடித்துவிடுகிறார்கள். இதை நான் குறையாக கூறவில்லை. வேறு வழியில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளில் நம்முடைய பேச்சை போடவேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. உரிய நேரத்தில் தான் அவர்கள் போடுவார்கள். பல நேரங்களில் 'ஆல்சோ ஸ்போக்' என்று தான் வரும். அதற்கு வேறு வழியில்லை. அந்த பாயின்ட் ஆப் ஆர்டராக எடுத்துக்கொள்ள முடியாது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக டெலிபோன் கொடுப்பதற்கு முன்னாலே ஒரு சின்ன வேண்டுகோளை விடுக்கிறேன். தொலைபேசியை இப்போது லைன்கள் எல்லாம் மாற்றவேண்டியிருப்பதால் உடனடியாக சீர்படுத்த முடியாது. அதற்குள்ளே ஒரு மாற்று ஏற்பாடாக ரிசப்ஷனில் நான்கு, ஐந்து டெலிபோன்களுள் வைத்தோ, அல்லது ஒவ்வொரு மாடியிலும் டெலிபோன்களை வைத்தோ நாங்கள் வந்து அங்கே பேசுகிற மாதிரியான ஏற்பாட்டை செய்தால் உதவியாக இருக்கும். ஏனென்றால் விடுதிகளில் எந்த அறையிலும் டெலிபோன்கள் வேலை செய்வதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை செய்வதென்றாலும் தொலை பேசி இலாக்காவிலே பேசித்தான் செய்ய வேண்டும். தொலைபேசி இலாக்காவினரிடத்திலே பேசி எதை விரைவில் செய்ய இயலுமோ அதை செய்ய முயற்சிக்கிறேன்.

(ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை)

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை, காயல்பட்டினத்திலே இருக்கிற முஸ்லீம்களுடைய உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து என்று ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன். அதை இன்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறேன். நேற்றே உறுப்பினரிடம் சொன்னேன், அதை எடுத்துக் கொள்கிறேன், என்று. உறுப்பினர் கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும். காயல்பட்டினம் அங்கேயேதான் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : அடுத்த பாய்ன்ட், ஒரு நிமிஷம் கேளுங்களேன். மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தாங்கள் சொல்வது போல, எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள், அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை, இன்றைக்கு வந்திருக்கிற தகவல்களின் அடிப்படையிலே மிகப் பயங்கரமான சூழ்நிலை அங்கே இருக்கிறது. மற்றப் பிரச்னைகளை எப்பொழுது வேண்டுமானாலும் பேசலாம். ஏற்கனவே கூட போலீஸ் அதிகாரிகளைப் பற்றிக் கொடுத்து எடுத்துக்கொள்ளவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையும் எடுத்துக் கொள்ளவே வேண்டாம் என்று உறுப்பினர் சொல்கிறாரா?

திரு. அ. ரகுமான்கான் : எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், என்னை வேலை செய்ய விடுங்கள்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : காயல்பட்டின்த்தில் நடப்பது பற்றி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று மாலையே காயல்பட்டினம் பற்றியெல்லாம் பேசியிருக்கலாம். பேசாதது என்னுடைய குறைபாடு அல்ல.



## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### கோவில்பட்டி வெங்கடசாமி நாயுடு கல்லூரி மாணவர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் தி. கா. நல்லப்பன், மு. அப்பாதுரை, சோ. அழகர்சாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் 'நெல்லை மாவட்டம்' கோவில்பட்டி வெங்கடசாமி நாயுடு கல்லூரி மாணவர்களில் சிலர் சில கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்து வந்துள்ளார்கள். அவர்கள் மீது காவல் துறையினர் தாக்கியுள்ளது சம்பந்தமாக விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி; பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியிலே உள்ள ஜி. வெங்கடசாமி நாயுடு கல்லூரி, இலட்சுமி மில் நிறுவனத்தின்கீழ் உள்ள கல்லூரியாகும். அந்தக் கல்லூரியிலே ஏற்கனவே ஒருவர் பிரின்சிபாலாக இருந்து அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக, உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்ததன் காரணமாக, அந்தக் கல்லூரியிலே முதல்வருடைய பொறுப்பில், அவருக்கடுத்துள்ள ஒருவர், 'இன்சார்ஜாக' அந்தப் பதவியை வகித்து வருகிறார்கள். அந்தக் கல்லூரியிலே 8 ஆம் தேதி ஒரு சம்பவம் நடந்துவிட்டது. ஒரு மாணவனுடைய சைக்கிள் சீட் மேலே உள்ள உறை காணாமல் போய்விட்டது. அது பற்றி அவர் பிரின்சிபாலிடம் புகார் செய்திருக்கிறார். மறு நாள் காலை அந்த சைக்கிள் சீட்டினுடைய உறை இன்னொரு மாணவனுடைய சைக்கிளிலே இருந்ததாக அவர் போய் அந்த முதல்வரிடம் சொல்லியிருக்கிறார். அவர் முதல்வரிடம் சொன்னவுடனே, முதல்வர் உடனடியாக, அந்தப் பையனைக் கூப்பிட்டு, 'வார்ன்' செய்துஅந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்குப் பதிலாக, அந்த மாணவனை சஸ்பென்ட் செய்திருக்கிறார். சஸ்பென்ட் செய்தவுடனே, அந்த சஸ்பென்ட் செய்யப்பட்ட மாணவனது வகுப்பைச் சேர்ந்த அத்தனை பேரும் சேர்ந்து, அவன் அப்படிச் செய்யவில்லை. வேறு யாரோ என்று ஏதோ காரணம் சொல்லி, அந்த சஸ்பென்ஷனை நீங்கள் வாபஸ் பெற்றுக் கொண்டு, அவனை மறுபடியும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கேட்டவுடனே, நீங்கள் போங்கள் பரிசீலனை செய்கிறேன் என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு, ஒரு பையனை சஸ்பெண்ட் செய்ததோடு நிறுத்திக்கொண்டு, நீங்கள் எல்லாம் போங்கள், மறு

படியும் நான் கூப்பிட்டு விசாரித்துச் சொல்கிறேன் என்று அவர்களைக் கொஞ்சம் சமாதானப்படுத்தியிருக்கலாம். சமாதானப்படுத்துவதற்குப் பதிலாக, அவனை சஸ்பெண்ட் செய்ததை வாபஸ் பெறுங்கள் என்று கேட்கச் சென்ற, அந்த வகுப்பைச் சேர்ந்த இரண்டாவது ஆண்டு மாணவர்கள் அத்தனை பேரையும்—சஸ்பெண்ட்—செய்திருக்கிறார்கள். இப்படி அவர்களை சஸபெண்ட் செய்ததைக் கண்ட மற்ற மாணவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து வேலை நிறுத்தம், கெரோ போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். மாணவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். உணர்ச்சி வயப்படும் பருவம். அதற்குப் பிறகாவது அங்குள்ள நிர்வாகம் அதை எப்படிச் சுமுகமாகத் தீர்ப்பது என்று சொல்லி, ஆர்.டி.ஓ. மூலமாகவோ, மற்றவர்கள் மூலமாகவோ, அல்லது அந்த மாணவர்களில் முக்கியமான தலைவர்களை அழைத்துப் பேசி, ஒரு சுமுகமான முடிவை எடுத்திருக்கலாம். அதற்குப் பதிலாக, உடனே, போலீசை வரவழைத்து அங்குள்ள மாணவர்களை கண், முகம் என்று கூடப் பாராமல் மிக மோசமான நிலைமையில் அடித்து நொறுக்கி பல மாணவர்களை ஆஸ்பத்திரியிலே சேர்க்கின்ற முறையிலே, சிலபேர் ஓடி ஒளிந்துகொள்ளும் முறையிலே நடந்திருக்கிறது. சாயந்திரம் 6 மணிக்கு நடந்த சம்பவம் — பல பேர்கள் காடுகளுக்கு ஓடிச் சென்று, சிலபேர் மறுநாள் காலைதான் வரக்கூடிய நிலைமைகள் எல்லாம் அங்கே ஏற்பட்டிருக்கின்றன. அதிலே, ஏறக்குறைய 400 மாணவர்கள் மீது வழக்கு தொடுக்கப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அதற்கு மேலே ஆஸ்பத்திரியிலே மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அதோடு அந்தப் பகுதியிலே இருக்கிற பொதுமக்கள் மத்தியிலே, நம்முடைய பையன்களுடைய படிப்பு கெட்டதோடு மட்டுமல்லாமல், அந்த மாணவர்களுக்கு போலீசுடைய தாக்குதலால் என்ன ஆபத்து வருமோ, உயிருக்கு என்ன இழப்பு வருமோ என்று பயப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு நிலைமை அங்கு ஏற்பட்டிருப்பதற்குக் காரணமே, அங்குள்ள மாணவர்களுக்கிடையே ஏற்பட்டிருக்கின்ற ஒரு சின்ன சம்பவத்தை உடனடியாக, சுமுகமாகத் தீர்ப்பதற்கு, பொறுப்பிலே உள்ள பிரின்சிப்பாலோ, அல்லது நிர்வாகமோ, அங்குள்ள ஆர்.டி.ஓ.வோ, மற்றவர்களோ, முயற்சிப்பதற்குப் பதிலாக, உடனடியாக, போலீசைக் கூட்பிட்டு, போலீஸ் மூலமாக, பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்ததுதான், அதுதான் மாணவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டி, பல மாணவர்களுக்குக் காயம் ஏற்படுத்தியதோடு மட்டும் அல்லாமல், இன்றைக்கு மிகப் பெரிய ஒரு பதட்டமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.





ஆகவே, இந்தமாதிரி மாணவர்கள் மத்தியிலே ஒரு சில பிரச்சினைகள் ஏற்படுகின்ற நேரத்தில் அதை எப்படி அணுக வேண்டும், அதற்கு எப்படித் தீர்வு காண வேண்டும் என்ற முறையைக் கடைப் பிடிக்காததன் காரணமாக உடனடியாக போலீசை அழைத்து இருக்கிறார்கள். போலீசார் கல்லூரியின் காம்பவுண்டுக்குள்ளே போகக் கூடாது என்று விதி இருப்பதாக நான் நினைக்கிறேன். ஆனால் இங்கே போலீசார் உள்ளே புகுந்து மாணவர்களைத் தாறுமாறான முறையில் மிகவும் மோசமாகத் தாக்கியதால் பலரும் காயம் அடைந்திருக்கிறார்கள். பலபேர் மறுநாள்தான் வீட்டுக்குத் திரும்பும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவிற்கு மோசமான நிலைமை ஏற்பட்டுள்ள இந்தச் சம்பவத்தைப் பற்றிப் பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தச் சம்பவம் ஏன் நடந்தது, இதற்கு மூலகாரணம் யார், இந்தச் சம்பவத்தில் அணுகுமுறை எப்படி இருந்தது, இதற்கு யார் பொறுப்பு, இந்த பிரின்சிபாலே தமக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு செய்தாரா அல்லது மேலேயிருந்து யாராவது சொல்லி போலீசாரைக் கொண்டு மாணவர்களைத் தாக்குகின்ற நிலைமை ஏற்பட்டதா என்பதைப் பற்றியெல்லாம் பூரணமான விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அத்துடன், மாணவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டும். கல்லூரி சுமுகமாக நடப்பதற்கும், அந்த மாணவர்கள் படிப்பு கெடாமல் இருப்பதற்கும், பெற்றோர்கள் எந்த விதமான பயமும் இல்லாமல் தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்புகின்ற நிலைமை ஏற்படுவதற்குமான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டும்.

மேலும், பலயிடங்களில் மாணவர்களிடையே ஏற்படுகின்ற பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு எந்தமாதிரியான அணுகுமுறையைக் கையாள வேண்டும் என்பதைப் பற்றியும் ஆராய வேண்டும். ஏனென்றால் மாணவர்கள் விரைவில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள். ஒரு சின்ன சம்பவம் ஏற்பட்டால் கூட பல மாணவர்கள் சேர்ந்துகொள்வார்கள். போக்குவரத்துக்கு அதனால் இடைஞ்சல் ஏற்படும். ஆகவே எந்த மாதிரியான அணுகுமுறைகளைக் கையாள வேண்டும் என்பதைப் பற்றியும் ஆராய வேண்டும்.

ஆகவே, இந்தப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டது 397 பேர் மீது வழக்கு பதிவு ஆகியிருக்கிறது. — 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டு, இன்றைக்கு அவர்கள் பொறுப்பிலே வெளியே இருக்கிறார்கள் என்ற செய்திகள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. ஆகவே பெற்றோர்கள் மாணவர்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்றபதட்ட நிலை காரணத் தாலே—இம்மாதிரியான நிலை மற்ற கல்லூரிகளில் இருக்கின்ற மாணவர்களுக்கு ஏற்படாமல் இருப்பதற்கு, இதுபற்றி விவாதிக்க, இந்தப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, 7—3—1983ஆம் நாளன்று—2 ஆவது ஆண்டு இளம் அறிவியல் கணிதம் படிக்கும் ராஜு என்ற மாண வர் சைக்கிள் இருக்கையில் மேலுறையைத் திருடிய காரணத் தால் முதல்வர் அவரால் கல்லூரியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டார். அதை அறிந்த உடனே, அந்த வகுப்பு மாண வர்கள் எல்லாம் 7—3—1983 அன்று வகுப்புகளுக்குச் செல்ல வில்லை. கல்லூரி முதல்வர் 12 மணி அளவில் இளம் அறிவியல் கணித வகுப்பு மாணவர்கள் எல்லோரையும் கல்லூரியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்தார். எனவே 8—3—1983 அன்று பெரும்பாலான மாணவர்கள் கல்லூரிக்கு வரவில்லை, 100 மாணவிகளும், 50 மாணவர்களும் கல்லூரிக்கு வருகை தந்தனர். அன்றைக்குக் கல்லூரிக்கு வராத வெளியே இருந்த மாணவர்கள், கல்லூரிக்கு வருகை தந்த மாணவிகளை கல்லூரியை விட்டு வெளியே செல்லும்பொழுது, தடுப்புகள் வைத்து தடுத்தனர். முதல்வர் காவல் துறையின் உதவியை நாடி மாணவிகளை வீட் டுக்குச் செல்ல ஏற்பாடு செய்தார். இதன் விளைவாக 8—3—1983 மாலை முதல் கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டதாக முதல்வர் அறிவித்துள்ளார். கல்லூரியின் மொத்த மாணவர் கள் எண்ணிக்கை 579, அமைதி காக்க வேண்டி கல்லூரி விடுதி களினின்று மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். கல்லூரிக் கல்வி இயக்குநர் கல்லூரி முதல்வருடன் தொடர்புகொண்டு கல் லூரியைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கும்படி அறி வுறுத்தியுள்ளார்கள். ஆகவே இவை இப்பொழுது நடந்திருக் கிற சம்பவங்கள் பற்றி அரசு எடுத்த நடவடிக்கையாகும். ஆனால் இது மாணவர்கள் பிரச்சினையாக இருக்கிற காரணத் தாலே ஜாக்கிரதையாக நாம் கையாளவேண்டுமென்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே அந்த அடிப்படையிலே தான் எதிர்க் கட்சித் தலைவர்களுடன், கூட்டங்களை கடந்த ஓர் ஆண்டு காலத்துக்கு, முன்னதாக 2, 3 கூட்டங்களைக் கூட்டி, நான் சில முடிவுகளை எடுத்ததன் காரணமாகத் தான் ஏறத் தாழ இந்த ஆண்டு முழுவதும் இந்த ஓர் இரு சம்பவங்களைத் தவிர மேற்படி கல்லூரிகள் நல்லபடி நடந்து வருகின்றன. அத் தகைய ஒத்துழைப்பை எதிர்க்கட்சியிடமிருந்து நான் தொடர்ந்து எதிர்பார்ப்பதன் காரணம், மாணவர்கள்





இளைஞர்களாக இருக்கின்ற காரணத்தாலும் இந்த சம்பவத்தில் அவர்கள் உணர்ச்சி வசப்படக் கூடியவர்களாக இருக்கிற காரணத்தாலேயும், அனுதாபத்தோடு அந்த பிரசினையைத் தீர்க்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்கிறேன். அதே நேரத்தில் சில மாணவர்கள் குறிப்பிட்ட ஒரு 5 சதவீதம் 3 சதவிதம் கூட இருக்கமாட்டார்கள்—அவர்கள் தவறான காரியங் களைச் செய்வதிலே ஆர்வம்கொண்டு, செய்து வருகின்றார்கள், என்கிற அடிப்படையிலே தான் அப்படிப்பட்டவர்களை நாம் கல்லூரியில் வைத்துக்கொண்டிருப்பது மீதமுள்ள மாணவர் களுடைய படிப்பிற்குக் குந்தகம் ஏற்படுகின்றது என்ற வகை யிலே, உரிய நடவடிக்கை எடுப்பதை அரசு அந்தக் கல்லூரி முதல்வருக்கு ஆதரவாக இருந்து, ஒத்துழைப்புத் தந்து வரு கிறது. இன்னும் சொல்லப் போனால், இந்த ஒழுங்கு நடவடிக்கை என்பதை பொறுத்தமட்டில், எலிமென்டரி ஸ்கூலானாலும் சரி, ஹைஸ்கூலானாலும் சரி, கல்லூரியாக இருந்தாலும் சரி, அந்த நிறுவனத் தலைவருக்குத் தான் முழு அதிகாரம் என்பது நீண்டநாளாக இருந்துவருகிற நடைமுறையை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, கல்லூரி முதல்வர் எடுத்த நடவடிக்கையில் அரசு தலையிடுவதில்லை. கடந்த 3 ஆண்டு காலமாகவே நாம் அதைப் பின்பற்றி வருகிறோம். உதாரணத்திற்கு, எங்கள் கட்சியைச் சார்ந்தவர் பாதிக்கப்பட்ட நிலையில் என் னிடத்திலே, முதல்வரிடத்திலே கொடுத்த இந்த பிரச்சினையில் அரசு நிச்சயமாகத் தலையிடாது. கல்லூரி முதல்வர் எடுத்த நடவடிக்கை நடவடிக்கை தான். வேண்டுமானால் வேறு எந்தக் கல்லூரியிலாவது சேர்ந்து படியுங்கள். அதற்குத் துறை ஆதரவு தரும் என்று சொல்லி அந்தக் கொள்கையை நாம் கடைப்பிடித்துவருகிறோம். ஆகவே கட்சி வேறுபாடு காட்டாமல் கல்லூரி முதல்வர்களுக்கும், பள்ளிக்கூட முதல்வர்களுக்கும், நாம் ஒத்துழைப்பு தருவதன் மூலமாகத்தான் இப்பொழுது ஓரளவுக்கு அமைதி நிலவுகிறது. ஆகவே இந்த அடிப்படை யிலே அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பைக் கேட்டுக் கொண்டு, இந்தப் பிரச்சினையில் தக்க நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது.—எடுக்கும் என்கிற உறுதியைத் தந்து அதைப்பற்றி விவாதிக்க, பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல் களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்மையில் கோயில்பட்டியில் இருக்கின்ற இலட்சுமி மில்லைச் சேர்ந்த, அது நிர்வகித்து வருகின்ற வெங்கடசாமி நாயுடு கல்லூரியில் படித்த மாணவரின் மீது வேண்டுமென்றே புகார் கூறி, அந்த மாணவனை சஸ்பெண்ட் செய்திருக்கிறது நிர்வாகம். இது சரி அல்ல என்று மாணவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். ஆனால், யார் யார் அப்படி முறையீடு செய்தார்களோ அவர்கள் அத்தனைபேர்களையும் உடனடியாக பிரின்சிபால் பொறுப்பிலே இருக்கின்றவர் சஸ்பெண்ட் செய்து இருக்கிறார். அதைப் பார்த்த பிறகு மாணவர்கள் மத்தியிலே ஒரு பதட்டமான நிலைமை ஏற்பட்டது. அவர்கள் பிரின்சிபாலிடம் முறையிட்டபொழுது அவர் உடனடியாகப் போலீசாரின் உதவியை நாடி, போலீசார் வந்து அந்த மாணவர்களைக் கண் மூக்கு தெரியாமல், இன்னும் கொஞ்சம் சொல்ல வேண்டுமென்றால் மனிதாபிமானமற்ற முறையில் தடியடியை நடத்தி பலருக்கும் காயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதோடு இல்லாமல் பலர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கும் போடப்பட்டிருக்கிறது. இதன் விளைவாகக் கோயில்பட்டி வட்டாரத்தில் பெரிய பரபரப்பு ஏற்பட்டு, இந்த அநியாயத்தை கண்டிக்கின்ற வகையில் கடையடைப்புகள், பந்துகள் போன்றவைகள் நடத்தப்பட திட்டமிடப்பட்டு பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு முறைகேடான விஷயத்தை அந்தக் கல்லூரி நிர்வாகம் எப்படி நடத்தியிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் உயர் நீதி மன்ற நீதிபதியைக் கொண்டு ஒரு விசாரணை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது எனவே, உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு இது குறித்து விசாரணை செய்ய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், நிர்வாகத்தில் உள்ள முறைகேடுகளின் காரணமாக, மாணவர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே பல தகராறுகள் ஏற்பட்டு அடிக்கடி கல்லூரியை மூடுகின்ற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கல்லூரியை அரசே ஏற்று நடத்த வேண்டிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட விவரங்களைப் பற்றி விரிவாக விவாதம் நடத்தி ஒரு முடிவெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதால் அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.





திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கோயில்பட்டி நகரம் நான்காவது பெரிய நகரம். நெல்லை மாவட்டத்திலே இருக்கின்ற கோயில்பட்டி, விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம், சங்கரன்கோயில் ஆகிய நான்கு தாலுக்காக்களுக்கும் இருக்கின்ற ஒரே கல்லூரி கோயில்பட்டியிலே இருக்கின்ற இந்த ஜி.வி.என். கல்லூரி ஆகும்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதைப் போல இன்றைக்கு இந்தக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. ஒரு சிறிய புகாருக்காக, ட்ரிவியல் மேட்டர் என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அப்படிப்பட்ட அந்தப் புகாருக்காகச் கல்லூரியே மூடப்பட்டு, மாணவர்கள் சொல்லொணா வேதனைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அந்தக் கல்லூரியின் தலைவர் பொறுப்பிலே இல்லாத காரணத்தினால், துணைத் தலைவர் பொறுப்பிலே இருப்பவர், இதில் கொஞ்சம் சாமர்த்தியமாக நடந்து கொண்டிருப்பாரேயானால் இந்த அளவிற்கு விளைவுகள் இருந்திருக்காது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு மாணவர் புகார் செய்து, மற்றொரு மாணவர் மீது நடவடிக்கை எடுத்து, அதனால் அந்த மாணவர் மீது ஏன் நடவடிக்கை எடுத்தீர்கள் என்று அந்த வகுப்பிலே உள்ள மாணவர்கள் கேட்கப் போய், அத்தனை மாணவர்களையும் சஸ்பெண்ட்செய்து, அங்கே ஒரு அமளியான சூழ்நிலை உருவாவதற்கு அவர்கள் இட்ட அந்த உத்தரவுதான் காரணம் என்று எங்களுக்குக்கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

ஆகவே, இந்த மாணவர்களை உரிய நேரத்திலே சமாதானப் படுத்தி இருந்தால் கல்லூரி தொடர்ந்து நடைபெற்றிருக்க முடியும்.

(முற்பகல் 10-20)

மாணவர்கள் உண்ணாவிரதம் அல்லது வேலை நிறுத்தம் போன்ற பணிகளில் ஈடுபட்டிருப்பார்களேயானால் வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் தலையிட்டு அதிலே ஒரு சுமுகமான நிலையை உடனடியாக உருவாக்கியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாத காரணத்தால் இது வளர்ந்து — வளர்ந்தது மட்டுமல்லாமல், காவல்துறையினர் அக்கல்லூரி வளாகத்திற்குள்ளே சென்று அங்கிருந்த மாணவர்களை மிருகத்தனமாகத் தாக்கி, அதன் விளைவால் பல மாணவர்கள் ஆஸ்பத்திரியிலே கூட அனுமதிக்கப்பட்டிருப்பதாக — அந்த ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. நான் கேள்விப்பட்

## 4. கவன ஈர்ப்பு

### சென்னை, இராயபுரம் பவர்குப்பம் தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள், ப. பொன்னுரங்கம் இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டு வருவார்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவர் அவர்களே, ''சென்னை இராயபுரம் பவர்குப்பம் பகுதியில் உள்ள மீனவர்களுக்குச் சொந்தமான குடிசைகள் 19—2—1983 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்தது குறித்த'' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

சென்னை, இராயபுரம், காசிமேடு பகுதியில் பவர்குப்பம் காசிபுரம் 'ஏ' பிளாக் ஆகிய இடங்களில் உள்ள மீனவர் குடியிருப்புகளில் 19—2—1983 நள்ளிரவு 11-30 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. ஒரு குடிசையிலிருந்து தீப்பொறி பறந்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாகவும், காற்று பலமாக வீசியதால், தீ வேகமாகப் பரவியதாகவும் தெரிகிறது. தீ விபத்தில் உயிர்ச்சேதம் ஏதுமில்லை. இந்த தீ விபத்தில் மொத்தம் 308 குடிசைகள் சேதமடைந்தன. பவர்குப்பத்தில் 120 குடும்பங்களும், காசிபுரம் 'ஏ' பிளாக்கில் 228 குடும்பங்களுமாக மொத்தம் 348 குடும்பங்கள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு வழங்கும் நிவாரணத் தொகையான ரூ. 200 வழங்க மொத்தம் ரூ. 69,600 மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்டது. அவற்றில் பவர்குப்பம் பகுதியில் 120 குடும்பங்களுக்கும், காசிபுரம் 'ஏ' பிளாக்கில் 200 குடும்பங்களுக்கும், தலா ரூ. 200 வீதம் மொத்தம் ரூ. 64,000 நிவாரணமாக 22-2-1983 ஆம் நாள் வழங்கப்பட்டது. ஏனைய நிவாரணங்களான 5 கிலோ அரிசி, 1 புடவை, 1 வேட்டி ஆகியவையும் மேற்கூறிய 320 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது. வழங்கப்பட்டதுபோக நிலுவையில் உள்ள தொகை ரூ. 5,600 இவை காசிபுரம் 'ஏ' பிளாக் பகுதியில் பாதிக்கப்பட்ட எஞ்சியுள்ள 28 குடும்பங்களுக்கு கொடுக்கப்படவேண்டியதாகும். ஆனால், இந்த 28 குடும்பங்களைப் பொறுத்தவரை, அக்குடும்பங்களைச் சார்ந்த நபர்கள் எவரும் நிவாரணம் பெற வராமல் மாற்று நபர்கள் வந்ததால், நிவாரணம் வழங்கப்படவில்லை. தீ விபத்தினால் ஏற்பட்ட சேதாரம் ரூ. 1,87,980 என்று தோராயமாக மதிப்பிடப்பட்டதாக தெரிகிறது.



**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, 19ஆம் தேதி நடைபெற்ற இந்த தீ விபத்து என் தொகுதியிலே நடைபெற்று இருக்கிறது. இதிலே தீப்பிடித்த வீடுகள் அனைத்துமே சாம்பலாகியிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன என்றால், மீன்பிடித் துறைமுகத்திற்காக கட்டப்பட்ட சுவர்கள் எல்லாம் வழியே இல்லாமல் கட்டியிருக்கின்ற காரணத்தால் அவர்களுடைய சாமான்களையோ அல்லது குடிசைகளையோ பிய்த்துக்கொண்டு ஓடுகின்ற அளவிற்குக்கூட வசதியற்ற நிலை இருந்தது. அதற்கு நாம் ஒரு வழி செய்ய வேண்டும். அதாவது துறைமுக அத்தாரிட்டியைப் பார்த்து கேட்டு வழி செய்து தரவேண்டும். இது அந்தப் பகுதியில் ஏற்பட்ட தீ' விபத்து. நம்முடைய அரசாங்கத்திலே இருக்கின்ற தீ அணைப்பு என்ஜின்கள் தீ அணைத்த பின்னால்தான் வருகின்றன. இந்த இடத்தில்கூட ஒரு மணி நேரம் கழித்துத்தான் அந்த பயர் என்ஜின்கள் வந்தன. அப்படி வருகின்ற போதுகூட, தண்ணீர் இல்லாமல்தான் வருகின்றது. நம்முடைய குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் கூட சென்று பார்த்திருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் காலத்திலே இந்தப் பகுதியிலே ஒரு முறை குடிசைகளில் தீ விபத்து ஏற்பட்டது. பிறகு உடனடியாக அவர்களுக்கு வீடுகளைக் கட்டித்தந்தார்கள். அந்த மாதிரி வீடுகளைக் கட்டித் தருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பல கேள்விகளை உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கேள்விக்கும் நான் வரிசையாக பதில் சொல்கிறேன். தீ எப்படி ஏற்படுகிறது என்று சொன்னால் —நாம் எல்லோருக்கும் சொல்லவேண்டும் அங்கேயிருக்கின்ற குடிசைகள் பல ஆண்டு காலமாக ஏற்பட்ட ஒன்று. இன்றைக்கு நேற்றைக்கு ஏற்பட்டதல்ல. அங்கே இருக்கின்ற தாய்மார்கள் எல்லாம் அடுப்பிலே உலையே வைத்துவிட்டு, நெருப்பைப் போட்டுவிட்டு வெளியே போய்விடுகிறார்கள். அந்த அடுப்பிலேயிருந்து தீ வெளியிலே வந்து காற்றிலே கலந்து எல்லா இடங்களுக்கும் அது பரவி விடுகிறது. நான் உங்கள் மூலமாக இந் மன்றத்தின் மூலமாக அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்ல த 5 நிமிடம், 10 நிமிடத்தைச் சேமிப்பதற்காக, கடைகளுக்குப் போய் சாமான்களை வாங்கப்போகின்ற நிலைமை இல்லாமல், அடுப்பில் உலையைப் போட்டுவிட்டு, அதை அடுப்பிலே இருந்து இறக்குகின்ற வரை அவர்கள் அங்கேயே இருக்கவேண்டும் என்று அன்புச் சகோதரிகளையும் தாய்மார்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்தால் இந்த மாதிரி தீ விபத்து ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு அங்கே மட்டுமல்ல, பல இடங்களில் வருவதற்குக் காரணம், பெரும்பாலும் அங்கே இருக்கும் தாய்மார்கள் அஜாக்கிரதையாக இருப்பதால், ஒரு வீட்டில் இருந்து தீப்பற்றி அது பல குடிசைகளை பாதித்து விடுகிறது. அதனால், அவர்கள் எல்லாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாதிக்கப் பட்டவர்களுக்கு குடிசை மாற்று வாரியம் மூலம் மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதுவும் விரைவில் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, ரெவின்யூ மினிஸ்டர் எங்கே தீப்பற்றிக் கொண்டாலும் உடனடியாக பணம், புடவை, வேஷ்டி, அரிசி முதலியவற்றை எடுத்துக்கொண்டு ஓடுகிறார்கள். பணம் ரூ. 200 கொடுக்கிறார்கள். இது 3 வருஷமாக கொடுக்கப்படுகிறது. எவ்வளவோ விலைவாசி ஏறிவிட்ட நிலையில் இந்த 200 ரூபாய் என்பது போதாது. ஆகவே, அதை அதிகரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல அங்கே துறைமுகத்தினர் ஒரு சுவர் கட்டியிருப்பதால் இப்படிப்பட்ட நேரங்களில் அந்த மக்கள் உடனடியாக தங்கள் உடமைகளை எடுத்துக்கொண்டு வெளியே வரமுடியவில்லை. தற்போது இங்கே மூன்று அமைச்சர்களும் இருப்பதால், அந்த துறைமுக நிர்வாகத்தோடு பேசி இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இந்த மாதிரி நேரங்களில் வழி விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்றைக்கு அந்த மீனவர்களின் தொழில் கருவிகள் எல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. மீனளத் துறை அதற்கான லிஸ்டைக்கூட எடுத்து இருக்கிறார்கள். வலை, தூளி, தண்டு, ப்ளோட்ஸ் என்று அவர்களுடைய அனைத்துப் பொருள்களும் அழிந்து விட்டன. சேதத்தின் மதிப்பு ரூபாய் 5,000 இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 200 ரூபாய் கொடுப்பதை அவர்கள் விரும்புகிறார்களா விரும்பவில்லையா என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : நான் சொன்ன கருத்து— It should be enhanced.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பு 60 ரூபாய் என்று இருந்தது அதை 100 ரூபாய் என்று உயர்த்தியதற்போது 200 ரூபாய் என்ற அளவிற்குக் கொடுக்கிறோம். இதைத் தவிர வேஷ்டி கொடுக்கிறோம். சேலை கொடுக்கிறோம். அரிசி கொடுக்கிறோம். இவைகள் எல்லாம் இந்த அரசு செய்து வருகிறது என்பது அவருக்குத் தெரியவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். மற்றப்படி, மீனவர்கள் வலை மற்றவைகளை இழந்து நஷ்டம் அடைந்து இருக்கிறார்கள். என்று சொன்னார்கள். அதுவும் அரசின் கவனத்திற்கு வந்து இருக்கிறது. அதைப்பற்றி சம்பந்தப் பட்ட அந்தத் துறை கவனிக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ராயபுரம் பகுதியில் இருக்கும் மீனவர்கள் மிகவும் ஏழைகள். அரசாங்கம் தீப்பிடித்த பகுதிகளில் வாழ்பவர்களுக்கு, மறுபடியும் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக 2,000 ரூபாய் கடன் கொடுக்கும். ஆகவே, அப்படிப்பட்ட கடன் தொகையை அந்த மீனவர்களுக்கு வழங்கி அவர்கள் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, அரசு புறம்போக்கு நிலத்திலே வீடுகள் கட்டி, அந்த வீடுகளை வாடகைக்கு விட்டு, எங்கள் வீடு, எங்கள் நிலம், என்று சொல்லுகிறார்கள். இந்தமாதிரி விபத்துக்கள் ஏற்படுகின்ற நேரத்திலே அந்த வீடுகளில் அல்லது குடிசைகளில் குடியிருக்கிற மக்களுக்கு உதவி செய்கிறபோது, அந்த உதவி அந்த மக்களுக்கு கிடைக்காமல் செய்து இடையூறு செய்கிறார்கள். ஆகையால் அந்த குடிசைகளில், வாழ்கின்ற மக்களுக்கே உதவி கிடைக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, சில இடங்களில் அரசு நிலங்களையும் மற்ற நிலங்களையும் பயன்படுத்தி யாரோ வீட்டைக் கட்டி, அல்லது குடிசை கட்டி வாடகைக்கு விடுகிற செய்தி அரசுக்கு வந்திருக்கிறது. அதையும் அரசு கவனித்து வருகிறது. அதனால் இப்போது பணம் கொடுக்கிறபோது தனியாக ஒரு உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த உத்தரவுப்படிதான் கொடுக்கப்படும். அந்த உத்தரவில் என்ன சொல்லியிருக்கிறது என்றால் அடி நிலம் யாருடையதாக இருந்தாலும், அதை கணக்கிலே எடுக்காமல் யார் குடியிருக்கிறாரோ அவருக்கு அல்லது அவர்கள் அத்தனை பேர்களுக்கும் உதவிப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால் தீயால் பாதிக்கப்பட்ட குடிசைகள் 308. ஆனால் அங்கே குடியிருந்த குடும்பங்கள் 348. சில வீடுகளிலே இரண்டு குடும்பங்கள் இருந்தாலும் இரண்டு குடும்பங்கள் என்று கணக்கிட்டு பணம் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. வரவு—செலவுத் திட்டம் 1983—84 —பொது விவாதம்—தொடர்ச்சி

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது எங்களுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை அவையின் பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன்.

''நீரின்றி அமையாது உலகு'' என்று சொன்னார் வள்ளுவப் பெருந்தகை. இன்றைக்கு தமிழ்நாட்டுக்கு அது முற்றிலும் பொருத்தமாக இருக்கிறது. பருவ மழை பொய்த்ததன் காரணமாக இன்றைக்கு குடிப்பதற்குக்கூட நீர் இல்லாத நிலைமை தமிழகம் முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. நீர் இல்லாத காரணத்தால் விவசாயம் இல்லை. நீர் இல்லாத காரணத்தால் மின்சார உற்பத்தி இல்லை. விவசாயம் இல்லாத காரணத்தால் உணவு தானிய உற்பத்தி குறைந்திருக்கிறது. மின்சாரம்





இல்லாத காரணத்தால் தொழில் உற்பத்தி குறைந்திருக்கிறது. ஆக, மொத்தத்தில் தமிழ்நாடு முழுவதும் விவசாய, தொழில் உற்பத்தி மிகப்பெரிய பாதிப்புக்கு உட்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு ஏற்கனவே மழை மிகக் குறைவாக பெய்கிற மாநிலங்களில் ஒன்று. இங்கே சாகுபடி செய்யப்படும் நிலம் என்பது மொத்தப் பரப்பில் 50 சதவீதத்திற்கும் குறைவுதான். மேலும் 25 சதவீதம் நிலம் என்பது முற்றிலும் வறண்ட பகுதி. ஆக, தமிழகத்தின் மொத்த நீரளவில் 95 சதவீதத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்திவிட்டோம். பெரிய பாசனத் திட்டம் எதையும் இனிமேல் நம்மால் போடமுயாது. நிலத்தடி நீரை எவ்வளவு எடுக்க முடியுமோ அவ்வளவையும் எடுத்து விட்டோம். ஆக, இந்த சூழ்நிலையிலே தமிழ்நாட்டிலே வறட்சி இல்லாத ஆண்டு இல்லை என்பதுதான் உண்மை.

ஆனால், இந்த ஆண்டு வறட்சி என்பது கடந்த 20 ஆண்டுகளிலே இல்லாத அளவுக்கு மிகப்பெரும் அளவில் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் பல. வழக்கமாகப் பெய்கிற மழையைவிட 37 சதவீதம் குறைவாக இந்த ஆண்டு பெய்திருக்கிறது. 16 மாவட்டங்களில் 15 மாவட்டங்களிலே வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் தமிழகத்தில் நெல் பயிரிடும் பரப்பளவு 61 சதவீதம் குறைந்திருக்கிறது. அதன் விளைவாக 17.4 இலட்சம் டன் நெல் உற்பத்தி குறைந்திருக்கிறது.

புன்செய் தானியம் உற்பத்தியாகும் பரப்பில் 35 சதவீதம் குறைந்து, அதன் மூலம் 3.57 இலட்சம் டன் புன்செய் தானியம் குறைந்திருக்கிறது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகும் பரப்பில் 25 சதவீதம் குறைந்து இருக்கிறது. அதன் விளைவாக 4.5 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி குறைந்திருக்கிறது.

[திரு. ப. நெடுமாறன்] [1983 மார்ச் 12

பருப்பு வகைகள் உற்பத்தி செய்யும் நிலப்பரப்பில் 50 சதவீதம் குறைந்திருக்கிறது. அதன் விளைவாக 1.3 இலட்சம் டன் உற்பத்தி குறைந்திருக்கிறது. ஆக மொத்தத்தில் உணவு தானிய உற்பத்தி தமிழ்நாட்டில் 26.87 இலட்சம் டன் குறைந்திருக்கிறது.

(முற்பகல் 10-40)

இவ்வளவு பெரிய அளவில் வறட்சியும், பஞ்சமும் தமிழகத்திலே எற்பட்டிருக்கும்போது, அதைப்பற்றி மத்திய, மாநில அரசுகள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பதைப் பார்த்தால், அது போதுமான திருப்தியை அளிப்பதாக இருக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாநில அரசு அதிக உதவி கோரி, மத்திய அரசை அனுகியது. ஆனால் அது மிக தாமதமாக அணுகியிருப்பதாக மத்திய அரசின் குற்றச்சாட்டு. மத்திய அரசின் குழு வந்து தமிழகம் எல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு பின் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் வைக்கும் அறிக்கையின்படிதான் தமிழகத்திற்கு மத்திய அரசு உதவி வழங்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அது எவ்வளவு வரும், எப்போது வரும் என்று சொல்ல முடியாது. ஆனால், அதற்கிடையில் நம்முடைய மாநில அரசு 45 கோடி ரூபாய் அளவில் இதற்காக செலவிட இருப்பதாக அறிவித்திருக்கிறது.

இதிலே இருக்கிற முக்கியமான ஒரு கொள்கைப் பிரச்னையை நான் இந்த நேரத்திலே உங்கள் முன்னாலே எடுத்து வைத்து வற்புறுத்த விரும்புகிறேன். இந்த வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசு கொடுக்கும் உதவியை அவர்கள்—நம்முடைய திட்டங்களுக்காக கொடுக்கின்ற பணத்திலேயிருந்து பின்னாலே கழித்துக் கொள்கிறார்கள். இந்த உதவிப் பணத்தை அவர்கள் முன் பணமாகத்தான் அளிக்கிறார்கள். இது ஒரு தவறான முறை. ஏனென்றால் வறட்சி என்பது இயற்கையினாலே ஏற்படக்கூடிய பிரச்னை. மழை இல்லாத காரணத்தாலே, வறட்சி நிலையை நாம் எதிர் பாராத நிலையிலே சந்திக்க வேண்டியிருக்கிறது. அதற்கு மத்திய அரசு முழுமையாக உதவி செய்ய வேண்டும் என்கிற ஒரு நிலையை நமது அரசு எடுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.



1983 மார்ச் 12] [திரு. ப. நெடுமாறன்]

ஐந்து ஆண்டு திட்டம் என்று சொன்னால் முதல் ஒன்றிரண்டு ஆண்டிலேயே வறட்சி ஏற்படுமேயானால், அதற்கு மத்திய அரசு கொடுக்கும் உதவியை, அந்த 5 ஆண்டுக்குள்ளாகவே கழித்துக் கொள்கிறார்கள். இதன் விளைவாக என்ன ஆகிறது. என்றால், எற்கெனவே நமது திட்டங்களிலே போடப்பட்டிருக்கிற பல்வேறு வேலைகள் பணமில்லாத காரணத்தால் ரத்து செய்யப்படுகின்றன. அவைகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட பணம் வறட்சி நிவாரணத்திற்கு செலவாகி விடுகிறது. அவைகளுக்காக அதை மத்திய அரசு மறுபடியும் ஒதுக்கீடு செய்து தருவதில்லை. ஆகவே, மத்திய அரசு இந்த வறட்சியாலோ அல்லது புயல் வெள்ளம் போன்ற இயற்கை உற்பாதங்களாலோ, ஏற்படுகின்ற விபத்துக்களிலிருந்து மக்களுக்கு ஏற்படுகிற பல்வேறு துயர்களை துடைப்பதற்காக. இந்த மாநில அரசு எடுத்துக் கொள்கிற பணிகளின் வாயிலாக ஏற்படுகிற செலவுத் தொகைகளை முழுமையாக ஏற்கவேண்டும், அதனை அளிக்க முன்வர வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும்.

ஆனால் மத்திய அரசு கொடுக்கக்கூடிய இந்த பணமும் கூட வேதனையும், வேடிக்கையையும் கலந்து அளிப்பதாக இருக்கிறது. குறிப்பிட்ட 5 ஆண்டு திட்டக் காலத்தில், முதல் ஆண்டிலோ, இரண்டாவது ஆண்டிலோ அல்லது 3வது ஆண்டிலோ இயற்கையின் காரணமாக வறட்சி, புயல், வெள்ளம் போன்றவைகள் ஏற்படுமேயானால், மத்திய அரசு அதன் நிவாரணத்திற்காக கொடுக்கக்கூடிய பணத்தை, அந்த திட்ட ஆண்டின் கடைசிக்குள்ளாகவே கழித்துக் கொள்கிறது. ஆனால் சில மாநிலங்களில் திட்ட இறுதியாண்டில் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படும்போது, மைய அரசு கொடுக்கக்கூடிய பணம், அந்த திட்ட ஆண்டிற்குள்ளாகவே கழிக்க முடியாமல் போய் விடுகிற காரணத்தாலே, அந்த மாநிலங்களுக்கு அவை முற்றும் மானியமாக அளிக்கக்கூடிய நிலை இருக்கிறது. இது மத்திய அரசின் கொள்கையிலே இருக்கக்கூடிய ஒரு முரண்பாடாகும். ஆகவே, இந்த முரண்பாட்டினை சுட்டிக் காட்டி, இயற்கையின் காரணத்தாலே ஏற்படக்கூடிய வறட்சி நிவாரண நடவடிக்கைகள் போன்றவர்களுக்கு மாநில அரசு செலவழிக்கக்கூடிய தொகையை முழுவதுமாக மத்திய அரசு கொடுக்க வேண்டும். அதை மைய அரசு மாநில அரசுக்கு திட்டப்பணிகளுக்காக கொடுக்கும். திட்டநிதியிலிருந்து கழிக்கக்கூடாது என்ற ஒரு நிலையை மைய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தி, இப்போது வறட்சிக்காக செலவழிக்கக்கூடிய பணத்தை மொத்தமாக மைய அரசு கொடுக்க வேண்டும் என்ற நிலையை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும், எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1983 மார்ச் 1

அடுத்து வறட்சிக்காக 45 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாக நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணத்தை செலவழிப்பதற்காக Staff provide பண்ணப்படவில்லை. ஏற்கெனவே மாவட்டங்களில் இருக்கக் கூடிய அதிகாரிகளுக்கு அதிக வேலைப்பளு கொடுத்து போதுமான பணியாளர்கள் (ஸ்டாஃப்) வசதிகளைச் செய்துக் கொடுக்காமலே இந்த வறட்சிப் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்து வருகிறார்கள். அது சரியாக வராது. செம்மையாக வறட்சிப் பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டுமானால், தனியாக அதற்கென்று ஸ்டாஃப்கள் போட்டு செய்யவேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

இந்த வறட்சி நிலையை ஒட்டி, இன்னொன்றையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் ... டைய மதுரை நகரத்திலே என்னுடைய ... மட்டும் அல்ல, நம்முடைய மதிப்பிற்குரிய மான் ... மைச்சர் அவர்களின் தொகுதியிலேயும், மதிப்பி ... ரய்யா அவர்கள் தொகுதியிலேயும் மிகப் ெ ... பஞ்சம் இதுவரையில் இல்லாத அளவுக்கு ஏற்ட ... மதுரையின் மக்கள் தொகை 7 லட்சம். அவர்களுக்கு ஒரு நாளைக்கு தேவையான தண்ணீர் 14 மில்லியன் காலன். ஆனால், இதுவரையில்—அதாவது வறட்சிக்கு முன்பு—அளிக்கப்பட்டு வந்தது 10 மில்லியன் காலன் தான். ஆனால் அதை இன்றைக்கு 3 மில்லியன் காலனாக குறைத்திருக்கிறார்கள். 14 மில்லியன் காலன் தேவையாக இருக்கக்கூடிய ஒரு இடத்திலே மூன்றே மூன்று மில்லியன் காலன் மட்டுமே அளிப்பார்களேயானால் அதன் விளைவாக மதுரை நகரத்திலேயே இதுவரையில் வரலாறு காணாத அளவுக்கு மிகப் பெரிய குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. மணலூர் திட்டத்தினைப் பற்றி எல்லாம் இங்கே இரண்டு நாட்களுக்கு முன்பு அமைச்சர் ராகவானந்தம் அவர்கள குறிப்பிட்டார்கள். மணலூர் திட்டத்தினைப் பொறுத்தவரையில் நேஷனல் ஹைவேஸ் மூலமாக புதிதாகக் குழாய்கள் வரவேண்டி இருந்ததன் காரணத்தால் இப்போது கிட்டத்தட்ட கடந்த 7 மாத காலமாக தாமதம் ஏற்பட்டு இரண்டு நாட்களுக்கு முன்புதான் மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால், உடனடியாக வேலைகளைத் தொடங்கவில்லை காரணம் இந்த வேலைக்குத் தேவையான பி.வி.சி. பைப்புகள் வழங்கப்படவில்லை. மதுரை நகராட்சியிலேயும் அந்தப் பைப்புகள் இல்லை. வாட்டர் போர்டிலே இருந்தும் அது வழங்கப்படவில்லை. ஆகவே வேலை ஆரம்பிப்பதற்கு சில நாட்கள் ஆகும் என்று மதுரை நகராட்சியின் அதிகாரிகள் சொல்கிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். இவ்வளவு பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கக்கூடிய வேளையில் உடனடியாக வேறு எந்தப் பகுதியிலே இருந்தாவது குடிநீர்



1983 மார்ச் 12] [திரு. ப. நெடுமாறன்]

குழாய்களை மதுரைக்கு அனுப்பி உடனடியாக இத் திட்டத்தை தொடங்குவதற்கான வேலையை உடனடியாக அரசாங்கம் செய்யவேண்டும்.

அடுத்து இன்னொன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் போது சொன்னார்கள். மதுரை நகரிலே 650 போர் வெல்கள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். ஆகவே இரண்டொரு வாரங்களில் இந்த வேலைகள் முடிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், நான் ரொம்ப வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் நேற்று மதுரையிலே இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதிகளைப்பற்றி விசாரித்தபோது ஒரு கிணறு தோண்டுகின்ற வேலையினைக்கூட இன்னும் அங்கே ஆரம்பிக்கவில்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். மக்களும் சொல்கிறார்கள். அதற்குக் காரணம் அங்கே வேண்டிய நிதியினை அரசாங்கம் ஒதுக்காததுதான். நிதி வந்ததற்குப் பிறகு தான் வேலை ஆரம்பிக்கப்படும் என்று சொல்கிறார்கள். இது மிகவும் வருத்தத்திற்குரிய நிலைமையாகும். இப்போது மதுரையிலே லாரிகளை வைத்துக்கொண்டு தண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அங்கேயுள்ள 23 லாரிகளில் 11 லாரிகள்தான் ஓடுகின்றன. பாக்கி ஓடவில்லை. இது மிகவும் வருந்துவதற்குரிய ஒன்றாகும். ஆனால், அது குறித்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே நாங்கள் எடுத்துக் காட்டியதன் மூலம் இப்போது 16 லாரிகள் மட்டும் ஓடுகின்றன. ஒரு லாரி ஒரு நாளைக்கு 7 ட்ரிப்புகள் அடிக்கின்றது. அப்படிப் பார்த்தால் 16 லாரிகளும் 112 ட்ரிப்புகள் அடிக்கின்றன. 800 காலன் 1200 காலன் கொள்ளளவு உடைய பல்வேறு லாரிகளாக அவை இருக்கின்ற நிலைமையில் சராசரியாக ஆயிரம் காலன் கொள்ளளவு என்று வைத்துக் கொண்டால் அவை ஒரு நாளைக்கு 1,12,000 காலன் தண்ணீரை மட்டுமே சப்ளை செய்கின்றன. ஆனால், மதுரை நகரின் தேவையோ 110 லட்சம் காலன் தண்ணீர். எனவே, இப்படி 1,12,000 காலன் தண்ணீரை மட்டும் லாரிகளின் மூலமாக சப்ளை செய்தால் மக்கள் எந்த அளவுக்கு அவதிக்கு உள்ளாவார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, உடனடியாக அதிகமான அளவிலே லாரிகளை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்து அரிசி பற்றி இங்கே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 80 ஆயிரம் டன் அரிசியும் 40 ஆயிரம் டன் கோதுமையும் மத்திய அரசிடம் நாங்கள் கேட்டோம். அவர்கள் 5 ஆயிரம் டன் கோதுமையும், 5 ஆயிரம் டன் அரிசியும் அளித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால்,

[திரு. ப. நெடுமாறன்] [1983 மார்ச் 12

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே உணவுத்துறையிலே ஓரளவுக்கு தன்னிறைவு பெற்ற ஒரு மாநிலம். கேரளம், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களைப் போல் உணவு தானியங்களுக்கு அண்டை மாநிலங்களையோ அல்லது மத்திய அரசையோ எதிர்பார்த்திருக்கின்ற மாநிலம் அல்லநமது தமிழகம். அப்படி உணவு உற்பத்தியிலே தன்னிறைவு பெற்ற இந்த மாநிலம் இன்றைக்கு மிகப் பெரிய வறட்சிக்கு ஆளாகி இருக்கின்றது. பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணத்தாலும், காவேரிப் பிரச்சினையிலே சுமுகமான ஒரு முடிவு இல்லாததன் காரணத்தால் இங்கே மிகப் பெரிய அளவிலே சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலும் உணவு தானிய உற்பத்தி குறைந்திருக்கின்றது. இந்த நிலைமையில் தமிழகத்தை அனுதாபத்துடன் பார்த்து இதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு மத்திய அரசு என்ன காரணத்தாலோ ஏற்பாடு செய்யவில்லை. தமிழகத்திற்காக வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்கின்ற அளவுக்கு நமக்கு அனுமதியும் கிடையாது. இந்த நிலைமை தமிழகத்திற்கு மட்டுமல்ல. எந்த மாநிலத்திற்கும் கிடையாது. வெளி மாநிலங்களிலிருந்து அந்தந்த அரசாங்கங்களிடமிருந்துகூட உணவு தானியங்களை பெறுகிற நிலைமை இந்த மாநிலத்திற்கு இருக்கின்றதா என்று கேட்டால் அதுவும் இல்லை. இப்படிப்பட்ட நிலைமையிலே சில தனிப்பட்ட வியாபாரிகள் வெளி மாநிலங்களிலிருந்து உணவு தானியங்களை அரிசி உட்பட இங்கே கொண்டு வந்து அதிகமான விலைக்குத் தமிழகத்திலே விற்கக்கூடிய ஒரு நிலைமைக்கு மத்திய அரசு அனுமதித்து

(முற்பகல் 10-50)

இருக்கின்றது. மாநில அரசுக்கு இந்த அனுமதியை வழங்குவதை மறுத்துவிட்டு அதே அனுமதியை சில தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்குவதன் மூலம் சில தனிப்பட்ட வியாபாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்கு மத்திய அரசு அனுமதித்து இருக்கிறது இதை நான் மிக வன்மையாக கண்டிக்கிறேன். மத்திய அரசின் சோஷலிஸ கோட்பாடுகளுக்கு நேர்மாறான காரியம் இது என்பதை இங்கே கண்டித்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்டை மாநிலங்களிலிருந்து அரிசியை வியாபாரிகள் வாங்கலாம் அவர்கள் அதிக விலை கொடுத்து அங்கிருந்து வாங்கிவந்து இங்கே உள்ள மக்களுக்கு இன்னும் அதிக விலைக்கு கொடுக்கிறார்கள். அதையும் இங்குள்ள மக்கள் வாங்கவேண்டிய கட்டாயம் இன்றைக்கு இருக்கிறது. இந்த நிலைமையில் நம்மை எதிர்பார்த்து இங்கே நம்முடைய விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு நாம் எவ்வளவு குறைந்த விலை கொடுக்கிறோம் என்பதை



1983 மார்ச் 12] [திரு. ப. நெடுமாறன்]

ஒப்பிட்டுப் பார்த்தால் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வு எவ்வளவு என்பது நமக்குத் தெரியும். வெளியே அதிக விலைக் கொடுத்து வாங்குகிறவர்கள் இங்கேயுள்ள நம்முடைய விவசாயிகளுக்கு போனஸ் முறையை அறிவித்து உற்பத்தி செய்வது அரசாங்க கொள்முதலுக்கு கொடுப்பதற்கு இன்சென்டீவ் போனஸ் முறையை அமுல்படுத்தினால் நம்முடைய விவசாயிகள் கஷ்ட காலத்திலும் உற்பத்தியை பெருக்குவார்கள். மற்ற மாநிலங்களுக்கு இந்த வழியில் போகும் பணம் இங்குள்ள விவசாயிகளுக்குக் கிடைக்கும். அதையும் இந்த அரசு ஆராய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின் உற்பத்தியைப் பற்றி சில வார்த்தைகள் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்திற்கு ஆண்டுக்கு 13,692 மில்லியன் யூனிட்ஸ் மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால், உற்பத்தியாவது 10,546 மில்லியன் யூனிட்ஸ் தான். மின்சாரத் துறையில் பற்றாக்குறையாக நாம் இருக்கிறோம். என்ன காரணத்தால் இந்த பற்றாக்குறை ஏற்பட்டது. நிர்வாக திறமையின்மை காரணம்தான். மிஸ் மேனேஜ்மெண்டு தான் இந்த மின்சார பற்றாக்குறைக்குக் காரணம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக துத்துக்குடி. அங்கே 3 யூனிட்டுகள் வேலை செய்கின்றன. 210 மெகா வாட்ஸ் ஒரு யூனிட்டுக்கு வீதம் 630 மெகா வாட்ஸ் உற்பத்தியாகின்றன துத்துக்குடியில். 2 மாதத்திற்கு முன்பு வரை மொத்தம் 250 மெகா வாட்ஸ் மின்சாரம் தான் அங்கே உற்பத்திச் செய்யப்பட்டது. என்ன காரணத்தால் இவ்வளவு குறைந்தது. மின்சார வாரியத்தின் தலைவர் பொறுப்பை ஏற்க இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய விஜயராகவன் அவர்கள் அங்கே போய் 2 வாரம் தங்கியிருந்து திருச்சியில் உள்ள ஹெவி பாய்லர் அதிகாரிகளோடு கலந்து பேசி அதை சரி செய்தார் என்று பத்திரிகையில் செய்தி வருகிறது. இதை சரி செய்யமுடியாமல் ஏன் பல மாதங்கள் ஆனது. இந்த நடவடிக்கையை முன்பே எடுத்து இருக்கக்கூடாதா அரசாங்கம். மின்சார வாரியத்தில் இருக்கக்கூடிய நிர்வாகத்தின் திறமையின்மை காரணமாக மின்சார உற்பத்தியிலும், வினியோகத்திலும் மிகப் பெரிய சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து, மின்சார வாரியத்திலிருந்து அவர்களுடைய கீழ் உள்ள அதிகாரிகளுக்கு ஒரு சர்க்குலர் போட்டிருக்கிறார்கள். அது என்ன சர்க்குலர் என்றால் 20 ஹார்ஸ் பவர்க்கு மேல் உள்ள எந்த தொழிற்சாலைக்கும் மின்சார அனுமதி கொடுக்கக்கூடாது என்று. 20 ஹார்ஸ் பவருக்கு மேல் புதிதாக தொழிற்சாலை தொடங்க மின்சாரம் கேட்டால் அவர்களுக்கு மின் இணைப்பு கிடையாது. கொடுக்கக்கூடாது என்று ஒரு சர்க்குலரை மின்சார வாரியம் அதன் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறது இது ஒரு பக்கம்

மத்திய அரசாங்கத்திடம் நீங்கள் தொழில் வேண்டும் என்று மனு செய்து அவர்கள் தொழில்கள் தொடங்க போதுமான அனுமதி கொடுக்கவில்லை என்று ஒரு குற்றச்சாட்டை நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். நாங்களும் அந்த குற்றச்சாட்டை மத்திய அரசின் மீது சுமத்துகிறோம். ஆனால் இப்படிபட்ட ஒரு சர்க்குலரை நீங்கள் அனுப்பினால் இதனுடைய அர்த்தம் என்ன? மைய அரசிடம் தொழில் கேட்டு யாராவது மனு செய்தால், மைய அரசு சில கேள்விகளைக் கேட்கிறது. உங்கள் தொழிலுக்கு தேவையான நிலக்கரி கிடைக்குமா? உங்களுடைய தொழிற்சாலைக்கு மின்சாரத்திற்கு வழி என்ன என்று கேட்டு அவைகளை எல்லாம் இந்த மாநில அரசு கொடுக்கும் என்ற உறுதியை கொடுத்து அதற்கு பின்னால் அனுமதியை கேட்க வேண்டி உள்ளது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு சர்க்குலரை அதாவது 20 ஹார்ஸ் பவருக்கு மேல் யாருக்கும் மின்சாரம் கொடுக்க முடியாது என்று சர்க்குலர் போட்டால் எப்படி புதிய தொழிற்சாலைக்கு அனுமதி வாங்கமுடியும்? அதன் அர்த்தம் என்ன? அதன் மேல் மத்திய அரசு எப்படி அனுமதி கிடைக்கும். இதற்கு மத்திய அரசாங்கத்தின் மீது முழுமையாக குற்றம் கூற விரும்பாமல் இந்த மாநில அரசு மீதும் குற்றச்சாட்டைக்கூற விரும்புகிறேன்.

இது முன்னுக்குப்பின் முரணானது. உடனடியாக இந்த சர்க்குலரை வாபஸ் வாங்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அதைப்போல் நுழைவு வரியைப்பற்றியும் சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். ஆக்ட்ராய் வரி என்பது வெளி மாநிலங்களிலிருந்து இந்த மாநிலத்திற்கு ஏதேனும் சரக்கு வருமேயானால் அதற்கு விதிக்கப்படுகிற வரி, அந்த வரியை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ரொம்பச் சாமர்த்தியமாக உள் மாநிலத்திலேயே விதிப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் பிள்ளை

ரி முடிந்து இருக்கிறது

ர். அந்தப் பட்டியலிலே

இந்த நகரத்தினுள் வரு

சதவீதம் விதிக்கப்படும்

யச் சுற்றி அம்பத்துர்

ஆவடி போன்ற தொழில் கேந்திரங்கள் இருக்கின்றன. அங்கே உற்பத்தியாகிற அத்தனைப் பொருட்களும் சென்னை நகரத்திற்கு வந்துதான் விற்பனையாக வேண்டும். அதைப்போலவே மதுரை நகரைச் சுற்றிப் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த மாநகராட்சியின் எல்லைக்கு வெளியே தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்றன. அதைப்போலவே கோயம்புத்துர், திருச்சி





போன்ற நகரங்களிலும் நிலைமை இருக்கிறது. நகரங்களுக்குள்ளே தொழிற்சாலைகளை அமைக்கக் கூடாது நகரங்களுச்கு வெளியே தான் அமைக்க வேண்டுமென்று ஒரு பக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னொரு பக்கம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் நகருக்குள் வருமானால் வரிவிதிப்போம் என்று சொல்லி இருக்கிறீர்கள். இது எவ்வளவு முன்னுக்கு பின் முரணாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக்ட்ராய் வரி பற்றி தமிழ்நாடு அரசாங்கம் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே 7-வது நிதிக் கமிஷனிடம்—செவன்த் பைனான்ஸ் கமிஷனிடம் இந்த அரசின் சார்பில் ஒரு மெமோரண்டம் சமர்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த மெமோரண்டத்திலே என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்பதை நான் மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

In th s connection we may also point out that unlike many other States Octroe 's dot l vec in T. mil Nadu. This revenue is a s'gn.f cant souice to other States s' ch as Maharashtra, G jarath, W.st Bengal, Madhya Pradesh, Karnataka and Uttar Pradesh.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலே அது எவ்வளவு வசூலாகிறது என்ற விவரமும் இருக்கிறது. மேலும்,

It is again in this backgro.nd that we would urge the Finance Commiss'on to give special weightage to urban population in the scheme of devolution for sharable taxes and dut es.

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் இந்த ஆக்ட்ராய் வரியைப் போட்டு அவர்கள் இவ்வளவு தூரம் வரி வசூலிக்கிறார்கள் இருந்தாலும் தமிழ்நாடு ஆக்ட்ராய் வரி விதிக்கவில்லை, விதிக்காது என்று ஏழாவது நிதிக் குழுவுக்கு அறிக்கை கொடுத்து விட்டு அதற்குப் பின்னாலே இந்த வரியை இங்கே விதிப்பீர்களானால் ஏழாவது நிதிக் குழுவிற்கு நீங்கள் கொடுத்த அறிக்கை தவறானதா அல்லது இப்போது நீங்கள் விதிக்கிற இந்த வரி தவறானதா என்று அறிய விரும்புகிறேன். இந்த ஆக்ட்ராய் வரி மிகப் பிற்போக்கானது என்று நிதிநிலை நிபுணர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

16—9—1980ஆம் நாள் அன்று டெல்லியிலே நடைபெற்ற மாநில அமைச்சர்கள் மாநாட்டில் அமைச்சர் பூடாசிங் அவர்கள் பேசியபோது பின்வருமாறு சொன்னார். ஒரு ரூபாய் ஆக்ட்ராய் வரியை வசூலிப்பதற்கு அரசாங்கச் செலவு 83 பைசா ஆகும் என்று சொன்னார்கள். ஒரு ரூபாய் ஆக்ட்ராய் வரியை வசூலிப்பதற்கு 83 பைசா செலவாகும் என்று சொன்னால் நீங்கள் 26 கோடி ரூபாய் அதன் மூலமாக வரும் என்று எதிர்பார்க்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள், அதிலே

ஏறத்தாழ 20 கோடி ரூபாய் செலவாகும் என்றால் உங்களுக்கு 6 கோடி ரூபாய் மட்டுமே கிடைக்கக்கூடிய ஒரு வரியை போட்டு பொதுமக்களின் வெறுப்புக்கு நீங்கள் ஆளாகவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 26—2—1981 அன்று மத்திய நாடாளுமன்றத்திலே அமைச்சர் பூடாசிங் அவர்கள் இன்னொரு முக்கியமான உண்மையையும் தெரிவித்தார்கள். இந்த நாடு பூராவும் உள்ள ஆக்ட்ராய் பரிசோதனை சாவடிகளை எடுத்துவிட்டால் ஒவ்வொரு நகரத்திலேயேயும் உள்ள அந்த சோதனை சாவடிகளை எடுத்துவிட்டால் நாட்டிலே பெட்ரோல் டீசல் 10 சதவீதம் மிஞ்சும் என்று சொன்னார். இந்த சோதனை சாவடிகளை எடுத்துவிட்டால் அதன் மூலமாக பெட்ரோல் டீசல் 10 சதவீதம் சேமிக்கலாம். அதன்மூலமாக 296 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி மிஞ்சும், ஆகவே இந்த வரியை விதிக்கவே கூடாது என்று மத்திய அரசாங்கம் சொல்கிறது.

(முற்பகல் 11-00)

மற்ற அமைச்சர்கள் எல்லாம் சொல்கிறார்கள். இது வரையில் நாங்கள் போடவில்லை என்று ஏழாவது நிதிக் குழுவின் முன்னால் பெருமை பேசிக் கொண்ட நீங்கள் இன்றைக்கு விதித்தது ஏன் என்று அறிய விரும்புகிறேன். அதற்கு இன்னொரு உதாரணத்தையும் நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

ஈரோடு நகரம் உங்களுக்குத் தெரியும். கைத்தறித் துணிகளுக்கு தமிழகத்தில் மிகப் பெரிய சந்தை. தமிழ்நாடு முழுவதிலுமிருந்து பல்வேறு ஊர்களிலிருந்து கைத்தறித்துணிகள் வாரந்தோறும் ஈரோட்டிற்கு வந்து அங்கே விற்பனை ஆகிறது. ஈரோடு சந்தையிலே சந்தை கூடுகிற தினத்தன்று ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் விற்பனை ஆகிறது. நீங்கள் போட்டிருக்கிற நுழைவு வரி மூலமாக இனிமேல் கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை எடுத்துக்கொண்டு ஈரோட்டிற்கு வந்தால் அவர்களுக்கு இரண்டு சதவீதம் வரி விதிக்கப்படும். அது கைத்தறித் தொழிலை எவ்வளவு பெரிய பாதிப்பிற்கு ஆளாக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அதை எண்ணிப்பார்த்து இந்த ஆக்ட்ராய் வரியை, நுழைவு வரியை ரத்து செய்ய வேண்டும். இவ்வரியின் மூலம் பல்வேறு ஊழல்கள் ஏற்படும். ஒரு நகரத்திற்கு ஐந்து மைல் பத்து மைல் தூரத்தில் ஒரு கிட்டங்கியை வைத்துக்கொண்டு, அந்த கிட்டங்கியில் சரக்குகளை கொண்டு வந்து இறக்கிக் கொண்டு, எங்களுடைய கிட்டங்கியிலிருந்து சரக்குகளை நாங்கள் கொண்டு வருகிறோம் என்று சொன்னால் அதற்கு வரி





விதிக்க முடியாது. அது ஊழலுக்கு வழி வகுக்கும்வெளி. மாநிலங்களிலிருந்து வரக்கூடிய சரக்குகளுக்கு ஏற்கனவே நீங்கள் சேல்ஸ் டாக்சிற்கு மேலே சர்-சார்ஜ் போடுகிறீர்கள். அந்த சர்சார்ஜை நீங்கள் வைத்துக்கொள்ளலாமே தவிர, நுழைவு வரியை உடனடியாக ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை தயவு செய்து கைவிடுங்கள். அதனால் அதிகமாக ஆதாயம் உங்களுக்கு இருக்காது. ஐந்தாறு கோடி தான் மிஞ்சும். அவையும் நிர்வாகச் செலவுகளுக்கே சரியாக போய்விடும். ஆகவே அதை கைவிட வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

இந்த நிலையில் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்திற்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மிகப்பெருமையோடு சொல்லி இருக்கிறீர்கள். இது ஒரு ஏமாற்றுகரமானது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்பது ஒரு நல்ல திட்டம். ஆனால் இன்றைக்கு தமிழகத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பது 16.1 சதவீதம். அன்-எம்ப்ளாய்மென்ட் ரேட் தமிழகத்திலே 16.1 சதவீதம். இந்தியா பூராவும் இருப்பது 8.5 சதவீதம் தான். இரண்டு மடங்கு அதிகமாக வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற தமிழகத்திலே இந்தத் திட்டம் எப்படிப் போதுமானதாக இருக்கும்? ஒருவருக்கு 500 ரூபாய் என்ற அளவிற்கு கொடுத்தால் கூட 25 ஆயிரம் பேர்களுக்குத் தான் இந்த 15 கோடி ரூபாயை வைத்து உதவி செய்ய முடியும். இந்த 15 கோடி ரூபாயிலே தொழில்களைத் துவங்கினால் இன்னும் குறைந்த பேர்களுக்குத் தான் உதவ முடியும். ஆகவே அதை எண்ணிப் பார்த்து மறுபரிசீலனை செய்து, விரிவான அடிப்படையிலே வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும் வகையிலே இந்தத் திட்டத்தை திருத்த வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். நீங்கள் மத்திய சர்க்காரிடத்திலே ஒன்றை வற்புறுத்த வேண்டும். இந்தியாவிலேயுள்ள பல்வேறு மாநிலங்களில் அர்பன் பாப்புலேஷன் அதிகமாக இருக்கிற மாநிலம் தமிழகம். அர்பன் பாப்புலேஷன் என்பது இங்கே 32·98 சதவீதம். அதாவது ஏறத்தாழ 33 சதவீதம், மக்கள் இங்கே நகரங்களில் வாழ்கிறார்கள். 67 சதவீதம் மக்கள் தான் கிராமப் புறங்களில் வாழ்கிறார்கள். இதில் மகாராஷ்டிரம் முதலாவதாகவும், தமிழகம் இரண்டாவதாகவும் இருக்கிறது. ஆகவே தமிழகம் விசேஷமான ஒரு அம்சத்தைக் கொண்டது. 37 சதவீதம் மக்கள் நகரங்களில் வாழ்கிறார்கள். மூன்று மாநகராட்சிகள், 95 நகராட்சிகள், முனிசிபல் டவுன்ஷிப் 8, பஞ்சாயத்து டவுன்ஷிப் 12, டவுன் பஞ்சாயத்துக்கள் 559, ஐயாயிரம் மக்கள் தொகைக்கு மேலே உள்ள பஞ்சாயத்துகள் 34. ஆக இவ்வளவு பெரும்பாலான நகரங்களில் 33 சதவீத மக்கள் வாழ்கிறார்கள். இவர்களுக்கு வேண்டிய அடிப்படை

வசதிகளை செய்து கொடுக்கக்கூடிய ஒரு நிதியாதாரத்தை நகராட்சிகள், ஊராட்சிகள் மற்ற அமைப்புகள் பெற்றிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. மாநில அரசினுடைய உதவியை எதிர்பார்த்து தான் அவைகள் பரிதாபமான நிலையில் இருக்கின்றன. ஆகவே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்திலே நிதி ஒதுக்குகிறபோது அர்பன் பாப்புலேஷனை மனதிலே கொண்டு அதற்கேற்ற வகையில் நிதியை ஒதுக்க வேண்டும்.

We would urge the Finance Commission to give special weightage to urban population in the scheme of devolution for sharable taxes and duties.

மத்திய வரி பங்கீடுகளைச் செய்யும்போது இதை மனதிலே கொண்டு செய்து நமக்கு அதிக நிதி உதவி கிடைப்பதற்கு வழி வகை செய்யவேண்டும். அப்பொழுதுதான் நகர மக்களுக்கு இருக்கக்கூடிய பல்வேறு குறைகளைப் போக்க முடியும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இறுதியாக, ஐந்தாண்டுத் திட்டங்களிலே நமக்கு அளிக்கப்பட்டு வருகிற மத்திய பங்கீடு என்பது ஒவ்வொரு ஐந்தாண்டுத்திட்டத்துக்கு, ஐந்தாண்டுத்திட்டம் மிகக் குறைந்துகொண்டே போகிறது. இதையும் நம்முடைய நிதியமைச்சர் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச்சொல்ல வேண்டும். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மத்திய அரசு உதவி என்பது 10.8 சதவீதமாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சதவீதமாக இருந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 7.4 சதவீதமாக இருந்தது. 1966-69 வரையிலே போடப்பட்ட திட்டங்களிலே 6.8 சதவீதமாக இருந்தது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலே 4.7 சதவீதமாக இருந்தது. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே 4 சதவீதத்திற்கும் குறைந்து விட்டது. ஆக, 10 சதவீதத்திலே தொடங்கி 4 சதவீதத்திற்கும் குறைவாக, ஐந்தாண்டுத் திட்டங்களிலே தமிழகத்திற்கு மத்திய நிதி உதவி குறைந்து கொண்டே வந்திருக்கிறது. இதை நீங்கள் சுட்டிக்காட்டி, மத்திய அரசாங்கத்திடம் போராடி, தமிழகத்திலே உள்ள எல்லா கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு, வலியுறுத்தி, நமக்கு வேண்டியதை மத்திய அரசிடம் நீங்கள் பெறவேண்டும்.

மத்திய அரசாங்கத்திடமும் அண்டை மாநில அரசாங்கங்களிடமும் சுமுகமான உறவை வைத்துக் கொண்டு காரியங்களைச் சாதிக்கிற தைரியமாவது இருக்கவேண்டும். அல்லது மத்திய அரசாங்கத்திடம் சண்டைபோட்டுக் காரியங்களைச் சாதிக்கிற தைரியமாவது வேண்டும். இந்த அரசாங்கத்திடம் இரண்டும் இல்லை என்பதை மிக வருத்தத்தோடு





நான் தெரிவித்துக் கொள்கிறேன். அண்டை மாநில அரசுகளோடு உங்களுக்குச் சுமுகமான உறவு இல்லை. நீங்கள் ஒரு மாநிலக்கட்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அண்டை மாநில அரசியலிலே தலையிடாமல் இருந்திருக்க வேண்டும். ஆனால் அண்டை மாநிலத்திலே நடைபெற்ற தேர்தலிலே நீங்கள் தலையிட்டு, வேண்டாத பிரச்னைகளை வளர்த்துக் கொண்டு, மாநிலங்களுக்குள் இருக்கக்கூடிய சுமுகமான உறவுகளை நீங்கள் கெடுத்துக் கொண்டீர்கள். உதாரணம் கர்நாடக மாநிலத் தேர்தலிலே உங்களுடைய அணுகு முறை என்பது இந்த மாநிலத்திற்கு மொத்தத்திலே பாதிப்பை ஏற்படுத்தி விட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்டை மாநில அரசுகளிடமிருந்து நமக்கு ஆற்று நீர் வர வேண்டியிருக்கிறது; மின்சாரம் வர வேண்டியிருக்கிறது; உணவு தானியம் வரவேண்டியிருக்கிறது, எல்லாவற்றிலும் நாம் பற்றாக்குறையாக இருக்கிறோம். இந்த நேரத்திலே அண்டை மாநிலங்களோடு சுமுகமான உறவுகளை வளர்த்துக் கொண்டு, அதே வேளையில் மத்திய அரசாங்கத்திடம் பேசிப் பார்த்து, முடியாவிட்டால் தமிழகத்தில் உள்ள எல்லா கட்சிகளையும் சேர்த்து, போராடி, இந்தத் தமிழகத்திற்குத் தேவையானதை நீங்கள் செய்தாக வேண்டும், செய்தாக வேண்டுமென்று நான் வற்புறுத்தி எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

For the benefit of the hon. Members, a point of information

மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பேசுகிறபொழுது வெளிநாடுகளிலேயிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கு மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லையென்கிற மனக் குறையினை வெளிக்கொணர்ந்தார்கள். நான் ஒன்றை மட்டும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1980-81 ஆம் ஆண்டு மட்டும் மைய அரசு ரஷியா மற்றும் சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்கு ரூ. 224 கோடிக்கு அரிசி ஏற்றுமதி செய்திருக்கிறது. 1981-82ஆம் ஆண்டு ரூ. 343 கோடிக்கு அரிசி ஏற்றுமதி செய்திருக்கிறது. அதே போன்று 1982-83ஆம் ஆண்டு பல கோடி ரூபாய்க்கு அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. மாநிலத்திலே வறட்சி, இங்கே அரிசியை உடனடியாக அனுப்புங்கள் என்று கேட்கிறபொழுது இங்கே இருக்கிற மக்கள் அவதிப்படுகிறார்கள் என்று கேட்கிறபொழுது (குறுக்கீடு) நமக்குக் கிடைக்க வேண்டியதைக்கூட, இருக்கிற அதிகாரங்களுக்கு உட்பட்டு கேட்டாலுங்கூட கொடுக்காமல் ............. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் சொல்வதற்குப் பதிலாக, உறுப்பினர் சொல்கிறார், அவ்வளவு தான் வித்தியாசம்.

**திரு. அ. ரகுமான்கான் :** பாய்ன்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டது. மத்திய சர்க்கார் மூலமாகத் தான், மத்திய சர்க்கார் அனுமதித்தால்தான் வெளி நாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யமுடியும் என்பது. கலைஞர் முதல்வராக இருந்தபொழுது, தாய்லாந்திலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்காக மத்திய அரசை அணுகி அந்தக் காரியத்தைச் செய்தார்கள்.

(முற்பகல் 11-10)

அதைப்போலச் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தைத்தான் அவர் பிரதிபலித்தார். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரன் அவர்களோ அமெரிக்காவுக்கும், இரஷ்யாவிற்கும் போய்க்கொண்டிருக்கிறார்.

**திரு. ப. நெடுமாறன் :** தலைவரவர்களே ........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த விவகாரம் முடிந்து விட்டது. அவை உறுப்பினர்கள் எல்லோருக்கும் தான் அவர்கள் இரண்டு பேர்களும் சொன்னார்கள். திரு. நெடுமாறன் அவர்களுக்காகத் தனியாகச் சொல்லவில்லை. அதனால் திரு. நெடுமாறன் அவர்கள் எழுந்திருக்க வேண்டாம். இது ஒரு கருத்து அல்ல; ஒரு புள்ளி விவரத்தைத்தான் சொல்லியிருக்கிறார்கள், அவ்வளவுதான்.

* **திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையாகிய வரவு—செலவுத் திட்டத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்காக நான் முன் வருகிறேன். முதலிலே நமது மாண்புமிகு நிதியமைச்சரவர்களுடைய சொற்களையே என்னுடைய தொடக்க உரையாக அமைக்க விரும்புகிறேன்.

> ''இந்த நிதிநிலை அறிக்கையையொட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல எண்ணத்துடனும், நல்ல நோக்கத்துடனும், நாட்டின் நலங்கருதியும், மக்களின் நல்வாழ்வு கருதியும் கூறும் சீரிய பரிந்துரைகள், நிலைமையை மேலும் செம்மைப்படுத்த பெரிதும் பயன்படும் என்று கருதுகிறேன்

என்று வரவு-செலவுத் திட்டத்தை அவைமுன் வைத்த, சுவைத் தமிழ் வல்லுநர் நாவலர் அவர்கள் வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள்.





ஆனால் அந்த அறிக்கையையும், அது தொடர்பாக வெளியிடப் பெற்றிருக்கின்ற பிற வெளியீடுகளையும் படித்துப் பார்த்தால் சீரிய பரிந்துரைகளைத் தருவதற்கு அறிக்கை விவரமாகவும் இல்லை, விளக்கமாகவும் இல்லை. விவரங்கள் அடங்கிய மானியக் கோரிக்கை வெளியீடுகளும் கண்களை மயக்கச் செய்யும் எண்களால் நிரப்பப்பட்டிருக்கின்றனவே தவிர கருத்தினை விரிக்கும் விளக்க நூல்களாக இல்லை.

சான்றாக, எனக்கு முன்னாலே பல மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதற்கிணங்க, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்பதற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்பதெல்லாம் இங்கே குறிப்பிடப் பெற்றிருக்கிறது. ஆனால் எப்படித் தரப் போகிறீர்கள், குடிசைத் தொழில் மூலமாகவா கைத்தொழில் மூலமாகவா அல்லது பெருந்தொழில்கள் மூலமாகவா என்கின்ற விளக்கங்கள் அதிலே இல்லை.

நுணுக்க இயந்திரங்கள் அடங்கிய தொழிற்சாலையில் ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்றால் ஒன்றரை இலட்சம் ரூபாய் வீதத்தில்தான் ஒருவருக்கு வேலை கொடுக்க முடியும் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அப்படியென்றால் இந்த 15 கோடி ரூபாயிலே 1,050 பேர்களுக்கு மட்டும்தான் வேலை கொடுக்க முடியும். காந்தியடிகளினுடைய பொருளாதாரத் திட்டப்படி இன்றைய ரூபாய் மதிப்பில் ஆறாயிரம் ரூபாய்க்கு ஒருவருக்கு வேலை என்றால் இருபத்தைந்தாயிரம் பேர்களுக்குத்தான் வேலை தர முடியும்.

ஆகவே, ஐந்து கோடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தத் தமிழகத்தில் ஒரு கோடி குடும்பங்கள் என்று கணக்கிட்டாலும், வேலை கொடுக்கப்பட வேண்டியவர்கள்கூட பத்து இலட்சம் என்று கணக்கிட்டாலும் கூட, வேலை தேடித் தரும் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதைவிட நான் குறைவாகத்தான் சொல்கிறேன் — பத்து இலட்சம் என்று சொல்லியிருந்தாலும்கூட, இந்தக் கணக்கிலே நாம் வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் நாற்பது வருடங்கள் ஆகும். இந்த நாற்பது வருடங்களுக்குள்ளே, தமிழ்நாட்டிலே வேலையற்றிருக்கின்றவர்களின் நிலைமை என்னவாக இருக்கும். அந்த வேலை தேடித் தருகின்றோம் என்று சொல்பவர்களின் நிலைமை என்னவாக இருக்கும் என்பதையெல்லாம் காலந்தான் நிர்ணயிக்கும்.

இங்கே இப்பொழுது இந்த 15 கோடி ரூபாய்த் திட்டத்தைச் சொல்லுகின்ற நேரத்திலேகூட, நமது ஆளுநர் அவர்கள் ஒன்றாம் மாதத்திலேயே சொல்லுகின்றபொழுதே இதைச்சொல்லி விட்டார்கள். இப்பொழுது மூன்றாவது மாதத்தில் நிதியமைச்சரவர்கள் தருகின்ற இந்த அறிக்கையிலேகூட, இந்தக்

(திரு. குமரி அனந்தன்) [1983 மார்ச் 12

திட்டம் உருவாக்கப்படுகின்ற நிலையிலேயே இருக்கிறது என்று சொல்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் திட்டக் கரு, செயல்பாட்டுச் குழந்தையாக உருவாகித் திருவாவது எப்போது என்பதே நமக்கெல்லாம் தெரியாதிருக்கின்றபொழுது சீரிய பரிந்துரைகளை எப்படித் தருவது என்பது எங்களுடைய அறிவுக்குரியதில்லை என்று சொன்னாலும்கூட, புரிகின்ற அளவிற்குக் கூட இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த விளக்க அறிக்கைகள் நிபுணர்களுக்கு மட்டுமே எழுதப்பட்டிருப்பதைப் போல இருக்கிறதே தவிர, எங்களைப் போன்றே சாதாரண சமுதாயத் தொண்டர்கள் பார்க்கின்ற வகையிலே எழுதப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை.

அடுத்து, இங்கே சொல்லப்படுவது தொழில் வளர்ச்சி. தொழில் வளர்ச்சியை பற்றிக் குறிப்பிடுவதற்கு முன்னால் அதற்கு மிக அடிப்படையாக இருக்கின்ற மின்சார சக்தியைப் பற்றிச் சொல்ல வேண்டும். மின் சக்தியை உற்பத்தி செய்வதற்காக ஆகின்ற செலவு மட்டுமல்லாமல், அதை நிர்வகித்து வருகின்றவர்கள் செலவிடுகின்ற பணத்தையும் சேர்த்தால். ஏராளமான இழப்பு வருகின்ற ஒரு திட்டமாக இருக்கிறது 1,000 யூனிட் உற்பத்தி செய்கின்ற இடத்திலே 10,000 யூனிட் தயார் செய்தால் யூனிட் ஒன்றின் உற்பத்திச் செலவு குறைய வேண்டுமே தவிர கூட வேண்டுமென்று சொல்லுகின்ற பொருளாதாரம் எங்கேயுமே இல்லை. ஆனால் இங்கு எல்லாமே தலைகீழ்மாற்றமாக இருந்து கொண்டிருக்கிறது.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இந்தத் துறைத் தலைவரகளாக வருகின்றவர்கள், செயலாளர் போன்றவர்களெல்லாம் இதைப் பற்றி நன்கு கற்றவர்கள்தானா? அல்லது கற்றவர்களே அதிலே நியமிக்கப்படுகிறார்களா என்பது தெரியவில்லை. நிர்வாக அறிவை மட்டுமே கொண்டே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி பல்வேறு துறைகளுக்கு மாறி மாறி தலைமை ஏற்பது என்பது நிலைமைகளைச் சீர்படுத்துமா என்பதும் தெரியவில்லை ஒன்று, துறையைப் பற்றிய அறிவுள்ளவர்களுக்கு நிர்வாகப் பயிற்சியைக் கொடுங்கள், இன்றேல், நிர்வாகப் பயிற்சி உள்ளவர்களுக்குத் துறையைப் பற்றிய அறிவைக் கொடுங்கள்.

இதில் எது நல்ல விளைவைத் தரும் என்று பாருங்கள். ஐ.ஏ.எஸ். என்று சொல்கின்ற சொல்லே விந்தைகள் புரிந்திடும் மந்திரச் சொல் என்ற எண்ணம் நம்மிடமிருந்து மாறவேண்டும். மின்சார இலாகாச் செயலாளர், எதை எதைத் தொட்டால் ஷாக் அடிக்கும் என்று அறிந்து கொள்வதற்கு முன்னாலே மறு துறைக்கு மாற்றப்படுகிறார். நான் கூறுவது எல்லாத் துறைக்குமே பொருந்தும். வெள்ளைத் துரைமார்களிடமிருந்து இந்த ஆட்சி கைமாறிய பின்னும், துறைதோறும் துரைத்தனம் மட்டும் மாறாமல் இருப்பது, நாட்டுக்கு நல்லதா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சண்டிகர் போன்ற பகுதிகளிலே ஆஸ்பத்திரி நிர்வாகத்திற்கென்று தனிப் பயிற்சி கொடுத்து வருகிறார்கள். இதிலே, அது போன்று பயிற்சி பெற்றவர்கள் எல்லாத் துறைகளிலும் நமக்கு கிடைப்பது நல்லதல்லவா என்பதனை அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 12] (திரு. குமரி அனந்தன்)

இளமைத் துடிப்புள்ளவராக நமது தொழிலமைச்சர் இருந்தாலும், தொழில்துறை வேகமும், விரைவும் விரிவும் பெறவில்லை. உதாரணத்திற்குத் சொல்கிறேன். 'கெல்ட்ரான்' என்ற கேரள அரசுக்குத் சொந்தமான நிறுவனம் போலவே தமிழக அரசும், எலக்ரானிக் சம்பந்தப்பட்ட நிறுவனத்தைத் தொடங்கியது. ஆனால் கெல்ட்ரான் சாதித்த அளவுக்கு நமக்கு சாதனை இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரம் இல்லை யென்றால் தொழில் வளர முடியாது. மின்சாரத் உற்பத்திக்கு வழி வகைகளைத் தேடியாக வேண்டும். அரசாங்கப் பொறுப்பிலிருந்து தனியாருக்கோ அல்லது கூட்டுத்துறைக்கோ ஜாயின்ட் செக்டார் போகக் கூடாது என்று கொள்கை அளவிலே அரசு முடிவு செய்திருக்குமா என்று தெரியவில்லை. அப்படிச் செய்வது கொள்கை அளவிலே சரி. ஆனால் உற்பத்தி அதிகரிக்கும் ஆற்றல் அரசுக்கு இருக்கவேண்டுமல்லவா, அல்லது அடுத்தவரையாவது செய்யவிடவேண்டும் அல்லவா? குறைந்தபட்சம் 510 சதவிகிதத்தை தன் கையில் வைத்துக் கொண்டு கூட்டு முயற்சியிலாவது மின் உற்பத்தியை முயலலாமா என்பதை அரசு சிந்திக்க வேண்டும். இப்போது பல கடைகளிலே இன்னும், சிறு நிறுவனங்களிலே, இன்னும் பெரிய தொழிற்சாலைகளிலே கூட, டீசல் ஜெனரட்டர் வைத்துள்ளார்கள், அதுவும் மின் உற்பத்தி தானே, அதுவும் தனியார் உற்பத்தி தானே; இப்படித் தனித்தனி ஆயிரக்கணக்கான மின் உற்பத்தி பவர் பிளாண்ட்ஸ் வந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், ஒவ்வொருவரும் பயன்படுத்துகிற டீசலும், அதற்காக செலவு செய்யும் மூலதனத்தையும், வைத்துப் பார்க்கின்ற பொழுது இந்த வசதியும் வாய்ப்பு இல்லாத, பக்கத்திலே இருக்கிற சிறு தொழில் நடத்துகின்றவரும், சிறு நிறுவனத்தை கடைகளிலே நடத்திக் கொண்டிருக்கிறவரும், விளக்கு இல்லாமல் துன்பப்படுவதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆக, இவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு ஒரு நல்ல விடிவுகிடைப்பதற்குரிய சிந்தனை நமது அரசாங்கத்து வரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட இருப்பது தெரிவித்திருப்பது மிகப் பெரிய ஒரு துன்பமான ஒரு

செய்தியாக நமது காதிலே விழுகிறது. ஏற்கனவே ஏற்பட்டிருக்கின்ற விளைவுகளிலே ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திருச்செந்நூர் தொகுதியிலே கூட, காஸ்டிக் சோடா உற்பத்தி செய்கின்ற ஒரு நிறுவனம் மூடிக்கிடக்கிறது. தாரங்கதரா மூடிக்கிடந்து தொழிலாளர்கள் எல்லாம் வாடிக் கிடக்கிறார்கள். காரணம் என்னவென்று சொன்னால், 38 பைசாவாக யூனிட்டுக்கு மின்சாரக் கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருந்த நமது அரசு, 45 பைசாவை அதிகப்படுத்தி, ஏற்கனவே இருந்த கட்டணத்தோடு அதிகமான கட்டணத்தை அதிகப்படுத்தி, 83 பைசாவாக வசூலிக்கின்ற காரணத்தாலே, அங்கு காஸ்டிக் சோடா என்பது உப்பிலே மின்சாரத்தைக் செலுத்துவது என்பது நமக்குத் **தெரியும்**. ஆக ஒரு டன் காஸ்டிக் தயாரிப்பதற்கு 3000 யூனிட்டுகள் மின்சாரம் தேவைப்படுகிறது. இப்படி வருகிற காரணத்தினாலே, உற்பத்தி இருந்தாலும் கூட, அந்த உற்பத்திச் செலவு அதிகரித்த காரணத்தாலே தேக்கநிலை ஏற்பட்டுவிட்டது. வாங்குவதற்கு ஆள் இல்லை. வாங்குவதற்கு ஆள் இல்லை என்றால் தனியார்கள் மட்டும் வாங்குவது என்பது மட்டுமல்ல. தமிழ்நாடு அரசுக்குச்சொந்தமான காரைக்குடியிலே இருக்கிற தமிழ்நாடு கெமிக்கல்ஸ் கூட தமிழகத்திலே இருக்கக் கூடிய காஸ்டிக் சோடாவை வாங்காமல் ஆந்திரத்திலே வாங்குவதாக நான் கேள்விப்படுகிறேன். ஏனென்றால் 2,000 ரூபாய்க்கு மேலே ஒரு டன்னிலே ஆதாயம் கிடைக்கிறதாம். ஆக தமிழ்நாட்டிலே காஸ்டிக் சோடா உற்பத்தி, ஆனால் தமிழ்நாட்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனம், அதை இங்கே வாங்கமுடியாத அளவுக்கு ஆந்திரத்திலே வாங்குகிறது என்று சொன்னால், நமது தொழில் எந்த வகையில் முன்னேறுவது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கல்பாக்கத்திலே தொடங்கியது, அது எப்படிப்பட்ட கரு என்பது நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால், 1961லேயே தொடங்கப்பட்டு, 71லேயே உற்பத்தி செய்யவேண்டிய அது, 71-ஐத்தாண்டி; 81-ஐ கடந்து, 83லே நின்று ஆடிக்கொண்டிருக்கிறது. அது எப்பொழுது உற்பத்தி செய்யும் அளவுக்கு ஓடிக்கொண்டிருக்கும் என்பது நமக்குத் தெரியாத நிலையிலே இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால் அதற்குத் தேவையான அவசியத் தேவையான, 'ஹெவி வாட்டர்' என்பதனை நாம் வாங்கமுடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோமா? ஆக, 'ஹெவி வாட்டர்' என்று சொல்கின்ற மிக அத்தியாவசியமான ஒன்று நமக்கு கிடைக்குமா கிடைக்காதா என்று தெரிவதற்கு முன்னலே கூட, இத்தனை கோடி ரூபாயை ஒரு இடத்திலே போட்டுவிட்டு, அதிகாரிகளுக்குச் சம்பளத்தையும் கொடுத்துவிட்டு, நமது வீட்டிற்கு எப்பொழுது மின்சாரம் வரும், தொழிற்சாலைக்கு எப்பொழுது மின்சாரம்





வரும் என்று காத்திருக்கவேண்டிய நிலை நமக்குத் தேவைதானா? இதனை மாற்றுவதற்கு வழியில்லையா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏனென்று சொன்னால், எது எது எங்கெங்கு கிடைக்கும் என்பதை வைத்துத்தான் தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும். அது அரசியல் முடிவுகள் ஆக மட்டுமே இருக்கக் கூடாது. அறிவு பூர்வமான முடிவுகளாக இருக்க வேண்டும் அப்படி சிந்திக்கிறபோது தர்மபுரியிலே கூட ஒரு தொழிற்சாலை துவங்கப்பட்டது. சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு. சூரியகாந்தியிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காக சில கோடி ரூபாய்களைப்போட்டு அங்கே ஒரு தொழிற்சாலையைத் தொடங்குகிறோம். ஆனால் அந்த தொழிற் சாலைக்கு வேண்டிய மூலபொருளாகிய அந்த சூரியகாந்தி விதைகளை உற்பத்தி செய்வதற்கு ஏறத்தாழ 35,000 ஹெக்டர் ஏக்கரிலே விளைச்சல் நிலமாக, அந்த சூரிய காந்தியை உற்பத்தி செய்வது என்று முடிவு செய்தோம்.

(முற்பகல் 11.20)

ஆனால் 3,500 ஏக்கரிலே அது விளையவில்லை. ஏன் விளையவில்லை என்று சிந்தித்துப் பார்த்தால், அந்த இயந்திரங்கள் ஓட்டாமல் முடக்கப்பட்டிருந்த காரணத்தாலே, அவைகள் எல்லாம் அங்கே முடக்கப்பட்டு விட்டது என்று ஆலோசித்ததற்குப் பின்னாலேதான் தர்மபுரி மாவட்டத்திலே அவர்கள் விதைத்திருக்கின்ற மண்ணிலே சூரிய காந்தி வராது என்று இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள் சாயில் டெஸ்ட்டிலே. ஆகவே எந்த மண்ணிலே எது விளையும் என்று சிந்தித்துப் பார்க்காத அளவிற்கு அந்த மணணிலே எது உற்பத்தியாகும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிறைய கோடிக்கணக்கான ரூபாய்களைப் போடுகின்றபோது நமக்கு எவ்வளவு பெரிய இழப்பு இதனால் ஏற்படுகிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அரசாங்கத்தினுடைய ஒரு துறைக்கும் இன்னொரு துறைக்கும் ஒருங்கிணைந்த முயற்சி, சரியாக இல்லையோ, கோ-ஆர்ட்டிநேஷன் பிராப்பராக இல்லையோ, என்ற சிந்தனைகள் எல்லாம் எங்களைப் போன்றவர்களுக்கு வருகின்றது. இதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தோல் பதப்படுத்தும் தொழில்கள். இந்தியாவிலேயே தனிப்பட்ட முறையிலே அதிகமான அந்நியச் செலாவணியை ஈட்டுகின்ற ஒரு தொழிலாகும். தமிழகத்திலே அதிகமான மக்கள், அதனைச் செய்துகொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் நன்றாக வாழ்ந்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே விஷ நீரை விட்டு விவசாயிகள் பாதிக்கின்ற அளவிற்கு காரியத்தை செய்து கொண்டிருந்தாலுங்கூட அவர்கள் தட்டுத்தடுமாறி, முக்கி முனகிக்கொண்டு இருக்கின்ற அளவிற்கு ஒரு தேக்கம்

(திரு. குமரி அனந்தன்) [1983 மார்ச் 12

அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் வேலை இருப்பு ஏற்படுகின்ற எண்ணங்கள் இன்றைக்குத்தொழிலாளர்களுக்கு வந்திருக்கிறது. அவர்களுக்கு ஒரு ஏக்கமும் தேக்கமும் இன்று தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலை தூக்கி நிறுத்துவதற்கு நமது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று நான் கேட்டு கொள்கிறேன்.

அதைப்போலத்தான் பல்வேறு இடங்களில் விஞ்ஞான ரீதியாக புதுப் புதுச் சக்திகளை உருவாக்குவதற்கு முயற்சிக்கிறார்கள். காற்றின் மூலமாக சக்தியை உருவாக்குவதற்கு நம்முடைய ஆராய்ச்சி நிலையிலே இருப்பதை எல்லாம், அந்த நாற்றங்காலிலே இருப்பதைஎல்லாம், நாட்டுமக்கள் பயன்படுத்துகின்ற வகையிலே பிரச்சாரத்தின் மூலமாக, அந்த சக்தியைக் காட்டுகின்ற செயல்முறை மூலமாகவும், டெமான்ஸ்ட்ரேஷன் மூலமாகவும், விவசாயிகள் அதைப் பின்பற்ற செய்ய வேண்டும். அதற்கு அரசாங்கம் கடன் உதவி, மானிய உதவி போன்றவைகளைக் கொடுக்க வேண்டும். திருப்பதியிலே சொல்லுகிறார்கள். குளிப்பதற்கும் வெந்நீர் சூரியச் சக்தியின் மூலமாக பயன்படுத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். நமக்குக் குடிப்பதற்கு எந்நீரும் கிடைக்காத நிலையில், இந்தத் தண்ணீரும் கிடைக்காத நிலையிலே நாம் இருக்கிறோம். எனவே, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதன் மூலமாக எந்தச் சக்திக்கு மாற்றுச் சக்தி கண்டுபிடிக்க முடியும் என்ற காரணத்திற்காக அதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பருவ மழைப் பொய்த்ததன் காரணமாகவும், துன்பங்கள் வருகிறது என்று சொல்வதெல்லாம் இருக்கட்டும். மாதம் மும்மாரி பெய்துவிட்டது என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர்களே தேவை இல்லை. எப்போது இந்தப் பருவ மழை தவறுகிறதோ அப்போதே அதற்குரிய திட்டங்கள் தேவை. வரும் பொருள் உரைக்கவேண்டும். அதற்குப்பிறகு அரும்பொருள் திட்டங்கள் போடவேண்டும். அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதற்காக நாம் எல்லாம் இருக்கிறோம். சென்னைக்குக் குடிநீர் வேண்டுமென்று சொல்லியும், அதற்கு நிரந்தரமாக பரிகாரம் காணவேண்டும் என்று சொல்கின்ற நேரத்திலே எல்லாம், பழவேற்காடு ஏரிகளிலே இருக்கின்ற நல்ல தண்ணீராவது இங்கே கொண்டு வாருங்கள். ஏன் என்றால், உப்புத் தண்ணீரை விடுத்து நல்ல தண்ணீரைக் கொண்டு வருவதற்கான விஞ்ஞான கருவிகள் வந்துவிட்டது என்று சொன்னால், என்ன பதில் வருகிறது என்றால், மூன்றில் இரண்டு பகுதி ஆந்திராவிலேதான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதில் மூன்றில் இரண்டு பகுதி ஆந்திராவிலே இருக்கிறது என்றால், 30 மைல் தூரத்திலே இருப்பதிலே, மூன்றில் இரண்டு பகுதி இருப்பது நமக்கு ஒரு தடையாக



1983 மார்ச் 12] [திரு. குமரி அனந்தன்]

இடர்ப்பாடாக இருக்கிறது என்று சொன்னால் கிருஷ்ணா நதிநீரை நாம் எதிர்பார்க்கிறோமே, அது முழுக்க முழுக்க ஆந்திராவிலேதானா கூட இல்லை. மூன்று மாநிலங்களைக் கடந்து அல்லவா வரவேண்டும். எனவே, இடர்ப்பாடுகள் வரத்தான் செய்யும். அதை மீறி நாம் சாதனைகளைச் செய்வதற்குத்தான் நாம் முயலவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவேதான் ஒகயன்மதகு, அங்கேயிருந்து வருகின்ற தண்ணீர் உவர் தண்ணீர் என்று சொல்கிறார்கள். உப்புத் தண்ணீரைக்கூட நல்ல தண்ணீராக மாற்றுகின்ற சாதனைகளை இன்றைக்கு விஞ்ஞானம் புரிந்து கொண்டு இருக்கின்ற நேரத்திலே உவர் நிரை குடிக்கின்ற நீராக மாற்றலாம் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து கடன்கள் தருகின்ற நிறுவனங்கள் எல்லாம், தொழில்துறைக்கு கடன் கேட்கின்றவர்கள் நடந்து நடந்து குடல் அறுந்து போகின்ற அளவுக்கு வாடி வதங்கினாலும்கூட அவர்களுக்கு உடனடியாக கடன் கிடைக்காத நிலைமை இருக்கிறது. அதை மாற்றி, எளிமைப்படுத்தி அவர்களுக்கு மிக விரைவிலே கடன் கிடைப்பதற்கு உரிய சூழ்நிலைகள் உருவாக்கினால்தான் தொழில்கள் அதிகமாக முன்னேறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கடலூருக்கு அருகே ஒரு உர உற்பத்திச் சாலை, ராணிப்பேட்டையிலே பல தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. இவைகளிலே பல கோடிக்கணக்கான ரூபாய்கள் முடங்கிக்கிடக்கின்றன. ஆகவே முடங்கிக் கிடக்கின்ற அந்த நிதிகளை வெளிக்கொண்டுவருவதற்கான அவைகளைத் தூக்கி நிறுத்த முடியுமா என்று நாம் பார்க்க வேண்டும்.

அடுத்து, போக்குவரத்துத் துறையைப் பற்றி ஒரு செய்தி. இங்கே மோட்டார் கார்கள், டீசல் வாகனங்கள் மீது 7 : 10 என்று இருந்த வரி வீதம் 9 : 12 ஆக கூட்டப்பட்டிருக்கிறது: இப்படி வரி கூட்டப்படுகிறபோது, ஆம்னி பஸ்கள், என்ற பெயராலே வரியைக் கட்டாமல் இருக்கிறார்கள் என்ற தகவலையும் அவர்கள் சொல்கிறார்கள். பஸ்களிலே ஏறுகின்றவர்கள், ஆம்னி பஸ்களிலே ஏறினால், 5 ரூபாய் குறைத்த கட்டணம் இருக்கிறது மதுரைக்கு என்று சொல்லுகிறார்கள். பாட்டுப் போடுகிறோம் என்று சொல்கிறார்கள். சொகுசாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்படி இதிலே சிலர் ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.. ஆகவே நல்லவர்களுக்கு ஒரு பக்கத்திலே வரி கூட்டப்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்றை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 7 ஆம் தேதி அன்று சென்னையிலே லெப்டினென்ட் கர்னல் ஒருவர் குயிலோன் எக்ஸ்பிரஸ் மூலமாக புறப்பட வேண்டியவர், தாமதமாக வந்ததன் காரணமாக அந்த வண்டியை தவறவிட்டுவிட்டார்கள். அவர்கள் உள்ளே போகின்ற

போது ரயில் புறப்பட்டுவிட்டது. உடனே பக்கத்திலே இருந்து ஒரு பஸ் மதுரைக்கு போகிறது. இதிலே வந்தால் நாங்கள் அதற்கு முந்தி உங்களைக் கொண்டுபோய் விடுகிறோம் என்று சொல்லி, அவருடைய பையைக் பிடுங்கி உட்கார வைத்தபோது அந்தக் கேரளத்துச் சகோதரர் வேறு வழியில்லாமல் அதிலே, அந்த வண்டியிலே ஏறினார்கள். 7-15 மணிக்குப் புறப்படவேண்டிய அந்த வண்டி ஏன் புறப்படவில்லை என்று கேட்ட உடனே அந்த டிரைவர் வண்டியை எடுத்துக் கொண்டு போலீஸ் கமிஷனர் அலுவலகத்தை ஒரு சுற்று சுற்றிவிட்டு மீண்டும் பக்கத்திலே உள்ள சந்திரா ஓட்டலுக்குப் பக்கத்திலே வந்து நிறுத்திவிடுகிறார்கள். அதிலே உள்ளவர்கள் எல்லாம் பஸ் புறப்பட்டு விட்டது என்று நினைக்க மீண்டும் அது அங்கேயே நிற்க, அதற்குப்பிறகு இவர்கள் கேட்டவுடன் 7-15 மணிக்கு எக்மோரிலே புறப்படவேண்டிய பஸ் தாமதமாகப் புறப்பட்டு, 9-15 மணிக்கு தி. நகரிலிருந்து புறப்பட்டு செங்கற்பட்டுக்குப் போய்ச் சேருகிறது. செங்கற்பட்டு தீயணைப்பு நிலையத்திற்குப் பக்கத்திலே ஆர்.டி.ஓ. அந்த வண்டியை தடுத்து நிறுத்துகிறார். அந்த வண்டி திருப்பி சென்னைக்கு விடப்படுகிறது. அப்படி சென்னைக்குத் திரும்பி அது வந்து கொண்டு இருக்கின்ற நேரத்திலே உள்ளே இருக்கின்ற பயணிகள் கேட்கிறார்கள். எங்கே போகிறது இந்த பஸ் என்று கேட்கிறார்கள். இது சென்னைக்குத் திரும்பப் போகிறது என்று சொல்கிறார்கள். காரணம் என்ன என்று கேட்கிறார்கள். இது வரியே கட்டாமல் ஓடுகின்ற கார், என்று சொல்கிறார்கள். வரியே கட்டாமல் ஓடுகின்ற கார் என்று சொன்னால் அதைச் சென்னையிலேயே அல்லவா தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். இந்த பஸ்ஸிலே பெண்கள் இருக்கிறார்கள். இரவு 1 மணியாகிவிட்டது, வண்டியைத் திருப்புங்கள் என்று சொல்லி மீண்டும் ஆர்.டி.ஓ.விடம் போய் இருக்கிறார்கள். அந்த ஆர்.டி.ஓ.விடம் சென்று அவர்கள் முறையிட்டு இருக்கிறார்கள். அவர் சொல்லியிருக்கிறார், "நீங்கள்—பயணிகள்—தேனிக்குப் போய் இறங்கியவுடன் போலீசில் இந்த பஸ்ஸை ஒப்படைக்கிறேன் என்று ஒப்புக்கொண்டால் நான் அனுமதிக்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வண்டியில் இருந்தவர்கள் எல்லாம் ஐயோ மதுரைக்குப் போகிறது என்றல்லவா எங்களை ஏற்றி வந்தார்கள், இப்போது மதுரைக்குப் போகாது தேனிக்குப் போகிறது என்று சொன்னால் எப்படி என்று கேட்டு இருக்கிறார்கள். அப்படியானால்—ஆர்.டி.ஓ சொல்கிறார்—அந்த வண்டியில் இருக்கின்ற 'ஸ்டெப்பினையைக் கழற்றி வைத்து விட்டுப் போங்கள் அதாவது ஸ்பேர் வீலைக் கழற்றி வைத்துவிட்டுப் போங்கள் என்று சொல்லியிருக்கிறார். உடனே ஸ்டெப்பினி இறக்கப்படுகிறது. அந்த வண்டி ஸ்டெப்பினி இல்லாமலேயே ஓடியிருக்கிறது. பின்னர் 1-45 மணிக்கு அது செங்கற்பட்டை





விட்டுப் புறப்பட்டு இருக்கிறது. பயணிகள் தான் தேனியில் இறங்கிக்கொண்டு, அந்த பஸ்ஸை போலீஸில் ஒப்படைக்க வேண்டுமா? அந்தப் பொறுப்புள்ள அதிகாரிகள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அந்தப் பணியை தேனியில் செய்யச் சொல்லக் கூடாதா? இதை நான் சொல்வதற்குக் காரணம், இப்படி வரி கட்டாமல் வண்டிகள் எல்லாம் ஓடிக்கொண்டு இருக்கின்றன. நாம் வரி, வரி என்று போட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆனால் வண்டிகள் இப்படி ஒவ்வொரு நாளும் வரிசையாக வரிகட்டாமல் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அப்படியானால் இதனுடைய கதி என்ன? இப்படி சென்னையில் இருந்து கிளம்பிய வண்டி, செங்கற்பட்டில் நிறுத்தி திருப்பி சென்னைக்கு அனுப்பப்பட்டு, பின்னர் அது திருச்சிக்குச் சென்று, அதன் பின்னர் அது மதுரைக்குச் செல்லவில்லை. திண்டுக்கல்லிலேயே மதுரைக்குச் செல்கின்ற பயணிகளை எல்லாம் இறக்கிவிட்டு, இருக்கிறார்கள். அந்த லெப்ட்னென்ட் கர்னல் உள்பட. பின்னர் அது தேனி சென்றது என்பது ஒரு வரலாறு. ஆகவே, இந்த மாதிரி நடவடிக்கைகளை அரசு தடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், இந்த அறிக்கையிலே என்ன சொல்கிறார்கள் தெரியுமா? பெருமையோடு சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் நல்ல முறையில் பேருந்துப் பணிகளை நடத்தி வருகிறது. ஏராளமான பயணிப் பேருந்துகளை நடத்தி வருகின்ற சிறப்பான தன்மையின் காரணமாக, பலதரப்பட்ட அனுபவத்தை நாம் பெற்று இருக்கின்ற காரணத்தால் வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு ஆலோசனை சொல்வதற்காக பல்லவன் ட்ரான்ஸ்போர்ட் ஒரு அமைப்பு உருவாக்கப்போகிறார்களாம். இங்கே எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன? பல்லவன் பஸ்கள் மோதாத நாட்கள் எல்லாம் பிறவாத நாட்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமைகள் போய்க்கொண்டு இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நாம் கொண்டுள்ள அனுபவத்தைக்கொண்டு வெளிநாடுகளுக்கு 'கன்சல்டென்சி' தரமுடியுமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நுழைவு வரியைப் பற்றி இங்கே எல்லோரும் சொன்னார்கள். நுழைவு வரியைப் பற்றி நாமும் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. தமிழக மக்கள் கேட்கின்றனர். இந்த நுழைவு வரி தேவையா? சர்க்கார் மொத்தம் 13 பொருள்களுக்கு இந்த நுழைவு வரியை போட்டு இருக்கிறார்கள். தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள், சிறப்பு நகராட்சிகள் மற்றும் தேர்வு நிலை நகராட்சிகள்களின் எல்லைக்குள் உபயோகத்திற்காகவோ, நுகர்விற்காகவோ, மற்றும் விற்பனைக்காகவோ கொண்டு வரப்படும் பொருட்களின் விலை மதிப்பின் பேரில் இரண்டு விழுக்காடு வீதம் நுழைவு வரி விதிக்கப்படும். ஒரு பொருளை இவற்றைத் தவிர வேறு

[திரு. குமரி அனந்தன்] [1983 மார்ச் 12

எந்த ஒரு உபயோகத்திற்காகவும் யாரும் கொண்டு வர வாய்ப்பு இல்லை. ஒருவன் இரவிலும் சாகக் கூடாது, பகலிலும் சாகக் கூடாது, வீட்டிற்குள்ளும் சாகக் கூடாது, வெளியிலும் சாகக் கூடாது என்று சொன்னதால், படிக்கல் கண்டு பிடித்ததைப்போல், நாம் இதற்காக ஒரு படிக்கல்லை கண்டு பிடிக்க முடியாது. கொண்டுவரப்படுகின்ற பொருள் எதுவாக இருந்தாலும், எந்தக் காரணத்திற்காக இருந்தாலும், 2 சதவீதம் நுழைவு வரி என்று சொல்கிறபோது, அவர்கள் போட்டுள்ள பொருள்களைப் பார்க்கின்றபோது, ஓரிரண்டைத் தவிர, மற்றவற்றிற்கு எல்லாம் அடிஷனல் எக்சைஸ் டியூடி போடப்படுகிறது அடிஷனல் எக்ஸைஸ் டியுடி உள்ள பொருள்களுக்கு கூடுதலாக சேல்ஸ்டாக்ஸை போடக் கூடாது என்று ஒப்பந்தம் இருக்கிறது என்று நினைக்கிறேன். அந்த ஒப்பந்தத்தை மீறுகின்ற தன்மையிலே, இந்த 'நுழைவு வரி' என்பது கூடுதல் விற்பனைவரியாக இருக்குமோ என்றும் சிந்திக்கவேண்டியிருக்கிறது. சில இடங்களில் சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் போடப்பட்டு இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மோட்டார் வாகனங்களை எடுத்துக் கொண்டால் ஏற்கெனவே 7 சதவீதம் வரி போடப்படுகிறது. அதற்குப் பிறகு தனியாக வரி 2 சதவீதம் போடப்படுகிறது. இந்த மோட்டார் வாகனங்கள் நகரங்களுக்கு உள்ளே வருகின்றபோது 2 சதவீதம் நுழைவு வரி என்று போடப்பட்டால், இது எந்த அளவிற்கு உயர்ந்து கொண்டே போகும் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

நீங்கள் இங்கே சில சலுகைகளை அளித்து இருக்கிறீர்கள். குறிப்பாக சிம்னி விளக்குகள், மண்ணெண்ணெய் விளக்குகள், மாட்டுத் தீவனமாக உபயோகப்படும் மரவள்ளிக்கிழங்குத் திப்பி மற்றும் பருத்திக் கொட்டை பொட்டு, சவ்வரிசி, மரவள்ளிக் கிழங்கு மாவு ஆகியவற்றிற்கு விற்பனையின் வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது: இதற்காக அது தொடர்பாக உள்ள அமைச்சரையும், மாண்புமிகு நிதியமைச்சரையும் இந்த அரசையும் நான் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதைப்போலே கையால் செய்யப்படும் சோப்புக்கட்டிகள் மற்றும் டிடர்ஜென்ட் கட்டிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக விற்பனைத் தொகை உள்ளவர்களுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதிலே வரம்பு விதிக்காமல் குடிசைத்தொழில், கைத்தொழில் என்ற காரணத்தால் முழு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1983 மார்ச் 12] [திரு. குமரி அனந்தன்]

ஏனென்றால் கையால் செய்யும் தொழில் பெருக வேண்டும். உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்ய உள்ளூர் உற்பத்தி பெருக வேண்டும். கணக்கு எழுதுதல், நாளும் பொழுதும் அதிகாரிகளுக்கு அஞ்சி நடத்தல் போன்ற சிக்கல்கள் எதுவும் இல்லாமல் சுதந்திரமாக குடிசைத்தொழில் செய்யவும் அதன் மூலம் பல குடும்பங்கள் அரசுத் துறையிலே வேலைவாய்ப்பை எதிர் பார்க்காமல் வேலை பெறவும் முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கதர் இலாகா மொத்தமாக மூலப் பொருள்களை வாங்கி, நிதி வசதிகளைப் பெற்று, இதைப்போன்று சோப்புகளை கையால் செய்து விற்கும்போது அரசு அதற்கு வரியே விதிப்பதில்லை. இந்த இலாகாவுக்கு அளிக்கின்ற சலுகைகளை சாதாரண குடிமக்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காந்தியடிகளால் தொடங்கப்பட்ட கதர் இலாகா பிறருக்கு வழி காட்டுதலையும் தூண்டுதலயையும் கொடுப்பதற்கே தவிர சில ஏகபோக வசதிகளைப் பெற்றுக்கொள்ள அல்ல, என்பதையும் கவனிக்கவேண்டும்.

வெள்ளிக் கொலுசு, வெள்ளி அரைஞானுக்கு வரி விலக்கு அளித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். தங்கம் வாங்க முடியாத தாய்மார்கள் தங்களுடைய சிரமத்தைப் போக்க, வெள்ளியால் செய்யப்படும் எல்லா ஆபரணங்களுக்கும் வரி விலக்கு அளித்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

வெளிநாட்டிலே இப்போது வெள்ளிக் கொலுசுக்கு மவுசு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் பொற்கொல்லர்கள் புதுவாழ்வு தொடங்குவதற்கான ஒரு திட்டத்தை தீட்டி, அவர்கள் கைவண்ணத்தைச் சுரண்டிப் பெரும்பொருள் ஈட்டலாம் என்று எண்ணுகின்ற பெரும் முதலாளிகள் இடத்திலே அகப்பட்டு கஷ்டப்படாமல், அரசு பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே கைம்பெண்கள் குழந்தைகளுக்கு, மகளிருக்கு குறைந்த விலையிலே தாலிக்கு தங்கம் வழங்குவது பற்றி அறிவித்திருந்தார்கள்; 10 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியிருந்தார்கள். அது எந்த அளவுக்கு செயல்பட்டது என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை. அந்த விவரங்கள் பின்னால் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போன்று இங்கே முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். மத்திய அரசிலேயிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய எல்லாம் கிடைக்கின்றனவா என்று கேட்டார்கள். நான் 1958-59ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே காமராஜ் அவர்களுடைய ஆட்சி காலத்திலே மரியாதைக்குரிய சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே சொல்லும்போது, ''சரக்குக் கட்டணத்தையும் பயணிகள் கட்டணத்தையும் மத்திய சர்க்கார் அதிகரித்த காரணத்தால் தமிழ் நாட்டிலே தண்டவாளத்தின் நீளம் எவ்வளவு இருக்கிறதோ அந்த விகிதாச்சாரப்படி அவர்கள் பங்கு கொடுத்தார்கள். அந்த வகையிலே ஆண்டு ஒன்றுக்கு 64 இலட்சம் ரூபாய் வந்தது'' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்று சொன்னால் இன்றைக்கு 488.91 கோடி ரூபாய்—ஏறத்தாழ 489 கோடி ரூபாய்க்கு இந்தக் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறதே, அதிலே நமக்கு பங்கு வருமா? அல்லது இந்தப் பங்குகள் எல்லாம் முன்பே நிறுத்தப்பட்டுவிட்டதா என்பதைப் பற்றியும் அத்துடன் ஏதாவது தகவல் வந்ததா என்பதையும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தகவலாகத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

ரேஷனைப் பொறுத்த வரையில் ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு எல்லாம் இப்போது அரிசி கொடுப்பது நிறுத்தப்பட்டுவிட்டது. வெளியே ஏழேகால் ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்கிறது. 999 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு அரிசி உண்டு, மண்ணெண்ணெய் உண்டு, எல்லாம் உண்டு. எல்லாம் உண்டு என்று சொல்வதுகூட தவறு. வெகுநேரம் காத்திருந்தால் சில நேரங்களில் உண்டு அல்லது இல்லை என்று பதில் வரும்.

இப்போது 10 லிட்டர் மண்ணெண்ணெய் வாங்குவதாக இருந்தால் 7 லிட்டருக்கு ஒரு ரூபாய் 78 காசு வீதமும், 3 லிட்டருக்கு 3 ரூபாய் 15 காசு வீதமும் வாங்குகிறார்கள் 1.78-க்கு விற்றது 3.15-க்கு விற்கிறது. ஏன் இப்படி என்று கேட்டால் அரசாங்க உத்தரவு என்று சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

''வீட்டுக்கு விளக்கேற்ற வந்தவள்'' என்று சொல்வார்கள்; 'பானை பிடித்தவள் பாக்கியசாலி' என்று சொல்வார்கள் தாய்க்குலத்தைப் பற்றி. ஆனால், இப்போது என்ன நடக்கிறது என்றால் பானையிலே தினந்தோறும் தண்ணீர் பிடிக்க முடியாத பாக்கியசாலிகளாக இருந்துகொண்டிருக்கிறார்கள். குலவிளக்குகள் எல்லாம் இப்போது விளக்கு ஏற்ற முடியாத





அளவுக்கு மின்சாரம் இல்லை அல்லது மண்ணெண்ணெய் இல்லை. இல்லத்து அரசிகள் எல்லாம் இன்றைக்கு அரிசி இல்லாத அரசிகளாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். அரிசி தேடும் அரசிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரிசி வேண்டும்.

அரிசி இல்லாத அரசிகளாக இருக்கிற இந்த பெண்களுக்கு இன்னும் சில உரிமைகள் வேண்டுமென்றுதான் பாரதி நூற்றாண்டு விழாவிலே நாம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். இந்த அரசு பாரதிக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவது மட்டுமல்ல ; பெண்களுக்கு பல்கலைக் கழகம் வைக்கிற முயற்சியிலும் இருக்கிறது. அந்த பாரதிக்கு புகழ் சேர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த தமிழக அரசு அந்த பாரதிக்கு நாணயம் வெளியிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் தனி நபருக்கு நாணயம் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள் என்று நான் கருதுகிறேன். என்ன காரணத்தால் அப்படிச் சொன்னார்கள் என்று தெரியாது. பாரதியாருடைய நா நயத்திற்காகவது, ''ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானமாக வாழவேண்டும் இந்த நாட்டிலே'' என்று பாரதி பாடினானே, அந்த பாட்டிற்கேற்ப பூர்வீக சொத்து என்று சொல்லுகின்ற அந்த 'ஏன்செஸ்ட்டிரல் பிராப்பர்ட்டி'யிலே இப்போது ஆண் மக்களுக்கு பங்கு இருப்பதைப்போலே பெண் மக்களுக்கும் பங்குவேண்டுமென்று பெண்குலத்தின் உரிமைக் குரலாக, அதை ஒரு தீர்மானமாக இந்த மாமன்றம் நிறைவேற்றி, அதை ஒரு வேண்டுகோளாக மத்திய அரசுக்கு விடுத்தால், இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக விளங்கிய ஒரு பெரும் பெயரும் பெருமையும் நமக்குக் கிடைக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று பாரதி சொன்னால் இன்று சமுதாயத்திலே இருக்கக்கூடிய சில கயவர்கள் இன்று மாதர் தம்மையே கொளுத்துகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே, அந்தப் பூர்வீகச் சொத்திலே அவர்களுக்கும் பங்கு வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய கணக்கைப் பார்த்தாலே இன்னும் 10 நிமிடங்கள் எனக்கு இருக்கிறது. ஆகவே, தொடர்ந்து அனுமதிக்க வேண்டுகிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1983 மார்ச் 12

நம்முடைய அன்புக்குரிய பொதுமக்களும், விவசாயிகளும்
தொழிலாளர்களும், எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று
பார்க்கும்போது, அவர்கள் எந்த அளவு துன்பப்பட்டு
கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்கள் நினைவுக்குக் கொண்டு
வர விரும்புகிறேன். நெசவாளர்களை எடுத்துக் கொள்ளுங்
கள், நாள்தோறும் பாவோடும் சாவோடும் போராடிக்கொண்
டிருக்கிறார்கள். அவனுடைய வாழ்க்கையிலே என்னென்ன துன்
பங்கள் எல்லாம் வந்திருக்கின்றன என்பதைச் சற்று சிந்தித்துப்
பாருங்கள். பருத்தியை விளைவித்துக் கொண்டிருக்கிற விவ
சாயிக்கு, பருத்திக்கு தக்க விலை கொடுக்கமாட்டேன் என்
கிறார்கள். ஆனால், அதே விவசாயி கடையிலே போய்
வேட்டி வாங்கவேண்டும் என்றால், விலை கொடுத்து வாங்க
முடியாத காரணத்தால், அவன் உடுத்தியிருக்கிற வேட்டி
கிழிந்து, நலிந்து நைந்து கந்தலாகிப் போனாலுங்கூட அதை
தைத்து தைத்து உடுத்திக் கொண்டேயிருக்கிறான். இலங்கையிலே
யிருந்து பாடிய ஒரு கவிஞன் சொன்னதைப் போல, அந்த
ஏழை உடுத்தியிருக்கும் வேட்டிக்கு நெய்வதற்காகப் பயன்படுத்
திய நூலை விட அதிக அளவு நூலை அதை தைப்பதற்காக
பயன்படுத்துகிறான் என்று சொல்லியிருக்கிறார்களே அந்த
அளவுக்கு அவனுடைய உடை கிழிந்தும், நைந்தும் போயிருக்
கின்றன. அதை அவன் மேலும் மேலும் தைத்து உடுத்துகின்ற
நிலைமையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு
என்ன காரணம்? பருத்தியின் விலை குறைந்து, நூலின்
விலை அதிகமாயிருப்பதற்கு காரணம் என்ன? நூலின் விலை
அதிகம் என்பது மட்டுமல்ல, எந்த அளவிற்கு அதிகம் என்றால்
—100ஆம் எண் நூலின் விலை இரண்டரை கிலோ கட்டுக்கு
ஏறத்தாழ 22 ரூபாய் கூடியிருக்கிறது. 80ஆம் நம்பர் எண்
18 ரூபாய் கூடியிருக்கிறது. 60ஆம் நெம்பர் 16 ரூபாய்
கூடியிருக்கிறது.

அடுத்து விவசாயியின் சூழ்நிலையை எடுத்துக் கொண்டால்
காலைக் கதிரவன் எழுவதற்கு முன்பு கலப்பையை எடுத்துக்
கொண்டு, அவன் கழனிகளுக்குப் போகிறான். ஆனால் விவ
சாயிக்கு—அவனுக்கு போவதற்கு ஒரு சைக்கிள் கூட கிடை
யாது. ஆனால் அவன் கொடுக்கிற அரிசியை வைத்துக்கொண்டு
மாவு ஆட்டி வைத்துக் கொண்டு, இட்டிலியும், தோசையும்
செய்து விற்பவர்கள் பென்ஸ் காரிலே போகிறார்கள். அவன்
ஒவ்வொரு ஆண்டும் வயலை விற்றுக் கொண்டே போகிறான்.
ஹோட்டல்காரர்கள் விஸ்தரித்துக் கொண்டே போகிறார்கள்.
அவர்கள் உணவு பண்டங்களின் விலையை அதிகமாக்கிக்
கொண்டு போகிறார்கள். பண்டங்களின் சார்ஜைக்
கூட்டலாமா, அதன் மூலம் லாட்ஜைக் கட்டலாமா
என்று பார்க்கிறார்கள். ஆனால் விவசாயி, வெளியிலேயே
தலை காட்ட முடியாத நிலை இருக்கிறது. ஆடை இல்லை,
அணிகலன் இல்லை, வெளியே போவதற்கு வசதியில்லை என்ற



1983 மார்ச் 12] [திரு. குமரி அனந்தன்]

நிலையில் விவசாயி துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறான்.
இவைகளை எல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்
என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்த நிலையிலே ஒரு முக்கியமான
செய்தியினை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர
கடமைப்பட்டிருக்கிறேன். என்னவென்று சொன்னால், நம்மு
டைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு வேண்டு
கோளை விடுத்திருக்கிறார்கள். அது மிக சிறப்பான வேண்டு
கோள். அதனால் அதை நான் இங்கே படிக்கிறேன். ''ஜன
நாயக மரபுகளையும், இந்த அவையின் பெருமையையும்,
புகழையும் காத்து உதவ வேண்டும்.'' என்று நிதியமைச்சர்
கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நமது ஆளும் கட்சி உறுப்
பினர் ஒருவர் நமது முதல்வர் அவர்களை தொடர்புபடுத்தி
பேசியதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த உறுப்
பினருடைய சொற்களையே நான் இங்கே படிக்கிறேன்:
''இன்று தமிழகத்தைப் பொறுத்த வரையில், தமிழகம் மிகவும்
பத்திரமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய
கையிலே இருக்கிறது என்றும் இவ்வளவு பத்திரமாக தமிழகம்
புரட்சித் தலைவர் அவர்களுடைய கையிலே இருப்பதற்கு
காரணமே, அடிப்படைக் காரணமே, தமிழ்நாட்டிலே வாழ்கிற
எந்த ஜாதியிலேயும் சேராது இருக்கிற முதல்வராக புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கிற காரணம்தான்',
என்று சொல்லியிருக்கிறார்கள்.

தற்போது ஆளுகிற முதல்வர் அவர்களுடைய கையிலே
தமிழ்நாடு பத்திரமாக இருக்கிறதா இல்லையா என்கிற
வாதத்திற்குள் நான் செல்லவில்லை. அவர் சொன்னதை
வாதத்திற்காக நாம் எடுத்துக் கொண்டாலும், முதல்வர்
அவர்களுடைய சிறப்பால் தமிழகம் பத்திரமாக இருக்கிறது
என்று சொல்வது, அவருக்குப் பெருமையைச் சேர்க்குமே தவிர,
அவருடைய பிறப்பால் என்று சொல்வது முதல்வர் அவர்
களுக்கே பெருமையைச் சேர்க்குமா? தமிழகத்தில் உள்ள எந்த
ஜாதியிலாவது அவர் பிறந்திருந்தால், அந்த ஜாதிக்குத்தான்
அவர் சலுகை தருவார் என்பது அதற்குப் பொருளா? அப்படி
யானால் நடுநிலைமை தவறாமல் சான்றோராக இருப்பதற்கு
பதில் சாதியின் வழியில் நின்று கொண்டிருக்கிறார் என்று
உறுப்பினர் கூறுவாரா? தமிழகத்தில் வாழும் எந்த ஜாதி
யிலும் அவர் பிறந்திடவில்லை என்று அவர் கட்சியின் மாண்பு
மிகு உறுப்பினர்களே சான்றுகளை வழங்குகிறார்கள். அத
னால் தமிழகம் பத்திரமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
அப்படியானால் தமிழகத்தில் பிறந்த, வளர்கிற எவருமே
தமிழகத்தைப் பத்திரமாக பாதுகாக்கும் தகுதியைப் பெற
முடியாதா?

[திரு. குமரி அனந்தன்] [1983 மார்ச் 12

முதல்வர் அவர்களைத் தவிர, மற்ற அமைச்சர்கள் எல்லாம் வேறு ஏதாவது ஒரு சாதியிலே தமிழகத்திலே பிறந்தவர்கள் என்று ஒப்புக்கொண்டால், தன்னைச் சேர்ந்த ஜாதிக்காரர்களுக்கு மட்டுமே சலுகை அளிக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்களைச் சொல்கிறாரா? நமது முதல்வர் அவர்கள் கூட ஏதாவது ஒரு ஜாதியிலேதான் பிறந்திருப்பார்கள். இந்த ஜாதிக் கட்டுப்பாடு பிற்பட்ட சமுதாயத்தில் நாம் பிறந்திருப்பதால்—ஜாதியற்ற சமுதாயத்தை படைக்க வேண்டும் என்று விரும்பினாலும், 'ஜாதி இருக்கின்றது என்று சொல்கின்றவர் இறக்கின்றார்' என்ற பாரதிதாசனின் பாடலைத்தானே, உரத்தக் குரலிலே சொல்ல முடியும். அதனால் அப்படிப்பட்ட சமுதாயத்திலே பிறந்துவிட்ட காரணத்தாலே, அவரும் ஏதாவது ஒரு ஜாதியிலே பிறந்திருப்பார் அல்லவா? அப்படி என்று சொன்னால், அவரைச் சேர்ந்தவர்கள் யாராவது ஒருவரோ அல்லது இருவரோ இருப்பார்கள் அல்லவா? அவர்களுக்குத்தான் அவர் சலுகை தருவார் என்பது பொருளா? முதல்வரோடு வைத்து எண்ணத் தகுந்த சில சகோதரர்கள்-அங்கேயிருந்து வந்திருக்கக்கூடிய பாசம் மிகுந்த சகோதரர்கள் அவர்களுக்குத்தான், அவர் சலுகை தருகிறார் என்று பொருளா? இது அவருக்கு பெருமை சேர்க்கக்கூடிய செய்தியா என்பதை நாம் அனைவரும் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சான்றோராகத் திகழ்ந்து நடுநிலைமையிலே இருந்துக் கொண்டு நாட்டை நடத்திக் கொண்டு செல்கிறார் என்று சொல்லும் நிலை ஏற்படுவதே பெருமை சேர்க்கும். அஃதில்லாமல் ...... (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே பேசி முடித்து விட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே பேசி முடித்ததற்குப் பின்னாலே, யாரோ ஒரு உறுப்பினர் பேசிய பேச்சிலேயிருந்து ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டு இங்கே நீண்ட நேரம் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். அது சட்டமன்றத்தில் உள்ளே பேசியதா, அல்லது வெளியிலே பேசியதா, யார் பேசியது? எந்த உறுப்பினர் பேசினார் என்கிற விவரங்களைக் கூட அவர் சொல்லவில்லை. ஆனாலும் கூட, அவர்களிடத்திலே நான் கேட்டுக் கொள்வது, பேசிய போது ஏதோ தவறிக் கூடச் சொல்லியிருக்கலாம் அல்லது அதற்கு முன்னாலே பின்னாலே பார்த்தால்தான் எந்தப் பொருளிலே சொன்னார் என்பதைப் பார்க்க முடியும்.



1983 மார்ச் 12] (திரு. எஸ். திருநாவுக்கரசு)

ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதைவிட இது ஒன்றும் பெரிதல்ல. அவர்கள் தேர்தல் காலத்தில் பேசிய ஒன்றை அவர்களுக்கு நான் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அறிஞர் அண்ணா அவர்களாலே வளர்க்கப்பட்ட கலைஞருடைய ஆட்சியை இந்த நாட்டு மக்கள் பார்த்து விட்டார்கள். அதற்குப் பின்னாலே திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியினையும் நாட்டு மக்கள் பார்த்துவிட்டார்கள், காமராஜராலே வளர்க்கப்பட்ட என்னுடைய ஆட்சியினையும் பார்க்க இந்த நாட்டு மக்கள் துடிக்கிறார்கள் என்று சொன்னார்களே அதைவிட இது ஒன்றும் பெரிய ஜோக் அல்ல. ஆகவே அதிலே நீண்ட நேரம் கவனம் செலுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் ஆண்டது தெரியும், அவராலே வளர்க்கப்பட்ட கலைஞர் ஆண்டது தெரியும். இப்போதைய முதலமைச்சர் ஆண்டதும் தெரியும். ஆனால் தமிழகத்திலே பிறந்து வளர்ந்த ஒரு பிரிவினைச் சார்ந்தவர் தமிழகத்தை ஆண்டால் அது பாதுகாப்பாக இருக்காதா? அப்படித்தானே அந்த உறுப்பினர் சொன்னார்......

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் பேசியதில் கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டைச் சேராதவர் என்று சொல்லவில்லை. அவர் சொன்னதன் பொருள், குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு பெருவாரியான சமுதாயத்தின் சார்பிலே முதல்வர் அவர்கள் இல்லாததன் காரணத்தால் குறிப்பிட்ட எந்த ஒரு சமுதாயத்திற்கும், குறிப்பிட்ட சலுகைகள் இல்லாத சூழ்நிலை இருக்கும் என்பதுதான். எனவே, எல்லா ஜாதிக்கும், எல்லா மதத்திற்கும் ஒரேவிதமான பாதுகாப்பு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே இருக்கின்ற இந்த ஆட்சியின் மூலம் கிடைக்கும் என்ற அர்த்தத்திலே சொன்ன வார்த்தையினை வைத்துக் கொண்டு இலக்கியச் செல்வர் இதிலே. இலக்கியம் செய்யப் பார்ப்பது பொருத்தம் இல்லாதது, அது வேண்டாதது, அது தேவையும் இல்லாதது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும் அதிலே டீப்-ஆக போகின்றபோது அது அநாகரீகமாகக் கூடத் தோன்றும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

[1983 மார்ச் 12

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிய சொற்களை நீங்கள் பார்த்தீர்கள். அவர்கள் நிதிநிலை அறிக்கையினை முடித்திருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் சில மதி நிலை பற்றியும், விதி நிலை பற்றியும் பேசுகிறேன். எந்தக் குறிப்பிட்ட ஜாதியிலேயும், பெருவாரியான ஜாதியிலும் பிறக்காதவர் என்பதற்காக யாருக்கும் பாரபட்சம் இல்லாமல் நடந்துகொள்வார் முதலமைச்சர் என்று சொல்வதே கூட முதலமைச்சருக்குப் பெருமை சேர்க்காது. அவர் தாமரை இலைத் தண்ணீராக தாமரைக் குளத்திலே இருந்தாலும் இலைத் தண்ணீராக இருப்பார் என்றுதான் அவரைப்பற்றிய பெருமையை உயர்த்தவேண்டுமேயொழிய நல்லவேளை அவர் இங்கே பிறக்கவில்லை, எனவே அவர் நமக்கு நடுநிலையாக இருப்பார் என்று எண்ணுகின்ற எண்ணமே சரியில்லை என்பது தான் என்னுடைய வாதம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாண்புமிகு நண்பர், காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் என்னைப் பற்றி மிகுந்த அக்கறையோடு இங்கே பேசுவதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். எனக்குப் பெருமை சேர்க்க விரும்புவதற்காக அவர்களுக்கு இன்னொரு முறையும் நன்றி சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாவினுடைய கொள்கையைப் பின்பற்றுவதால் முதலமைச்சராக இருப்பவர் மட்டுமல்ல, இந்தக் கட்சியிலே இருக்கின்ற அத்தனை பேருக்கும் ஜாதியைப் பற்றிய கவலை இல்லை, மதத்தைப் பற்றிய கவலை இல்லை, இன்ன ஜாதியாராக இருந்தால் இன்ன காரியம் செய்வார்கள் என்ற எண்ணமும் இல்லை. ஆகவே, என்னைப் புகழ்ந்தார்கள் என்று சொன்னால் அண்ணாவின் கொள்கையைப் புகழ்ந்தார்கள் என்று பொருளே தவிர வேறல்ல. எனவே ஜாதி உணர்வோடு இருக்க மாட்டோம் என்ற பொதுக் கருத்தினைக் கூறும்போது முதலமைச்சர் என்று குறிப்பிட்டால் அது இந்த அமைச்சரவைக்கும் இங்கே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுக்குமே தொக்கி நிற்கும் என்ற விதத்தில்தான் சொல்கிறார்களே தவிர வேறல்ல. எனவே என்னைப் பெருமைப் படுத்துவதற்காக மட்டும் தனித்துப் பேசியதல்ல. அப்படிப் பட்ட எண்ணம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் எப்படி நான் சொல்வது உறுப்பினர்களாகிய அத்தனை



1983 மார்ச் 12] (திரு. குமரி அனந்தன்)

பேருக்கும் பொருந்தும் என்று சொல்கிறீர்களோ அதைப்போல உங்களுடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கோவைத்தம்பி அவர்கள் பேசிய பேச்சு 8ஆம் தேதி சட்டசபைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கின்றது என்பதை உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலைமை ஏற்பட்டால் அது நமக்கு இழுக்காகும் என்பதும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும், பாரம்பரியத்திற்கும் பழிவருமே என்பதும்தான் என்னுடைய நோக்கமே தவிர வேறல்ல. அப்படியானால் ஒரு மாநிலத்திலிருந்து வந்து இன்னொரு மாநிலத்தை ஆளுவதுதான் சரி என்று சொல்கின்ற சிந்தனையே கூட வந்து விடக்கூடாது. இந்தியாவிலே பிறந்து விட்டதன் காரணத்தால் இந்தியாவை வெளியிலே இருந்து ஒருவர் வந்து ஆண்டால்தான் நல்லது என்று சிந்தனையே கூட வந்து விடக்கூடாது. உயர் ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயினும், வேதியராயினும் ஒன்றே—அன்றி வேறு குலத்தவராயினும் ஒன்றே என்று சொல்கின்ற நிலை வேண்டும் என்பதே என் வாதம். (குறுக்கீடு)

எனவே இப்படிப்பட்ட கருத்துக்கள் விதைக்கப்படக் கூடாது என்பது என்னுடைய எண்ணமே தவிர அது ஏற்கனவே குறிப்பிலே இருக்கிற காரணத்தினாலே இதனைச் சொன்னேனே தவிர இதர வேறு நோக்கம் எதுவும் இல்லை என்பதனையும் நமது தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கின்ற அத்தனை பேரும் ஜாதி, சமய, மத வேறுபாடு அற்ற சகோதர சமத்துவத்தை படைப்பதிலே முதல்வரும் நாமும் எல்லோரும் துணை நின்று உலகத்திற்கு வழி காட்டுவோம். யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று சொல்லுகின்ற வகையிலே தான் இதனை சுட்டிக்காட்ட விரும்புகிறேனே தவிர கடுகு உள்ளம் கொண்டு அல்ல, கடல் அளவு உள்ளம் கொண்டு சொல்கிறேன் என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொண்டு காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் இந்த நிதிநிலை அறிக்கையிலே நான் பேசும்போது சுட்டிக்காட்டினேன், குடிசைத் தொழில்களை வளர்க்க, இன்னல்படுகின்றவர்களுக்கு வாழ்வு கொடுக்க, நெசவாளர்கள், விவசாயிகள் போன்றவர்களுக்கு நல்ல வாழ்வு கொடுப்பதற்கு ஆசிரியர்கள், அலுவலர்கள் போன்றவர்களுக்கு அவர்கள் கேட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உண்டான திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கான சூழ்நிலை இந்த நிதிநிலை அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு ஆங்காங்கே வரி சலுகை கொடுக்கப்பட்ட ஒன்று இரண்டுகளுக்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொண்டு அதே நேரத்தில் நிரந்தரமான வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வழி காணுகின்ற நிதிநிலை அறிக்கையாக இல்லாது இருப்பது கண்டு என்னுடைய வருத்தத்தை தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983-84-ம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கை மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு குறளை சொல்லியிருக்கிறார்கள்.

''வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை''

என்பது வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையார் அரசு ஆட்சிப் புரிவோர்க்கு வழங்கிய அறிவுரையாகும். பொருள் ஈட்டும் வழி வகைகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளங்களை உருவாக்கி, நாட்டில் ஏற்படும் இடையூறுகளை ஆராய்ந்தறிந்து, அவற்றை நீக்கும் வல்லமை பெற்றவனே அரசுவினையை ஆற்ற வேண்டும் என்பது அந்த குறளின் அர்த்தம். இந்த வருடம் அந்த குறளுக்குப் பதிலாக வேறு ஒரு குறளை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

''விண்' இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி''

அப்படியானால் கடந்த ஆண்டு சொல்லியிருக்கின்ற அந்த குறளுக்கு ஏற்ப எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கூறியது மாதிரி இதற்கு முன்னால் நடந்த ஆளுநர் உரை மீதும் பலர் பேசினார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சி இதற்கு முன்னால் எந்த ஆண்டும் காண முடியாத அளவுக்கு ஒரு வறட்சி நிலை ஏற்படுவதற்கு முன்னமே அதாவது தென்மேற்கு பருவ மழை பொய்த்தது என்றவுடன் காலாகாலத்தில் செய்யவேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறதா? என்ற ஒரு கேள்வியை நான் இந்த அரசை இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு முன்பாக கேட்க விரும்புகிறேன். இன்னும் கூட எல்லா இடத்திலும் வறட்சி நிவாரண வேலைகள் நடைபெறவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே பேசும் போது ஒன்றை பேசினார்கள். நேரிடையாக அவர்களிடத்தில் கேட்கிறபோது இந்த கொடுமையான வறட்சியை தணிப்பதற்கு வேண்டிய ஏதாவது ஒரு நடவடிக்கையில் துரிதமான நடவடிக்கையில் இந்த அரசு. ஈடுபட்டிருக்கிறதா என்று பார்த்தால் அது இல்லை, என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல இன்றைக்கு நீங்கள் இந்த நகரத்திலே பார்த்தால் குடிக்க தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். நாம் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் கூட தண்ணீர் இல்லை. மற்ற இடங்களில் கேட்கவேண்டுமா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு இரவு பூராவும் லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டுவந்து அந்த டாங்குகளை நிரப்பிவிடுகிறோம். காலையில் தண்ணீர் இல்லை என்று சொல்கிறார்கள். எனக்கு கிடைத்த தகவல் படி ஒரு ரூமில் 7, 8 பேர் தங்கியிருப்பதாகவும் அவர்கள் காலையில் 4 மணிக்கு எல்லாம் எழுந்து எல்லோரும் குளித்து எல்லா தண்ணீரையும் காலி செய்து விடுகிறார்கள். அதன்பிறகு எழும் உறுப்பினர்களுக்கு அங்கே தண்ணீர் வரவில்லை என்று சொல்கிறார்கள். இதில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரவில் எல்லா டாங்குகளும் பூர்த்தி செய்யப்பட்டு விடுகின்றன. காலையில் எழுந்து தண்ணீர் வரவில்லை என்றால் எப்படி. நீங்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவிலேயே எல்லா டாங்குகளையும் நிரப்பி விடுகிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நேற்று மாலை 6 மணியிலிருந்து மறுநாள் காலை 6 மணி வரையில் தண்ணீர் வரவில்லை. 7 மணிக்கு குளிக்கச் சென்றால் தண்ணீர்வரவில்லை. இந்த நிலையில் இரவிலே டாங்குகளை நிரப்பிவிடுகிறோம் என்று சொல்வது எப்படி என்று தெரியவில்லை. ரூம்களில் அதிகமான ஆட்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இதை உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம். இதை ஒரு உதாரணத்திற்காக சொன்னேன். எங்களுக்கு தண்ணீர் இல்லை என்றால் கூட பரவாயில்லை. நகரத்தில் இருக்கின்ற பெண்கள் இந்த தண்ணீருக்காக, 2 நாளுக்கு ஒரு முறை தண்ணீர்வருகிறது. லாரிகளை எதிர்பார்த்துக்கொண்டு அவர்கள் நிரப்புகிற அந்த தொட்டிகளை எதிர்பார்த்துக்கொண்டு காத்துகிடக்கின்ற ஒரு அவல நிலைமை இருக்கிறது என்பதை நான் சொல்ல வேண்டாம். அது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

(முற்பகல் 11-50)

இந்த அவலநிலையைப் போக்குவதற்கு துரிதமான வேகமான நடவடிக்கை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு எங்கே பார்த்தாலும் நகரங்களிலே அரிசிக்காகவும் மண்ணெண்ணெய்க்காகவும் மக்கள் மிகப் பெரிய நீண்ட கியூவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி இருக்கின்ற சுவற்றிற்குள்ளே

அதற்கு அடுத்து இருக்கிற அந்த அரசினர் தோட்டத்திற்குள்ளே இருக்கின்ற ஒரு நியாயவிலைக் கடையிலே காலையிலே நாங்கள் பார்க்கிறபோது பார்த்தால் 500, 600 பேர்கள் காத்துக்கிடக்கிறார்கள். ஏன் இவ்வளவு சீக்கிரத்திலேயே வந்து இருக்கிறீர்கள் என்று கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள், நேரத்திலேயே வந்தால்தான் கிடைக்கிறது, இல்லாவிட்டால் ஸ்டாக் தீர்ந்து விட்டது என்று சொல்லிவிடுகிறார்கள், என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அந்தக் கடையிலே உள்ள பணியாளர்களை விசாரித்தபோது அவர்கள் சொல்லுகிறார்கள், அந்தக் கடை மூலமாக வாங்கக் கூடியவர்களுக்கு விநியோகிக்க எங்களது தேவையானது 100 மூடை என்றால் 20 மூடை தான் கொடுக்கிறார்கள், அதனால் முந்தியவர்களுக்குக் கொடுக்கிறோம், பிந்தியவர்களுக்கு இல்லை என்று சொல்கிறோம் என்று சொல்கிறார்கள். அதனால் எப்போது வருமென்று, தெரியாமல் எத்தனையோ பேர்கள் ரேஷனுக்காக முண்டியடித்துக்கொண்டு நிற்கக் கூடிய பரிதாபமான நிலையைப் பார்க்கிறோம். பத்திரிகையிலே நீங்கள் பார்த்திருக்கலாம், மண்ணெண்ணெய் வாங்கப்போன ஒரு தாய் சென்னையிலே ஒரு நியாய விலைக் கடை முன்பு டின்களை வரிசையிலே வைத்துவிட்டு அங்கே குழந்தையும் தானும் படுத்துக்கொண்டிருக்கிற நிலையை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே போட்டிருந்தார்கள். அனைவரும் பார்த்திருப்பார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரை மணி நேரத்திற்கு முன்பு நான் ஒரு நியாய விலைக் கடைக்குப் போய் அங்கே நடவடிக்கை எடுக்கும்படி சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். தேவைக்கு வேண்டிய மண்ணெண்ணெய், அரிசி அங்கே இருக்கிறது. ஆனால், அங்கே இருக்கிற பணியாளர்கள் 8 மணிக்குக் கொடுக்க வேண்டியதை 8 மணிக்கு மேலேதான் கடைக்கே வருகிறார்கள். அந்த நாள் அந்த வேலை முடிந்துபோகும்போது எவ்வளவு விற்கப்பட்டது, எவ்வளவு கையிருப்பு இருக்கிறது என்ற குறிப்புகள் எழுதிவைக்கப்படவில்லை, மறுநாள் வேலை தொடங்கும் போது எவ்வளவு இருக்கிறது என்பதற்கு அவர்கள் அதை ஆதாரமாக வைத்துக் கொள்ள வழியில்லை. இப்படிப்பட்ட தவறான நிலைமைகள் ஆங்காங்கே இருக்கின்றன என்பதும் அதற்காக ஸ்குவாட் போல ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கு இன்றைய தினம் உத்திரவிடுகின்ற நிலையில் இருக்கிறேன் என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒருவர், ஒரு தாய் 5 கார்டுகளைக் கொண்டுவந்து அந்தப் பொருள்களை வாங்க முயற்சித்ததை நான் அனுப்பிய அதிகாரிகள் நிறுத்தி தடை செய்து ஒரு கார்டுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற உத்திரவைத் தந்திருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





*** திரு. ப. நெடுமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நேரடியாக சென்று பார்வையிட்டதை நான் பாராட்டுகிறேன், அதற்கு நன்றி செலுத்துகிறேன். மதுரையிலே மாண்புமிகு முதலமைச்சர் தொகுதி உள்பட மதுரை நகரம் பூராவும், அதே போன்ற நிலைமைதான். கார்டுகளுக்கு குறிப்பிட்ட அளவு என்ன என்ன பொருள்கள் கொடுக்கவேண்டுமோ அவர்கள் அறவே தருவதில்லை. அது சம்பந்தமாகப் பொது மக்கள் மிக நீண்ட நேரம் வரிசையிலே காலை 8 மணி முதல் சாயங்காலம் 5 மணி வரை நிற்கிறார்கள். 5 மணிக்குப் பின்னாலே திடீரென்று ஸ்டாக் இல்லை என்று சொல்கிறார்கள். மீறி பொதுமக்கள் ஆத்திரமடைந்து ஏதாவது கேள்வி கேட்டால் அடியாட்கள் வைத்து அடிக்கிறார்கள். அது சம்பந்தமான புகாரை நான் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நேரில் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை விசாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு செய்தியை நான் சொல்லிக் கொள்கிறேன். அரிசி கொடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, எந்த எந்த நாட்களில் அரிசி, எந்த எந்த நாட்களில் மண்ணெண்ணெய் என்று பிரித்துக் கொடுக்கவேண்டும்என்று அதை விளம்பரப்படுத்தவேண்டுமென்று அந்தப் பலகையிலே எழுத வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோமோ அதையும் அவர்கள் செய்யவில்லை, அதையும் இன்றைய தின நடவடிக்கைக்கு உட்படுத்தக் கூடிய சூழ்நிலையில் உத்தரவிட இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் விளக்கத்திற்கு நன்றி. ஏதோ ஒரு கடையைப் போய் சோதனையிட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் போய்ப் பார்த்த அரசினர் தோட்டத்திற்குள்ளேயே இருக்கின்ற அந்தக் கடையிலே அவர்கள் சொல்வது எங்களுக்குத் தேவையானது ஆயிரம் கார்டுகளுக்கு என்று சொன்னால் 15 நாட்களுக்கு ஒரு தடவை ஒரு அட்டைக்கு 10 கிலோ வீதம் அதற்குரிய அரிசியை எங்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே நாங்கள் சீராக விநியோகம் செய்யமுடியவில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி அந்தக்கடைக்கு கார்டுகளுக்கு உரிய தேவைகள் இன்ன இன்ன கிழமைகளில் இந்த நம்பரிலிருந்து இந்த நம்பர் வரையில் உள்ள கார்டுகளுக்கு உண்டு ஆகவே அனாவசியமாக அலையவேண்டாம் என்று சொல்லக் கூடிய ஏற்பாட்டைச் செய்துவிட்டால் மிக நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இது நகரத்திலே உள்ள நிலைமை. மற்ற எந்த இடங்களிலேயும் கார்டுகளுக்கு

உள்ள அந்த அளவுக்கு அரிசி கிடைப்பதில்லை. மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் 5 ரூபாய் விற்கிறது, அதையும் வண்டிகளிலே போய் விற்கக்கூடிய நிலைமையை நிறுத்திவிட்டார்கள். ஆகவே மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இன்றைக்கு மொத்தத்திலே வறட்சியின் காரணமாக, மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் கூறியதைப்போல பெரும் பகுதி, அதிலும் மானாவரி பகுதியில் பெரும்பகுதி பாதிக்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு மாட்டிற்கு தீவனம் இல்லை. குடிநீர் தட்டுப்பாடு நகரங்களில் மட்டுமல்ல, சகலப் பகுதிகளிலும் இருக்கிறது. மாடுகள் பூராவையும் குறைந்தவிலைக்கு விற்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மரங்களை எல்லாம் வெட்டுகிறார்கள். நாம் மரங்களை நடுகிறோம். ஆனால், ஆங்காங்கு இருக்கிறவர்கள் தங்களுக்குச் சொந்தமான மரங்களையும், புறம்போக்கிலும், ரோடுகளிலும் இருக்கிற மரங்களையும் வெட்டி விறகாக விற்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. கிராமப் பகுதிகளில் வேலை இல்லை. அதன் காரணமாக மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு தென்னாற்காடு மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் சொல்கிறார், வழக்கமாக அவர்கள் சம்பாதிப்பதற்காக வெளிமாநிலங்களுக்கும், கர்நாடகாவிற்கும் செல்லுகிறார்கள் என்று கூறுகிறார்கள். இன்றைக்கு பிழைக்க வழியில்லாமல் மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதே இந்த நிலை என்றால் இன்னும் வரக்கூடிய மாதங்களில் எப்படி இருக்குமோ? இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் கடுமையான வறட்சி இருக்கும். அப்பொழுது எப்படி நீங்கள் சமாளிக்கப் போகிறீர்கள் என்பதுதான் நான் உங்களை கேட்க வேண்டிய முக்கியமான கேள்வி.

காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமாக மத்திய அரசு தன்னுடைய பொறுப்பை தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறது. அதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. அதில் காலா காலத்தில் தலையிட்டு பிரச்சினையை தீர்த்திருந்தால், மத்திய அரசு பொறுப்புடன் நடந்திருந்தால்—இதை சொல்வதற்கு காங்கிரஸ் நண்பர்கள் வருத்தப்பட வேண்டாமென கேட்டுக் கொள்கிறேன். அவர்களும் சேர்ந்து தமிழகத்திற்காக கேட்க வேண்டும். இதிலே அரசியல் வித்தியாசம் இல்லை. மத்திய அரசு பொறுப்புடன் அந்த அரசை அணுகி இருக்க வேண்டும். இப்போது பாசனம் இல்லாதபோது தேவைக்கு அதிகமான தண்ணீரை அவர்கள் தேக்கி வைத்திருக்கிறார்கள். அந்தத் தண்ணீரை கொடுக்கச் செய்திருந்தால் தமிழகத்தில் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. அரிசி இன்றைக்கு விலை கிலோ ரூபாய் 5.50; ஹாஸ்டலில் வேலை செய்யும் பெண்களிடத்திலே கேட்டேன், அதற்கு அவர்கள் எப்படி ஐயா நாங்கள் பிழைப்பது, அரிசி கிலோ 5 ரூபாய் விற்கிறதே என்று சொல்கிறார்கள். இப்போது ஐந்து ரூபாய் ; இன்னும் இரண்டு மாதங்களில் படி பத்து ரூபாய்க்கு போகும். ஆகவே காலா





காலத்தில் காவிரி நீர் பிரச்னையை தீர்த்துவைக்கிற கடமையை. பொறுப்பை மத்திய அரசு சரியாகச் செய்யவில்லை, என்று குற்றம் சாட்டுகிறேன். ஆனால், மாநில அரசு வற்புறுத்தி வாங்கியிருக்கலாமே? ஏன் காலா காலத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை? மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் கூறியது மாதிரி ஓடோடிப் போய் குண்டுராவை ஆதரித்தீர்களே? அந்த அரசியலாவது சரியான அரசியலா? அதிலேயும் தோற்றுவிட்டீர்கள். தேர்தல் காலத்திலே குண்டுராவை ஆதரிக்க போன நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதைப்பயன்படுத்திக்கொண்டு காவிரியிலிருந்து தண்ணீராவது வாங்கினாரா? அதுவும் இல்லை. ஆகவே, சரியான நேரத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க தவறியது மட்டுமல்ல, மாநில அரசு உரிய நடவடிக்கைகளை காலாகாலத்தில் காவிரி நீர்பிரச்னையில் எடுத்து வழிவகை செய்யவில்லை. கடைசியில் பயிர்கள் காய்ந்த பிறகு தண்ணீர் விடக்கூடிய காரியம் நடந்தது. உரிய நேரத்தில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகவே இன்றைக்குச் சொல்கிறேன், வறட்சிக்கு ஏற்றவாறு நடவடிக்கைகள் இல்லை. ஓட்டு பெறுவதில் நீங்கள் காட்டுகிற அக்கறையை மக்களுடைய கஷ்டமான நிலையை போக்குவதில், அதில் தீவிரம் காட்டுவதில் நீங்கள் தயக்கம் காட்டுகிறீர்கள் என்பது மட்டுமல்ல, உங்களுடைய அக்கறை மிகவும் குறைவாக இருக்கிறது என்று குற்றம் சாட்டுகிறேன். எல்லோரும் பார்த்தோம். பெரியகுளம் தேர்தல், திருச்செந்தூர் தேர்தல், இந்த தேர்தல்களில் அமைச்சர்கள் அத்தனை பேரும் அங்கு முகாம் அடித்திருந்தார்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதுமாதிரி வறட்சி இருக்கிற இடங்களில், அதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? ஒரு உப தேர்தலுக்கு அத்தனை அமைச்சர்களும் போகவேண்டியது அவசியம்தானா? இந்த மாதிரி, உபதேர்தலில் வாக்கு குறைந்தாலும், கூடினாலும், மக்களுக்கு செய்திருக்கிற பணிகளில் ஏதோ குறைவு இருக்கிறது என்று தெரிந்துகொண்டு அதை நிவர்த்திப்பதற்கு உங்களுக்கு உதவியாக இருக்கும். அதை விட்டு அத்தனை அமைச்சர்களும் சென்று, அங்கே முகாம் அடித்து, என்னென்ன மக்களுக்குச் செய்யவேண்டுமென்று கேட்டு உடனடியாக செய்யப்பட்டது. மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்றால் அவர்களுடைய தொகுதியில் ஏதாவது வேலை நடக்கவேண்டுமென்றால் அங்கே உபதேர்தல் வரவேண்டும். அப்போதுதான் அவை நடக்கும் என்று பெரியகுளத்திலும் பேசினார்கள். திருச்செந்தூரிலும் பேசினார்கள். நான் இரண்டு இடங்களுக்கும் சென்றிருந்தேன். கேரளாவிலே தோழர் நம்பூதிரிபாத் தலைமையில் ஒரு மந்திரிசபை இருந்தது. அப்போது ஒரு உபதேர்தல் வந்தது. ஒரே ஒருவர் நான் மெஜாரிட்டிக்கு தேவை. அந்த உபதேர்தலுக்கு எந்த அமைச்சரும் போகக் கூடாது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். அமைச்சர்கள் என்றால் எல்லோருக்கும் பொதுதானே; சர்க்காருடைய சம்பளத்தை வாங்குகிற அமைச்சர்கள் தேர்தலில்

ஒரு கட்சிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்ய எப்படி போகலாம்? அப்படி ஒரு கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். நீங்கள் பதில் சொல்லவேண்டும். உங்கள் கட்சித் தலைவர்கள் விட்டு பிரச்சாரம் செய்ய சொல்லுங்கள். உங்கள் கட்சியின் கொள்கையை சொல்லச் சொல்லுங்கள். எப்போது அமைச்சராக வந்துவிட்டாரோ அப்போது அவர் எல்லோருக்கும் பொதுவானவராக ஆகிவிடுகிறார். நீங்கள் ஒரு கட்சிக்குச் சாதகமாக பிரச்சாரம் செய்யக் கூடாது. அப்படியானால் அரசாங்கத்தில் தங்களுடைய அதிகாரத்தைப் பூராவும் ஓட்டு வாங்குவதற்காக பயன்படுத்துகிறீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

(நண்பகல் 12-00)

அதுதானே நடந்தது திருச்செந்தூரிலே. நாங்கள் எல்லாம் போனால், எங்களுக்குத் தங்குவதற்கு ஒரு இடமும் கிடையாது. எல்லா லாட்ஜ்களையும், அரசு விடுதிகளையும், மற்ற இடங்களையும் ஆளுங்கட்சிக்காரர்களும், அதிகாரிகளும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். நாங்கள் எல்லாம் போய் தங்குவதற்கு இடம் இல்லாமல், அங்கே போய் திரும்பி வரவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே, நான் சொல்கிறேன், இனிமேல் உபதேர்தல் என்று சொன்னால், ஆளுங்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் போவது சரியல்ல என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு) கேரளாவில் உபதேர்தலில் போகவில்லை. (குறுக்கீடு) இன்றைக்கும் போகவில்லை. (குறுக்கீடு) போனால் தப்புதான், யார் போனாலும் தப்புதான். நான் சொல்கிறேன், போகக் கூடாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய அழகர்சாமி அவர்கள், எப்போதுமே, இடைத் தேர்தல்களில் அமைச்சர்களாக இருக்கின்றவர்கள் போகக் கூடாது, அங்கே தேர்தல் பிரச்சாரம் செய்யக் கூடாது என்கிறார்கள். அமைச்சர்களாக நாங்கள் ஆகிவிட்டாலும், ஒரு கட்சிக்குப் பாத்தியதைப் பட்டவர்கள், கட்சியினுடைய தொண்டர்களாகத்தான் நாங்கள் இருக்கிறோமே தவிர, தேர்தல் வருகின்ற காலத்தில், தேர்தலிலே ஓட்டு சேகரிப்பதற்கும், எங்களுடைய கட்சியினுடைய கொள்கையை நாங்கள் பிரச்சாரம் செய்வதற்கும் நாங்கள் போய்த்தானாக வேண்டும். ஆகவே, அமைச்சர்களாக இருப்பவர்கள் போகக்கூடாது என்பது முறையாக இருக்கக்கூடாது. அதே நேரத்தில், இன்றைக்கு மேற்கு வங்காளத்தில் ஆளுகின்ற கட்சியாக இருக்கிற ஜோதிபாசு தலைமையில் இருக்கிற அந்த கட்சியிலுங்கூட, இடைத்





தேர்தல் வருகின்ற சமயத்தில் அமைச்சர்கள் போய் பிரச்சாரம் செய்துகொண்டு தானிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கட்டுப்பாட்டை நீங்கள் சொல்லக் கூடிய மேற்கு வங்காள அரசாங்கத்திலே காட்டினால் நலமாக இருக்கும்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினை என்னவென்றால், நம்பூதிரிபாடு அவர்களுடைய தலைமையிலே இருந்த மந்திரிசபைக்கு ஒரே ஒரு ஓட்டு மெஜாரிட்டி மட்டும் இருந்த காலத்திலே நடந்த தேவிகுளம் பீர்மேடு தேர்தலிலே அப்பொழுது காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள். அரசாங்க இயந்திரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று. அந்த நேரத்திலே நம்பூதிரிபாடு மந்திரி சபையிலே இருக்கிற யாரும் அந்தத் தொகுதிக்குப் போவதில்லையென்று முடிவு செய்தார்கள், போக வில்லை. ஆனாலும் வெற்றி பெற்றார்கள். அதைத்தான் குறிப்பிடுகிறோம்.

இப்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இங்கே உள்ள கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்து, அமைச்சர்கள் போவது, மற்றவர்கள் போவது, எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றிப் பேசுவதற்குத் தயாராக இருந்தால், ஜனநாயக ரீதியிலே, அதைப் பற்றிப் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். எத்தனை காரைக் கொண்டு போகலாம், எவ்வளவு வண்டிகளைக்கொண்டு போகலாம், எவ்வளவு செலவழிக்கலாம் என்பவை பற்றி ஒரு நியாயமான ஒப்பந்தத்திற்கு வருவதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருந்தால், இந்த மன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் அது பற்றிப் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இது அகில இந்திய ரீதியிலே பேசப்பட்டு, தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை. இது ஏதோ ஒரு மாநிலத்திற்கு மட்டும் சொந்தமான பிரச்சினை அல்ல. ஏனென்றால், தேர்தல்கள் வருகின்றன என்று சொன்னால், நாடாளுமன்றத் தேர்தல்களும் வருகின்றன. அதே நேரத்தில் சட்ட மன்றத் தேர்தல்களும் வருகின்றன. ஆகவேதான், இந்தப் பிரச்சினையில் முடிவெடுக்க வேண்டுமென்றால், அகில இந்திய ரீதியிலே இருக்கின்ற கட்சிகளும் நீங்களும் சேர்ந்தே—ஏனென்றால், அகில இந்தியக் கட்சியாக நீங்கள் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலையிலே நீங்கள் முடிவு எடுப்பீர்களானால் நாங்கள் அப்படிப்பட்ட நிலைக்கு (குறுக்கீடு) அதெல்லாம் எனக்குத் தெரியும். உங்களுக்குத் தெரிந்ததைவிட எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான், இதுபோன்ற முடிவை அப்படிப்பட்ட நிலையில் கொண்டு வருவதுதான் நலமாக இருக்கும்.

அதே நேரத்தில் திருச்செந்தூர் தேர்தலிலும் சரி, பெரியகுளம் தேர்தலிலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்பொழுதுமே அதிகார துஷ்பிரயோகம் இதுவரையில் செய்ததில்லை. (குறுக்கீடு) நீங்கள் சிரிப்பதைக் காட்டிலும் எங்களுடைய நண்பர்கள் அதிகமாகச் சிரிக்க முடியும்.

அது மட்டுமல்ல. உபயோகப்படுத்தியிருக்கிற வாகனங்களைப் பொறுத்த வரையில், எங்களுடைய சொந்த வாகனங்களைத்தான் உபயோகப்படுத்தினோமே தவிர, அதிகாரத்திற்கு உட்பட்டு அல்ல, அரசாங்கத்திற்கு உட்பட்ட வாகனங்களை நாங்கள் தொடவும் இல்லை, அந்தத் தேர்தல் முடியும் வரை.

அது மட்டுமல்ல, அமைச்சர்களாக இருப்பவர்கள், நாங்கள் டி.ஏ. போன்றவைகளை வாங்கவும் இல்லை. ஆகவேதான் அதிகார துஷ்பிரயோகம் என்பதற்குக் கண்டிப்பாக, கொஞ்சமும் அதிலே இடம் இல்லை என்பதை அழகர்சாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் சம்பந்தமாக மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொன்ன மாதிரி, அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து பேசிக் கொள்ளலாம். பெரியகுளம் மற்றும் திருச்செந்தூரிலே உள்ள மக்கள் என்ன பேசிக் கொண்டார்கள்? இடைத் தேர்தல் வந்தால்தான் வேலைகளே நடக்கும் என்று பேசிக் கொண்டார்கள். வேலைகள் பூராவும் மந்திரிகளுடைய சொந்தச் செலவில் இருக்காது என்று நினைக்கிறேன். அவையெல்லாம் அரசாங்கத்தினுடைய செலவு. குழாய் போடுவதோ, மற்ற வேலைகள் செய்வதோ, அத்தனையும் முன்பே செய்திருக்கலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, எப்பொழுதுமே, எல்லா தொகுதிகளிலும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொகுதியில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அல்லது அந்தத் தொகுதியில் நடைபெறவில்லையென்ற நிலை தமிழகத்தைப் பொறுத்த அளவில் இல்லை. இதற்குக் காரணம், பல்வேறு திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். (on g ing Schemes) ஆக பல்வேறு திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



6. ஒழுங்குப் பிரச்சினை.

வெளியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அவையில் விவாதிப்பது.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, நான் அமைச்சரிடம் கேட்கின்ற ஒரேயொரு கேள்வி, தேர்தல் பிரச்சாரத்திற்காக அமைச்சர்கள் போகிறார்கள் என்றால் அது வேறு விஷயம். அப்பொழுது அதிகார துஷ்பிரயோகம் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால், அந்தத் தொகுதிக்குப் போகின்ற நேரத்தில் இரயில்வேக் கட்டணம் அல்லது காரில் போனால் அதற்கான செலவு ஆகியவை அரசாங்கத்தின் செலவாகச் செய்யப்படுகிறதா அல்லது அவர்களுடைய சொந்தச் செலவாகச் செய்யப்படுகிறதா என்பதை மட்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, நாங்கள் தேர்தலுக்குப் போகின்றோம் என்று சொன்னால் சென்னையிலேயிருந்து புறப்பட்டு நாங்கள் செல்லும் வரையில் அதற்குரிய பணத்தையும்கூட நாங்கள்தான் ஏற்றுக் கொள்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் இவைகள் செய்யப்பட்டிருக்கிறதே தவிர அரசாங்கத்தினுடைய பணம் சல்லிக்காசுகூட நாங்கள் உபயோகிக்கவில்லை. ஆனால் உங்களுடைய ஆட்சிக்காலத்தில், முன்பிருந்தவர்கள் எப்படியெல்லாம் உபயோகித்தார்கள் என்பதற்கான சான்றுகள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி ஆதாரபூர்வமாகச் சொல்ல முடியும்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, அவருக்குப் புருடா விடுவதே வேலையாகிவிட்டது.

திரு. அ. ரகுமான்கான் : ஆதாரத்தோடு சொல்ல வேண்டும், இப்பொழுது எங்களுக்கு ஆதாரம் வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதிகார துஷ்பிரயோகம் நடந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதை ஆதாரத்தோடு சொல்லட்டும்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் எதிலும் ஆதாரத்தோடு பேசுகிறேன் என்று சொல்கிறார்கள். நான் அவர்களிடத்திலே நேரடியாகவே கேட்கிறேன். பெரியகுளத்திலே, தேனிக்குப் பக்கத்திலே இருக்கின்ற முத்துதேவன் பட்டியிலே கலைஞருக்குச் சொந்தமான நிலம், அழகிரி பெயரால் வாங்கப்பட்டிருக்கிறது என்பதற்கு என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது; அதற்கு வேண்டிய டாகுமெண்டுகள்

**டாக்டர் மு. கருணாநிதி :** அந்தத் தேதியை இப்பொழுதே குறிப்பிட வேண்டும். —ஒரு வார காலத்திற்குள்ளாகவா அல்லது இரண்டு வார காலத்திற்குள்ளாகவா என்று குறிப்பிட வேண்டும். இங்கு பேசியபொழுது அமைச்சர் கலைஞர் என்று மரியாதையாகக் கூட சொன்னார்கள். ரொம்ப நன்றி அப்படிச் சொன்னதற்காக. அவர்கள் பேசியது அப்போது தான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட போது சொன்னேன். அப்படி எந்த நிலமும் எனக்கு அங்கேயில்லை. அங்கே தம்பி நடராஜனுடைய குடும்பத்தைச் சேர்ந்த நிலம் தான் இருக்கிறது. நான் 10 நாட்கள் தேர்தல் பணிக்காக வந்திருக்கிறேன். ஒருவேளை நடராஜன் என்னுடைய தம்பி என்பதால் அது என்னுடைய நிலம் என்று அமைச்சர் எண்ணி கொண்டார் போலும் என்று, ஆங்கிலத்தில் 'சட்டையர்' என்பார்களே அதைப்போல வார்த்தையைப் பயன்படுத்தினேனே தவிர, அதிலே நான்பாத்தியதைக் கொண்டாட, உரிமைகொண்டாட அந்த வார்த்தையைப் பயன்படுத்தப்படவில்லை, இப்பொழுது அவர் பினாமியைப் பற்றிச் சொல்கிறார் முதலில் அவர் சொன்னது முத்துதேவன்பட்டியில் 100 ஏக்கர் இடம் என் மகன் அழகிரியின் பெயரால் வாங்கப்பட்டதாக இப்பொழுது பினாமி என்கிறார். பினாமி என்றால் திருவண்ணாமலைக்குப் போகலாம் பொள்ளாச்சிக்குப் போகலாம், தியேட்டருக்கும் போகலாம். நான் இப்பொழுது கேட்பது வெட்டு ஒன்று துண்டு இரண்டாக மு. க. அழகிரி பெயரில் அங்கே 100 ஏக்கரா நிலம் முத்துதேவன் பட்டியிலே வாங்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் குழந்தைவேலு நிரூபிக்கத்தயாரா, அல்லது மானம் இருந்தால் ராஜினாமா செய்யத் தயாரா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நீங்கள் ஏற்றுக் கொண்டால் இந்தச் சபையிலே இந்த விவாதத்தை நீங்கள் நடத்துவதற்கு தகுந்த கால ஒதுக்கிடு செய்தால் நான் இங்கேயே நிரூபிக்கிறேன். அதுமட்டுமல்ல. மானத்தைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்றார்கள். உண்மையிலேயே ஒரு மானம் உள்ள பரம்பரையிலே வந்தவன் என்கின்ற காரணத்தாலே சொல்லுகின்றேன். மானம், ரோஷம் வெட்கம் போன்றவைகள் எல்லாம் எங்களுக்குத்தான் இருக்கிறதே தவிர, குறிப்பாக அவர்களுக்கு இருக்கிறதா, இல்லையா என்பதனைப் பற்றி நான் சொல்லத் தயாராகயில்லை. காரணம் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையிலே இதைக் குறிப்பாக எடுத்துச் சொல்லமுடியாது. அவையிலே ஒரு விவாதமாக நடத்தமுடியாது. நீங்கள் இதை நிரூபிக்க வேறு ஏதாவது முறையைத்தான் கையாளவேண்டும். அவையினுடைய வேலை இது அல்ல. அவையினுடைய வேலை இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.



**டாக்டர் மு. கருணாநிதி :** இது அவையினுடைய விவாத பொருளாக ஆக்கப்பட்டிருக்கிறது. திரு. அழகர்சாமி தேர்தலைப் பற்றி பேசினார்கள். அவருக்கு அமைச்சர் பதில் சொன்னார். பிறகு சங்கரய்யா இடத்திலே அவர்கள் பாய்ந்தார்கள். பிறகு சங்கரய்யா பதில் சொன்னார்கள். அந்த பதிலுக்கு அவர் அளித்த பதிலுக்கு விளக்கம் கேட்கின்ற வகையில் ரகுமான்கான் ஒரு கேள்வியைக் கேட்டார். அதிலிருந்து இந்த விவாதம் வளர்ந்தது. நான் உடல்நலம் இல்லாத காரணத்தால், தலைவர்கள் எல்லாம் இன்றைக்குப் பேசுகிறார்களே அவர்களுக்கெல்லாம் மரியாதை கொடுக்கவேண்டும் என்கிற மரபைக் காப்பாற்றுவதற்கு, 1-30 மணி வரையிலும் இன்றைக்கு எப்படியும் உட்காருவது என்று டாக்டரிடத்திலே அனுமதி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். அன்று கவர்னர் உரையிலே முதல் அமைச்சர் பேசுகின்றபொழுது கூட இந்த மரபைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காக வந்தேன். இன்றைக்கும் அப்படித்தான் வந்திருக்கிறேன். நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் அன்றைக்கு பட்ஜெட்டைப் படித்த காலத்திலே மரபைக் காப்பாற்றத்தான் உடல்நலம் குன்றியிருந்த நேரத்திலேயும் வந்தேன். அந்த நிலையிலே வந்திருக்கும்போது வேண்டுமென்றே அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், எதிர்க்கட்சித் தலைவர் அமர்ந்திருக்கிறார். அவர் எழுந்து பதில் சொல்லட்டும் என்று என்னை வலிய வம்புக்கு இழுத்து, நான் பதில் சொன்ன பிறகு, பிரசங்கம் செய்து கொண்டு இருப்பது சரியல்ல, தவறானது. நான் தங்களை மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், துணைத் தலைவர் அவர்களே, விவாதப் பொருளாக ஒன்று ஆகிவிட்ட பிறகு, அவைத்தலைவரோ நீங்களோ தலைவராக அமர்ந்து அல்லது நாவலர் அமர்ந்து இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம்கூட அமர்ந்து அவர்கள் தருகின்ற அந்த ஆதாரத்தைச் சட்டப்பேரவையினுடைய தலைவர் அவர்களுடைய அலுவலகத்திலோ அல்லது வேறு ஒரு இடத்திலோ வைத்து, அந்த ஆதாரத்தை நீங்கள் பரிசீலித்து நீங்கள் தீர்ப்பு வழங்குங்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, அதிகார துஷ்பிரயோகம் செய்யவில்லை என்று....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தப் பிரச்சினையை முடித்து விடுவோம். நாம் இதை விளக்க வேண்டாம். நாம் இதற்கு முன்னாலே இப்படி ஒரு முறையைக் கடைப்பிடித்தது இல்லை. (குறுக்கீடு). இந்த மாதிரி விவகாரங்களை நாம் இது வரையிலே அவையிலே விவாதித்தது

இருக்கின்றன என்று மேடை தோறும், ஊர்தோறும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் நிருபிக்காவிட்டால் என்னுடைய பதவியையே இராஜினாமா செய்வேன் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மேலும் வேறுவிதமான முறையிலே, இந்த அவையிலே சொல்லக் கூடாத வார்த்தைகளையும்கூட இந்தப் பந்தயத்திலே அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால், நான் நேரடியாகவே கேட்கிறேன். இது ஒரு மாமன்றம். முத்து தேவன்பட்டியில் கலைஞரின் மகன் அழகிரியின் பெயரால் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு ஆதாரம் இருக்கிறது என்றால் இந்த இடத்தில் அதைக் காட்டுவதற்குத் தயாரா? அப்படிக் காட்டாவிட்டால் அவர் சொன்னது மாதிரி பதவியை இராஜினாமா செய்யத்தயாரா? என்பதை இப்பொழுது அவர் தெரிவிக்கட்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இந்த வார்த்தைகளெல்லாம் அவருடைய வார்த்தைகளாக வந்தால் நலமாக இருக்கும். (குறுக்கீடு) உறுப்பினரவர்கள் தயவு செய்து நான் சொல்வதைக் கேட்க வேண்டும். அவர்கள் பேசும்போது நான் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். நான் ஆதாரம் இல்லாமல் எதையும் சொல்லவில்லை. வேண்டுமென்றே ஒருவர்மீது களங்கம் கற்பிக்க வேண்டும், மாசு கற்பிக்க வேண்டும் என்று, எப்படியாவது இருக்கின்ற மக்களைத் திசை மாற்ற வேண்டுமென்ற நிலையிலே நான் சொல்லவில்லை. இப்பொழுதும் கூறுகிறேன். இங்கே முன்னாலே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எழுந்து சொல்லட்டும். முத்துதேவன்பட்டியிலே எனக்கு நிலம் இல்லை, அந்த நிலத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லை, என் குடும்பத்திற்கும் அதில் சம்பந்தமில்லை என்று சொல்லட்டும். அதன் பிறகு என்னுடைய ஆதாரத்தை வைத்துச் சரியாக நிரூபிக்கத் தயாராக் இருக்கிறேன் என்பதை இந்த மன்றத்திலே ஏற்றுக் கொள்கிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே, நாங்களும் சரி, எதிரிலே அமர்ந்திருக்கின்ற நாவலர் போன்றவர்களும் சரி, அண்ணா அவர்களிடத்திலே மிகுந்த பற்றும், பாசமும், அன்பும் கொண்டவர்கள் என்று கூறிக்கொண்டிருக்கிறோம். அந்த அண்ணாவின் மீது ஆணையாகச் சொல்கிறேன். முத்துதேவன்பட்டியில் என்னுடைய பெயராலோ, என்னுடைய மகன் அழகிரியின் பெயராலோ, நம்முடைய, மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் கூறியதைப் போல எந்த நிலமும் வாங்கப்படவில்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அது மாத்திரம் அல்ல; அவர்கள் பேசியது பத்திரிகைகளிலே யெல்லாம் வந்திருக்கிறது. கூட்டங்களிலேயும் சொன்னார்கள். இதை நிரூபிக்க முடியாவிட்டால் தன்னுடைய பதவியையே இராஜினாமா செய்வதாகக் கூறியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

முத்துதேவன்பட்டியில் கம்பம் நடராஜன் அவர்களுடைய குழந்தைகள் பெயரால், அவர்களுடைய வீட்டிலே இருந்தவர்கள் பெயரால் இருந்த தோட்டத்தில்—ஒரு சிறிய வீட்டில் நான் ஒரு 10 நாட்கள் தங்கித் தேர்தல் பணிகளை, கடந்த பெரியகுளம் நாடாளுமன்ற இடைத்தேர்தலின்போது கவனித்தது உண்மையே தவிர, அந்த இடம் எனக்குச் சொந்தமானது அல்ல. அவர் இப்பொழுது ஆதாரத்தைக் காட்டவேண்டும் அல்லது நாளை, அல்லது நாளை மறுநாள் ஆதார்த்தைக் காட்ட வேண்டும். அப்படி ஆதாரத்தைக் காட்டுவாரேயானால், நான் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். அவர் தயாராக இருக்கிறாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தப் பிரச்சினை செப்டம்பர் 26-ஆம் தேதி தேர்தல் நடைபெற்றதற்கு முன்னதாகவே கலைஞர் அவர்கள் நான் பேசுகின்ற கூட்டத்திற்கு பக்கத்தில்வந்து, நான் கேட்கின்ற கேள்விகளுக்கு நீங்கள் (குறுக்கீடு) அதிலே வந்து நான் முடித்து விடுகிறேன். நீங்கள் பேசுங்கள்....... கலைஞர் அவர்கள் அந்தக் கூட்டத்திலே, பக்கத்தில் வந்து கேட்டுக்கொண்டிருக்கிறார். நானும் கூட கேட்டேன். கலைஞர் அவர்கள் பக்கத்திலே என்னுடைய கூட்டத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கூட்டம் முடிந்தவுடன், நான் கேட்கின்ற கேள்விகளுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டேன். கடைசியிலே, ஓலைப்பட்டியிலே போய் பேசினார்கள். ஓலைப்பட்டியிலே என்ன சொன்னார்கள் என்றால், இறந்துபோன தம்பி நடராசன் அவருடைய குடும்பத்திற்கும், அவருக்குப் பின்னாலே அவருடைய தம்பி, வேட்பாளரான ராமகிருஷ்ணன் குடும்பத்திற்கும் இந்தச் சொத்து என்றாலும், என்னுடைய சொத்து என்றாலும் வித்தியாசம் இல்லை என்றும் பேசினார்கள். ஆகவே சொத்திலே பாத்தியதை இருப்பதை அவர் சொன்னது அந்த பாத்தியதை எப்போது வேண்டுமானாலும், எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதைப் போன்று சட்ட விதிமுறைக்குட்பட்ட வார்த்தைகளைத்தான் அவர்கள் உபயோகித்தார்கள். அதுமட்டுமல்ல. நான் இப்போதும் சொல்கின்றேன். பினாமியாக கலைஞர் அவர்கள் குடும்பத்திற்குச் சாதகமான முறையில் அங்கு நிலங்கள் இருக்கின்றன என்பதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

இல்லை. சவால், அதற்கு எதிர் சவால் என்று. (குறுக்கீடு) முதலில் நீங்கள் உட்காருங்கள். வெளியிலே நாம் பேசிய குற்றச் சாட்டுக்களை எல்லாம் நாம் திரும்ப உள்ளே வந்து பேசி விவா திக்கத் தேவையில்லை. (குறுக்கீடு)—நாம் நாள்தோறும் 7 மணிக்கு மேலே குற்றச்சாட்டுக்களைப் பேசுகிறோம். (குறுக்கீடு) நான் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** நீங்கள் தேதியைக் குறிப்பிட வேண் டும். அவர்கள் நிருபிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** பிரச்னை சபைக்கு வந்துவிட்டது. அதனால்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தப் பிரச் னையை இத்தோடு விட்டுவிடுவோம். நான் வாக்கு கொடுக் கிறேன். (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டு சொல்ல வில்லை. நான் கேட்பது இதுதான். ஏற்கெனவே வெளியிலே பேசப்பட்ட ஒரு குற்றச்சாட்டு உள்ளே விவாதமாகிவிட்டது. அமைச்சர் அவர்களும் அதை நிருபிப்பதற்கு தயார் என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் ஒரு குறிப்பிட்ட தேதியை அறிவிக்கவேண்டும். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். அதனுடைய வேலை எனக்கல்ல. (குறுக்கீடு). அது உண்மையா பொய்யா என்று கண்டுபிடிக்கிற வேலை என் வேலையல்ல. அவையை நடத்துவதுதான் என்னுடைய வேலை. (குறுக்கீடு). இப்படி ஒவ்வொருவராக......(குறுக்கீடு). அது என் பிரச்னை அல்ல (கூச்சல், குழப்பம்). இது அவையினுடைய பிரச்னை அல்ல. அவைத் தலைவருடைய வேலையும் அல்ல. நீங்கள் சொல் கின்ற குற்றச்சாட்டை அவர்கள் மறுக்கவேண்டியது, அவர்கள் சொல்கின்ற குற்றச்சாட்டை நீங்கள் மறுக்க வேண்டியது, (குறுக்கீடு). நான் சொல்கிறேன். இது உண்மையா, பொய்யா என்று கண்டுபிடிக்க வேண்டியது என்னுடைய வேலை அல்ல. (குறுக்கீடு). எது உண்மை. (குறுக்கீடு). நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னையைப் பொறுத்து விவாதித்து இந்த அவையே முடிவு கொடுக்கின்ற நிலைமைக்கு இங்கே செய்வதற்கு இல்லை. ஆனால் மாண்பு மிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலை வர் அவர்களும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டு இருக்கின்ற வகையிலே அறைகூவல்கள் விடப்பட்டன. ஒன்று, அவர்கள் சொல்லியது மாதிரி மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியது மாதிரி இதை விவாதப் பொருளாக ஆக்கி அதிலே முடிவு கட்டி தீர்ப்பு கொள்கிற அளவுக்கு சட்டமோ, மற்றவைகளோ இடம் தராது. அல்லது இந்தப் பிரச்சினையை ஆரம்பத்திலிருந்து இருக்கின்றவைகள் அத்தனையையும் இந்தக் குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும். அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி யது மாதிரி அவர்கள் அறைகூவல் விட்டார்கள். அந்த அறை கூவலை நான் நிருபிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவையிலே சொல்ல இயலாது. அவையிலே சொல்லப்பட்ட இந்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்து, மாண்புமிகு தலைவர் அவர்கள் தங்களுடைய அறையிலே இரண்டு பேர் களையும் கூப்பிட்டு வைத்து, இதற்கு என்ன சமாதானத்தைச் செய்யலாம் என்று அப்படிச் செய்யலாமே தவிர, ஒன்று அந்தக் கருத்துக்கள் அத்தனையும் நீக்கலாம். அல்லது இரண்டு பேரையும் மட்டும் வைத்து, இந்த அவையிலே அந்தக் குறிப்பு கள் ஏறிவிட்டதன் காரணமாக இங்கே இருக்கவேண்டும் என்று கருதினால் அந்த மாண்புமிகு அவைத் தலைவர் அவர் கள்தான் தீர்க்கவேண்டுமே தவிர, இங்கே விவாதத்தில் மற்ற வர்கள் கலந்துகொண்டு அதிலே தீர்ப்பு அளிக்கின்ற சூழ்நிலை ஏற்படாத முறையிலே, இந்த இரண்டில் ஏதாவது ஒரு முறை யைத்தான் நீங்கள் கையாள முடியும். இதைப்பற்றி தாங்கள் தான் தீர்ப்பு அளிக்க வேண்டும்.

(பிற்பகல் 12-20)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது நாம் நடத்திய விவாதம், இந்த அவையின் விவாதத்திற்குரிய பொருள் அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதற்கு, மாண்பு மிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்லியிருக் கிறார்கள். அவை இரண்டும் அவைக்குறிப்பில் அப்படியே இருக்கின்றன. அதற்கு மேலே ஏதாவது செய்யவேண்டும் என்று விரும்பினால், நிருபிக்கவேண்டும் என்று விரும்பினால், அதற்கு வேறு இடம் பார்க்கவேண்டுமே தவிர இங்கே அதைச் செய்ய முடியாது.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அழகர் சாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர் களும், திரு. ரகுமான்கான் அவர்களும் பேசியதைத் தொடர்ந்து அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர் அவர்கள் தேவை இல்லாமல் என்னை இழுத்து எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்கிறார், அவர் மறுக்கிறாரா என்று கேட்ட பிறகு, நான் அளித்த பதில்களைத்தான் இந்த மன்றத் திலே விவாதப் பொருளாக வைத்து இருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாவலர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஒரு நாளைக் குறிப்பிட்டு, அல்லது அவர் எந்தத் தேதியில் ஆதாரத்தோடு வருகிறேன் என்று சொல்கிறாரோ, அந்தத் தேதியில் அவர் ஆதாரத்தோடு வரட்டும். அன்றைக்கு, அவை யில் அமர்ந்துள்ள நீங்களோ அல்லது அவைத் தலைவரோ, அவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர்கள் முன்னிலையில் ஆதாரத்தைக்காட்டி நிருபிப்பார்களானால், நான் என்னுடைய எதிர்க்கட்சித் தலைவர் பதவியோடு, எம்.எல்.ஏ. பதவியைக் கூட சேர்த்து ராசினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். அவர் அதற்குச் தயாராக இருக்கிறாரா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைந் துணைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் இங்கே அமர்ந்து இருந்ததால், அவர் சம்பந்தப்பட்ட பிரச்னை என்பதால் அதைச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்கள, இதிலே நியாயம் வழங்கப்படவேண்டும். மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல—ஒன்று அது சம்பந்தப்பட்ட அத்தனையும் நீக்கப்படவேண்டும்—இல்லாவிட்டால் பேரவைத் தலைவர் அறையில் வைத்து இது சம்பந்தமாக முடிவு கட்ட வேண்டும். இந்த இரண்டிலே ஏதாவது ஒன்று செய்யவேண் டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்தச் சவாலை இந்த மன்றத்திலே வைத்து இருக்கிறார்களோ அந்தச் சவாலை நான் ஏற்றுக் கொள்ளத் தாயராக இருக்கிறேன். அது மட்டு மல்ல. அந்த நிலத்திற்கும் இவருக்கும் சம்பந்தம் இருக்கிறது என்ற சான்றுகளை நான் ஆதாரத்தோடு நிருபிக்கவும் தயாராக இருக்கிறேன். அது மட்டுமல்ல, நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். தயவு செய்து தவறான எண் ணத்தை என்மீது வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையோ அல்லது எதிர்க்கட்சிகளையோ இப்படிச் சாடுவதன் மூலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்து விடலாம் என்ற தவறான கருத்துக்களைக் கொண்ட



வன் நான் இல்லை என்பதைக் கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே இருக்கின்ற பினாமி சொத்துக்கள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு விவாதிக்க எதிர்க்கட்சித் தலைவர் தயாரா என்ற கேள்விக்கு மட்டும் அவர் பதில் சொல்லட்டும். என்னுடைய பதவியை மட்டுமல்ல......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி ஒரு வருக்கொருவர் சவால் விட்டுக்கொண்டு இருந்தால் பிரச்னை தீராது. மாண்புமிகு அமைச்சர் சவால் விட்டு, அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சவால் விட்டு, அவற்றின் மீது முடிவுகளை இங்கே எடுக்க முடியாது. அதைத் தீர்த்துக் கொள்ள வேறு இடம் பார்க்கவேண்டும். இந்த மன்றத்தில் இதுபோன்ற முறை இதுவரையில் கையாண்டதில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் மீது இந்த குற்றச்சாட்டு நீண்டநாட்களாக பல்வேறு சமயங்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, நீங்கள் இதை ஒரு மரபாக எடுத்துக்கொண்டு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கலந்து இரண்டு பேர் ஆதாரங்களையும் உங்க ளுடைய அறையில் கொண்டு வந்து காண்பிக்கச்சொல்லி, அதற்கு ஒரு தீர்ப்பு வழங்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வேலை எனக்கு இல்லை.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பாக இப்படிப்பட்ட குற்றச் சாட்டு வந்தபோது என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால்—சபாநாயகர் சார்பாக என்று சொன்னால்—அந்தக் குற்றச்சாட்டுக்களைச் சொல்லிய உறுப்பினர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி பொறுப்பு ஏற்றுக்கொண்டு விட்டார் என்று சொன்னால் அதைப் பற்றி விசாரிப்பேன் என்று ரூலிங்க்ஸ் வரும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்கிறேன் என்று சொல்லிவிட்டார். அவர் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு இங்கே அதைப்பற்றி விவாதிக்க முடியாது. ஆகவே, பேரவைத் தலைவர் அதற்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். இல்லா விட்டால், இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை சபையில் சொல் லப்பட்டு, அதற்கு ஒரு முடிவு இல்லாமல் போய்விடும். ஆகவே, 'துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் பேரவைத் தலைவரிடம் சொல்லி, இதற்கு ஒரு முடிவு செய்யவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதிலே ஒரு சங்கடம் என்னவென்றால், இந்தத் தரப்பிலே இருக்கின்றவர்கள் பேசுகின்றபோது குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் கேட்கும் நிலைமை இருக்கிறது. இந்தப் பிரச்னையிலே திரு. துரை முருகன் அவர்கள் ஏதோ சொல்லிய காரணத்தால் இந்தக் குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்லியமாதிரி எல்லாவற்றையும் அவைக்குறிப்பில் இருந்து எடுத்து விடலாமா?

டாக்டர் மு. கருணாநிதி : அது முடியாது. ஆளும் கட்சி பலவீனப்படும்போதெல்லாம் அதற்கு இந்த வகையில் அபயம் கொடுக்கக் கூடாது. அது நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அப்படிச் சொல்லாதீர்கள். நான் எப்போதுமே 'ஸ்ரெய்ட்'. நேராகத்தான் போவேன். நீங்கள் அதிலே சந்தேகம் கொள்ள வேண்டாம். இதைத் தவிர வேறு ஏதாவது ஒரு முறை இருந்தால் சொல்லுங்கள்.

டாக்டர் மு. கருணாநிதி ; அவை முன்னவர் சொல்லட்டும். ஒரு நீதி விசாரணை நடத்துங்கள். அதற்கு நான் தயாராக இருக்கிறேன். நீதிபதியை நியமித்து விசாரணை நடத்துங்கள். நான் தயாராக இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்களைக் கொண்டு ஒரு குழு நியமியுங்கள், நான் தயாராக இருக்கிறேன் மாண்புமிகு அமைச்சர் கூறியது—மு. க. அழகிரி பெயரால் முத்துதேவன்பட்டியில் 100 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு இருக்கிறது. அந்த இடத்திலே போய் கருணாநிதி வசித்துக் கொண்டு வருகிறார் என்று குறிப்பிட்டார். அதற்குத்தான் ஆதாரம் உண்டா? நிரூபிப்பீர்களா என்று கேட்டேன். அதை விட்டுவிட்டு சுற்றி வளைத்து பினாமிச்சொத்துக்களையெல்லாம் கணக்கு எடுக்கலாமா என்று கேட்கிறார். அதையும் கணக்கிட்டு எடுக்கலாம்.அது வேறு விவகாரம்.இப்பேர்து கேட்டது குறிப்பிட்ட கேள்வி. அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் பேசியது உண்மை. இப்போதும் ஆதாரத்தோடு நிரூபிக்கிறேன் என்ற சவாலை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதே நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களுடைய கட்சித் தலைவரைப் பற்றியும் மற்ற அமைச்சர்களைப் பற்றியும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தச் சம்பவம் குறித்து நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி, என்ன முறையிலே வகைப்படுத்தலாம் என்று முடிவு செய்யலாம். இப்போது விட்டுவிடலாம்.



5. வரவு-செலவு திட்டம்—1983-84—பொது விவாதம்—தொடர்ச்சி

திரு. சோ. அழகர்சாமி : நாம் இடைத்தேர்தலைப்பற்றிச் சொல்கிற அதே நேரத்தில் அதே மாதிரி துரிதமாக நிவாரண வேலைகள் நடைபெற வேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

இன்றைக்கு பொது விநியோகம் சம்பந்தமாக 117 இலட்சம் அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த பொருட்கள் கிடைக்கவில்லை. அந்த அட்டையில் இருக்கக்கூடிய பொருள்கள் நியாயவிலைக் கடைகளில் சீராக கிடைக்க இப்போது நடவடிக்கை இல்லை. அதை சீராகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்த வறட்சி நிவாரணம் சம்பந்தமாக எடுக்கக் கூடிய வேலைகள் எல்லாம் அடித்தள மக்ளுக்கு பயன்படவேண்டும்; அவர்களுக்கு அந்த நிவாரணம் போய்ச் சேரவேண்டும். கான்ட்ராக்டர்கள் அல்லது வேறு சிலர் அந்தப் பணத்தைக் கொண்டு செல்கின்ற நிலைமை இருக்கக் கூடாது.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பெரிய பாசனத் திட்டம் காவேரி சம்பந்தப்பட்டது. வேறு சில ஆற்றுப் பாசனமும் இருக்கிறது. இதையெல்லாம் விட மிகப்பெரும் பாசனமாக இருப்பது 37,000 ஏரிகள். அந்த ஏரிகள் ஆழப் படுத்தப்படாமல், ரிப்பேர் செய்யப்படாமல் பல்லாண்டுகளாக இருக்கின்ற காரணத்தினால் பல ஏரிகள் இன்றைக்குக் குடியிருப்புப் பகுதிகளாக மாறிவருகின்றன. இந்த ஏரிகளை எல்லாம் இந்த வறட்சி நிவாரணப் பணியை ஒட்டி சரியாக ஆழப்படுத்தி, அதிகமான தண்ணீர் கொள்ளக்கூடிய முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது நடைபெறுகிற வறட்சிப் பணிகள் எல்லாம் துயர்தணிப்பாக இல்லாமல் எதிர்காலத்திலே நிரந்தரமாக துயர்தவிர்ப்பாக, பணிகள் அமையவேண்டும். இந்த மாதிரியான காலத்தில் குளம் குட்டைகளை சீராக ஆழப்படுத்துவதின் காரணமாக மழை பெய்யக்கூடிய காலத்தில் தாராளமாக தண்ணீரைத் தேக்கி வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதனால், குடிநீர் வசதியும் ஓரளவு சீர்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று வரி தள்ளுபடி சம்பந்தமாக வருவாய்த் துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கை விடுகிறார்கள். 50 சதவீதமும் அதற்குக் குறைவாகவும் விளைச்சல் இருந்தால் வரி தள்ளுபடி என்ற செய்தி பத்திரிகையிலே வருகிறது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதற்கு நேர் மாறாக நடந்துகொள்கிறார்கள். 37 சதவீதத்திற்குமேல் விளைச்சல் இருந்தால் வரி கட்டவேண்டும் என்று சொல்லி வரி வசூல் செய்யும் நிலைமை இருக்கிறது. இன்றைக்குத் தமிழகம் முழுவதும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இதை கணக்கிலே எடுத்துக் கொண்டு முழுமையாக எல்லாவிதமான வரிகளையும் தள்ளுபடி செய்ய வேண்டும். 6 அணா, 4 அணா, 8 அணா விளைச்சல் என்ற கணக்கைப் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் இல்லை என்பதை அமைச்சரவர்களே சொல்கிறார்கள். தண்ணீர் இல்லை என்றால் பயிர் விளைச்சல் இல்லை. ஆகவே, கடன் வசூல் செய்வதையும் நிறுத்தி வைக்க வேண்டும். இப்போது நிறுத்தி வைத்துவிட்டு பின்னால் எந்த வகையிலே நிவாரண நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி யோசிக்கலாம்.

(பிற்பகல் 12-30)

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு எந்தவிதமான நிபந்தனையும் போடாமல், 500 அடி, 600 அடி தூரத்தில் இந்த இடைவெளிக்குப் பக்கத்தில் இருக்கிறது என்றெல்லாம் காரணம் சொல்லாமல், எல்லா விவசாயிகளுக்கும் 2,000 ரூபாய் மானியமாகக்கொடுக்கஏற்பாடுசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக அந்த வட்டாரத்திலுள்ள விவசாயத்தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக இதையெல்லாம் செய்வதற்கு நமது மாநில அரசுக்கு இருக்கிற நிதி ஆதாரங்கள் போதுமா என்று கேட்கக்கூடிய நேரத்தில், மத்திய அரசு தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வரவேண்டும். ஆகவே, இந்த மாநில அரசுக்கு கொடுக்க வேண்டிய பங்கை முழுமையாக காலாகாலத்தில் கொடுப்பதற்கு இந்த வறட்சி நிவாரணப் பணிகளை செம்மையாக நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு தாராளமாக உதவி செய்ய முன் வரவேண்டும். நீங்கள் வறட்சிப் பணிகளுக்காக 190 கோடி ரூபாய்தான் கேட்டிருக்கிறீர்கள். அதுகூட போதாது என்பதுதான் எங்களுடைய கணிப்பு. ஆகவே, இன்னும் அதிக அளவில் மத்திய அரசு இதற்காக நிதி உதவி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்



என்று கேட்பதில் இங்கே உள்ள அனைத்துக் கட்சி மாண்புமிகு உறுப்பினர்களும் பங்கு கொள்ள வேண்டும். இங்கே உள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட, அதை அவர்கள் கட்டாயம் கொடுத்தாக வேண்டும் என்று கேட்கவேண்டுமே தவிர, எப்படி கொடுக்க முடியும் என்று வாதாடுவது மக்களுக்கு நன்மையைப் பயக்காது என்று கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு இளையபெருமாள் அவர்களுக்கு நன்றி.

இன்றைக்கு மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையிலே உருவாகி வரும் உறவு முறைகள் சரியாக இல்லை. மத்திய அரசை இவர்கள் இங்கே குறை கூறுவதும், அங்கிருந்து வந்த—மத்திய அரசைச் சேர்ந்தவர்கள்—இவர்கள் தான் சரியாக எதையும் செய்வதில்லை—நாங்கள் சரியாகத்தான் செய்து வருகிறோம் என்று இவர்கள் மீது குற்றங்களைக் கூறுவதும், உறவு முறை சரியாக இல்லை என்பதை தான் காட்டுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் இல்லை என்பதுதான். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் அளிக்கப்படவேண்டும் என்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. ஆகவே, அந்த அதிகாரங்களும் எந்த அளவுக்கு வரவேண்டுமோ, அந்த அளவுக்கு பெறுவதற்கு இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிற நேரத்திலே இன்னொரு விஷயத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய நேரம் 20 நிமிடங்கள் முடிந்துவிட்டது.

திரு. என். சங்கரய்யா : அவர் பேசுகிற நேரத்திலேதான் குறுக்கீடுகள் அதிகமாக வந்தன. அவைகளை நீங்கள் அனுமதித்த காரணத்தால், அவருடைய நேரம் குறைந்துவிட்டது. அதற்கு அவர் எப்படி பொறுப்பாக முடியும்?

திரு. சோ. அழகர்சாமி : நான் அதிகமாகப் பேசுவதே வழக்கம் இல்லை.. சுருக்கமாக பேசி முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் சொன்ன மாதிரி 7வது நிதிக் கமிஷனிலே நிதி ஆதாரங்களை பிரித்துக் கேட்டு இந்த மாநில அரசு அறிக்கை அனுப்புகின்ற நேரத்திலே, நாங்கள் நுழைவு வரி போன்றவைகளை போடாதவர்கள், ஆகையினால் சற்று அதிகமான நிதி ஒதுக்கீட்டைத் தரவேண்டும் என்று சென்ற ஆண்டு அனுப்பியிருக்கக்கூடிய அறிக்கையிலே கேட்டிருக்கிறீர்கள். மத்திய அரசினர் இந்த ஆண்டு ஏறத்தாழ 3200 கோடி ரூபாய் அளவிற்கு வரி விதிப்பினாலும், ரெயில்வே

கட்டண உயர்வினாலும் மற்றப் பொருள்களின் மீது வரியைப் போடுவதாலும், பற்றாக்குறை பட்ஜெட் போட்டதாலும், ஒரு மனிதன் தலையில் 75 ரூபாய் சுமையைத் தூக்கி வைக்கக்கூடிய முறையில் போட்டிருக்கிறது. நீங்கள் இங்கே மேலும் 25 கோடி ரூபாய்க்கு அவனுடைய தலையில் வரிச் சுமையை வைக்கிறீர்கள். நீங்கள் தற்போது நுழைவு வரி போட்டிருப்பதன் விளைவாக எல்லாப் பகுதிகளில் உள்ள மக்களும் பொருள்களை வாங்கும்போது அதன் மீது சேல்ஸ் டாக்ஸ்ஸாக 2 பைசா 3 பைசா அதிகமாகப் போட்டு வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு, அது விலைவாசி உயர்வை ஏற்படுத்தும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அவைகளை ரத்து செய்யவேண்டும்.

அதேபோல 8-வது நிதிக் கமிஷனுக்கு, நீங்கள் நிதி ஆதாரங்களைக் கேட்டு அறிக்கை வைக்கும்போது, இன்னின்ன திட்டங்களுக்காக இவ்வளவு நிதி தேவை, என்று அறிக்கை தயார் செய்து இந்த அவையிலே வைத்தால், அதை இங்கே உள்ள அனைத்து உறுப்பினர்களும் விவாதித்து முடிவு செய்து, ஏகோபித்த முடிவு எடுத்து. மத்திய அரசுக்கு வரக்கூடிய வருமானத்தில் இந்த விகிதாச்சாரத்தில் பங்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லக் கூடிய முறையில் 8-வது நிதிக் கமிஷனுக்கு போக வேண்டிய குறிப்புகளை இந்த அவையில் வைக்கவேண்டும். அப்படி வைத்து பிறகு அதனை அனுப்புவது ஒரு சிறந்த ஜனநாயக மரபாகவும் இருக்க முடியும். ஏன் என்று சொன்னால், நம்முடைய தமிழகத்தில் குடும்பக் கட்டுப்பாட்டில் மிகத் தீவிரமாக இருக்கிற காரணத்தால் நம்முடைய மாநிலத்தில் ஜனத்தொகை குறைந்திருக்கிறது. ஆகவே, அதன் காரணமாக—ஜனத்தொகை குறைந்திருப்பதால் உங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி விகிதாச்சாரமும் குறைகிறது. என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதால், அந்த 8-வது நிதிக் கமிஷனுக்கு அனுப்ப வேண்டிய குறிப்புகளை இந்த அவையிலே வைத்து அதனை அத்தனை கட்சியை சேர்ந்தவர்களும் விவாதித்து, ஏகமனதாக அனுப்பக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே அரசு பணியாளர்களைப் பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை. அரசுப் பணிகளின் அச்சு ஆணியாக இருக்கக்கூடிய இந்தப் பணியாளர்கள், விலைவாசி உயர்ந்து வருவதன் காரணமாக, குடும்பம் நடத்துவதற்கே முடியாமல் போய்விடுமோ என்று கவலைப்படக்கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள். அவர்





களுடைய பாதிப்பு எவ்வளவு என்பது இங்குள்ள அனைவருக்குமே தெரியும். மிக மோசமாக பாதிப்பு நிலையில் உள்ள அவர்களுடைய வாழ்க்கையிலே ஏதாவது கொஞ்சமாவது பாதிப்பு ஏற்படுத்தும் வகையில், ஏதாவது ஒரு ஊதிய உயர்வோ அல்லது ஓய்வு பெறும்போது 10,000 வேண்டும் என்று கேட்கிறார்களே அந்தச் சலுகையையோ, மத்திய சர்க்காரிலே இப்போது ஊதியக் குழுவை நியமித்து இருப்பதைப்போல ஒரு குழுவை நியமித்து உங்களுக்கெல்லாம் ஊதிய நிலையை மாற்றி உயர்த்தி திருத்தியமைக்கப்போகிறோம் என்கிற நிலையிலோ, ஏதாவது ஒரு வகையில் கூட அவர்களுக்குச் சலுகை அளிக்கும் நிலை இந்த அறிக்கையில் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு குறை இல்லாமல் நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அவர்களுக்கு ஏதாவது ஒரு சலுகை நிலையை எடுப்பார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் என்று முன்பு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் பென்ஷன் இன்றைக்கு வரை சீராக அமல் நடத்தப்படவில்லை. கேரளாவிலே முன்னால் இருந்த அரசு முறையாக விவசாயத் தொழிலாளர்களுக்கு 55 ரூபாய் என்று கொடுத்தார்கள். எனவே நீங்களும் விவசாயத் தொழிலாளர்களுக்கு, வேறு வருமானமே இல்லாதவர்களுக்கு, எந்த சொத்தும் இல்லாதவர்களுக்கு, இப்படிப்பட்ட அத்தனை பேருக்கும் பென்ஷன் கொடுப்பது என்று அறிவித்து இருக்கவேண்டும். இன்றைக்கு நெசவுத் தொழிலாளர்கள் நெருக்கடியான நிலைமைக்கு ஆளாகி இருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்த துணி விற்பனை ஆகவில்லை. அவர்களுக்கு அதனால், வேலைவாய்ப்பு இல்லை. எனவே அந்த நிலைமையைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடைசியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சட்டம் ஒழுங்குப் பிரச்னை மன நிறைவு அளிக்கின்றது என்று நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். சட்டம் ஒழுங்குப் பிரச்சினை சீராக இருக்கின்றது என்று நீங்கள் சொல்லிக்கொண்டால் எதிர்காலத்தில் மிகப் பெரிய மோசமான நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டம் ஒழுங்கு எப்படி நடக்கின்றது என்பதைப் பற்றி அதிகமாகச் சொல்ல நேரம் இல்லை. ஒன்றிரண்டு உதாரணங்கள் மட்டும் சொல்லிக்கொள்கிறேன். ஊத்தங்கரையிலே சின்னராஜ் என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார். வேண்டுமென்றே யாரோ ஒருவர் ரேடியோவைக் திருடியதாகச் சொன்னதற்காக அவரை அடித்துக் கொன்றிருக்

கிறார்கள். அதன்பின் துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கைந்து பேர் மடிந்துவிட்ட சம்பவம் ஏற்பட்டிருக்கின்றது. இதற்குக் போலீஸுனுடைய அத்துமீறிய செயல்தான் காரணம்.

அடுத்தபடியாக சிக்கல் போலீஸ் ஸ்டேஷனிலே சொந்தக்காரர் ஒருவரின் வழக்கு சம்பந்தமாக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ற ஒரு கம்யூனிஸ்ட் கட்சித் தோழரை தாறுமாறாகப் பேசி அப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அதற்கடுத்தபடியாக கோவையைச் சேர்ந்த ஆலாந்துரை என்ற இடத்திலே போலீஸ் ஸ்டேஷனிலே 6 மணிக்கு மேலாக பெண்களை வைத்திருக்கக் கூடாது என்ற விதியினை மீறி அந்தப் பெண்ணை அங்கே வைத்திருந்து அடித்துக் கொன்று இருக்கிறார்கள். அதன் காரணமாக அங்கே சில அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால், 6 மணிக்கு மேல் பெண்ணை பி-2 போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருந்தது தவறு என்ற காரணத்திற்காக மட்டும்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களே தவிர கொலை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை.

அடுத்தபடியாக கோவை ஆலாந்துரை என்ற இடத்திலே உள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒருவரை விசாரணை என்ற வகையிலே கூட்டிக்கொண்டு வந்து ஸ்டேஷனுக்குப் பக்கத்திலே அடித்துக்கொன்றுவிட்டு மேலே பெட்ரோலை ஊற்றி தீ வைத்து இறந்துவிட்டதாகச் சொல்லிவிட்டார்கள்.

அதற்கடுத்தபடியாக திருப்பூரிலே உள்ள ஆர். ஜி. நாயுடு மகளிர் கல்லூரி பேராசிரியராகப் பணியாற்றிய நாகம்மாள் கொலை செய்யப்பட்டது தொடர்பாக மிகப் பெரிய செல்வாக்கு படைத்தவர் ஒருவரின் தலையீடு காரணமாக போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை.

அடுத்து விழுப்புரம் பக்கத்திலே தென்னாற்காடு மாவட்டத்திலே கிராமம் என்ற கிராமத்திலே போலீஸ் நடவடிக்கை எப்படி இருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே உள்ள இனாம்தாரர் நிலத்திலே 30, 40 வருடங்களாக சாகுபடி செய்து வருபவர்கள் பட்டா வேண்டும் என்று கேட்டு மனு போட்டார்கள். அந்த மனு காணாமல் போய்விட்டது. அதற்குப் பிறகு அப்பீல் போட்டார்கள். அதுவும் காணாமல் போய்விட்டது. அதன்பிறகு நான் நேராக நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்து விசாரிக்கச் சொல்லி இருக்கிறேன். அது சென்றபின் இலேசாக விசாரணை நடந்து வருகின்றது. ஆனால் இதற்கு மத்தியிலே இந்த நிலத்தை இனாம்தாரர் வேறு ஒருவருக்கு விற்றுவிட்டதாகப் பினாமியாக ஏற்பாடு செய்து அந்த நிலத்திலிருந்து அந்த



ஏழை எளிய மக்களை, நீண்ட காலமாகச் சாகுபடி செய்து வருபவர்களை வெளியேற்றுவதற்குரிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. உளுந்தூர்பேட்டையிலே உள்ள திருவெண்ணைநல்லூர் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகள் அந்த கிராமத்திற்குச் சென்று அங்கே உள்ள பெண்களை மானபங்கப்படுத்தி இருக்கிறார்கள். அங்கே உள்ள மக்களை அடித்திருக்கிறார்கள். அவர்கள் வழக்குத் தொடுக்கப்போனால் அந்த அடிப்பட்டவர்களின் மீதே வழக்கு தொடுக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அடுத்து நம்முடைய ஆளும் கட்சியினைச் சேர்ந்த தலைவர்கள் தர்மபுரி மாவட்டம் பெண்ணகரம் வட்டத்திலே உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டத்திலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையிலேயே ஒருவர் பேசி இருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களை அடியுங்கள், குத்துங்கள் என்று ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்களே பேசி இருக்கிறார்கள் .... (குறுக்கீடு).... பொள்ளாச்சியில் நடைபெற்ற கூட்டத்திலே (குறுக்கீடு)....

(பிற்பகல் 12 40)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெளியே பொதுக் கூட்டங்களில் பேசும் விவாதங்களுக்கெல்லாம் இங்கே பதில் வேண்டாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளியில்தான் ரேஷன் இருக்கிறது. மண்ணெண்ணெய் இருக்கிறது. அரிசி இருக்கிறது. அவைகளைப்பற்றித்தான் நாம் இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படி மற்றொரு கட்சியைச் சேர்ந்தவர்களை அடியுங்கள், உதையுங்கள், வெட்டுங்கள் என்று பொதுக் கூட்டங்களில் பேசுவது நல்லதல்ல.

* * * * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெளியில் பேசியதைப் பற்றி எல்லாம் இங்கே பேச வேண்டாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** *** இன்றைக்கு இந்த வறட்சி நிலையை இந்த மோசமான நிலைமையைப் போக்க யுத்த கால நடவடிக்கை போன்று சகல பகுதி அதிகாரிகளையும் முடுக்கிவிட்டு குடிநீர், வேலை, உணவு, மற்றும் எல்லாவிதமான நிவாரண நடவடிக்கைகளையும் துரிதமாக எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் பற்றி சொன்னவற்றை எல்லாம் அவை குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983-84ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையில் முதல் பக்கங்களில் வறட்சி பற்றியும், குடிநீர் பிரச்சனைப் பற்றியும் பல பக்கங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. இன்று தமிழ்நாட்டிலுள்ள மக்கள் குறிப்பாக தாய்மார்கள் குடிநீர் பிடிப்பதற்காக குடங்களை வைத்துக்கொண்டு பல மணி நேரங்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். பிறகு ரேஷன் கடையில் அரிசிக்காகவும், மண்ணெண்ணெய்க்காகவும் பல மணி நேரங்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இது தான் இன்றைக்கு தமிழகத்திலே மிகப்பெரிய பிரச்சனையாக தாய்மார்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வாரார்கள். அதிலும் குறிப்பாக குடிநீருக்கு ஏற்பாடு செய்வதற்கு சென்னை போன்ற நகரங்களிலே மேலும் தீவிரமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து நகரங்களிலும் இந்த பிரச்சனை இன்றைக்கு ஒரு பூதாகரமான வடிவம் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக ஒரு போர்க் கால ரீதியில் மக்களுடைய இந்த குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு செலவு செய்யப்படும் தொகை அதிகமாக இருந்தாலும் மேலும் அதை செலவு செய்வதற்கு தயங்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையிலுள்ள இந்த குடிநீர் பிரச்சனை பற்றி பல சமயங்களில் இங்கே பேசப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் இந்த மன்றத்திலே பேசும்போது 2 ஆவது பெரிய நகரமான மதுரையைப் பற்றி பேசினார்கள். நானும் அதைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது 5 நாளுக்கு ஒரு முறை தான் அங்கே தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. இன்று அதன் காரணமாக மக்கள் அசுத்தமான தண்ணீரை அதாவது அவர்கள் இன்றைக்கு கழிப்பிடத்திற்கு மேல் தேக்கி வைக்கப்பட்டிருக்கின்ற அந்த தொட்டிகளிலிருந்து கிடைக்கக் கூடிய தண்ணீரை கூட அவர்கள் குடிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று பல பத்திரிகைகளில் பத்தி பத்தி



யாக வந்துகொண்டிருக்கின்றன. இதன் காரணமாக அங்கே மஞ்சள் காமாலை நோய் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே மதுரை நகரத்திற்கு தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய கொச்சடைப் படுகையிலே அங்குள்ள கிணறுகளையும் ஆழப்படுத்தி இதற்கான ஒரு விசேட ஏற்பாடு செய்வதன் மூலம், அதேபோல் இதர சில அவசரமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், தண்ணீர் பிரச்சனையை ஓரளவுக்காவது சமாளிப்பதற்கு மாநில அரசாங்கம் அங்கு இருக்கக்கூடிய நகராட்சி ஆணையாளருக்கும், மாவட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கும் உடனடியான உத்திரவுகளை இடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே உலகத்தமிழ் மாநாட்டின்போது போடப்பட்ட குழாய்களையும், வெட்டப்பட்ட கிணறுகளையும் செப்பனிட்டு அதன் மூலமாக தண்ணீர் எடுத்துக்கொள்ள வழி வகைகளை செய்யவேண்டும். இன்றைக்கு மதுரையிலே உள்ள சாதாரண வீடுகளில் இருக்கக்கூடிய கிணறுகளையும் ஆழப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இல்லாமல் போனால், பல லட்சக்கணக்கான மக்கள் வாழக் கூடிய மதுரை நகரிலே பல தொத்துநோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. அதைப்போல மாநிலம் பூராவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே அரசாங்கம் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

அடுத்த பிரச்சினை உணவுப் பிரச்சினை. இன்று சென்னை நகரிலேயோ மற்ற இடங்களிலேயோ இதற்கு முன்னாலே சாதாரணமாகக் காணப்படாத கூட்டம் இந்த நியாயவிலைக் கடைகளுக்கு முன்னாலே காணப்படுகிறது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். 80 ஆயிரம் டன் அரிசி கேட்டோம், 40 ஆயிரம் டன் கோதுமை கேட்டோம். இந்த நியாயமான கோரிக்கைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. தமிழக சர்க்காரும், தமிழ்நாட்டை ஆளக்கூடிய ஆளுங்கட்சியாகிய அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வும் இதர கட்சிகளோடு சேர்ந்து மத்திய சர்க்காரை இந்த விஷயத்திலே நிர்பந்திப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர்கள் முன்வருகிறார்களோ, எதைப்பற்றி பேசுவதற்கு முன் வருகிறார்களோ நாங்கள் ஒத்துழைத்து தமிழக மக்களின் சார்பிலே அந்தக் கோரிக்கைகளை அடைவதற்கு பொது மக்களின் இயக்கத்தையும் அரசாங்கத்தினுடைய முயற்சிகளுக்கு ஆதரவாக அதை உருவாக்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு கோடியே 17 லட்சம் குடும்ப அட்டைகள் தமிழகத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே பல கோளாறுகள் நடக்கின்றன என்று புகார்கள் வருகின்றன. சில கடைகளிலே 4 ஆயிரம் பேர்கள்கூட அட்டைகள் பதிவு செய்யப்படக் கூடிய நிலை இருக்கிறது. உதாரணமாக சென்னை புறநகர்ப் பகுதியிலே உள்ள பல்லாவரம் முனிசிபாலிட்டியிலே உள்ள குரோம் பேட்டையிலே உள்ள ஒரு கடையிலே 4 ஆயிரம் கார்டுகளுக்கு மேலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே அடிதடி சண்டை நடக்கிறது. போலீசார் அதைத் தடுக்கவேண்டியிருக்கிறது. இந்த தினத்தன்று இத்தனை கார்டுகளுக்குக்கொடுக்க வேண்டுமென்ற ஏற்பாட்டை உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக கட்டளையிடவேண்டும். குறிப்பிட்ட ஒரு நாளிலே வந்து அரிசியும் மண்ணெண்ணெயும் சீனியும் பெற்றுக்கொள்ள வரிசைவரிசையாக வந்து வாங்கிக்கொள்ளலாம் என்று செய்ய வேண்டும். ஏராளமான பேர்கள் குழுமி நின்று முந்தியடிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாக் கடைகளுக்கும் அப்படி அரசாங்கம் உத்திரவிடவேண்டும். இந்த நேரத்திலே ரெவினியூ துறை அதிகாரிகளும், சிவில் சப்ளைஸ் அதிகாரிகளும் இப்படிக் கூட்டங்கள் இருக்கக்கூடிய இடங்களுக்குச் சென்று அந்தக் கடைகளிலே உள்ளவர்கள் சரியாக நடக்கிறார்களா என்று பார்த்து, அதை ஒழுங்குபடுத்துவதைத் தவிர வேறு பெரிய காரியம் இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால் அவர்கள் ரோம் நகரம் எரிந்துகொண்டிருக்கும்போது பிடில் வாசித்துக் கொண்டிராமல் அந்த அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். இன்றைக்கு இந்தப் பிரச்சினை கடுமையான பிரச்சினையாக வந்துகொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான மக்கள் குழுமி நிற்கின்ற நிலை இருக்கிறது. அவர்களுக்கு கிடைக்கவேண்டியதை ஒழுங்காக அங்கே கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் தக்க உத்திரவை இடவேண்டும். அரசாங்கம் ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக உள்ளவர்களுக்கு அல்லது 750 ரூபாய்க்கு அதிகமாக உள்ளவர்களுக்கு அரிசி கொடுக்க வேண்டாம் என்று யோசிக்கிறது என்பதாக சில பத்திரிகையிலே செய்தி வந்தது. அதைப்போலவே மண்ணெண்ணெய்கூட ஓரளவுக்கு வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும் கொடுத்தால்போதும் என்று செய்திகள் வருகின்றன. இது நம்முடைய நெருக்கடியை மக்களுடைய தலையிலே சுமத்துவது ஆகும். ஆயிரம் ரூபாய் இன்று வருமானம் வந்தாலும்கூட அதனுடைய மதிப்பு என்ன என்பது நம் அனைவருக்கும் தெரியும், ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்திருக்கிறது. ஆயிரம் ரூபாய் என்பது மத்திய தர வகுப்பினருக்கும், சிறு தொழில் செய்கிறவர்களுக்கும் கிடைக்கும். அவர்களுக்கு அரிசி இல்லையென்றால் வெளி மார்க்கட்டிலே அவர்கள் ஒரு படி அரிசி 7, 8 ரூபாய்க்கு வாங்க வேண்டிய நிலை ஏற்படும். இது அவர்களைக் கொடுமைப்படுத்துவது ஆகும். ஏற்கெனவே எதனால் இந்த முறை மேற்கொள்ளப்பட்டது, வருமானம் எதுவாக இருந்தாலும் ஏன் நியாய விலைக் கடைகளிலே கொடுக்கவேண்டுமென்று ஒப்புக்கொண்டோம், வெளிமார்க்கட்டிலே அதிக விலையாக இருப்பதால் அனைவருக்கும் பாதுகாப்பாக இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் தான் கொடுத்தோம். ஆகவே இன்றைக்கு வருமான அடிப்படையிலே மண்ணெண்ணெயையும் அரிசியையும் ஒரு சில பேர்களுக்கு மட்டும் கொடுப்பது என்ற நிலையை எடுப்பது சரியாக இருக்காது. மற்றவர்களைக் கொடுமைக்கு ஆளாக்குவதாக இருக்கும். இங்கே மண்ணெண்ணெய் விலையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்காரோடு ஒவ்வொரு மாநில அரசாங்கமும் எடுத்துக்கொள்ளக்கூடிய பிரச்சினை. பொதுவாகச் சொல்லப்போனால் உலகத்திலே நடந்துள்ள நிகழ்ச்சிகளைப் பார்த்தால் எண்ணெய் உற்பத்தி செய்கிற நாடுகள் நெருக்கடி காரணமாக ஒரு பீப்பாய்க்கு அவர்கள் எண்ணெய்க்கு, குருடாயிலுக்கு 5 டாலர் குறைப்பதாக முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே இந்திய சர்க்கார் தாங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய எண்ணெய்க்கு விலை குறையப்போகிறது.





(பிற்பகல் 12-50)

அப்படி குறையப்போகிற நிலைமை ஏற்பட்டும்கூட எதற்காக மத்திய சர்க்கார் பெட்ரோலியப் பொருள்களின் விலையை உயர்த்த வேண்டுமென்று தமிழக மக்களும், தமிழகத்தின் அரசியல் கட்சிகளும், தமிழ்நாடு அரசாங்கமும் கேட்க கடமைப்பட்டிருக்கிறார்கள். உற்பத்தி செய்யக்கூடிய நாடுகளில் விலை குறைவால், அந்த குறைந்தவிலையில் இந்தியாவில் இறக்குமதி செய்தால் அதனுடைய முழு பயனையும் அதை பயன்படுத்தக் கூடியவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்கு நம்முடைய தமிழ்நாடு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த நிலையில் சில முக்கியமான மக்கள் பிரச்சினைகளைப் பற்றி சொல்ல விரும்புகிறேன்.

ரெயில்வே கன்வென்ஷன் கமிட்டி என்பது சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்தது. அவர்களிடத்திலே இன்றைக்கு சென்னையில் பீச்சிலிருந்து, தாம்பரம் வரைக்கு செல்லக்கூடிய பயணிகளுடைய கஷ்டமான நிலையைப் பற்றி, அவர்களுடைய வேதனைகளைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. லட்சோபகணக்கான பயணிகள் அதிலே பயணம் செய்கிறார்கள். அதை பிராட்கேஜாக மாற்ற வேண்டுமென்று தமிழ்நாடு சர்க்கார் வற்புறுத்தவேண்டும். அதனை சீக்கிரத்தில் செய்யக்கூடிய முறையில் தான் வளர்ந்து வருகிற பொது

மக்களுடைய பிரச்னைகளை தீர்க்கமுடியும். இதில் இரண்டு விஷயங்கள் வருகின்றன. அதிகப்படியான மின்சார ரெயில்களை விட வேண்டுமென்றால், பல இடங்களில் ரெயில்வே கேட்டுகள் வருகின்றன. அவைகளில் கீழ்ப்பாலம் கட்டியோ, மேல்பாலம் கட்டியோ ஏற்பாடுகளைச் செய்தால் தான் மின்சார ரெயில்களை மேலும் அதிகமாக விடமுடியும். இதற்கு மேலே விட முடியாது என்ற நெருக்கடி நிலைமை வந்திருக்கிறது. ஆகவே தமிழ்நாடு சர்க்காருக்கும் இதிலே பொறுப்பு இருக்கிறது. ஆகவே அவர்கள் ரெயில்வே நிர்வாகத்தை அணுகி, தங்களுடைய பொறுப்பிலே, அந்த கேட்டுகள் ஒரு பிரச்சினையாக இல்லாமல், மேல் பாலங்கள், கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்கு முன்வந்து அந்த லைனை பிராட்கேஜாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அதைவிட இன்னொரு முக்கியமான பிரச்சனை. இன்றைக்கு இருக்கிற மின்சார வண்டிகளில் கூட போதுமான எலக்ட்ரிகல் மல்டிப்பில் யூனிட்ஸ் இல்லை என்று சொல்கிறார்கள். பெரம்பூரில் இண்டெகரல் கோச் பாக்டரி இருக்கிறது. இங்கு மட்டும்தான் மீட்டர் கேஜ் ரெயில் இருக்கிறது. ஆகவே எலக்ட்டிரிகல் மல்ட்டிப்பில் யூனிட்ஸ் உற்பத்தி செய்தால் லாபகரமாக இருக்காது, அதில் நஷ்டம் வரும் என்று சொல்கிறார்கள். இதில் நஷ்டக் கணக்கு பார்க்கக்கூடாது. பிராட்கேஜாக மாற்றப்படும் வரையில், மேலும் அதிகப்படியான மீட்டர் கேஜ் ரெயில்களை விடுவதற்கு, கோச்சுகளை கட்டுவதற்கு தமிழ்நாடு சர்க்கார் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் திட்டமிட்டதினால் இந்த மின்சார ரெயில்கள் வந்தன. ஆனால் சென்னை ஒரு வளர்ந்து வரும் நகரம். பூந்தமல்லியிலிருந்து கிண்டி வழியாக அடையார் வரைக்கும், அதற்கும் தெற்கே செல்வதற்கும் கூட பிற்காலத்தில் மின்சார ரெயில்கள் தேவைப்படலாம். ஆகவே பீச்சிலிருந்து லஸ் கார்னர் வரைக்கும் போடப்படக்கூடிய அந்த ரெயில் போக்குவரத்துத் திட்டம் ஒருபக்கம் இருந்தாலும் கூட, இப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கான நிலங்களையாவது ஒதுக்கி வைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யாது போனால் இருக்கிற இடங்கள் எல்லாம் பூராவும் கட்டடங்களாக வந்து விடும். பின்னால் எந்தவிதமான மின்சார ரெயில் விஸ்தரிப்புத் திட்டங்களும் செய்யமுடியாது போய்விடும் என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழ்நாடு தனியாக இல்லை. மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கைகள் நம்மை





பெரிதும் பாதிக்கின்றன. சமீபத்தில் டெல்லிக்கு கூட்டு சேராத நாடுகளின் மாநாட்டிற்காக வந்த இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூட சொல்லியிருக்கிறார். உலக வங்கி நிறுவனம், மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் என்பனவற்றின் கதவுகளுக்குள்ளே நுழைந்துவிட்டால், நுழைபவர்களுக்கு நம்பிக்கையே கிடையாது. அந்த பயங்கரமான கதவுகளுக்குள்ளே நுழைந்து விட்டால் அதிலேயிருந்து மீள முடியாது என்று சொல்லியிருக்கிறார். அவர் மேலும் குறிப்பிடுகிறார். மக்கள் உபயோகப்படுத்தும் பண்டங்களுடைய விலையை உயர்த்தும்படி உலக வங்கியும், சர்வதேச நிதி நிறுவனமும் நிர்பந்தப்படுத்துகின்றன என்று கூறுகிறார். அது தான் உண்மை. அதைத்தான் இந்த நாட்டிலேயுள்ள இடதுசாரி கட்சிகள், ஜனநாயக கட்சிகள் மத்திய சர்க்காரிடத்திலே கடந்த பல ஆண்டுகளாக பேராடிக்கொண்டிருக்கின்றன. இந்த 5 ஆயிரம் கோடி ரூபாய் வாங்கியது போதும், ரெயில்வே கட்டணத்தை உயர்த்து, பஸ் கட்டணத்தை உயர்த்து, மக்களுக்கு கொடுக்கக்கூடிய நிவாரணங்களை நிறுத்து என்று இந்திய சர்க்காரை அவர்கள் நிர்ப்பந்திக்க, மாநில சர்கார்களை மத்திய சர்க்கார் நிர்ப்பந்திக்கிறார்கள். இன்று பல இடங்களில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் மாநில சுயாட்சி பற்றியும், அதிக அதிகாரங்களைப் பற்றியும் இங்கே பேசுவதை கேட்பதற்கு மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் மாநில சுயாட்சியினுடைய உள்ளர்த்தம் என்பதைப் பற்றி நான் சில விஷயங்களைப் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது மத்திய சர்காரிடத்திலேயிருந்து வாங்குவோம். அவர்கள் கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் கொடுக்கிற நிலைமையில் இருக்க வேண்டும் அல்லவா? அவர்கள் உலக வங்கிக்கும், சர்வதேச நிதி நிறுவனத்திற்கும் கடனாளியாகிவிட்டால், அந்த கடனை திருப்பிச் செலுத்துவதற்கும், வட்டியை செலுத்துவதற்குமே அடுத்து வருகிற ஆண்டுகளிலே சிரமப்படுவார்கள் என்ற செய்தி வந்தால் எங்கேயிருந்து கொடுக்க முடியும்? ஆகவே மத்திய சர்க்காரின் கொள்கையிலே மாற்றம் ஏற்பட்டாலொழிய இந்த நாடு முன்னேற முடியாது என்ற நிலைமை வந்திருக்கிறது. உதாரணத்திற்கு சொல்கிறேன். இங்கே போடப்படுகிற வரிகள் ஒரு பக்கம் இருக்கட்டும். மத்திய சர்க்கார் இந்த ஆண்டிலே மத்திய பட்ஜெட்டிலே 714 கோடி ரூபாய்களுக்கு புதிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள். யார் தலையிலே சுமத்தப்படுகிறது? இந்திய மக்களுடைய தலையிலே.

அது மட்டுமல்ல, இந்த பட்ஜெட் வருவதற்கு முன்பாகவே அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், கெரோசின் விலையை, பெட்ரோலிய பொருள்களின் விலையை உயர்த்தியதன் மூலம் ரூ. 800 கோடிக்கு வரியை

உயர்த்தியிருக்கிறார்கள். சாதாரண தொகை அல்ல. யார் தலையிலே விழப் போகிறது? இந்திய மக்கள் தலையிலே. ரெயில்வே கட்டணத்தை எவ்வளவு உயர்த்தியிருக்கிறார்கள்? ரூ. 490 கோடிக்கு உயர்த்தியிருக்கிறார்கள். தபால் கட்டணத்தை எவ்வளவு உயர்த்தியிருக்கிறார்கள்? ரூ. 70 கோடிக்கு உயர்த்தியிருக்கிறார்கள்.

அதுபோல், இன்று Additional customs duty துணை சுங்க வரி என்று ரூ. 800 கோடிக்கு அவர்கள் விதித்திருக்கிறார்கள். இவையெல்லாம் சேர்த்து ரூ. 2,100 கோடியாக உயர்த்தியுள்ளார்கள். இந்த ரூ. 2,100 கோடிக்கு வரிகளை உயர்த்தியது மட்டுமல்லாமல் ரூ. 716 கோடிக்கு இந்த ஆண்டு புதிய வரியாக விதிக்கப்பட்டுள்ளது. ஆக, ரூ. 2816 கோடி புதிய வரிகளை இந்தியாவினுடைய மக்கள் மீது சுமத்திய மத்திய சர்க்காருடைய கொள்கையை மாற்றினாலன்றி, இன்று மாநிலங்களுக்கு அதிக வருமானம் கிடைப்பது என்பது சாத்தியம் அல்ல. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல இது போதாது என்று சொல்லி, மேற்கொண்டும் அவர்களது வரவு செலவுத் திட்டத்திலே ரூ. 1,555 கோடிக்குத் துண்டு விழுந்திருக்கிறது. இதை 'பாலன்ஸ்' செய்ய வேண்டும். இதனுடைய விளைவு பண வீக்கத்திற்கு இட்டுச் செல்லாதா? ஆகவேதான் நாம் கோருகிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றும் ஜனநாயக கட்சிகளும், மாநில சுயாட்சிக்காக நாம் நடத்தக்கூடிய இயக்கங்களிலே மத்திய சர்க்காருடைய இந்தப் பிற்போக்கான பொருளாதாரக் கொள்கைகளைப் பின்னுக்குத் தள்ளுவது நம்முடைய மைய கோஷமாக இருக்கவேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே நான் சொல்ல விரும்புவது, இன்றைக்குச் சொல்லப்படுகிறது— இந்த நாட்டிலே, ஏற்கனவே சில மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள், அயல்நாட்டுப் பெரு முதலாளிகளக் கட்டுப்படுத்த மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறதா, என்று, அப்படி அது கட்டுப்படுத்தப்பட்டிருந்தால், இந்திய மக்களுக்கு அது சேரும் அல்லவா? இந்திய ஏகபோக முதலாளிகளின் — 70 ஏகபோக முதலாளிகளின் தொழில்களை நாட்டுடைமையாக்கினால், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டிற்கும் வருமானம் பெறமுடியாதா? அதன் மூலம், திட்டங்களுக்குச் செலவழிக்க முடியாதா? அதைச் செய்வதற்குக் காங்கிரஸ் ஆட்சி தயாராக இல்லை. 40.000 கோடிகளுக்குக் கள்ளப் பணம் இந்தியாவிலே உலவுகிறது. இது இந்த நாட்டினுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தை உயர்த்தாதா? ஆகவேதான் நாங்கள் கூறுகிறோம், மத்திய சர்க்கார் பின்பற்றுகிற பொருளாதாரக் கொள்கையைப் பின்னுக்குத் தள்ளுவதற்கு நாம் முயற்சி எடுத்தால்தான் இன்





றைக்கு ஜனநாயக ரீதியிலே ஒரு மாற்றுப் பாதை, இந்திய மக்கள் அனைவருக்கும் சாதகமான ஒரு மாற்றுப் பாதையை உருவாக்க முடியும் என்று....

அது மட்டுமல்ல, இன்று இங்கே நான் கேட்கவிரும்புகிறேன். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, இந்த ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்குப் புது வரிகளைப் போடுகின்ற மசோதா வரும்போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு, அதை எதிர்த்து வாக்களிக்கும்படி கேட்குமா என்று நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், கடந்த காலத்திலே, அப்படிப்பட்ட சட்டங்களை, மத்திய சர்க்கார் கொண்டு வந்தபொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பிரதிநிதிகள் அதை எதிர்க்கவில்லை, ஆதரித்து வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே, மைய அரசு செய்யக்கூடிய அந்தத் தவறான காரியங்களுக்கு அங்கே ஆதரவு அளித்துவிட்டு அதனால் பாதகம் ஏற்படுகிறது என்று சொல்வதற்கு எப்படி நமக்கு உரிமை இருக்கும்.

அதேபோல், நான் கேட்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்களும் இங்கே குறை கூறுகிற மாதிரி மத்திய சர்க்கார் கொண்டு வந்திருக்கிற வரிகளுக்கு, கட்டண உயர்வுகளுக்கு, மசோதா கொண்டு வரும்போது, அதை வன்மையாக எதிர்க்க வேண்டுமென்று நான் கூறுகிறேன். அப்படி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், நாடாளுமன்றத்திலே உள்ள திராவிட முன்னேற்றக் கழகமும், ஜனநாயகக் கட்சிகளோடு சேர்ந்து, மக்கள் மீது விதிக்கப்படக்கூடிய வரி உயர்வை நீக்க, கட்டண உயர்வை எதிர்த்துப் போராடினால், அது நல்ல ஒரு பலனை ஏற்படுத்தும் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய இந்த உரையிலே மாநில சுயாட்சியை பற்றி பல பாராக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம். அந்தக் கொள்கைகளைப் பொறுத்தவரை, இன்றைக்கு மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், காமராஜ் காங்கிரஸ், காந்தி காமராஜ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டிருக்கின்றன. அதேபோல், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகளும் அதிலே உடன்பட்டிருக்கின்றன. அப்படியென்றால், தமிழகத்திலே மிகப் பெரும்பான்மையான மக்கள் அந்தக் கொள்கையிலே உடன்பட்டிருக்கிறார்கள் என்பது தெளி

வாகத் தெரிகிறது. அப்படியென்றால், ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப் போல மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்ற பிரச்னையில் இதர மாநிலங்களிலே உள்ள காங்கிரஸ் அல்லாத மாநில சர்க்கார்களோடு சேர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய நாட்டினுடைய சுதந்திரப் போராட்டத்திலே, இந்திய மக்கள் அனைவரும் போராடித்தான் இந்தியா சுதந்திரத்தைப் பெற முடிந்தது.

(பிற்பகல் 1-00)

இந்திய மக்கள் அனைவரும் போராடித்தான் இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடிந்தது. அதைப்போல இந்தியாவிலே உள்ள அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றுபட்டு இருந்தால்தான் மக்களின் மீது ஏற்படக் கூடிய தாக்குதல்களை முறியடிக்க முடியும்.

தமிழக அரசாங்கத்தினுடைய வரவு—செலவுக் கணக்கிலே வரிகளை விதித்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல, மத்திய சர்க்கார் எட்டாவது நிதிக் கமிஷனுக்கு, தமிழக சர்க்கார் தங்களுடைய அறிக்கையை அனுப்புவதற்கு முன்னால் அவர்களுக்கு அனுப்பக்கூடிய அந்த அறிக்கையை இந்த அவையிலே வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அறிக்கையைப் பற்றி இந்த அவையிலே விவாதித்து, இந்த அவையில் முடிவாக அந்த எட்டாவது நிதிக் கமிஷனுக்கு தமிழக அரசின் சார்பில் கோரிக்கைகள் வைக்கப்பட வேண்டும். அப்படியிருந்தால்தான் மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரம் என்ற பிரச்னையை நாம் ஒரு சக்தியான முறையில் எடுக்க முடியும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நுழைவு வரியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், மாநகராட்சிகள், சிறப்பு நகராட்சிகள் மற்றும் தேர்வு நிலை நகராட்சிகளின் எல்லைக்குள், மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, உபயோகத்திற்காகவோ அல்லது நுகர்விற்காகவோ, மற்றும் விற்பனைக்காகவோ கொண்டு வரப்படும் 13 பொருட்களின் மீது வரி போடப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற சர்க்கரை, புகையிலை, சிமெண்ட், பெட்ரோலியப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் ஆகியவை இருக்கின்றன.

மாநில அரசாங்கத்தினுடைய முதல் அமைச்சர்களையும் பிரதிநிதிகளையும் கூப்பிட்டு மத்திய சர்க்கார் ஐந்து பொருட்களுக்கு அடிஷனல் எக்சைஸ் டூட்டி என்று கூடுதல் எக்சைஸ்





டூட்டி போடுகிறோம், விற்பனை வரியிலிருந்து நீக்கி விடுகிறோம் என்று சொன்னார்கள். துரதிருஷ்டவசமாக, அந்த ஆலோசனையை எதிர்த்து அப்பொழுது கேரள அரசாங்கமும், மேற்கு வங்காள அரசாங்கமும் தான் வாக்களித்தன. அந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் சென்ற பிரதிநிதிகள் அந்த வாக்கெடுப்பின் பொழுது அங்கே இல்லை. ஆகவே, அங்கே என்ன பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மேற்கு வங்க அரசாங்கமும் கேரள அரசாங்கமும்தான் இதை எதிர்க்கின்றன என்று பதிவு செய்யப் பெற்றிருக்கிறது. இதைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இந்த 13 பொருட்களில் அந்த 5 பொருட்களும் அடங்கியுள்ளன. ஆகவே, மத்திய அரசும் இதன் மீது எக்சைஸ் வரியை விதிக்கப் போகிறார்கள். அதே நேரத்தில் இந்த ஐந்து பொருட்களின் மீதும், இன்னும் வேறு பல பொருட்களையும் சேர்த்து இங்கே இப்பொழுது நுழைவு வரி என்று விதிக்கப்பட இருக்கிறது.

இந்த நுழைவு வரி வருவதைப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியில் பல இலட்சம் பேர்களுக்கு, ஏறத்தாழ முக்கால் கோடி, ஒரு கோடி பேர்களுக்கு வந்து விடும். மாநகராட்சிகள், சிறப்பு நகராட்சிகள் மற்றும் தேர்வு நிலை நகராட்சிகள் என்று பார்த்தால் ஏறத்தாழ முக்கால் கோடி, ஒரு கோடி மக்கள் மீது, தமிழக மக்கள் மீதுதான் சாரும். இதனால் என்ன ஆபத்து ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசாங்கம் ஒரு பக்கத்தில் சொல்கிறது, கைத்தறித் துணிகள் விற்கவில்லை. கைத்தறி துணி பற்றிய அந்த நிறுவனத்திற்கு தலைவராக இருக்கின்றவர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், அவரும் கைத்தறி துணி விற்பனை குறைந்திருக்கிறது என்று சொல்கிறார். ஏன் இந்த நிலை ஏற்பட்டது? விவசாயிகளுக்கு நியாயமான கூலி கிடைக்கவில்லை; தொழிலாளர்களுக்குப் போதுமான கூலி கிடைக்கவில்லை. மின் வெட்டின் காரணமாக அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. ஆகவே, வாங்கும் சக்தி இல்லை. ஆகவே, பொருட்கள் வாங்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அப்படிப்பட்ட நேரத்தில் துணியின் மீதும் சிமெண்டின் மீதும், சர்க்கரையின் மீதும், பெட்ரோலியப் பொருட்களின் மீதும், மருந்துப் பொருட்களின் மீதும் வரி போடப்பட்டிருக்கின்றது. உயிர் காக்கின்ற மருந்துகளின் மீது இன்றைக்கு நம்முடைய பங்குக்கு அந்த வரியைப் போட்டோம் என்றால் இதனால் பாதிக்கப்படுவது தமிழ் நாட்டிலுள்ளவர்கள்

தான். இந்தப் பொருட்களின் மீது போடப்படும் வரிகளின் காரணமாகத் தமிழ் நாட்டிலுள்ள நகர்ப்புறத்து மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். எனவே, இந்தப் பொருட்களின் மீது விதிக்கப்படுகின்ற வரிகளைக் கைவிட வேண்டுமென்று நான் வற்புறுத்துகின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், இந்தப் பொருட்களைப் பார்த்தால் லீகோ கரியையும் சேர்த்திருக்கிறார்கள். நிலக்கரி, கல்கரி என்று போட்டதோடு தனியாக இந்த அறிக்கையில் லீகோ உள்பட என்று சேர்த்திருக்கிறார்கள். எங்கே லீகோவை மறந்து விட்டால் அதற்கு வரியில்லாமல் போய்விடுமோ என்று கருதி வரி வலை போடப்பட்டு அதற்கும் வரி போடப்படுகிறது. இந்தப் பொருட்களின் மீது போடப்படும் வரியினால் நகர் மக்கள் பயன்படுத்துகின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். என்ன கூறியிருக்கிறார்கள் தெரியுமா? மதுராந்தகத்திலே உற்பத்தி செய்யக்கூடிய சர்க்கரை சென்னைக்கு வந்தாலும், அதற்கு இந்த வரி சேரும். சென்னையிலேயிருந்து மதுரைக்கு போனால் இந்த வரி சேரும். மதுரையிலிருந்து கோவைக்கு போனால் இந்த வரி சேரும். ஆகவே ஒன்றன் பின் ஒன்றாக, இந்த வரியை வசூலிக்கும்போது அரசாங்கம் பெறுகின்ற தொகை ரூ. 26 கோடி அல்ல. அதற்கு அதிகமான பல மடங்கு தொகை ஆகும். வரியை வசூலிக்க இது ஒரு நல்ல சக்தி படைத்த ஆயுதம். எப்பொழுதும் நிதி நிலை அறிக்கையிலே வருகின்ற வருவாயைக் குறைவாக காட்டுவது வழக்கம். அந்த முறையிலே இந்த ரூ. 26 கோடி நிச்சயமாக அல்ல. ஆனால் பல கோடி ரூபாய் வரவு இருக்கும். இது தமிழக மக்களின் எதிர்ப்பை உண்டாக்கும். சமீபத்தில் தமிழக வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே சேல்ஸ்டாக்ஸ் குறித்து போராடி போராடி அவர்கள் பிரச்சினை தொன்றுதொட்டு இருந்து வந்து கொண்டிருக்கிறது. வியாபாரம் நடக்காது. தொழில் விளங்காது. படுத்துவிடும். பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சினியின் விலை ஏற்கனவே வெளிச்சந்தையில் குறைந்துபோய் விட்டது. வியாபாரம் குறைந்து விட்டது. ஆகவே தொழிற்சாலைகள் மூடவேண்டிவரும். ஆகவே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் சிந்தித்து பார்த்து—இந்த வரி மட்டும் அல்ல. தொழில்வளர்ச்சியை எல்லாம் குரல்வளையை நெருக்கி பிடிக்கக்கூடியதாக மாறிவிடும். இருக்கின்ற தொழிற்சாலைகள் வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு தொழிலாளர்கள் வெளியேற்றக்கூடிய நிலை ஏற்படும். —ரத்து செய்ய வேண்டும். ஏற்கெனவே வியாபாரிகள் எல்



லாம் 17-ந் தேதி கடையை அடைப்பதாக திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கு மக்கள் சாதகமாக இருப்பார்கள். ஆகையால் மக்கள் எதிர்ப்பை அரசு பெற்றுவிடுமோ என்று அனைவரும் ஆழ்ந்த கவலைப்படுகிறோம். இன்றைக்கு இந்த வரியைப் பொருத்த வரையில் அரசாங்கம் நிச்சயமாக வாபஸ் வாங்க வேண்டும் என்றும், இந்த வரியை விதிக்க அரசு இடம் கொடுக்கக் கூடாது என்றும் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒவ்வொரு சிலைடுக்கும் ஒவ்வொரு காட்சிக்கும் ஒவ்வொரு சினிமாவிலும் வரி வசூலிக்க திட்டமிடப்பட்டு இருக்கிறது. எத்தனை காட்சி இருந்தாலும் ஒவ்வொரு காட்சிக்கும் ஒவ்வொரு சிலைடுக்கும் 30 பைசா என்று போட்டிருக்கிறீர்கள். சர்க்காரே சில விளம்பரங்களை மக்கள் பார்க்க வேண்டுமென்று வெளியிடுகிறார்கள். அறிவைப் பெருக்க பார்க்கவேண்டுமென்று போடுகிறார்கள். சினிமா அரங்குகளின் முதலாளிகளா கொடுக்கப் போகிறார்கள்? மக்கள் மீதுதான் இதை சுமத்தப் போகிறார்கள். தொழிற்சாலையில் பணிசெய்துவிட்டு, வாழ்க்கையிலே வாழ்வதற்கு வழியில்லை என்று சிறிது நேரம் தப்பித் தவறி சினிமா கொட்டகைக்கு போனால், கூடுதலான சினிமா கட்டணத்தை வசூலிக்க ஏற்பாடு செய்வதாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதே போலத்தான் சொல்லப்படுகிறது. பரித்திறன் 3½க்கு கீழ் உள்ள 2 சக்கர வண்டிகளுக்கான காலாண்டு வரி ரூ. 10லிருந்து ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. பரித்திறன் 3½க்கு மேல் உள்ள இரண்டு சக்கர வண்டிகளுக்கு உரிய காலாண்டு வரி ரூ. 15 என்பது ரூ. 20 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஸ்கூட்டர்ஸ் யார் விடுவது? அரசியல் கட்சியைச் சார்ந்த இளைஞர்கள் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களும் அதைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, தொழிலாளர்களுக்குப் பயன்படும் வகையிலும், நடுத்தர மக்களுக்கு பயன்படும் வகையிலும் இந்த வரி கட்டணத்தை கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொழிலாளர்களும், நடுத்தர மக்களும் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்த வரிகளைப் பொறுத்த வரையில் கைவிட வேண்டும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஜனநாயக முற்போக்கு சக்திகளுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது என்று அவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். திருச்செந்தூர் தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா தி. மு. க.வோடு இருந்த கட்சிகள் தனியாக நின்று போராடுகின்றன. வலுவான காரணங்கள் உள்ளன. நான் அன்று கூட ஒரு ஒழுங்குப் பிரச்சனையாக குறிப்பிட்டேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவகாசம் இல்லாத காரணத்தினால் சொல்லவில்லை. இப்போது

அவகாசம் இருக்கிறது. அவர்கள் 14-ந் தேதி பதில் சொல்லும் போது தமிழ்நாடு அரசின் சார்பாக இறுதியாக என்னுடைய ஆட்சேபனைக்கு பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஆட்சேபகரமான விஷயங்களை எழுதினால் சிறைத் தண்டனை கொடுக்கக் கூடிய பத்திரிகைச் சட்டத்தை அவர்கள் வாபஸ் வாங்குவோம் என்று சொன்னால், இன்று இருக்கின்ற ஜனநாயக சக்திகளுக்கும், அவர்களுக்கும் இடையே இருக்கின்ற இடைவெளி கொஞ்சம் குறையும். ஏன் இந்த மாச்சர்யம் ஏற்பட்டது என்றால் நீங்கள் உங்களுடைய சட்டங்களையும் நடவடிக்கைகளையும் பாருங்கள். பத்திரிகையாளர்கள் கூட எழுதினார்கள். பீகார் மாநிலத்திலே இருக்கிற காங்கிரஸ் கட்சி முதலமைச்சர் தெரியாத்தனமாக கொண்டு வந்து, நாடு பூராவாக ஏற்பட்ட எதிர்ப்பு அவரையே கலங்க வைத்து விட்டது. கடைசியில் அவர்கள், செத்துவிட்டது என்று சொல்லிவிட்டார்.

(பிற்பகல் 1-10)

அதற்கு நாம் எல்லாம் ஒரு வகையிலே முதல் பொறுப்பு. நாம் தவறான வழியைக் காட்டியதற்குப் பிறகு இப்போது அவர்கள் பின்வாங்கிவிட்டார்கள். நாம் அதை. இன்றைக்கு எதற்காக வைத்துக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டிலே உள்ள பத்திரிகைக்காரர்கள் மிகுந்த அடக்கத்தோடு இருக்கக்கூடியவர்கள் என்று நான் சொல்லவிரும்புகிறேன். நாங்கள் எல்லாம் முதலில் எதிர்த்தபோதுகூட அவர்கள் எதிர்ப்பதற்கு முன்வரவில்லை. அவ்வளவு பரிவான குணம் கொண்டவர்கள் அப்படிப்பட்டவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். இங்கே கூட கருப்பு பேட்ஜ் போட்டு, அப்படி எல்லாம் செய்வதற்கு அவர்கள் முன்வரவில்லை. அப்படி இருக்கக்கூடிய பத்திரிகைக்காரர்கள் மீது இந்த தமிழ்நாடு அரசாங்கம் இவ்வளவு பெரிய கடுமையான ஒரு அடக்குமுறைச் சட்டத்தைக்கொண்டு வந்தால் நிலைமை எப்படி இருக்கும். பீகாரிலே அந்தப் பத்திரிகைத் தடைச் சட்டத்தை வாபஸ் வாங்கியதற்குப் பிறகு, இப்போதாவது தமிழ்நாடு அரசாங்கம் இதை வாபஸ் வாங்குமா என்பதுதான் என்னுடைய கேள்வி. எங்களுடைய கட்சி உறுப்பினர் மாண்புமிகு கிருணய்ன் அவர்கள் கூட கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் ஆர். எம். வீ. அவர்கள் தலைமையிலே ஒரு குழு போடப்பட்டது. அது என்ன ஆயிற்று? அது கூடியதா? அதனுடைய பரிசீலனை என்ன? இதற்கு ஒரு கமிட்டி தேவையா? பரிசீலனை தேவையில்லை. மூன்றே வார்த்தையிலே வாபஸ் வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னால் விஷயம் முடிந்துவிடும். ஆனால் அவர்கள் இப்படி ஒரு காரியத்தைச் செய்வதன் மூலமாக பத்திரிகைக்காரர்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஜனநாயக சக்திகளுக்கும் இடையிலே



இடைவெளி அதிகமாகிறது. இந்த அரசாங்கம் படிப்படியாக ஒவ்வொரு உரிமையிலேயும் கை வைக்கிறதே என வரும் போது. எதிர்க்காமல் எப்படி இருக்கமுடியும். இதுதான் பிரச்னை ஆகவே நான் சொல்கிறேன், அரசாங்கம் ஆழ்ந்து சிந்தனை செய்து பார்த்து இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கவேண்டும்.

அதேபோல்தான் தொழிற்சங்கங்கள் எல்லாம் சேர்ந்து 24ஆம் தேதி சென்னை நகரத்திலே ஒரு ஊர்வலம் நடத்தினார்கள், எதற்காகத் தெரியுமா? இந்த அத்தியாவசியப் பணிகளிலே வேலைநிறுத்தம் செய்வதைத் தடை செய்யும் ஒரு அவசரச் சட்டம் வந்தது. அந்த அவசரச் சட்டம் காலாவதியாகிவிட்டது. அதற்கு முன்னாலே ஒரு சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டது. அதிலே நாங்கள் எல்லாம் பேசி மக்களுடைய அபிப்பிராயத்தை அறிவதற்காக அதை சுற்றுக்கு விட வேண்டும் என்று சொல்லி, அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது? இதற்கு இடையிலே அந்த தொழிலாளர் வர்க்கம் என்ன கருதுகிறது என்றால், எப்படி இருந்தாலும், மசோதா வடிவத்திலே இருந்தாலும், இப்போது அது கத்தி மாதிரி தொங்கிக் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றம் முடிந்து விட்டால், அரசாங்கத்திற்குத் தேவைப்பட்டால், சட்டமன்றம் இல்லை என்று காரணம் காட்டி, மீண்டும் அதைக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. ஆகவேதான் இதற்காகத்தான் அவர்கள் ஒன்றுபட்ட முறையிலே 24-ஆம் தேதி சென்னையிலே ஒரு ஊர்வலம் நடத்துகிறார்கள். அரசாங்கத்தின் பார்வைக்கு கொண்டுவருகிறார்கள். நான் இங்கே கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த அரசாங்கம் மக்களின் நலன்களைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இருக்குமானால் தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவேண்டுமென்று சொல்கிறார்களே, அதிலே அவர்களுக்கு அக்கறை இருக்குமானால் இந்தச் சட்டத்தை அந்தப் பொறுக்குக் குழுவிலேயிருந்து வாபஸ் வாங்குகிறோம் என்று அறிவிக்கவேண்டும். அப்படிச் செய்தால் தமிழகத்திலே உள்ள தொழிலாளர்கள், மற்றும் உழைப்பவர் பாளர்களும் அதை ஆதரிப்பார்கள், வரவேற்பார்கள்.

அதேபோல்தான் இன்றைக்கு என்.ஜி.ஓ.க்கள் பிரச்னை. இதைச் சொன்ன உடனே என்.ஜி.ஓ.க்களை அரசாங்கத்திற்கு எதிராகத் திருப்புகிறோம் என்று யாரும் குற்றம் சொல்லக் கூடாது. என்.ஜி.ஓக்கள், ஆசிரியர்கள் அனைவருமாகச் சேர்ந்து ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், 500 அரசு ஊழியர்களை சென்றஆண்டில் நடைபெற்ற கிளர்ச்சியின்போது அரசாங்கம் சஸ்பெண்ட் செய்தது. இது சரிதானா? அந்த 500 அரசு ஊழியர்களும் இந்த மாநிலத்திலே அனைத்திந்திய

கிறேன். இன்றைக்கு அந்தத் தனியார்கள் தலைவராக இருந்து அந்தக் கார்ப்பரேஷன்களை நடத்துவதன் காரணமாக, அரசாங்கத்தின் ஒரு இலாகா செய்யவேண்டிய அந்த வேலைகளைத்தான் அந்த கார்ப்பரேஷன் நடத்துவதால், அவர்கள் கான்ட்ராக்ட் மற்றும் ஒப்பந்தங்கள் விடுகின்ற நேரத்தில், சில நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டு, ஊழல்கள் ஏற்பட்டுவிட வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால், அவற்றில் அரசாங்க அலுவலர்களையே, தலைவர்களாகப்போட்டு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அதைச் செய்ய வில்லையென்றால், அந்தக் கார்ப்பரேஷன்களை கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கமிட்டியை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அங்கேயுள்ள அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் ஒரு பயம் இருக்கும். அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் போனால் அது பயன் உள்ளதாக இருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருச்செந்தூர் தேர்தலைப் பற்றி சில பிரச்னைகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. திருச்செந்தூர் தேர்தலைப் பொறுத்த வரையில் நாங்கள் சார்ந்து இருக்கும் கட்சிகள் அ.இ.அ.தி.மு.க. கொள்கையோடு, எண்ணத்தோடு மாறுபடுகிற காரணத்தால், திராவிட முன்னேற்றக்கழகத்தோடு மாறுபடுகிற காரணத்தால், தனியாகப் போட்டியிட்டோம். 4,900 வாக்குகள்தான் பெற்றோம் என்று சொல்லலாம். பெரியகுளம் தேர்தலில் 16,000 வாக்குகள் பெற்றோம். ஆகவே, வாக்குகளை இன்றைக்கு கணக்கில் கொள்ளக்கூடாது. தமிழகத்தில் உள்ள இரண்டு பெரிய கட்சிகளும் தங்களுக்குள்ள சக்திகளை வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு ஒரு தேர்தலில் ஈடுபடுகின்ற நேரத்தில், ஒரு கட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு, அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கின்ற நேரத்தில் சில கொள்கைகளின் அடிப்படையில் நாங்கள் தனியே போட்டியிட்டோம். மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். 1957ஆம் ஆண்டு தேவிகுளத்தில் நடைபெற்ற தேர்தலில்—ஒன்றாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சி—போட்டியிட்டது. அப்போது அமைச்சர்கள் யாரும் தேர்தல் பணிக்குப் போகக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் வெற்றி பெற்றோம். ஆகவே, கொள்கை ரீதியில் நாங்கள் போட்டியிட்டோம்.

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். எங்களிடத்தில் பணபலம் இல்லை. லாரிகளில் ஆட்களைக் கொண்டுவந்து பிரச்சாரம் செய்வதற்கு முடியாது. ஆனால் அந்த இருபெரும் கட்சிகளும் லாரிகளில் ஆயிரக்கணக்கான ஆட்களை தொண்டர்களை கொண்டு வந்து அந்தத் தேர்தல் பணியில்





பட்டார்கள். ஆகவே அங்கே நடைபெற்றது ஒரு சமத்துவ போராட்டம் அல்ல, சமத்துவமான முறையில், சமமான பலத்தோடு அந்தப்பிரச்சாரம் நடத்தப்படவில்லை திருச்செந்தூர் தொகுதியில் அவர்கள் செலவழித்த பணம் எவ்வளவு என்பதைத் சிந்தித்துப் பார்த்தால் தெரியும்.

(பிற்பகல் 1-20)

இப்படிப்பட்ட ஒருநிலைமை ஏற்படும்போது இரண்டு பெரும் கட்சிகள் மோதக்கூடிய காரணத்தால் மூன்றாவதாக மோதக் கூடிய கட்சி பின்னுக்குத் தள்ளப்படுகிறது. ஒரு போலரைசேஷன். இரண்டு கட்சிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டால்கூட நாங்கள் ஒரு கொள்கைக்காகப் போராடினோம். மத்திய சர்க்காருடைய வரிகளை, மத்தியசர்க்காருடையஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்ப்பது என்று போராடினோம். அதற்காகத்தான் முயற்சி செய்தோம். அதே நேரத்தில் அண்ணா தி.மு.கழகம் பின்பற்றக்கூடிய கொள்கைகளையும் எதிர்த்துப் போராடினோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸோடு அவர்கள் வைத்திருக்கிற உறவு காரணமாக இன்றைக்கு எங்களுக்குத் திருப்தியில்லை. அதனால்தான் நாங்கள் அவர்களையும் எதிர்த்து போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மாண்புமிகு கலைஞர் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். ஒரு எதிர்க்கட்சி இன்னொரு எதிர்க்கட்சி பற்றி இப்படி ஏன் குறை கூற வேண்டுமென்று கேட்டார்கள். இதை நாங்கள் எதிர்க்கட்சி என்ற பிரச்னையாகப் பார்க்கவில்லை. காரணம் என்னவென்றால், ஒன்று எங்களுக்குத் தெரிகிறது.

திருப்பத்தூர் தேர்தலில் அண்ணா தி. மு. கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் காங்கிரசை ஆதரித்தார்கள். நாங்கள் எதிர்க்கிறோம் என்று தெரிந்த பிறகு இரண்டு பேரும் பெரியகுளம் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதைப் போன்று திருச்செந்தூர் தேர்தலிலேயும் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நிற்கும் நிலைமை ஏற்பட்டது. எங்களைப் பொறுத்தவரையில் அந்த அளவுக்கு ஒரு அபிவிருத்தி நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறோம். அதை ஒரு அபிவிருத்தியாகத்தான் நாங்கள் பார்க்கிறோம்.

அதனால்தான் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னால் இங்கே நடந்த ஒரு விவாதத்தில் சொன்னார்கள். மாண்புமிகு திருநாவுக்கரசு கேட்டபோது சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரசோடு சேர்ந்து 1980அம் ஆண்டு கூட்டணி அமைத்து, ஆட்சிக்கு வந்திருந்தால், திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி என்ற கொள்கையை வற்புறுத்தி இருக்குமா

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக்கு ஆதரவு அளித்து வந்தார்களே, அவர்கள் மீது ஆசிரியர்கள் மீது அவர்களுடைய உரிமைகளைப் பறிக்கின்ற வகையில் அவர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உரிமைகளுக்காக அவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள்.

மேற்கு வங்காளத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல தடவைகள் சொன்னார்கள். போலீஸ்காரர்கள் உள்பட இந்த மாநிலத்திலே சங்கம் வைத்துக் கொள்ள அனுமதி அளிக்காத நேரத்திலே கூட மேற்கு வங்கத்திலே அனுமதிக்கப்பட்டது. அந்த மாநிலத்தினுடைய முதல் அமைச்சர் ஜோதி பாசு அவர்கள் அவர்களிடம் நேரடியாகப் போய்ப் பேசி அவர்களுடைய கோரிக்கைகளில் எதை எதை ஏற்றுக்கொள்கிறோம் என்று அறிவித்துவிட்டார்கள். பாக்கியைப் பற்றி பிறகு பேசுவோம் என்று கூறினார்கள். அதனால் அங்கே கிளர்ச்சி நடக்கவில்லை. கிளர்ச்சி நடக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் விரும்பினால் அந்த அரசாங்கத்தோடு எப்போது வேண்டுமானாலும் பேசலாம் என்று சொல்கிறார்கள். ஆகவேதான் 100-க்கு 75 பேர்களாக உள்ள அரசு ஊழியர்கள் அந்த அரசாங்கத்தை ஆதரிக்கிறார்கள். அதனால் லட்சக்கணக்கான அரசு ஊழியர்களுடைய உதவியோடு அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள். ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எதற்காக நீங்கள் லட்சக்கணக்கான ஊழியர்களுடைய எதிர்ப்பைச் சம்பாதிக்கிறீர்கள்? நான் கேட்கிறேன். இது கோர்ட்டிலே இருக்கிறதா, இல்லையா என்ற பிரச்னை வேண்டாம். இந்த அரசாங்கம் அவர்களை எல்லாம் தங்களுடைய சகோதரர்களாக பாவிக்கவேண்டும். அந்த 500 ஊழியர்களுடைய சஸ்பென்சனை ரத்துசெய்யவேண்டும்.

கருவூலத்துறையினுடைய ஊழியர்களைப் பற்றி நானும் மற்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நாவலர் அவர்களிடம் பல சமயத்திலே பேசியிருக்கிறோம். அதனுடைய இயக்குநரைப் பற்றி பல தடவை பேசியிருக்கிறோம். இவ்வளவு கசப்பான அனுபவத்தை உண்டாக்கக்கூடிய இந்த இயக்குநர் அலுவலகத்தில் ஒழுங்காக வேலை நடக்கிறதா. ஏராளமானவர்களை அவர்கள் பழிவாங்கி, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களை பல்வேறு இடங்களுக்கு மாற்றியிருக்கிறார்கள். ஆகவேதான் நான் சொல்கிறேன். தமிழ்நாடு சர்க்கார் இந்தப் பத்திரிகைச் சட்டம், இந்த வேலை நிறுத்தத் தடைச் சட்டம், இந்த 500 பேர்கள் சஸ்பென்சன் இவைகளை ரத்து செய்வதன் மூலமாக மீண்டும் அவர்கள் ஜனநாயக ரீதியாகப் பிரச்னைகளை அணுகக்கூடிய ஒரு நிலைமைக்கு நாம் வர வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.





அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் சில கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். இறந்து போனால் அளிக்கப்படுவது போல், ரிடையர் ஆனால் 10,000 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். சம்பள உயர்வு கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் சம்பளக் கமிஷன் நியமிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஊழியர் ஸ்தாபனங்களைக் கலந்தாலோசிக்காமலேயே அவர்கள் இந்த அறிவிப்பைச் செய்து இருக்கிறார்கள். அது பெரிய பிரச்னையாகியிருக்கிறது. அப்படிச் செய்யாமல் அந்த ஸ்தாபனங்களைக் கலந்து பேசி மாநில சர்க்கார் ஒரு சரியான அறிவிப்பை அளிக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றத்திலே சில சமயங்களில்தான் பிரச்னைகளைப் பற்றிப் பொதுவான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்ற நிலைமை இருக்கிறது. பல இலாக்காக்களின் வேலைகளைப் பற்றி நாம் இங்கே சட்டமன்றத்தில் சரியான முறையில் கவனிக்க முடியவில்லை. கேரளா போன்ற மாநிலங்களில் சப்ஜக்ட்ஸ் கமிட்டி என்று வைத்து இருக்கிறார்கள். அந்தக் கமிட்டியில் சட்டமன்றத்தில் எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கிறார்களோ அந்த விகிதாச்சாரப்படி உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு இலாகா சம்பந்தப்பட்டும் பரிசீலிக்கிறார்கள். ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமானால்கூட அவர்கள் பொதுவாக அதைப்பற்றி விவாதித்து அதற்குப் பின்னர்தான் அவைக்கு கொண்டு வருகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு கமிட்டியை இங்கே அமைக்கவேண்டும். எல்லா இலாக்காக்களுக்கும் என்று தனித்தனியாக அமைக்காவிட்டாலும், முக்கியமான ஒரு சில இலாக்காக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட கமிட்டிகளை அமைத்து, அதன்மூலம் அந்த இலாகா வேலைகள் முறைப்படி பரிசீலிக்கப்பட்டால், ஜனநாயகம் என்பது சம்பிரதாய ஜனநாயகமாக இல்லாமல், மக்கள் பிரதிநிதிகள் தீவிரமாக ஈடுபடும் ஜனநாயகமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு துறைகளில் ஊழல்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. இதுபற்றி பல புகார்கள் வருகின்றன. ஆசிரியர்களை மாற்றும் விஷயத்தில், மாற்றுவதைத் தடுக்கும் விஷயத்தில் பணம் ஏராளமாக வாங்கப்படுகிறது. ஆளுநர் உரை விவாதத்தின்போது கூட குறிப்பிட்டேன். அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டேன். இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பல வாரியங்களில், அரசாங்கம் நடத்தும் பல கார்ப்பரேஷன்களில் தனியார்கள் தலைவர்களாக இருக்கிறார்கள், அது தொடர்ந்து இருக்க வேண்டாம் என்று கருது

என்று கேட்டார்கள். அதற்கு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். இப்போதுகூட, உண்ணாவிரதத்தை முடித்துவிட்டு மாண்புமிகு முதலமைச்சர் டெல்லிக்குச் சென்று திருமதி இந்திரா காந்தியுடன் என்ன பேசினார் என்பது பற்றி பல செய்திகள் வந்திருக்கின்றன; அதை முதலமைச்சர் ஏன் மறுக்கவில்லை? அடுத்து வரக்கூடிய 1985ஆம் ஆண்டு தேர்தலிலே அண்ணா தி.மு.கழகமும் இந்திரா காங்கிரசும் உடன்பாடு பற்றி பேசியதாகச் செய்தி வந்திருக்கிறதே, ஏன் அதை மறுக்கவில்லை என்று பேராசிரியர் கேட்டார். நானும் அதைத்தான் கேட்க விரும்புகிறேன். அண்ணா தி. மு. கழகத்தினர் இன்னும் அந்த சிந்தனையில்தான் இருக்கிறார்களா? அண்ணா தி. மு. கழகத்தின் உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் மத்திய சர்க்காருடைய கொள்கைகளை கடுமையாக தாக்கிப் பேசுகிறார்களே. இந்த மாநிலம் புறக்கணிக்கப்பட்டுவிட்டதா என்று கேட்கிறார்களே. அந்தக் கொள்கையை இன்று தர்க்கத்தின் அடிப்படையில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்றால் காங்கிரஸ் கட்சியோடு எந்தவிதமான தொடர்பும், எந்தவிதமான உறவும் இல்லாமல் அவர்களுடைய அதிகாரப் போக்கை, ஜனநாயக விரோதமான போக்கை எதிர்த்துப் போராடாமல். அதற்கு அண்ணா தி. மு. கழகம் முன்வராமல் போனால் எப்படி இந்த இரண்டுக்கும் பேசக்கூடிய பேச்சுக்கும் நடைமுறைக்கும் ஒத்து வரும்? இரண்டுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். ஆகவேதான் எங்களுடைய கொள்கைகள் என்று பார்க்கும் போது இன்று அண்ணா தி. மு. கழகம் உறுதியாக தமிழக மக்களின் நலனுக்காகப் பாடுபட வேண்டுமென்றால், மாநில சுயாட்சிக்காகப் பாடுபட வேண்டுமென்றால், மாநிலத்தின் நிதி ஆதாரங்களுக்காகப் பாடுபட வேண்டுமென்றால் அவர்கள் இன்றைக்கு தோழர் ஜோதிபாசுடனும், தோழர் நிருபன் சக்கரவர்த்தியுடனும் ஜம்மு-காஷ்மீரில் இருக்கக்கூடிய முதலமைச்சர் உடனும், கர்நாடக முதலமைச்சருடனும், ஆந்திராவில் இருக்கிற காங்கிரஸ் அல்லாத முதலமைச்சருடனும் சேர்ந்துதான் போராட முடியும்; காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து அல்ல. எதிரியோடு ஒரு தெளிவான முடிவுக்கு வந்தால் தமிழக மக்களுக்கும் இந்திய ஜனநாயகத்திற்கும் சிறப்பாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்,

அதே நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். மாண்புமிகு அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். உங்களுடைய முதலமைச்சர் டெல்லிக்குப் போனபோது என்னென்ன பேசினார்கள், பத்திரிகையில் பல செய்திகள் வந்திருக்கின்றனவே; அதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லையே என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் அதே கேள்வியை பாண்டிச்சேரி கூட்டணியில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் விலகிக்கொண்டு காங்கிரசோடு தன்னுடைய உறவை கத்தரித்துக் கொண்டு கேட்டிருந்தால் அதற்கு வலு அதிகமாக இருக்கும், சக்தி அதிகமாக இருக்கும் என்பதை ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன்.





மாண்புமிகு கலைஞர் அவர்கள் நேற்றுகூட பேசியிருக்கிறார்கள். பாண்டிச்சேரியில உள்ள காங்கிரசுடன் சேர்ந்த கூட்டு மந்திரிசபையை நாங்களாக முறிக்க மாட்டோம் என்றுசொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியிலே ஆளுகின்ற ஒரு கட்சியோடு கூட்டு சேர்ந்து, கூட்டணி மந்திரிசபையில் இருந்துகொண்டு, எந்தக் கொள்கைக்காக நாம் ஒரு கட்சியை கடுமையாக எதிர்க்கின்றோமோ அந்தக் கொள்கையை எப்படி இந்த மாநிலத்திலே விமர்சிக்க முடியும்?

பாண்டிச்சேரியில் இதைப்போன்று அரசு ஊழியர்களுக்கு தண்டனை கொடுக்கக்கூடிய அளவுக்கு வந்துவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின சார்பிலே அந்த தண்டனையை நீக்க வேண்டுமென்று சொன்னாலும் அதற்கு அங்கே பக்கபல சக்தி இடம் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, அவர்கள் தண்டனை அடைந்து, வேலை இழப்பார்கள். நாங்கள் என்ன பார்க்கிறோம்? அண்ணா தி. மு. கழகம் ஆசிரியர்களையோ அல்லது அரசு ஊழியர்களையோ அடக்குமுறை செய்யும்போது நாம் கண்டிக்கிறோம். பாண்டிச்சேரி நம்முடைய தமிழர்கள் வாழும் பிரதேசம் இல்லையா? அந்த ஊழியர்கள் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக முதலமைச்சருடைய அரசாங்கத்தில்தானே இருக்கிறார்கள். அவர்கள் சிறைத் தண்டனை பெற்றால், அதை எப்படி நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? எதிர்க்க வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம்.

டாக்டர் மு. கருணாநிதி : மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் சங்கரய்யா அவர்களுக்கு நான் உறுதி கூறிக் கொள்கிறேன். அப்படி ஒரு சூழ்நிலை பாண்டிச்சேரியில் உருவாகி ஒரு 10, 15 பேர்கள் தண்டனைக்கு ஆளாக்கப்படுவார்களேயானால்,—அரசு ஊழியர்களில் 200, 300 பேர்கள் மீது எடுக்கப்பட்ட இலர்கா பூர்வமான நடவடிக்கை கைவிடப்பட ஒரு சூழ்நிலை இருக்குமேயானால், திராவிட முன்னேற்றக் கழகம் அந்த ஊழியர்களுக்காகப் போராடக் கூடிய ஒரு இறுதியான முடிவை எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்படும் என்பதை நான் சங்கரய்யா அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது குறிப்பிட்டதை வரவேற்கிறேன். ஆனால் பிரச்னை என்னவென்றால் — இந்த ஒரு பிரச்னை

மட்டும் அல்ல. அதேபோல அத்தியாவசியப் பணிகளிலே வேலை நிறுத்தத்தைத் தடை செய்யக்கூடிய சட்டத்தை, ஒரு ஆண்டுக்கு முன்னாடியாகவே, மத்திய சர்க்கார் கொண்டுவந்து நிறைவேற்றியது. எங்களுடைய குறையெல்லாம் — அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதை ஆதரித்தது. திராவிட முன்னேற்றக் கழகமும் அதை ஆதரித்தது. எப்படி ஆதரிக்க முடியும்? இங்கே தொழிலாளர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயராலும் சங்கம் வைத்திருக்கிறார்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயராலும் சங்கம் வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் சட்டமாக இல்லாவிட்டாலுங்கூட, மத்திய சர்க்காருடைய தேசிய அலுவலகங்களிலே வேலை செய்யக் கூடியவர்கள் மீது, வேலை நிறுத்தம் செய்தால் தடை செய்யக் கூடிய சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் நடவடிக்கை எடுக்க முடியும். அதை எப்படி நீங்கள் ஆதரிக்கலாம்?

டாக்டர் மு. கருணாநிதி : பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையில் இந்தச் சட்டத்தைக் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வெளிநடப்பு செய்யவில்லையே தவிர, கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டத்திற்குப் பதிலாக மாற்று ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று அங்கே கருத்துக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் சங்கரய்யா அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். இங்கேயும் அந்தச் சட்டம் கொண்டு வந்தபோது வெளிநடப்பு செய்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். போராடிய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். அப்போது இங்கேயிருந்த தோழமையின் காரணமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான் எங்களோடு ஒத்துழைக்கவில்லை. ஆகவே, சில நேரங்களில் உறவில்—தேர்தல் தோழமையின் காரணமாக, கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை எங்களுக்கு மாத்திரம் அல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஏற்பட்ட கடந்த கால வரலாற்றை நாம் மறந்துவிடலாகாது.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால் அதிலே பிரச்னையே வேறு. அந்தச் சட்டம் இங்கே, தமிழ்நாட்டிலே கொண்டு வரப்பட்டபோது, நாங்கள் எங்கள் கட்சியின் சார்பிலே முதல்வர் அவர்களைச் சந்தித்து, அவரை அதனைக் கைவிடும்படி வற்புறுத்தினோம். அப்போது என்ன பிரச்னை வந்தது என்றால், முழுமையாகக் கைவிட்டால் அவர்களுக்கும் அது கௌரவப் பிரச்னையாக இருக்கும் என்று சொல்லிவிட்டார்கள். அப்போது நாங்கள் சொன்னோம், சில சட்டங்களுக்கு செலக்ட் கமிட்டி அமைப்பது போல —



உதாரணமாக கிரவுண்ட் வாட்டர் சம்பந்தமாக ஒரு சட்டம்— போன சட்டமன்றத் தேர்தலிலே ஜெயித்து வந்தபோது அந்தக் கமிட்டியிலே நான் ஒரு உறுப்பினராக ஆனேன். பூமிக்கு அடியிலேயிருந்து தண்ணீர் எடுக்க வேண்டிய அந்தச் சட்டம் தூங்கிக் கொண்டிருக்கிறது — இந்தச் சட்டத்தையும் பொறுக்குக் குழுவிற்கு விட்டு விடலாமே என்று. அதே மாதிரி அது பொறுக்குக் குழுவிலே ஆய்விலே விடப்பட்டது.

அதனால் என்ன நிலைமை ஏற்பட்டது? நீங்கள் வெளி நடப்பு செய்து வெளியிலே இருந்தீர்கள். நீங்கள் வெளியேறியதைப் போல நாங்களும் வெளியேறியிருந்தால், அவர்கள் தங்களுடைய கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உடனடியாக அதை நிறைவேற்ற வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், எங்களுடைய நடவடிக்கையின் காரணமாக அந்த நிலை மாற்றப்பட்டது. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள் நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

அவர்கள் அன்றைக்கு சட்டத்தை நிறைவேற்றியிருப்பார்கள். தமிழகத்தில் உள்ள தொழிலாளர்கள் மீது அந்தச்சட்டம் வந்திருக்கும். ஆனால் நாங்கள் செய்த ஒரு யுக்தி, ஒரு பாராளுமன்ற டேக்டிக்ஸ் என்னவென்றால், அந்தச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற முடியாதபடி தவிர்த்துவிட்டோம். அவர்களுக்கு கௌரவப் பிரச்னையைக் காப்பாற்றும் வகையில் சலுகை கொடுத்து, அதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும் என்று சொன்னோம். அந்தக் கமிட்டி போடப்பட்ட பிறகு இதுவரையில் அது நாங்கள் எதிர்பார்த்தபடி கூடவேயில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். திரும்பவும் அதற்கான ஆர்டினன்ஸ் கொண்டு வரப்பட்டபோது இப்படி ஒரு சட்டம் பொறுக்குக் குழுவின் ஆய்விலேஇருக்கும் போது எப்படி அதே சப்ஜெக்டில் இன்னொரு சட்டத்தை ஆர்டினன்ஸாகக் கொண்டு வருவீர்கள் என்று கேட்டோம். ஆமாம் கொண்டு வரமுடியாது. ஒரே அமைச்சர் ஒரே மாதிரியான இரண்டுச் சட்டத்தைக் கொண்டு வரமுடியாது என்ற காரணத்தால், அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அந்த அவசரச் சட்டம் இன்றைக்குக் காலாவதியாகிவிட்டது. ஆகவே, இதை நாங்கள் எப்படிப் பாதுகாத்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

இருந்த அவசர சட்டமும் காலாவதியாகி விட்டது. இருக்கிற சட்டமும் பொறுக்குக் குழுவின் ஆய்விலே இருக்கிறது அந்தப் பொறுக்குக் குழு இன்றைக்கு இது சம்பந்தமாக மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறது. அதைப் பொறுத்த வரையில் நாங்கள் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அது ஒரு இயல்பான மரணம் அடைந்த சட்டம். அது அப்படி ஒரு இயல்பான மரணத்தை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பொறுக்குக் குழு போடப்பட்டிருக்கிறதே தவிர, பரிசீலனை செய்வதற்காக அல்ல என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அப்படியும் அந்தப் பொறுக்குக் குழுவில் விவாதித்து இந்த அவைக்கு வந்தால், அப்போது நாங்கள் அதைக் கடுமையாக எதிர்ப்போம். ஆகவே, நாங்கள் அன்றைக்கு இருந்த நிலையில், உடனடியாக அந்தச் சட்டத்தைக்கொண்டு வர முடியாமல் தடுப்பதற்கு தகுந்த உபாய நடவடிக்கையைத் தான் எடுத்தோமே தவிர, தோழமைக் கட்சி என்ற முறையிலே அவர்களுக்கு விட்டுக் கொடுக்கக் கூடிய வகையிலே நாங்கள் அன்றைக்கு வெளிநடப்பிலே ஈடுபடவில்லை என்பதைத்தான் கூறுகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தொழிலாளர்களுடைய பிரச்னைகளைச் சந்திப்பதில் போர்க் குணம் படைத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதை விட அதிகமான கவனம் செலுத்தி, முதலமைச்சருடைய கௌரவத்தைக் காப்பாற்றுவதிலே அக்கறை காட்டியதை, உபாயம் என்று கூறியது எனக்கு விந்தையாகத் தெரிகிறது.

**திரு. என். சங்கரய்யா :** இது முதலமைச்சருடைய கௌரவப் பிரச்னை அல்ல. நாங்கள் அதைப் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று சொல்லாமல் வெளியேறியிருந்தால், அவர்களுக்கு முன்னாலே இருந்த ஒரே நிர்ப்பந்தம், அதை உடனடியாக நிறைவேற்றியாக வேண்டும். நீங்கள் வெளியே போய்விட்டீர்கள். நாங்கள் எதிர்த்து வாக்களித்தாலும், சட்டம் வந்துவிடும். சட்டம் வந்து அதன்கீழ் தொழிலாளர்கள் வதைபட வேண்டுமா அல்லது நாடாளுமன்ற உபாயங்களைக் கையாண்டு அதைத் தள்ளிப் போட வைப்பதா என்ற நிலையில், அதை முடிவு செய்தோம் (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-30)

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை மட்டுமல்ல, இந்திய சர்க்கார் கொண்டுவந்த சட்டத்தையும் எதிர்க்கிறோம். ஆனால், இந்தச் சட்டத்தை எதிர்க்கக்கூடிய கட்டத்திலே ஐ.என்.டி.யு.சி. ஸ்தாபனம் இருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு என்ன சொன்னார்கள்? மத்திய சட்டத்தை எதிர்த்து எங்களால் வரமுடியாது என்று அவர்கள் சொன்ன





காரணத்தால் தமிழ்நாட்டிலே அந்த கூட்டுத் தொழிற் சங்கங்கள் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்கான குழுவை அமைத்திருக்கின்றது. ஆனால் எங்களுடைய விருப்பத்தைக் கேட்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற்சங்கப் பேரவை மத்திய சர்க்கார் போட்ட அந்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்கு முன்வந்திருப்பார்களேயானால் இன்றைக்கு விரிவாக அகில இந்திய ரீதியிலே அந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க முடியும்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலைத் தரக் கூடாது. காங்கிரஸ் கட்சியின் சார்பிலே உள்ள தொழிற்சங்கம்தான் அப்படிப்பட்ட நிபந்தனையை விதித்திருக்கின்றதேயல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்புடைய பேரவை அப்படிப்பட்ட நிபந்தனையை விதிக்கவில்லை. அப்படி விதித்திருந்தால் அது தவறு. நான் நிச்சயமாகச் சொல்கிறேன். மத்திய சர்க்காரானாலும், மாநில சர்க்காரானாலும் தொழிலாளர்களுக்கு விரோதமாக சட்டம் நிறைவேற்றினால் அதை எதிர்க்க திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கின்றது. அவர்கள் வேண்டுமானால் ஐ.என்.டி.யு.சி-யை விட்டுவிட்டு, வருகின்ற போராட்டத்தை நடத்தினால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரவை அதில் கலந்துகொள்ளத் தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கின்ற தவகல் என்னவென்றால் ஐ.என்.டி.யு.சி. மட்டும் என்றால் அதை விட்டுவிட்டு வந்திருப்போம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கப் பேரவைத் தலைவர்கள் அதிலே தயங்கி நின்ற காரணத்தால் உங்களுக்காகத்தான் பார்த்தோமே தவிர ஐ.என்.டி.யு.சி. வருகின்றதா இல்லையா என்ற பிரச்னை இல்லை. காரணம் அகில இந்திய ரீதியிலே அவர்கள் கொண்டு வந்த சட்டத்தினுடைய கொடுமையின் விளைவுதான் இன்று நாடு பூராவும் இருக்கின்றது. ஆனால் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், இந்த மாநிலச் சட்டத்தை மட்டும் எதிர்ப்பதற்கு முன்வரவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் நீங்கள் அன்றைக்கே ஏற்றுக்கொண்டிருப்பீர்கள் என்றால் நிச்சயமாக இந்த மாநில சட்டத்தையும், மத்திய சட்டத்தையும் சேர்ந்தே நாம் எதிர்ப்போம். இப்போது 24ஆம் தேதி நடைபெறக் கூடிய ஊர்வலத்திலேகூட திராவிட முன்னேற்றக் கழகமும், அதிலே தயக்கம் இல்லை என்றால் மத்திய சட்டத்தையும் மாநில சட்டத்தையும் சேர்த்து நாம் எதிர்ப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைக் கூற விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிலாளர் பேரவையின் சார்பிலே உறுதி கூறுகிறேன். மத்திய சட்டத்தையும், மாநில சட்டத்தையும் அதாவது தொழிலாளர்களுக்கு விரோதமாகப் போடப்பட்டிருக்கின்ற சட்டத்தை எதிர்ப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அவர்கள் வேண்டுமானால் அதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கலாம்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மிக்க மகிழ்ச்சியோடு........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைச்சட்டம் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டபோது திராவிட முன்னேற்றக் கழகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் சொன்ன இந்த ஒரு விஷயம் உண்மை. அதாவது அந்தச் சட்டம் மத்திய சர்க்காரிலே வந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்தது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஆதரித்தது. அதுதான் எங்களுக்கு இருக்கின்ற குறைகள். இந்த இரண்டு கட்சிகளும், தமிழகத்திலே மக்கள் மத்தியிலே இரண்டு பெரிய கட்சிகளாக இருக்கின்ற கட்சிகள் முன்னாலே போய் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கொண்டுவரக்கூடிய தொழிலாளர் விரோதமான சட்டங்களை எல்லாம் ஆதரித்துக் கொண்டிருந்தால் தமிழகம் என்ன ஆகும்? இறுதியாக நான் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். அதேபோல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தாங்கள் பின்பற்றக் கூடிய கொள்கையில் இருக்கின்ற மக்கள் விரோதமான அம்சங்களைக் கைவிட்டுவிட்டு அவர்களும் எதிர்த்துப் போராடுவதற்கு ஜனநாயக சக்திகளோடு சேர்ந்து போராடுவதற்குத் தயாராக வரவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சண்டை ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. நாம் அனைவருமே சேர்ந்து இன்று இந்தியாவிலே இருக்கக்கூடிய ஜனநாயக சக்திகளோடு சேர்ந்து ஒரு இடதுசாரி ஜனநாயகப் பாதைக்காகப் போராட முடியும் அதுதான் நல்ல வழி என்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.



## 7. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க முன்னர் அறிவிக்கப்பட்ட பேரவையின் அலுவல்களில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்படுகின்றன. 26-3-1983, சனிக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்பெற வேண்டிய மானியக் கோரிக்கை எண்கள் :

12. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

25. சின்கோனா.

45. காட்டுவளத்துறை.

47. செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில்நுட்பவியல்.

55. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

28-3-1983, திங்கட்கிழமை காலை எடுத்துக்கொள்ளப் பெறும்.

28-3-1983, திங்கட்கிழமை காலை எடுத்துக்கொள்ளப் பெறவேண்டிய மான்யக் கோரிக்கை எண்கள்.

33. வீட்டு வசதி.

34. நகரப்பகுதி வளர்ச்சி 26-3-1983, சனிக்கிழமை காலை எடுத்துக்கொள்ளப்பெறும்.

ஏற்கெனவே அறிவித்தபடி மானியக்கோரிக்கை எண் 29— தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் 28-3-1983, திங்கட்கிழமை மாலை எடுத்துக்கொள்ளப் பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 14-3-1983 அன்று காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

185. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு மது (அனுப்புகை) விதிகள்; தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட வெளிநாட்டு சாராவிகள் (மொத்த வியாபாரத்தின் மூலம் வழங்கல்) விதிகள் ஆகியவற்றைச் செய்வது சம்பந்த மாக, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 2-12-1982ஆம் தேதியிடப்பெற்ற 826-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

186. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது சம்பந்தமாக வணிகவரி கள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 9-11-1983-ஆம் தேதியிடப்பெற்ற 1242-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939, 16(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

187. 1981-82 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிடங்குகள் கழகத்தின் இருபத்து நான்காம் ஆண்டு அறிக்கை (தமிழ்) [1962-ஆம் ஆண்டு கிடங்குகள் கழகச் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை



இணைப்பு.

(481-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடப்பெற்ற வினா எண் 389-க்கான விடையைக் காண்க.)

வினாவில் குறிப்பிட்டபடி திருக்கோவிலின் பெயரும், ஊரும் சரியானவை அல்ல. பெரியார் மாவட்டம் பெருந் துறை வட்டம் திங்களூர் கிராமத்தில் அப்பச்சிமார் மடம் என்ற பெயரில் அழைக்கப்படும் அருள்மிகு மாசிரியாத்தாள் மற்றும் வீரணம் திருக்கோவில்கள்தான் உண்டு.

2. இத்திருக்கோவில்கள் 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டப்பிரிவின் கீழ் வராத ஒரு அறநிலையம் என திரு. எம். பி. ராஜன் என்பவரால் சட்டப் பிரிவு 63(a)-ன்படி மனுச் செய்யப்பட்டு கோவை இந்து சமய அறநிலையத்துறை துணைஆணையரால் அவரது 19-7-1978 தேதிய உத்தரவு ஓ.எ. 4/77-ல் இத்திருக்கோவில்கள் சட்டப்படி குறிப்பிடக் கூடிய அறநிலையம் அல்ல எனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

3. இந்த உத்தரவினைப் பரிசீலித்து சட்டப்படி இவ் வுத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை முடிவு செய்ய ஆணையர், தனது எ.பி. 1/82ல் சட்டப்பிரிவு 69(2)ன்படி தன்னிச்சை நடவடிக்கை (Suo Moto Proceedings) எடுக்கப் பட்டு 7-1-1982-ல் ஓர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. இந்த அறிவிப்பினை எதிர்த்து திரு. எம். பி. ராஜு என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு எண் 4095-1982 தாக்கல் செய்யப்பட்டு அதில் ரிட் பலவகை மனு எண் 6308-82K-ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் 25-5-1982-ம் நாள் உத்தரவில் ரிட் மனு முடியும்வரை எ.பி. 1/82ல் மேல் நடவடிக்கையைத் தடை செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது. ரிட் மனு மீது இறுதி தீர்ப்பு கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-13.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2. International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு 2–12–1983] [Issued 2-12-1983

2683

1984

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 14, 1983—தொகுதி XLIV எண் 5

Monday the 14th March 1983 Volume XLIV No. 5

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009

Legislative Assembly Department Fort St. George

Madras-600 009.

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

## உள்ளடக்கம்.

*14—3—1983*


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 607—641 |
| 2. வரவு-செலவுத் திட்டம் 1983–84 பொது விவாதம்—(தொடர்ச்சி.) | 641—742 |
| திரு. கே.எஸ்.ஜி. ஹாஜாசெரீப் | 641—658 |
| டாக்டர் மு. கருணாநிதி | 658—692 |
| மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் | 686—687 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 692—742 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 743 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1983 மார்ச் 14.

மாசி 30, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

எந்தப் பொருளை யார் யாரிடம் கேட்டாலும், அந்தப் பொருளின் உண்மையான இயல்பைக் கண்டறிவதே அறிவுடைமை ஆகும்.

### 1. வினாக்கள்— விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 403, 404—கடைசியில்—எடுத்துக்கொள்ளப்பெறும்.

#### கிரிக்கெட் விளையாட்டுக்கு விற்பனை வரி விதிக்கும் திட்டம்.

*வினா எண். 405—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கிரிக்கெட் விளையாட்டுக்கு விற்பனை வரி விதிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கிரிக்கெட் ஆட்டங்களில் வசூலாகும் தொகையின் மீது கேளிக்கை வரி விதிக்கப்படுவது குறித்த செயற்குறிப்பினை அரசு ஆராய்ந்தது. விளையாட்டுகளுக்கு ஆதரவு காட்டும் அரசு கொள்கையைப் பின்பற்றி, அவ்வாறு வரி விதிக்கப்படுவது தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிரிக்கெட் விளையாட்டுக்கு வரி விதிக்கப்பட வேண்டும் என்ற எனது யோசனையை முன்பு ஒரு முறை இந்த மாமன்றத்தில் பேசியபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை அரசு பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருந்தார்கள். மற்றும் ஏனைய விளையாட்டுகள் எப்படி இருந்தாலும் எப்போதும் கிரிக்கெட்டை பொறுத்த வரையில் பல இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வருகின்ற காரணத்தினால் சினிமாவுக்கு 1 ரூபாய் 2 ரூபாய் டிக்கட்டுகளுக்குக் கூட கேளிக்கை வரி விதிக்கின்ற இந்த அரசாங்கம் பல லட்சக் கணக்கான ரூபாய் வருமானம் வருகின்ற இந்தத் துறைக்கு வரி இல்லை என்று சொல்வது வருத்தமாக இருக்கிறது. அரசு மேலும் பரிசீலனை செய்து இந்த வரியை விதிக்க எண்ணம் உண்டா என அறிய விரும்புகிறேன்—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அதை நேரடியாக நான் மறுக்காமல் பரிசீலனை செய்வது நல்லது என்ற கருத்தில் பரிசீலனை செய் கிறேன் என்று சொன்னேன். பரிசீலனை செய்த பிறகு இப்படி விளையாட்டுகளுக்கு வரி விதிக்கப்படுவது அதனுடைய வளர்ச்சியை ஊக்கப்படுத்தாது என்பதை எண்ணி இன்றைக்கு கிரிக்கெட் போன்ற கார் பந்தயம் போன்ற மற்றும் கால்பந்து ஆட்டம், பேஸ்கட் பால் போன்றவைகளுக்கு வரி விதிக்க வேண்டாம் என்று அரசு இன்றைக்கு முடிவு செய்துள்ளது.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரிக்கெட் விளையாட்டு போன்ற விளையாட்டுகளுக்கு இந்த வரி போடுவது இல்லை, என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் மிகவும் வரவேற்கிறேன். மனதாரப் பாராட்டுகிறேன். கிரிக்கெட்டுக்கு வரி போடவேண்டும் என்று சொல்வது சரியல்ல. It is not a profit making organisation என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். அதாவது கிரிக்கெட் ஸ்டேடியம் இன்றைக்கு எத்த னையோ இலட்சக்கனக்கான ரூபாய் செலவு செய்து கட்டியிருக் கிறார்கள். பாங்குக்கு திருப்பிக் கொடுக்கக்கூட இன்னும் பணம் போதவில்லை. ஆகவே வருடா வருடம் டெஸ்டு மேட்சுகளை வைத்து அதிலிருந்து பணத்தைக் கட்டி வருகிறார் கள். அப்படி இன்னும் கட்டிமுடியாத இந்த நேரத்தில் வரி போடவேண்டும் என்று நினைத்தால் அது அந்த மாதிரியான நல்ல பெரிய வளர்ச்சிகளை அமுக்கிவிடும், அழித்துவிடும்





என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். அதற்கு வரி போடவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் மிகவும் வரவேற்கிறேன். இதை பாலிசி யாக கடைசிவரை கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்திங் இஸ் பர்மனென்ட். நான் கடைசிவரை செயலாக்குவேன் என்று சொல்லமாட் டேன். சில சந்தர்ப்பங்களில் எது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரே ஒரு விளை யாட்டு வீரர், அதைச் செய்யமாட்டார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரிக்கெட் மற்றும் ஏனைய விளையாட்டு களுக்கு வெளி மாநிலங்களில் விற்பனை வரி விதிக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாவட்டங்களில் அதில் ஈடுபடும் ஜனத்தொகையை வைத்து வரி விதிக்கிறார்கள். குஜராத், மராட்டியம், பஞ்சாப், மேற்கு வங்கம் மற்றும் பீகார் ஆகிய மாவட்டங்களில் கேளிக்கை வரி விதிக்கப்படுவது போன்று இப்படிப்பட்ட பந்தயங்களுக்கு வரி விதிக்கிற முறையை வைத்து இருக்கிறார்கள். விளையாட்டைபார்க்கும் ஜனத் தொகைக்கு ஏற்ற வகையில் டிக்கெட்டுக்கு தகுந்தவாறு வரி விதிக்கிறார்கள்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கிரிக்கெட் விளையாட்டு போட்டியில் இன்றைய தினம் பங்குகொள்கிறவர்கள், பணம் படைத்த குடும்பத் தினர்கள் ஏராளமாக கலந்துகொள்கிறார்கள் என்பது மக் களுக்குத் தெரியும். இப்படி சென்னையிலே கிரிக்கெட் விளை யாட்டு நடக்கும்போது சென்னை மாநகராட்சி அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே அதைச்சுற்றி பல வேலைகளைச் செய்து பணத்தை பாழ்படுத்தி ரோடுகளை விஸ்தீரணம் செய்கின்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. ஆக பணக் காரர்கள் விளையாட்டுகளிலிருந்து நகராட்சிக்கு சிறிதளவு வருமானம் வருவதற்கு வழிவகைகளைச் செய்ய அமைச்சர் அவர்களும் இந்த அரசும் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அந்த விளையாட்டிலே பங்குகொள்கிறவர்கள் பணக்காரர்களா அல்லது பார்ப்பவர்கள் பணக்காரர்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால் திறமையானவர்கள் தான் அனுபவிப்பார்கள் என்று கருதுகிறேன். பார்க்கிறவர்கள் ஏழைகளும் பார்க்கிறார்கள், பணக்காரர்களும் பார்க்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, கிரிக்கெட் விளையாட்டை பணக்காரர்கள் தான் விளையாடுகிறார்கள் என்று சொல்லமுடியாது. சாதாரண மக்களும், ஏழை எளிய மக்களும் கூட பார்க்கிறார்கள். கூட்டம் அதிகமாகி டிக்கட் கிடைக்காமல் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். சர்வசாதரணமாக சிறு டிரான்சிஸ்டர்களை வைத்துக்கொண்டு தெருக்களிலே கேட்கிறார்கள்.

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டும். அவைக்குறிப்பிலே அது இருக்க வேண்டாம்.

திரு. செ. சிவசாமி : ஆகவே அபிப்பிராயபேதம் இல்லாமல் இந்த கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த அரசு எல்லா விளையாட்டுகளையும் ஊக்குவிப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, கிரிக்கெட் அல்லது வேறு சில விளையாட்டுகளுக்கு அரசு ஊக்கம் அளிப்பது, விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிப்பது உதவி அளிப்பது, பணம் கொடுப்பது என்பது வேறு; வருவாய் என்பது வேறு. ஆகவே கோடிக்கணக்கான ரூபாய் வருகிற அந்த வருவாயிலிருந்து அரசுக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஆய்வை மேற்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : விளையாட்டில் நம்முடைய இந்தியா நாளுக்குநாள் முன்னேற்றத்திலிருந்து கொஞ்சம் பின்தங்கியிருப்பது தெரியும், இந்தியா என்றால் ஒவ்வொரு மாநிலத்திலேயும் உள்ள விளையாட்டு வீரர்களை வைத்துத்தான் இந்திய விளையாட்டு வீரர்கள் வருவார்கள். இந்த நேரத்திலே அவர்களை கொஞ்சம் ஊக்குவிப்பது கடமை என்று கருதுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



## கடல் பொறியியல் கட்டுமான ஆராய்ச்சி நிறுவனத்தை சென்னையில் நிறுவும் திட்டம்.

*வினா எண். 406—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய விஞ்ஞானம் மற்றும் தொழிலியல் ஆராய்ச்சி நிறுவனம் கடல் பொறியியல் கட்டுமான ஆராய்ச்சி நிறுவனத்தை சென்னையிலேயே நிறுவ நிலம் அரசிடம் கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்காக அரசு எவ்வளவு நிலம் கொடுக்க தீர்மானித்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், பள்ளிக்காரணை கிராமத்தில் புல எண் 657/1-ல் 224.70 ஏக்கர் நிலம் கடல் பொறியியல் கட்டுமான ஆராய்ச்சி நிலையம் நிறுவ இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, இந்த மத்திய விஞ்ஞானம் மற்றும் தொழிலியல் ஆராய்ச்சி நிறுவனம் கடல் பொறியியல் கட்டுமான ஆராய்ச்சி நிறுவனத்தை இங்கே அமைப்பதற்கு கடல் படை ஆராய்ச்சிக் கழகம் அமைப்பதற்கு தமிழகத்திலே நிலமை கொடுக்காத காரணத்தினால்தான் அது தாமதப்படுகிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் இல்லை, என்று நான் கருதுகிறேன். அதற்காக நிலம் கேட்கிறபோது 944.35 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலத்தை இலவசமாக கடல் படை ஆராய்ச்சிக் கழகம் அமைக்கவும் மாலுமிகளுக்காகவும் தமிழக அரசு கொடுக்க முயற்சி செய்து சென்னையில் நாம் இருக்கின்ற கோட்டையில் உள்ள கடல்படையைச் சேர்ந்த அதிகாரிக்கு 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தெரிவிக்கப்பட்டது என்பதையும் அதற்குப் பிறகு மத்திய அரசு சம்மதம் தெரிவிக்காததால் அதிலிருந்து மத்திய நிதியமைச்சர் இந்த திட்டத்திற்கு ஒப்புதல் சீக்கிரம் வழங்குமாறு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள் என்பதையும் 11—10—1980 அன்று கடிதம் எழுதினார்கள் என்பதையும் அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பேரரசினுடைய தலைமை அமைச்சரைப் பார்க்கிறபோது நேரடியாக

கேட்டார் அதை உறுதிப் படுத்துவதற்காக 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடிதம் எழுதினார் என்பதையும் மீண்டும் மீண்டும் பலமுறைகள் முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு நிலம் கொடுப்பதற்குச் சம்மதம் தெரிவித்தது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## புதிய ரக மல்லிப்பூச் செடிகள்.

வினா எண். 407—திரு. இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதிய ரக மல்லிப்பூ செடிகள் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பயிர் செய்யப்படுகிறது? மாவட்ட வாரியாக?*

*(ஆ) வெளி மாநிலங்களுக்கு எவ்வளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது?*

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : *(அ) புதிய ரக மல்லிகைப் பூச் செடிகள் ஏதும் பயிரிடப்படுவதில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

*(முற்பகல் 9-10)*

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாவட்டங்களில் குறிப்பாக தஞ்சை, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களில் விவசாயிகள் வறட்சியினால் பாதிக்கப்பட்டு கஷ்டத்தில் இருக்கிறார்கள். புதிய செடிகளை உண்டாக்கியவர்கள் மழை இல்லாததால் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்கும் சேர்த்துத் தான் வறட்சி நிவாரணப் பணிகள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரக மல்லிகைச் செடிகள் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பயிரிடப்படுகிறது என்ற கேள்விக்கு முயற்சிகள் எதுவும் இல்லையென்று சொன்னார்கள். பழைய ரக மல்லிகைச் செடிகளைப் பயிரிடுவது பற்றிய விவரங்கள் இருக்கின்றனவா? நம்முடைய மாநிலத்தில் பழைய ரகங்களைப் பயிரிடுவது பற்றி புதிய முயற்சிகள் ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைகள் வழக்கம் போல பயிரிடப்பட்டு வருகின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரக மல்லிகைச் செடிகளைப் பயிரிடுகிற திட்டம் அரசிடத்தில் இல்லை என்று சொன்னார்கள். மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகள் மல்லிகையை அதிக அளவிற்கு உற்பத்தி செய்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டத்தை போக்குவதற்கு, ஜாஸ்மின் தைலம் தயாரிப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதுபற்றி ஏற்கெனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்குரிய மல்லிகைப் பூக்களாக அவைகள் இல்லையென்ற வகையில் அந்த முயற்சி கைவிடப்பட்டது. குண்டு மல்லிகையை வைத்துக்கொண்டு நாம் வாசனைத் தைலம் தயாரிக்கிற முயற்சியில் ஈடுபட்டாலும் கூட அதற்கேற்ற அளவிற்கு மார்க்கெட் இல்லை என்பதை ஆராய்ந்துதான் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வகை மல்லிகைப் பூக்களில் எத்தனை வகைகள் கோயம்புத்தூர் விவசாய யூனிவர்சிட்டி ஆராய்ச்சி மூலமாக கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளால் விவசாயிகளுக்கு என்ன பலன் கிடைக்கிறது என்று அரசிடம் புள்ளி விவரங்கள் இருக்கின்றனவா வாசனைத் தைலங்கள் தயாரிப்பதற்கு ஒரு நிலையத்தை ஏற்படுத்த அரசு ஏதாவது முயற்சியை எடுத்துக்கொண்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகையைப் பொறுத்தவரையில் புதிய ரகம் எதுவும் ஆராய்ச்சியில் இல்லை. முல்லைப் பூக்களில் பாரி முல்லை, ஜாதி முல்லை என்ற இரண்டு ரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவைகள் பரவலாக பயிரிடப்பட்டு வருகின்றன. மல்லிகையிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கின்ற அந்த முயற்சி சோதனையாக மேற்கொள்ளப்பட்டு அதிலே இருக்கிற சில சிக்கல்களை எல்லாம் ஆராய்ந்து தான் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, நெல், கரும்பு போன்ற பயிர்களைக் காட்டிலும் மல்லிகை பயிரிடுவது லாபகரமாக இருக்கிறது என்பது அரசிற்குத் தெரியுமா? அதன் காரணமாக உணவுப் பொருள்களை பயிரிடும் நிலங்கள் எவ்வளவு குறையும் என்று அரசு ஏதாவது கணக்கிட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, அத்தகைய அச்சம் இல்லை. நாம் உற்பத்தி செய்கிற மல்லிகை, முல்லைப் பூக்களே கூட நம்முடைய தேவைக்கேற்ற அளவிற்குதான் இருக்கின்றன. அண்டை மாநிலங்களுக்கு கூட நாம் குறைந்த அளவிலேதான் அவைகளை அனுப்ப முடிகிறது. ஆகவே அதுபற்றி பிரச்சினை இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்சமயம் மண்டபத்தில் மல்லிகை விவசாயம் பெருமளவில் நடக்கிறது. கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலிருந்து கூட விவசாயிகள் அங்கேயிருந்து மல்லிகைச் செடிகளின் பதியங்களை வாங்கிச் செல்கிறார்கள். ஆகவே இது லாபகரமான ரகமாக இருந்தால் மாநிலம் முழுவதற்கும் இதை பரப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு ஆராயும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது பல்வேறு மாவட்டங்களில் விவசாயிகள் மல்லிகையை பயிரிடுகிறார்கள். அது லாபகரமாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆனால் சரியான மார்க்கெட்டிங் இல்லாமல் இருக்கிறது. அதற்கு இலாக்காவே நல்ல ஏற்பாட்டைச் செய்து, விவசாயிகளிடத்திலே இருக்கிற பூக்களை கொள்முதல் செய்ய அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பூக்களைப் பொறுத்தவரையில் அவைகளை மற்ற விவசாய உற்பத்திப் பொருள்களைப் போல காலதாமதமாக வைத்தனுப்பி அதன்மூலம் நாம் லாபத்தை ஈட்ட முடியாது. உடனடியாக அனுப்பி வைக்கிற அளவிற்குத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனாலே விமானத்தின் மூலமாக கர்நாடகம், கேரளம் போன்ற மாநிலங்களுக்கு அவைகளை ஓரளவிற்கு அனுப்பி வைக்கிறோம். தனிப்பட்ட முறையில் அந்த அளவிற்கு மார்க்கெட் கிடைக்கிறது. அந்த அளவிற்குத்தான் ஏற்பாட்டைச் செய்ய முடியும்.





திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மல்லிகை அதிக அளவில் உற்பத்தி ஆகிறது. இன்றைக்கு கோவில்களிலே கூட பூ பல்லக்கு செய்வதை விட்டுவிட்டு எலெக்ட்ரிக் லைட்களை வைத்து பல்லக்கு தயாரிக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, உற்பத்தியாகின்ற பூக்களை வெளி மாவட்டங்களுக்கு, வெளி மாநிலங்களுக்கு அனுப்பிதான் லாபம் பெற வேண்டுமென்று நிலைமை இருக்கிறது. பூக்களை துரிதமாக அனுப்புவதிலேதான் சிரமப்படுகிறார்கள். ஆகவே அரசு இதிலே கவனம் செலுத்தி பூக்கள் உற்பத்தி செய்கிறவர்களுக்கு உதவி செய்யமுன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பெரும்பாலும் பக்கத்து மாநிலத்துக்கு அனுப்பும்போது விமானப் போக்குவரத்தைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. ஆகவே, அதை நாம் எந்த அளவுக்குப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தி விவசாயப் பெருமக்கள் உரிய அளவிலே ஊதியம் பெறுவதற்கு அரசு வழிவகை செய்யும்.

‘வெள்ளைப் பொன்னி’ நெல் ரகம்.

*வினா எண் 408—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ‘ வெள்ளைப் பொன்னி ’ நெல் ரகம் சாகுபடி செய்ய வேளாண்மைத்துறை மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தமிழகத்தில் வெள்ளைப் பொன்னி நெல் ரகம் சாகுபடி செய்ய வேளாண்மைத் துறை சிறப்பு நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் மூலமாகப் புதிதாக நெல் ரகங்களை அறிமுகம் செய்யும்போது விவசாயிகளே அதை ஆர்வத்தோடு சாகுபடி செய்கிற வகையில், விதைகளை எல்லா விவசாயிகளுக்கும் மானிய விலையில் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அந்த வகையில்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. எல். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி ரகம் மற்ற நெல் ரகங்களை விட அதிகமான உற்பத்தி கொடுப்பதாகத் தெரிகிறது. ஆகவே, வெள்ளைப் பொன்னியை அதிகமாகப் பரப்புவதற்கு அந்த விதை வித்துக்களை எல்லா ஒன்றியங்களுக்கும் கொடுத்து, அதைப் பரப்புவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அரசின் மூலமாக ஒரு புதிய விதை ரகத்தை வெளியிட வேண்டுமானால் அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. இந்திய விதை சட்டப்படி சான்றிதழ் அளிக்கப்பட வேண்டும். அதற்குரிய மூல விதைகள் இருப்பிலே வைக்கப்பட வேண்டுமென்றெல்லாம் சில நிபந்தனைகள் இருக்கின்றன. வெள்ளைப் பொன்னி ரகத்தைப் பொறுத்த வரையிலே, அந்த வகையிலே நாம் மேற்கொள்ள முடியாத காரணத்தால் தான் அது இயற்கையாக விவசாயிகளின் மூலமாக பரிமாறிக் கொள்ளப்படுகின்றதே தவிர, இந்தத் துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, சிகப்புப் பொன்னிதான் ஆராய்ச்சித் துறையின் மூலமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வெள்ளைப் பொன்னியை அத்துறை கண்டு பிடிக்கவில்லையென்ற நிலை இருக்கிறதே, அது அரசுக்குத் தெரியுமா ? அது அமோகமாக விளைச்சல் தந்துள்ளது என்ற நிலையிலே, அதை அதிகமாக உற்பத்தி செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல நம்முடைய பல்கலைக் கழகத்தின் மூலமாக வெளியிட வேண்டுமானால், அதற்குரிய விதிகளுக்கு உட்பட்டுத்தான் நாம் வெளியிட வேண்டும். மூல விதைகளை நாம் இருப்பிலே வைத்துக் கொள்ளாமல் ஒரு ரகத்தை வெளியிடுவது என்றால், அதற்குப் பிறகு பெரிய சிக்கலில் முடியும். அந்தக் காரணத்தினால்தான் அது மேற்கொள்ளப்படவில்லை. அந்த விவசாயப் பெருமக்களுக்குப் போதிய லாபம் தரக்கூடியவைகள் எவை, எவை உண்டோ, அவைகளைப் பற்றியெல்லாம் வேளாண்மைப் பல்கலைக் கழகம் பரிசீலித்து, அந்த வகையிலே நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.





**திரு. பாபு ஜனார்த்தனன்:** பேரவைத் தலைவர் அவர்களே கிச்சிலி ரகத்திற்கு 'ஈக்குவல்' ஆக வெள்ளைப் பொன்னி ரகம் இருக்கிறது. வெள்ளைப் பொன்னியிலும் அதிக விளைச்சல் இருக்கிறது. ஆகவே, அரசு நல்லமுறையில் ஆராய்ச்சி செய்து எந்த, எந்த வகையிலே உதவி செய்ய வேண்டுமோ, அந்த, அந்த வகையிலே செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அந்த ரகத்தை நம்முடைய ஆராய்ச்சிக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை. விவசாயப் பெருமக்கள் அதிலே நல்ல விளைச்சல் இருக்கிறது என்று கண்டால், அவர்களாகவே பரிமாறிக்கொண்டு பயிர் செய்யலாமே தவிர, ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக அந்த ஏற்பாட்டைச் செய்ய இயலாது, அதன் நிபந்தனைகளுக்கு உட்படவில்லை யென்ற காரணத்தால். வேறு வகையில், ஐ.ஆர். 50 ரகத்தை நாம் பரிந்துரை செய்திருக்கிறோம்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளைப் பொன்னி ரகம் விளைச்சல் அதிகமாக இருந்தால் ஏக்கருக்கு எத்தனை குவிண்டால் நெல் கிடைக்கும், மேலும், ஏனைய பயிர்களோடு ஒப்பிடும்போது இந்த நெற்பயிரை விளைவிப்பதற்கு தண்ணீர் குறைவாகச் செலவாகுமா ? கூடுதலாகச் செலவாகுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து.** தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் இல்லை. அந்த நெல்லை விளைவித்த பெருமக்களிடம்தான் அதுபற்றிக் கேட்கவேண்டும். ஏனென்றால், இந்தத் துறையின் மூலமாகப் பரிந்துரை செய்யப்பட்டது. அல்ல. ஆனால், விவசாயப் பெருமக்களுக்கு அதைவிட அதிகமாக உதவக்கூடிய ரகங்களைத்தான் நாம் பரிந்துரை செய்திருக்கிறோம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு 1 கிலோ நெல் உற்பத்தி செய்வதற்கு 800 கிலோ தண்ணீர் வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பத்திரிகைகளிலும், ரேடியோவிலும் செய்தி வந்தது. அந்த மாதிரி, நம்முடைய அரசு குறைந்த அளவிலே தண்ணீர் செலவு செய்யக்கூடிய நெல்லை உற்பத்தி செய்வதற்கான வழிவகைகள் ஏதாவது—இதுவரையில் கண்டுபிடிக்க முடியாவிட்டாலுங்கூட—இனி மேலாவது அதற்குத் தகுந்த ஆராய்ச்சிகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தண்ணீரே இல்லாமல் எந்தப் பயிரையும் நிச்சயமாக விளைவிக்க முடியாது. ஆனால் எந்த அளவுக்குச் சிக்கனமாக, எந்த அளவுக்குக் குறைந்த அளவிலே தண்ணீரைப் பயன்படுத்தி, வறட்சியைத் தாங்கக்கூடிய அளவுக்கு நாம் பயிர் ரகங்களை விளைவிக்க முடியும் என்கிற வகையில்தான் ஆராய்ச்சிக் கழகங்கள் பணியை மேற்கொள்கின்றன. அந்த வகையிலே தான் ஐ.ஆர். 50 என்ற நெல் ரகத்தை நாம் பரிந்துரை செய்திருக்கிறோம்.

## கோவை மாவட்டத்திலுள்ள தனியார் பஸ் நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்கள்.

*வினா எண். 409—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் உள்ள தனியார் பஸ் கம்பெனிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்துள்ள குறைந்த பட்ச சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்து வருவது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் நிர்ணயித்துள்ள சம்பளம் தொழிலாளர்களுக்கு கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 208 தனியார் பஸ் போக்குவரத்து நிறுவனங்களிலும் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு ஊதியத்தை விட அதிகமாக ஊதியம் தற்போது தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9·20)

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய 208 தனியார் கம்பெனிகளில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்துள்ள குறைந்த பட்ச கூலியைக் கொடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது உண்மையல்ல. கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய தனியார் பஸ் கம்பெனிகளான எஸ்.ஆர்.டி., பி.எல்.பி., அஜெந்தா; பி.என்.கே., வி.எம்.எஸ். மற்றும் பொள்ளாச்சி போன்ற இடங்களில் உள்ள தனியார் கம்பெனிகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்து இருக்கக்கூடிய குறைந்தபட்ச கூலியை கொடுக்கவில்லை என்பது





மட்டுமல்ல அதோடு அவர்களுக்கு சட்டப்படியாகச் சேரவேண்டிய சலுகைகள் கூட கொடுக்கப்படவில்லை. இதுதான் அங்குள்ள நிலைமை. இதைத்தான் நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு சட்டப்படியான சலுகைகளை முறைப்படுத்த தனியார் நிறுவனங்கள் தயாராக இல்லாத சூழ்நிலையில், அதை அமுல்படுத்தாத கம்பெனிகளை பிராசிகுயூட் செய்து, அவர்களுடைய பெர்மிட்களை கேன்சல் செய்து அவைகளை அரசே ஏற்று நடத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திடீரென்று எக்ஸ்ட்ரிமிஸ்ட்டாக மாறிவிட்டாரோ என்று நினைக்கிறேன். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் அங்கே ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால் அதைப்பற்றி தொழிற்தகராறு எழுப்பலாம். அப்படி எழுப்பி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம். குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்பட்டு வருவதாகத்தான் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஆய்வாளர்களை தொழிற்சாலைகளுக்குச் சென்று ஆய்வு செய்யவேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். அதற்கு மேலாக, இந்த குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது 15–2–1979-ல். இது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தால் அதை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்படவில்லை என்றால், தொழில் நீதிமன்றங்களுக்குச் சென்று முறையிடலாம். அல்லது தொழிலாளர் ஆய்வாளர்கள் இடத்தில் புகார் கொடுத்தால், அவர்கள் குறைந்தபட்ச ஊதியத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு எல்லா வகையிலும் ஏற்பாடுகள் செய்வார்கள். எந்தெந்த இடங்களில் இந்த ஊதியம் கொடுக்கப்படவில்லையோ அவர்கள் ஆய்வாளர்கள் இடத்திலே புகார் செய்யலாம். தொழிற்சங்கம் நேரடியாக தொழில் நீதிமன்றங்களுக்குச் சென்று தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய பதிலில் குறைந்தபட்ச ஊதியம் அந்தக் கம்பெனிகளில் கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் கொடுக்கவில்லை என்றால் தொழிற் கோர்ட்டு, அல்லது ஆய்வாளர்கள் இடத்திலே முறையிடலாம் என்றும் சொன்னார்கள். நான் சொல்வது என்னவென்றால், இந்த கோவை மாவட்டத்திலே உள்ள எஸ்.ஆர்.டி. பி.எல்.பி., பி.என்.கே. போன்ற கம்பெனிகளிலே குறைந்தபட்ச ஊதியம் அமுலுக்கு கொண்டுவருவதற்காகத்தான்

அங்கே போராட்டம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஊதியத்தை அமுல்படுத்த வேண்டுமென்று போராட்டம் நடத்துவதாலே, அவர்களை பெர்மனென்ட் செய்யாமல், கிட்டத்தட்ட 5, 6 ஆண்டுகள் ஆகியும் அவர்கள் பெர்மனென்ட் செய்யப்படாமல் தற்காலிகக் கூலிகளாக வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதோடு தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டு வருகிறார்கள். எனவே ஆய்வாளர்களும் கவனிக்கவில்லை. தொழிற் கோர்ட்டுக்குப் போனாலும் அவர்கள் வருவதில்லை. தொழிற்தகராறு எழுப்பினாலும், கன்சிலியேசனுக்காக பஸ் கம்பெனிகளைச் சேர்ந்த ஓனர்கள் வருவதில்லை. எனவே இந்த நிலையைப் போக்குவதற்கு உடனடியாக அரசாங்கம் கண்டிப்பாக இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தை, அந்தக் கூலிச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவை போட முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம் நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதைத்தான் நான் திரும்பத் திரும்ப பன்னிப்பன்னிச் சொல்கிறேன். இந்த குறைந்தபட்ச ஊதியத்தைப் பெறுவதற்காக போராட்டம் தேவையில்லை. நேரடியாக லேபர் கோர்ட்டிலே மனுச் செய்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு வழிவகை இருக்கிறது. அல்லது ஆய்வாளர்கள் இடத்திலே புகார் செய்தால் தொழிலாளர்கள் செய்யவேண்டிய வேலையை ஆய்வாளர்களே செய்து அவர்களே அந்தப் பணத்தைப் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்வார்கள். அதுதான் சட்டம். இதில் அதற்கு வழிவகை இருக்கிறது. இது மினிமம் வேஜஸ் ஆக்டைப் பொறுத்தது. எனவே இந்தப் போராட்டத்தில் ஈடுபடவேண்டாமென்று நான் சொல்லுகிறேன். நான் சொன்ன வழிகளைக் கையாளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் தங்களுடைய சம்பளத்தை சட்டப்படி அடைவதற்கு உண்டான வழிவகைகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய சம்பளத்தை சட்டப்படி அடைவதற்கு—அவர்கள் அரசு குறிப்பிட்டு இருக்கிற நாளுக்கு மேலாக வேலை செய்தாலும், அவர்களை டெம்பரரியாக வைத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஏதாவது புகார் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. Conferment of Permanency Act. என்று ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். 24 மாதங்களில் 480 நாட்கள் வேலை செய்திருந்தால் பெர்மனென்ட் செய்யவேண்டும். அவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு முறையீடுகள் செய்வதற்காகத்தான்—தொழிற் சங்கங்கள் முறையீடு செய்யுங்கள், அரசாங்கத்திற்கு எழுதுங்கள், என்னிடம் எழுதிக் கொடுங்கள். இன்னின்ன இடங்களில் செய்யவில்லை என்று சொன்னால் அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி அவர்களை பெர்மனென்ட் செய்ய நடவடிக்கை எடுப்போம். இல்லையெனில் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வோம். அதைத் துரிதமாகச் செய்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது குறைந்தப்பட்சக்கூலி அல்லது ஊதியம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இப்போது எவ்வளவு கம்பெனிகளில் சர்க்கார் உத்தரவுப்படி குறைந்தப்பட்சக் கூலித்திட்டம் அமுலில் இருக்கிறது, எத்தனை கம்பெனிகளில் இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ? அப்படிக் கொடுக்காதவர்கள்மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் முதல் கேள்விக்கு பதில் அளிக்கும்போது சொன்ன பதிலை உறுப்பினர் அவர்கள் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். 208 நிறுவனங்கள் இருக்கின்றன. அங்கு குறைந்தபட்ச ஊதியத்திற்கு மேலாகவே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று முதன்முதலாகவே நான் சொன்னேன். அதை நான் படித்துச் சொன்னேன். அதிகமாகவே கொடுக்கிறார்கள் என்று நான் படித்துச் சொன்னேன். ஆனால் இந்த குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்து மூன்றாண்டுகள் ஆகியுள்ள காரணத்தினால் அதைத் திருத்தியமைக்க அரசு ஏற்பாடுகள் செய்யப்போகிறது என்பதையும் சொல்லியிருக்கிறேன்.

## Integrated development of Nagappattinam

Q.No.410—THIRU R. UMANATH : will the Hon. the Minister for Labour be pleased to state :--

(a) whether this Government have receive any proposal from the Nagappattinam Municipality for the integrated town improvement scheme in Nagappattinam ;

(b) if so, the details thereof; and

(c) action taken thereon ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். (ஆ) மற்றும் (இ) நாகூர் சாலையில் பேருந்து பணிமனை அருகில் மண்டிகள்/கிடங்குகள் கட்டுவதற்கும், தற்போது இருக்கும் பேருந்து நிலைய இடத்தில் தினசரி அங்காடிகள் கட்டுவதற்கும், பாரதி தினசரி அங்காடியை அபிவிருத்தி செய்வதற்கும், பொது அலுவலகம் சாலையில் கிடங்குகள் கட்டுவதற்கும் இந்த அரசு, மத்திய அரசின் பங்கையும் சேர்த்து ரூ. 14.00 இலட்சத்தை நாகப்பட்டினம் நகராட்சிக்கு அரசாணை எண் 1057, நாள் 5—12—1981-ன்படி அளித்துள்ளது. பின்னர் 1981—1982-ஆம் ஆண்டில் ரூ. 20.50 இலட்சம் உதவியாக அளிக்கப்பட்டது. மொத்தத்தில் ரூ. 34.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத் : சாங்ஷன் செய்யப்பட்டிருப்பதைப் பற்றியெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். அந்த வேலைகளைத் துவக்குவதற்கான திட்டம், அதை அமல் படுத்தி அந்த வேலைகளைத் துவக்குவது எந்த ஸ்டேஜில் இருக்கிறது ? பணம் சென்ட்ரல் கவர்ன்மென்டிலிருந்து வர வேண்டியுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வேலைகள் எந்த நிலையில் இருக்கிறது என்பதைப்பற்றிய புள்ளிவிவரம் இப்போது என்னிடம் இல்லை. 1980—81-க்கு பணம் கொடுத்தாகி விட்டது. 81—82-க்கும் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் படித்துக் காண்பித்தேன். ஆனால் எந்த வேலைகளில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவிப்பார்களானால் அந்தத் துரிதப் படுத்திச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. ரா. உமாநாத் : இதுவரையில் இந்தத் திட்டத்தை அமல்படுத்துவது சம்பந்தமாக எந்த வேலையும் நடத்த வில்லை. அதனால்தான் கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது இரண்டு ஆண்டுகள் பணம் கொடுக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். Yo.. have got the mo.ey for two y.ars. அப்படியிருந்தும்ஏன்வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை?





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள தகவலை வைத்து அந்த வேலைகளை ஏன் தொடங்கவில்லை என்பதையும், அந்தத் தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

## தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் விருத்தாசலம் வட்டத்திலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 411.—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விருத்தாசலம் வட்டத்திலுள்ள புளியூர், கன்னிய குப்பம், சந்தனகுப்பம், கே. படவங்குடி, கட்டிய நல்லூர், கொட்டாரகுப்பம், ஆலடி ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் கிடைக்க தன்னிறைவுத் திட்டத்தின்மூலம் ஏற்பாடு செய்யப் படுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : கே. பவளங்குடிக்கு ஏற்கனவே குடிநீர்த்திட்டம் செயலாக்கப் பட்டுவிட்டது. புளியூர், கொட்டாரகுப்பம், ஆலடி ஆகிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தருவதற்கான திட்டத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு விட்டன. மதிப்பீடு ஒப்புதல் பெற்ற பின்னர் பணிகள் தொடங்கப்படும். கன்னியகுப்பம், சந்தனகுப்பம், கட்டியநல்லூர் ஆகிய குடியிருப்புகளுக்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 9—30)

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திட்டமிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மார்ச்சு 31 ஆம் தேதிக்குள் இந்தத் திட்டம் முடிவுபெறாத நிலையிலிருப்பதால், இந்த வேலை அதற்குள் முடியாவிட்டால் தனி சிறப்பு நிலையைக் கொடுத்தாவது இந்த வேலையைப் பூர்த்தி செய்து, அங்கே தண்ணீர் கிடைப்பதற்கான வழியினைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில திட்டங்கள் முடிந்து விட்டன என்று சொன்னேன். சில திட்டங்கள் அரசு ஒப்புதல் பெற்ற பிறகு நடைபெறும் என்று சொல்லியிருக்கிறேன். மற்றவைகள் ஆய்வில் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறேன். இவைகள் எல்லாம் எவ்வளவு துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டுமோ அவ்வளவு துரிதமாகச் செயல்படுத்துவதற்கு இந்த அரசுக்கு மிகவும் அக்கறையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சீர்காழி நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண். 412—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகருக்கு கொள்ளிடத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது எப்போதிலிருந்து செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். உலக வங்கியின் உதவி பெற்று சீர்காழி நகரத்திற்கு ஒரு குடிநீர் வசதித் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது.

(ஆ) இத் திட்டத்திற்காகும் மொத்தச் செலவு, குடிநீர் திட்டத்திற்கான ஆதாரம் திட்டம் நடத்துவதற்கான கால அளவு ஆகிய மற்ற விவரங்கள் உலக வங்கியுடன் ஏற்படும் ஒப்பந்தம் முடிந்த பின்னரே தெரியவரும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நீண்ட நெடுங்காலமாக இந்த நிலையிலேயே இருந்து வருகிறது. அதை விரைவில் துரிதப்படுத்தி, நீண்டகாலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத சீர்காழி நகராட்சி மக்களுக்காக விரைவில் நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 75 சிறிய ஊர்களுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற உலக வங்கியிடமிருந்து உதவி பெற்றிருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தம் எல்லாம் சரியாக முடிவு பெறுமானால், 1983-ல் இத்திட்டம் செயல்படத் தொடங்கி 3½ ஆண்டுகளுக்குள் முடிவு பெறும்.



### ஜோலார்பேட்டைக்கு பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம்.

*வினா எண். 413—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார்பேட்டைக்கு அம்பலூர் அருகே உள்ள பாலாற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் இத்திட்டம் செயல் முறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம், திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசின் ஒப்புதல் பெற்று இத்திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இத்திட்டம் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். ஏற்கனவே, இந்தக் கேள்வி சட்டமன்றத்திலே வந்து, அமைச்சர் அவர்கள் ஓராண்டு காலத்திற்குள் ஜோலார்பேட்டைக்கு குடிநீர் பாலாற்றிலிருந்து வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். சொல்லி ஏறக்குறைய 3 ஆண்டுகள் ஆகியும் ஏன் காலதாமதம் செய்யப்படுகிறது? உடனடியாக இதனைச் செயல்முறைக்கு கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் திட்டத்தில், வழியோர, சாலையோர கிராமங்களுக்கு தண்ணீர் கொடுக்கும் திட்டம் இது. ஜோலார்பேட்டை முதலிய ஊர்களுக்கு, வழியோரமாக உள்ள ஊர்களுக்கு, குடிநீரை பகிர்ந்தளித்தல், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டுதல், கிளை நீரேற்றுக் குழாய் பதித்தல் போன்ற வேலைகளுக்கான திட்டம் தயாரிக்க ரூ. 13,350 அளவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அந்த மதிப்பீட்டிற்கு வாரியத்தின் ஒப்புதல் அளித்துள்ளது. ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்டு, மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின், அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும். ஆனால், இந்த புரசீஜர்கள் எல்லாம் முடிந்த பிறகு, இந்த வேலைகள் ஒழுங்காக செயல்படுத்தப்படும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதியில் ரயில்வே தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு குடிநீர் இல்லாத காரணத்தினால், அங்குள்ள ரயில்வே ஜங்ஷனுக்கு வந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு போகவேண்டிய நிலைமையிருக்கிறது. அந்தப் பெண்கள்மீது வழக்கு தொடர வேண்டிய நிலைமையிருக்கிறது. இதையெல்லாம் போக்குவதற்கு ஏற்கனவே பலமுறை நான் இந்த சட்டமன்றத்திலே கேட்டிருக்கிறேன். எனவே, இதை அரசு உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு முன்வருமா என்று மீண்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஜோலார்பேட்டையில் நானும் சில ஆண்டுகள், 23 ஆண்டுகளாக ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தவன். தொழிற்சங்கக் கூட்டங்கள் பலவற்றுக்குச் சென்று அதில் பங்கு பெற்றவன். எனவே அதைப்பற்றி எனக்கு ஓரளவுக்குத் தெரியும். அங்குள்ள ரயில்வே தொழிலாளர்களை நம்பித்தான் பொருளாதாரமே இருக்கிறது. இதையும் மனதிலே கொண்டு நமது அரசாங்கம் குடிநீர் திட்டத்தைக் கொண்டுவர முயற்சி எடுக்கும்.

திரு. டி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாலாற்றுக்கரையிலுள்ள ஆம்பலூரிலிருந்து ஜோலார்பேட்டை பேரூராட்சிக்கும், நாட்றாம்பள்ளி பேரூராட்சிக்கும் கூட்டுக்குடிநீர் திட்டம் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகக் கொண்டுவரப்படுவதாக அதிகாரிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதையும் இணைத்து விரைவாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மூலக்கேள்வி ஜோலார்பேட்டையைப் பற்றியது. எனவே தனிக் கேள்வி போட்டால், பதில் விரிவாகச் சொல்லப்படும்.

மணியாச்சி இரயில் நிலையத்தின் பெயரை மாற்ற பரிந்துரை செய்யும் திட்டம்.

*வினா எண். 414—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மணியாச்சி இரயில் நிலையத்தின் பெயரை மாற்ற மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம். கோரிக்கை பெறப்பட்டு அதன்மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

திரு. பி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மணியாச்சி ரயில்வே நிலையத்தின் பெயரை மாற்ற மாநில அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளன? தியாகச் செம்மல் வாஞ்சிநாதனுடைய புகழ் தமிழகத்திலே மங்காதிருக்குமாறு, அந்தப் பெயரை மாற்ற அரசு மீண்டும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுமக்களுடைய வேண்டுகோளை வைத்து மத்திய அரசுக்கு 1979-லே முதலமைச்சரவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அப்போது இருந்த அரசாங்கம் இந்த முறையில் செயல்படுவது முறையல்ல என்றும், சுதந்திரப் போராட்டத்திற்காக பாடுபட்ட வீரர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள் என்றும், அதன் அடிப்படையிலே ஊர்ப் பெயர்களை மாற்ற முடியாது: ஆகவே ஒருவருக்கு ஒரு விதி, மற்றொருவருக்கு ஒரு விதி என்று மாற்றுவது பொருத்தமாகாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளார்கள். 1981-லே நாம் எழுதி இருக்கிறோம். அதற்கும் அதே பதில்தான் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நடவடிக்கையில் இருக்கிறது என்று சொன்ன பதிலுக்குப் பின்னால், 1979-ல் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதைச் சொன்னார்கள். வாஞ்சிநாதன் பெயரை அந்த ரயில் நிலையத்திற்கு மாற்றினால், இன்னும் பல வேண்டுகோள்கள் விடுப்பார்கள் என்று மத்திய அரசு சொல்லியிருப்பதாகக் கூறினார்கள். வாஞ்சிநாதனுடைய பெயரையொட்டித்தான் வாஞ்சி-மணியாச்சி என்று மாற்றச் சொல்லியிருக்கிறோம். ஜனாதிபதி ஜயில்சிங் ஊருக்கு, அந்த ரயில் நிலையத்திற்கு ஜனாதிபதியின் பெயரை மாற்றிவைத்தார்கள். இவ்வாறு வாஞ்சிநாதனுடைய பெயரை வைப்பதற்கு நமது அரசு முயன்று வெற்றிபெறவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன். போராட்டங்கள் கூட நடத்தி சிறைச்சாலைக்குச் சென்றோம். அதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அதன் மூலமே மாநில அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம் என்று சொல்லி, அந்தச் செயற்குறிப்பு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அது ஊரறிந்த உண்மை என்ற காரணத்தால் நான் சொல்லவில்லை. ஏற்கனவே அந்தக் கோரிக்கை வந்து அந்தக் கொள்கை அடிப்படையில்தான், 2, 3 தடவை எழுதியிருக்கிறோம். 3 முறையிலும், முன்னாள்

பிரதமர்களிடத்திலிருந்தும், இந்நாள் பிரதமரிடத்திலிருந்தும் ஒரே பதில்தான் வந்திருக்கிறது. மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. உள்துறை அமைச்சரிடத்திலிருந்தும் அதே பதில் தான் வந்திருக்கிறது. இம்முறையை மாற்றுவதற்கு கொள்கை முடிவு சாத்தியமல்ல என்று எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு மீண்டும் எழுதுவதில் மாநில அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. எங்களுக்கும் அதில் ஆர்வம் உள்ளது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி— தூத்துக்குடி அகல இரயில் பாதைத் திட்டம்.

*வினா எண். 415—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

திருச்சி-தூத்துக்குடி இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : கரூரிலிருந்து திண்டுக்கல் வரையில் அகல இரயில் பாதை அமைப்பதற்கும், திண்டுக்கல் லில் இருந்து மதுரை வரையில் இணையான அகலப்பாதை ஒன்று அமைப்பதற்கும், மதுரையிலிருந்து மணியாச்சி வரையிலான இருப்புப்பாதையை அகலப்பாதையாக மாற்றியமைப்பதற்கும், தூத்துக்குடி-மணியாச்சி வழியாக திருநெல்வேலி வரையில் இணையான அகல இருப்புப்பாதை ஒன்றை அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

கரூரிலிருந்து திண்டுக்கல் வரை புதிய அகல இருப்புப் பாதைத் திட்டத்திற்கு வேண்டிய நிலத்தை கையகப்படுத்த ஒரு தனி துணை மாவட்ட ஆட்சியாளரும் அவருக்குத் தேவையான பணியாளர்களும், திருச்சி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங் களிலுள்ள வட்டாட்சியர் தலைமையில் அடங்கிய சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அரசு உத்தரவு வெளியிட் டுள்ளது.

30—8—1982 அன்று திருநெல்வேலியிலிருந்து மணியாச்சி வழியாக தூத்துக்குடிக்கு அகல இருப்புப்பாதை அமைப்பதற்கு மத்திய இரயில்வே அமைச்சர் மூலமாக அடிக்கல் நாட்டப்பட் டிருக்கிறது.





திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, திருச்சி-தூத்துக்குடி வழியிலே, தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரம் என்று சொல்லப்படுகின்ற மதுரை யும், தொழில் துறையில் வளர்ந்து வருகின்ற தூத்துக்குடியும் இருப்பதால் அந்த அகல இரயில் பாதை விரைவிலே முடிக்கப் பட்டால் சரக்குப் போக்குவரத்துக்கள் துரிதமாகச் செல்வ தோடு, தமிழகத்தின் பொருளாதார நிலையும் உயர்வதற் கான வழியாகவும் இருக்கிறது. அனுமதி வழங்கப்பட்டு விட் டது என்று அமைச்சரவர்கள் நல்ல செய்தியைச் சொன்னார்கள். அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேறும் என்பதையும் சொன்னால் இன்னும் கொஞ்சம் உதவிகரமாக இருக்கும்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; தலைவர் அவர்களே, அனுமதி வழங்கப்பட்டு, 30—8—1982 அன்று அடிக்கல் நாட் டப்பட்டிருக்கிறது ; வேலை துவங்கப்பட்டிருக்கிறது. முடிக் கின்ற தேதியைப்பற்றி நம்மிடத்திலே சொல்லவில்லை. அதைப்பற்றி வேண்டுமானால் மத்திய அரசாங்கத்தினிடத்திலே வலியுறுத்திச் சொல்வதற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.

திரு. பா. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் வர்களே, திருச்சி—தூத்துக்குடி அகல இரயில் பாதைத் திட் டத்திற்காக மத்திய அரசு ஒதுக்கியிருக்கின்ற தொகை என் பது எஸ்டாபிலிஷ்மென்ட் செலவுக்கே சரியாக இருக்கிறது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். உண்மையிலேயே இதை நிறைவேற்றுகின்ற நோக்கம் இருந்தால், இதற்கு அதி த் தொகையை ஒதுக்கி இருக்க வேண்டும். ஆனால் இது வரையில் ஒதுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக எந்த வேலை யும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. 1982 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டும், இப்படி ஓராண்டுக் காலத்திற்கு மேலாகியும் இதற்கான எந்த நடவடிக்கையும் மத்திய அர ின் சார்பில் எடுக்கப்படவில்லை. ஆகவே, இதை வற்புறுத்தி டனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு த்திய அரசுக்கு எழுதுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ற்கனவே இதைப்பற்றி பேசியிருக்கிறோம். நிலத்தைக் கையகப்படுத்திவிடும்போது வேலை துவங்கி விட்டது என்று ான் பொருள். ஆகவே, மத்திய அரசு நிலத்தை கையகப் படுத்தி விட்டு பிறகு அதை வீணாகப் போட மாட்டார்கள் ன்ற நம்பிக்கை இருக்கிறது. விரைவாக முடிப்பார்கள் என்ற ம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் இதை வலியுறுத்துவதற்கு ாங்கள் ஏற்கனவே தயாராக இருக்கிறோம். செய்து கொண் டிருக்கிறோம் என்பதை நான் முன்பே சொன்னேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, விரைவாக முடிப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அதே மாதிரி பல திட்டங்களைப் பொறுத்தவரையிலும் கூட நம்புகிறோம் நம்புகிறோம் என்று சொல்லிவிட்டு, பிறகு சமீபத்திலே மத்திய அரசு அதற்கு அனுமதி கொடுப்பதில்லை, உதவி செய்வதில்லை உதவி செய்வதில்லை என்று இப்பொழுது வரிசையாக வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நம்புகிறோம் என்று சொல்வதற்கு உறுதியாக, ஸ்தூலமாக என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது, எந்த நம்பிக்கையோடு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசாங்கம் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாகத்தான் இதற்கான அனுமதியே வழங்கப்பட்டிருக்கிறது ; அடிக்கல்லாவது நாட்டியிருக்கிறார்கள். நம்புகிறோம் என்று சொல்வதற்கு இரண்டு வகையான பொருள் இருக்கிறது. இது முடியுமென்று நாங்கள் நினைக்கிறோம். திட்டவட்டமாகச் சொல்லவில்லை. நம்புகிறோம் என்றால், நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும் வலியுறுத்துகிறோம், கடிதம் மூலமாகவும் எழுதுகிறோம், நேரிலே பார்க்கும்பொழுதும் பேசுகிறோம். இதைப்பற்றி வேறு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் நினைக்கிறார்கள் என்று தெரியவில்லை. வேறு விதமான நடவடிக்கை இருந்தால் அதைப்பற்றிச் சொன்னால் அது நியாயமாக இருந்தால் அதையும் எடுக்கலாம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு, வேலை துவங்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் கூறுகின்ற நேரத்தில் அதற்கான அஸ்திவாரக் கல்லை நாட்டி விட்டதாலேயே வேலை துவங்கி விட்டது என்றுதான் பொருள் என அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். துவங்கப்பட்ட இந்த வேலை முடிவதற்கான காலத்தை நம்முடைய அமைச்சரவர்கள் கூற இயலாது. ஆகவே, விரைவில் செய்து முடிக்கப்படும் என்று அவரது பதிலை நம்பிக்கையோடு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை எந்த அளவிற்கு நடைமுறையிலே பலன் அளிக்கும் முறையில் இருக்கிறது ? இந்த ஆண்டு இரயில்வே நிதிக்கு இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் அறிவிக்க இயலுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்த விளக்கம் இப்பொழுது என்னிடத்திலே இல்லை. தனியாக அதற்கான ஏற்பாட்டைச் செய்கிறேன்.





முசிறிப் பகுதியில் ஓடிக்கொண்டிருக்கும் தனியார் பேருந்துகள்.

*வினா எண். 416—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறிப் பகுதியில் ஓடிக் கொண்டு இருக்கும் இரண்டு தனியார் பேருந்துகள் அவைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள வழித்தடங்களில் முறையாக செல்லுவதில்லை என்று பொதுமக்களிடமிருந்து புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ மற்றும் ஆ) விவர அறிக்கை ஒன்று £ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், முசிறியிலிருந்து மனவாசி வரையில் செல்லும் தனியார் பஸ் மாயனூரிலேயிருந்து இரண்டு கிலோ மீட்டர் செல்லாமல் மாயனூரிலேயிருந்தே திருப்பிக் கொண்டுவந்து விடுகிறார்கள். இதேபோன்று முசிறியிலேயிருந்து பஞ்சப்பட்டிக்குச் செல்கிறது. அந்த பஸ்ஸையும் இடையிலேயே திருப்பிக் கொண்டு வந்து விடுகிறார்கள். இதுமாதிரி பஸ்கள் இடையிலேயே திரும்பி வந்து விடுவதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படித்தான் நடவடிக்கை எடுத்து வருகிறோம். மேலும் தொடர்ந்து இத்தகைய நிலைமைகள் இருக்குமானால் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

---

£ 744–747ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

கேரள மாநில போக்குவரத்துக் கழகத்திற்கு பேருந்துக் கூண்டுகள் கட்டித்தரும் திட்டம்.

* வினா எண். 417—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உள்ள அரசு போக்குவரத்துக் கழக நிறுவனங்கள் கேரள மாநில போக்குவரத்துக் கழகத்துக்கு பஸ் கூண்டுகளைக் கட்டித்தர ஒப்பந்தம் செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

(இ) அதனால் போக்குவரத்துக் கழகங்கள் பெறும் லாபம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) கேரள மாநில போக்குவரத்துக் கழகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி பாண்டியன் போக்குவரத்துக் கழகம் 40 பேருந்துகளுக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 40 பேருந்துகளுக்கும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் 20 பேருந்துகளுக்கும் கூண்டுகளைக் கட்டிக்கொடுக்கும்.

(இ) பேருந்துக்கூண்டுகள் கட்டுவதற்கான பணிகள் முடிவு பெற்ற பின்னரே இதனால் கிடைக்கப்பெறும் ஆதாயம் எவ்வளவு என்பது திட்டவட்டமாகக் கணக்கிட்டு கூற இயலும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழ் நாட்டில் இருக்கின்ற நம்முடைய அரசுப் போக்குவரத்திற்குத் தேவையான கூண்டுகளை தனியாரிடத்தில் கட்டிக் கொண்டிருக்கும் பணி ஒரு பக்கம் நடந்து கொண்டு இருக்கும் நேரத்தில், கேரள அரசுக்காக நாம் கூண்டுகளைக் கட்டிக்கொடுக்கக் காரணம் என்ன ? அதனால் ஏதேனும் லாபம் உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, கேரள அரசுக்கு பேருந்துக் கூண்டுகள் கட்டிக்கொடுக்கின்ற நேரத்தில், தனியாரிடத்தில் நம்முடைய பேருந்துகளுக்கு கூண்டுகள் கட்டும் பணி ஒப்படைக்கப்படவில்லை. அந்தப் பணியைச் செய்து கொண்டு இருக்கின்ற நம்முடைய தொழிலாளர்கள் அந்த நேரத்தில் கொஞ்சம் வேலை இல்லாத காரணத்தால், இந்த வேலையை நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டோம். எனவே, பக்கத்து மாநில அரசுக்கு நம்முடைய



அரசின் சார்பில் இருக்கும் போக்குவரத்துக் கழகங்கள் கூண்டுகள் கட்டிக்கொடுத்தால் அதனால் நமக்குப் பெருமை என்ற அடிப்படையிலும், ஒவ்வொரு கூண்டுக்கும் ஏறத்தாழ 15,000 ரூபாய் இலாபம் கிடைக்கும் என்ற கணக்கிலும் அதைச் செய்து இருக்கிறோம். அந்த வகையில் இதை ஒரு பெருமையாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நம்முடைய கார்ப்பரேஷன் தனியாரிடத்தில் ஒரு கூண்டு கட்டுவதற்கு எவ்வளவு தொகை வழங்கியது ? நம்முடைய கார்ப்பரேஷன்கள் கேரள மாநிலத்திற்கு கட்டிக்கொடுக்கின்ற கூண்டுகளுக்கு நாம் எவ்வளவு தொகை வாங்குகிறோம் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சாதாரண வண்டிகளுக்கு ஏறத்தாழ 90,000 ரூபாய் நாம் பக்கத்து மாநிலத்திற்குக் கட்டிக் கொடுக்கின்ற கூண்டுகளுக்கு வாங்குகிறோம். தனியார்களுக்கு நாம் எவ்வளவு கொடுத்தோம் என்கிற கணக்கு என்னிடத்தில் இல்லை. காரணம் கொஞ்சம் காலத்திற்கு முன்பு அது கொடுக்கப்பட்டுள்ளது. சமீபகாலத்தில் நாம் தனியார்களுக்குக் கொடுப்பதை நிறுத்தி இருக்கிறோம்.

சேலம் மாவட்டத்திலுள்ள போலி குடும்ப அட்டைகள்

*வினா எண். 403—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் போலி குடும்பக் கார்டுகள் அதிக அளவில் இருப்பதாக 1981-ம் ஆண்டு பொது மக்களிடம் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1981-ம் ஆண்டில், 2,51,931 போலி குடும்ப அட்டைகள் சேலம் மாவட்டத்தில் நீக்கப்பட்டன. 1982-ம் ஆண்டு வீடுதோறும் சென்று கணக்கெடுப்பு செய்து புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே சொன்னேன். அதிகமாக வைத்திருக்கிற கார்டுகள் பிடிக்கப்படுகின்றன. அதிகமாக இருக்கிற கார்டுகளை கணக்கிட்டு, உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம்.

### தமிழகத்திற்கு மத்திய அரசால் ஒதுக்கப்படும் மண்ணெண்ணையின் அளவு.

*வினா எண் 404—திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் ஏற்பட்டுள்ள மின்வெட்டு பாதிப்பு காரணமாக அதிக அளவு மண்ணெண்ணெய் ஒதுக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) மத்திய அரசின் பதில் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்

(ஆ) அண்மையில் ஏற்பட்டுள்ள மின்வெட்டு பாதிப்பு காரணமாக மாதம் ஒன்றுக்கு 10,000 மெட்ரிக் டன் மண்ணெண்ணெயை தமிழகத்திற்கு அதிகமாக ஒதுக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது.

(இ) மத்திய அரசு ஜனவரி 83-ம் மாதத்திற்கு மட்டும் 2,000 மெட்ரிக் டன்கள் மண்ணெண்ணெயை தமிழகத்திற்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளது.

### தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான படகு கட்டும் தளங்கள்

*குறுகிய கால வினா எண். 8—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான சென்னை, நாகை மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் உள்ள படகுகட்டும் தளங்கள் மூடப்பட்டனவா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது மூடப்பட்டது?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஈ) அவர்களுக்கு மாற்று வேலை வழங்க அரசு ஏதேனும் ஏற்பாடு செய்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் கீழ் சென்னையில் இரண்டும் நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரத்தில் ஒன்றுமாக நான்கு படகு கட்டும் தளங்கள் செயல்பட்டு வந்தன. இந்த நான்கு படகு கட்டும் தளங்களும் தொடர்ந்து நடத்தப்பட்டால் அவற்றில் நட்டமும் அதனால் அரசு பணவிரயமும் அதிகரித்துக் கொண்டு போகும் என்று காணப்பட்டது. எனவே, நாகப்பட்டினம் உள்ளிட்ட நான்கு படகு கட்டும் தளங்களும் 20—10—82 அன்று மூடப்பட்டன.

(இ) படகு கட்டும் தளங்களை மூடியதால் பணி இழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 566.

(ஈ) பணி இழந்த தொழிலாளர்களுக்கு அரசு சார்புள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள், வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மாற்று வாரியங்கள், சிறு தொழில் கழகம், மாநகராட்சி, நகராட்சி ஆகியவற்றில் முன்னுரிமை அளித்து காலியிடம் ஏற்படும்போது பணி இழந்த தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்புகள ஏற்படுத்தப்படும். மேலும் அரசு துறைகளிலும் காலியிடம் ஏற்படும் போது பணி இழந்த தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளித்து பணியில் அமர்த்த ஆணை வெளியிடப்பட்டுள்ளன

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, இந்த படகு கட்டும் தளத்தில் 500-க்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். நஷ்டத்தில் இயங்குவதால் அதை மூடுகிறோம் என்று சொல்கிறார்கள் ; அதில் நான் குறுக்கிடவில்லை. ஆனால் இந்த படகு கட்டும் தளத்திலே வேலை செய்யும் தொழிலாளர்கள் நிலைமை பற்றி கடந்த 3 ஆண்டுகளாக நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும் அடிக்கடி கேட்டு, அவர்களுக்கு மாற்றுவேலை தரப்படுமா என்று கேட்டு வந்தோம். ஒரு கேள்விக்கு நிதி அமைச்சர் அவர்கள் வேலை தந்த பிறகு தான் அந்த படகு கட்டும் தளம் மூடப்படும் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். ஆனால் கடந்த 5, 6 மாதங்களாக அவர்களுக்கு வேலையில்லை, அவதிப்படுகிறார்கள் ; நடுத்தெருவில் பிச்சைக்காரர்களைப்போல் அலைகிறார்கள். ஆகையால் சர்க்கார் உடனடியாக அவர்களுக்கு மாற்றுவேலை கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, போலிக் கார்டுகள் நடமாடுவதைத் தடுப்பதற்காக சேலம் மாவட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதுபோல், எல்லா மாவட்டங்களிலும் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்க அரசு தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, அவற்றைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போலி குடும்ப அட்டைகள் பல்வேறு மாவட்டங்களில் ஏராளமாகப் பெருகிவிட்டன. அந்த அடிப்படையில் ஆங்காங்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, போலிக் குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. இருப்பினும் அவற்றைக் கண்டுபிடிப்பதிலே பல்வேறு சங்கடங்கள் இருந்ததால், 1982-ஆம் ஆண்டு புதிய குடும்ப அட்டைகள் வழங்க முடிவு எடுக்கப்பட்டது. அந்தப் புதிய குடும்பக் கார்டு பாஸ் புக் மாதிரி தரவேண்டும் என்று முடிவு எடுத்து கொடுத்திருக்கிறோம். இதன் காரணமாக பல இடங்களில் போலிக் குடும்பக் கார்டுகள் பெருவாரியாகக் குறைக்கப்பட்டு விட்டன.

அந்த வகையிலேதான் சேலம் மாவட்டத்தில் 2,51,931 போலிக் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தமாதிரியான நடவடிக்கைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எடுக்கப்பட்டுள்ளன. இப்போது சேலம் மாவட்டத்தில் மொத்தம் 9,43,000 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்போதும் ஒரு 77 குடும்ப அட்டைகள் போலிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டன. அதற்குக் காரணம், வெளிமார்க்கட்டில் விற்கப்படும் விலையைவிட குறைவாக நம்முடைய நுகர்பொருள் வாணிப ரேஷன் கடைகளில் பொருள்கள் கிடைக்கின்றன. மண்ணெண்ணெய் ரேஷன் கடைகளில் 1 ரூபாய் சில்லறைக்கு விற்கிறபோது, வெளி மார்க்கட்டில் 3 ரூபாய் சில்லறை என்ற அளவிற்கு விற்கப்படுகிறது. இதனால் தான் போலிக் குடும்ப அட்டைகள் தயாரிக்கப்படுகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், இங்கேயிருந்து பொருள்களை குறைந்த விலைக்கு வாங்கி வெளியே விற்கும் நிலைமையும் இருக்கிறது. இதைக் கண்காணிக்க அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 9.50)

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, குடும்பக் கார்டுகளை அடமானம் வைப்பதோ, அடமானம் வாங்குவதோ போன்ற காரியங்களுக்கு தண்டனை கொடுக்க அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? ஏதாவது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒரு கார்டுக்கு மேல் 5 கார்டு, 10 கார்டு 15, கார்டு, 20 கார்டு என்று கொண்டுவந்து தந்தால் அந்தக் கார்டுகளை பறிமுதல் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறோம். அந்த வகையில் தான் நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 கார்டு வைத்திருந்த ஒருவரிடமிருந்து அந்தகார்டுகளை வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்கள். அந்த வகையிலான நடவடிக்கை இப்போது இருக்கிறது. மொத்தமாக கொண்டுவந்து கொடுத்தால் அந்தக் கார்டுகளை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்று எல்லா கடைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, இந்த போலி கார்டுகளைப் பெறுவதை தடுப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். கார்டுகளின் எண்ணிக்கை ஒரு கடையில் அதிகமாக இருப்பதும் இதற்கு ஒரு காரணம் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். ஆகவே, கார்டுகளின் எண்ணிக்கையைக் குறைத்து ரேஷன் கடைகளை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பெரும்பாலும் எல்லாக் கடைகளிலும்—கிட்டத்தட்ட 11,000-க்கு மேற்பட்ட கடைகளில் 500 கார்டுகளுக்கு உட்பட்டுத்தான் இருக்கின்றன. வேறு பல கடைகளில் 700, 1,000, 1,500, 2,000 கார்டுகள் என்ற அளவில் இருக்கின்றன. 2,000-க்கு மேல் போகக்கூடாது என்ற முறையை வைத்திருக்கிறோம். ஆனால் சென்னை போன்ற பெரிய நகரங்களில் சில இடங்களில் 2000க்கு மேற்பட்டும் கார்டுகள் இருக்கின்றன. அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உடனடியாகப் பிரித்து செயல்படுத்த முடியாததற்கு சில சங்கடங்கள் இருக்கின்றன. முக்கியமான சங்கடம் என்ன வென்றால் இரண்டாகப் பிரித்து வைப்பதற்கு போதுமான இட வசதி கிடைப்பதுதான். படிப்படியாக, இடம் கிடைக்க கிடைக்க 2000-க்கு மேற்பட்ட கார்டுகள் இருக்கிற கடைகளை இரண்டாகப் பிரிக்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. டி. குலசேகர் : தலைவரவர்களே, குடும்பக் கார்டுகளை அதிகமாகப் பதிவு செய்துள்ள சில ரேஷன் கடைகளில் அதிகமான ரேஷன் பெற்று அவர்கள் வெளியே விற்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி அதிகமாக ரேஷன் கார்டுகள் பெற்று, தவறு செய்கிற கடைக்காரர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1983 மார்ச் 14

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே படித்துக் காட்டியது போல, அவர்களுக்கு முன் உரிமை தர வேண்டும் என்கிற தாக்கீது எல்லாத் துறைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு துறைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போது உணவு மற்றும் விவசாயத்தில் 10 பேர்களுக்கும், மீன் துறை இயக்குனர் அலுவலகத்தில் 6 பேர்களுக்கும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தில் 2 பேர்களுக்கும், காதி மற்றும் கிராம வளர்ச்சி வாரியத்தில் ஒருவருக்கும், அக்யூமேரின் பிரைவேட் லிமிடெட்டில் 8 பேர்களுக்கும், மொத்தம் 27 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டு, பணியில் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தகுதி திறமைக்கு ஏற்ப வேலைகள் தரப்பட்டிருக்கின்றன.

அப்படி தருகிறபோது, வயது, படிப்பு போன்றவைகளில் விதிமுறைகளைக் கூட தளர்த்தி தரலாம் என்பதில் அரசு இணக்கமாக இருக்கிறது. ஆனாலும் கூட 1980லேயிருந்து கவனித்து வருகிறபோது 80 லட்சம் நட்டத்திலே இருந்தது. அந்தப்படகு கட்டும் வேலைகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்கான நோக்கத்தோடுதான், மூட வேண்டாம் என்று தள்ளிப் போட்டுக் கொண்டே வந்து, அதற்கென்று பல்வேறு குழுக்கள் எல்லாம் அமைத்தும்கூட, அந்த நட்டம் 1 கோடியே 62 லட்சத்தை எட்டிவிட்ட காரணத்தினால்தான், அதை தொடர முடியாத அவசியம் ஏற்பட்டது அதிலே பணி புரிபவர்கள் பெரும்பாலோர் மீனவர்கள் அல்லாதோர்தாம். இருந்தாலும் கூட, அவர்களுடைய வேலை வாய்ப்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைமையிலேதான் அரசு கவனித்துக் கொண்டு வருகிறது.

அவர்களை வேலையை விட்டு நீக்கும்போதுகூட, அவர்களுக்கு பணிக்கொடை 27 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டது. ஆட்குறைப்பு—இழப்பு என்கிற வகையில் அதே மாதிரி 27 லட்சம் சில்லரை அளிக்கப்பட்டது. மிகை ஊதியம் என்ற அளவில் 3 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் தரப்பட்டது. 3 மாதங்களுக்கு முன்னாலே அறிவிப்பு கொடுப்பதற்கு பதிலாக 1 மாதச் சம்பளத்தை முன் கூட்டியே வழங்க வேண்டும் என்று சொன்னதினாலே 4 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டது. 1—10—1982 முதல் 19—10—1982 வரையிலான, காலத்திற்கு சம்பளம் இரண்டு இலட்சத்து 77 ஆயிரம், விடுமுறை சம்பளம் 3 லட்சத்து 53 ஆயிரம் தந்து, மொத்தம் 68 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை, ஏற்கனவே உள்ள நட்டத்தோடு இதுவும் சேர்ந்தாலும், அவர்களுடைய வாழ்வு கவனிக்கப்பட வேண்டும் என்று தரப்பட்டது. இப்ம் கூட, அரசு துறைகளுக்கும் மற்ற துறைகளுக்கும், காலி இடங்கள் ஏற்படுமானால் அவர்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.



1983 மார்ச் 14]

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவர் அவர்களே, நமது அரசு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் தருவதற்கான திட்டத்தின் கீழ் நிதிநிலை அறிக்கையின்கீழ் 15 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. இதனால் வேலை வாய்ப்புகள் எல்லோருக்கும் கிடைக்கும் என்று தமிழக மக்கள் எதிர் பார்த்துக் கொண்டு இருக்கும் இத்தகைய சூழ்நிலையில், ஏற்கனவே வேலையில் இருப்பவர்கள், வேலையை இழந்து அன்-எம்பிளாய்ட் ஆகக் கூடிய அளவுக்கு, இந்தப் படகு கட்டும் தளங்கள் மூடப்பட இருப்பது வருந்தத்தக்கது. அது மட்டுமல்லாமல் 100-க்கணக்கான பேர்கள் இன்னும் கணக்கு செட்டில்மென்ட் கூட ஆகாத நிலையில் இருக்கிறார்கள். முன்பு ஒருமுறை எங்களுடைய கலைஞர் ஆட்சிக் காலத்திலே கோவை மில் தொழிலாளர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டபோது (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது கேள்வி நேரம். தாங்கள் பட்ஜெட் உரையில் ஆரம்பித்து, பழைய வரலாறுகளைச் சொல்லப்போய்விட்டீர்கள். சுருக்கமாக, கேள்வியை ஒட்டி துணைக் கேள்வி கேளுங்கள்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் கோயம்புத்தூர் மில் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்ட போது, அவர்களுக்கு முதல் அமைச்சர் நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்பட்டது. அது போல, இப்போதும் அவர்களுக்கு வழங்கும் வகையில் ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டது போல அவர்கள் வெறுங்கையோடு வீட்டுக்கு அனுப்பப்படவில்லை. எந்த அளவுக்கு அவர்களுக்கு காம்பன்சேஷன் வழங்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் முன்பே சொல்லியிருக்கிறேன். வருடம் ஒன்றுக்கு 200 படகுகள் கட்டப்பட வேண்டிய தளம் அது. 3 ஆண்டுக் காலத்தில் 600 படகுகள் கட்டியிருக்க வேண்டும். ஆனால் கட்டப்பட்டது 20 தான். அந்த 20 கூட விலை போகாத நிலைதான் இருக்கிறது. இதில் படகு கட்டுவதற்கு 1 இலட்சத்து 61 ஆயிரத்து 642 ரூபாய் செலவாகிறது என்றால் விற்பனைக்கு 78,000 தான் போகிறது. ஆகையினால்தான் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அனுதாபத்தோடு அவர்களுக்கு வேறு ஏதாவது பணிகள் கிடைக்கும் வகையில் அரசு மாற்று ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டுதான் வருகிறது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கும் ஏதாவது செய்ய முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய பிரச்னையை அனுதாபத்தோடு அரசாங்கம் கவனிக்கும் என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலேதான் ஆரம்பத்திலேயே ஒரு அஷ்யூரன்ஸ் இங்கே வைக்கப்பட்டது. மூடுவதற்கு முன்னாலே அவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திவிட்டுத்தான் மூடப்படும் என்று. ஆனால் அந்த அஷ்யூரன்ஸ் இப்போது வயலேட் செய்யப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் குறிப்புகளில் இருக்கிறது. நான் எக்ஸ்ட்ராக்ட் எடுத்துக் காட்டுகிறேன். 550 பேர்களில் சுமார் 28 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய கேள்வி அந்தந்த துறையினரிடம் வேகன்சி இருந்தால் இவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அவர்களிடமே டிஸ்க்கிரிஷனுக்கு விடுவதற்கு பதிலாக,—இது முன்னவர் அவர்களுடைய டிபார்ட்மெண்ட் அந்த பணியாளர்களிடம் அவருக்கு ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கிறது.—ஆகவே, ஏன் அவரே அந்தந்த துறைகளில் எங்கெங்கே வேகன்சிகள் இருக்கின்றன என்கிற விவரங்களை கலெக்ட் பண்ணி .................. (மணி அடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[முற்பகல் 10-00].

திரு. ரா. உமாநாத் : ஆகவே அந்த வேகன்சியைக் கால்ஃபார் பண்ணி—ஏராளமான வேகன்சிகள் இந்தக் கழகங்களிலே இருக்கும். 550 பேர்களிலே 28 பேர்களுக்குக் கொடுத்ததுபோக மீதி உள்ளவர்களுக்காக அவர்களை இந்த வேகன்சியிலே ஃபில் அப் பண்ணுவதற்காக ஒரு சஜஷனோடு ஏன் நீங்கள் ஒரு முடிவு எடுக்கக் கூடாது? அந்த வேகன்சிகளை கால் ஃபார் பண்ணி ஏன் நீங்களே வேலை கொடுக்கக் கூடாது இந்தக் கழகங்களில்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் சட்டமன்றப் பேரவையில் விளக்கம் தந்தபோது கூட நான் குறிப்பிட்டது கூடுமான வரையில் அவர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாமல் இருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே அந்த வகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். அவர்களைத் தவிக்கவிட வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. ஆகவேதான் 3 ஆண்டு காலம் கூட கூடுதலாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தத்



துறை மீனளத் துறையின் அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த சர்குலர் எல்லாம் விடப்பட்டு இருக்கின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களை அந்த வகையிலே தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக இந்தத் துறைக்கு அனுப்பி வேலை வாய்ப்பினை இந்தத் துறையின் மூலமாகச் செய்யலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) வரவு-செலவுத் திட்டம் 1983-84 பொது விவாதம் —தொடர்ச்சி

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த சபை முன் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். அவர்கள் 1983–84 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 95.52 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த வருஷம் கடைசியில் அல்லது அடுத்த வருஷம் ஆரம்பத்தில் 89.02 கோடி என்று சொல்லி இருக்கிறார்கள். ஆக மொத்தம் பற்றாக்குறை 184.55 கோடி ரூபாய். அதில் 26 கோடிக்கு டாக்ஸஸ் போட்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பற்றாக் குறையினை 159.55 கோடியாகக் குறைக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகையை எப்படி அவர்கள் சரிக்கட்டப் போகிறார்கள் என்ற செய்தியை இந்தச் சபைக்கு முன் அவர்கள் வைக்கவில்லை. சாதாரணமாக இவ்வளவு பற்றாக்குறை வந்தது என்றால் எப்படி அந்தப் பற்றாக்குறையை அவர்கள் சமாளிக்கப் போகிறார்கள்? அதற்கு வேறு ஏதாவது புதிய வழி வகைகள் உண்டா என்று அவர்கள் அது பற்றி இங்கே சமர்ப்பித்திருக்க வேண்டும். ஒரு வேளை வரவைக் கம்மியாகக் காட்டி செலவை அதிகமாகக் காட்டி கடைசியில் இந்த வகையில் நாங்கள் இந்த பட்ஜெட்டைச் சமாளித்து விட்டோம் என்று சொல்வதற்காக இந்த மாதிரி செய்திருக்கிறார்களா என்பது தெரியவில்லை.

But, whatever may be Sir, this is the elected body and I think we have got every right to request the Hon,ble Minister for Finance to tell us and take us into confidence how he is going to bridge this deficit.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரிப்] [1983 மார்ச் 14

134 கோடி ரூபாய் சத்துணவுக்காகவும் 22 கோடி ரூபாய் ட்ரை லெட்ரினுக்காகவும் செலவு பண்ணுவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் பற்றி நாங்கள் வரவேற்று இருக்கிறோம். அது நல்ல திட்டம். ஆனால் அதில் பல கஷ்டங்கள் நேரிடுகின்றன என்றெல்லாம் நாங்கள் மிகவும் வேதனைப் படுகிறோம். குழந்தைகளுக்கு அளிக்கின்ற இந்தத் திட்டத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஜாக்கிரதையாக இருந்து சுத்தமாகச் செய்ய வேண்டும். அப்போதுதான் சரியாக இருக்கும். 1974-ம் வருஷத்திலே மத்திய அரசு எல்லா மாநில அரசுகளுக்கும் குழந்தைகள் பெறக் கூடிய தாயார்களுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த அரசு-எக்ஸ்பெக்டட் மதர்ஸ்க்கு என்று ஏதாவது சத்துணவு கொடுத்திருந்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை. அதைப் பற்றியும் அவர்கள் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 22 கோடி ரூபாய் ட்ரை லெட்ரினுக்காகச் செலவிடப்படுகின்றது.

I doubt about the efficacy of the scheme. I do not know, **Sir, who** has advised the Hon'ble Minister for Finance that this scheme should be taken up for immediate consideration. I am aware that most of the Municipalities—almost 106 in Number—are devoid of any sanitation. There are only open drainages in interior rural areas and in the Municipalities, as well as in mofussil. There is no water, no sanitation, no road, no lighting. Instead of trying to look after all these things, which will go to the improvement of the people, I do not know why this scheme of construction of latrines at a cost of Rs. 22 crores should have been taken up and why this scheme should be given priority. அதிலும் இப்போது தண்ணீர் பெரிய கஷ்டமாக இருக்கிறது. இந்த ட்ரை லெட்டிரின் நல்ல விதமாக மெயின்டெயின் பண்ணினால் ஒழிய இது சுத்தமாக இருக்கவே முடியாது. மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடத்தியபோது எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாயை செலவு செய்து இந்த டிரை லெட்டிரின்களை கட்டினீர்கள். அவை எல்லாம் உபயோகமாக இருக்கிறதா? மக்கள் அவைகளை சரியான முறையில் உபயோகப்படுத்தினார்களா என்பதை அரசு ஆராய்ந்து இருந்தால் அமைச்சர் அவர்கள் இந்த ஸ்கீமை எடுத்து இருக்க மாட்டார்கள். இந்த ஸ்கீமை என்ன காரணத்திற்காக எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதைப்பற்றியும் அரசாங்கம் நன்கு கூற வேண்டும். ஏன் இப்போது முனிசிபாலிட்டியில் இருக்கக்கூடியவர்கள் பல கஷ்டங்களை நிவர்த்தி பண்ணாமலேயே, இதற்கு மட்டும் துரிதமாக இதை ஒரு எக்ஸ்பீடியஸ்ஸாக கொண்டு வந்தது எனக்கு ஏன் தெரியவில்லை.



1983 மார்ச் 14] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரிப்]

ஆரம்பத்திலேயே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் உணவு பற்றாக்குறை, குடிநீர் பற்றாக்குறை, மின்சார பற்றாக்குறை இவைகள் எல்லாம் இருந்து வருகின்றன என்று. 2 வருட காலமாக மழை பொய்த்ததன் காரணமாக இவைகள் எல்லாம் வந்திருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் மிகுந்த அஜாக்கிரதையின் காரணமாகத்தான் இப்போது உணவு பற்றாக் குறை வந்திருக்கிறது. 2 வருட காலமாக மழை பொய்த்து வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். அப்படியிருந்தும் கூட நீங்கள் முன்னெச்சரிக்கையில்லாமல் உணவு எவ்வளவுக்கு எவ்வளவு சேமித்து வைக்க வேண்டுமோ அவ்வளவுக்கு அவ்வளவு சேமித்து வைக்காமல் இப்போது பற்றாக்குறை இருக்கிறது என்று நீங்கள் சொல்லி வந்தால் இது மிகவும் ஒரு துர்பாக்கியமான நிலை. சென்டிரல் கவர்மெண்டு 80 ஆயிரம் டன் அரிசி கொடுக்க வேண்டும் 40 ஆயிரம் டன் வீட் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். சென்ட்ரல் கவர்மெண்டு ஒவ்வொரு மாநிலத்தில் லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களை பயிரிட்டு அதில் அவர்கள் சேமித்து கொடுக்க வில்லை. ஒவ்வொரு மாநிலமும் அவர்களுக்கு முடிந்தவரை சென்டிரல் கவர்மெண்டுக்கு கொடுத்துதான் அதை அவர்கள் ஸ்டாக் செய்து எந்தெந்த மாநிலத்திற்கு எப்போது எப்போது பற்றாக்குறை ஏற்படுகிறதோ அதற்கு கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். அப்படி இருக்கும்போது பூராவும் எங்களுக்கு கொடுக்க வேண்டும். எங்களுக்கு 80 ஆயிரம் டன் செலவு, அந்த 80 ஆயிரம் டன் அரிசியையும் 40 ஆயிரம் டன் கோதுமையையும் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் சொல்வது எப்படி சாத்தியம் ஆகும் என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன். அவசியம் கொடுப்பார்கள். மக்களை கஷ்டத்தில் ஆளாக்காமல் கொடுப்பார்கள் என்ற திடமான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இப்போது கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். அவசியம் இனிமேல் கொடுப்பார்கள். சுருக்கீத்தான் கொடுக்க வேண்டுமே ஒழிய பெருக்கி பிறகு சுருக்கிக் கொடுக்க முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தக் குறிப்பிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், நாங்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனையும் இன்னும் உள்ள டிரேடர்ஸ்களையும் எந்த எந்த மாநிலத்தில் அரிசி கிடைக்குமோ அங்கு அனுப்பி நாங்கள் கொண்டு வருவதற்கு பெரு முயற்சி எடுத்து வருகிறோம் என்றுசொல்லியிருக்கிறீர்கள். I m very happy about that decision. It is not only the decision but it is the implementation of the decision that will go long way in fulfiling this scheme.

அவசியம் அனுப்புங்கள். எங்கெங்கே அரிசி அதிகமாக இருக்கிறதோ அதாவது ஆந்திரா, பஞ்சாப் போன்ற இடங்களிலிருந்து எல்லாம் கொண்டு வருவதற்கு எல்லாவிதமான ட்ரான்ஸ்போர்ட்டுகளையும் உபயோகப்படுத்திக்கொண்டு வந்து ஸ்டாக் செய்து வைக்க வேண்டும். மக்களை அதிகமான கஷ்டத்திற்கு

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரிப்] [1983 மார்ச் 14

ஆளாக்காமல் நீங்கள் முன்னெச்சரிக்கையாக சாமர்த்தியமாக இந்தப் பிரச்சனையை சமாளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதன் காரணமாக கஷ்டம் அதிகமாகுமே ஒழிய குறையாது. இந்த டிஸ்ட்ரிபுஷன் ஸ்டத்தில் பல கோளாறு கள் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இப்போது கூறும்போது கூட சில குடும்பங் கள் பலவிதமான குடும்பக் கார்டுகளை வைத்து இருக்கிறார்கள். என்று சொன்னார்கள். அது எல்லாம் மிக தவறு. டிஸ்ட்ரி புஷன் சிஸ்டத்தை செய்வதிலே பல பெரிய தவறுகள் செய் கிறார்கள். சிலது இங்கிருந்து போவது எல்லாம் அங்கு போவது இல்லை. கொடுத்ததாக அவர்கள் கணக்கு வைத்துக் கொண்டு, மக்களுக்கு டிஸ்ட்ரிபுஷன் செய்ததாக கணக்கு வைத் துக் கொண்டு அவர்களை ஏமாற்றம் அடையச் செயகிறார்கள். அந்தத் தகவல்களும் இந்தச் சபமுன் பேசப்பட்டது.

[முற்பகல் 10·10]

அதையும் அவசியம் கண்டுபிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன்.

I have got one suggestion to make Mr.Speaker Sir, at this very critical situation I want fiying squad to be formed under the Leadership of very eminent Pol ce Officer for the City of Madras and mofussil places which can be divided into many zones and each zone should be incharge of the fiying squad and its only duty should be to see that the distribution system in that sphere should be observed very frequently whether they have received the stock and whether the stock have been properly distributed to all the members.

இந்த மாதிரி இருந்தால் கூடுமானவரையில் நல்லமுறையில் நடக் கும் என்று தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இந்த மாதிரி சிஸ்டம் வார் உச்ச நிலையில் இருந்தபோது இருந்தது. பல ரேஷன் ஷாப் களில் அந்த அந்த டிவிஷன்களிலே உள்ளவர்கள் ஏ. ஆர். பி. யையோ மற்றவர்களையோ போகச்சொல்லி பார்த்து ஸ்டாக் வந்திருக்கிறதா அந்த ஸ்டாக்கை அவர்கள் சரிவர ஜனங்களுக்கு வழங்கிறார்களா என்று பார்த்தார்கள். அதை இந்தச் சந்தர்ப்பத்திலே கையாண்டால் நிலைமைய சீராக்க முடியும் என்பதத் தெரிவித்துக் கொள்கிறேன்

அது மட்டுமல்ல, குடிநீர் பற்றாக்குறைக்கு இப்போது வந்தி ருக்கிறார்கள். அதற்கு உங்களுடைய அஜாக்கிரதைதான் காரணம். முன் யோசனையில்லாமல் செய்திருக்கிறீர்கள். 5,6 வருஷத்திற்கு முன்னாலே வீராணம் திட்டத்தை எப்போது கை விட்டு விட்டீர்களோ அப்போதே கிருஷ்ணா ரிவர் திட்டத்தை அல்லது கட்டளைத் திட்டத்தை அல்லது பஞ்சட்டித் திட்டத்தை அப்போதே கொண்டு வந்து இருக்க வேண்டும். எந்தக் காரியத் தையும் நீங்கள் ஆரம்பித்து முடிப்பதில்லை பரிசீலனை செய்யப் படும் என்று சொல்கிறீர்களே தவிர அதைச் செய்து



1983 மார்ச் 14] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்]

முடிக்கின்ற தன்மை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன். ஏன் அப்போதே எடுத்துக் கொள்ளவில்லை.. அப்போதே 32 லட்சம் மக்களைக் கொண்ட நகரமாக இருந்தது இந்நகரம். நாளுக்கு நாள் மக்கள் குடியேறி பெருகி வருகிறார்கள் என்பது தெரியும். தண்ணீர் டிஸ்ட்ரிபுஷன் சிஸ்டம் உங்களுக்குத் தெரியும். ஏன் கிருஷ்ணா ரிவர் திட்டத்தை எடுத்துக் கொள்ளவில்லை. எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்களே தவிர முடிக்கவில்லை. ஏன் வீராணக் திட்டத்தை கைவிட்டீர்கள். நான் தெரிந்த வரையில் அதல் ஸ்டீல் பைப்பப் போட வேண்டு மென்று சொன்னார்கள். சிமெண்ட், கான்கிரீட் பைப் போடு வதற்கு முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஸ்டீல் பைப்பைப் போட்டால் 20, 22 கோடி ருபாயிலே முடிந்து இருக் கும். அந்த சஜஷனை விட்டுவிட்டு பூராவும் அந்தத் திட்டத்தைக் கைவிட்டு அதற்கு பதிலாக வேறு திட்டத்தையும் எடுக்காமல் அதனால் மக்கள் இன்றைக்கு இவ்வளவு பெரிய அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள் என்பது துரதிருஷ்டமான செயலாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலை வர் வீராணம் திட்டத்தைத் தொடர்ந்து எடுத்து நடத்தியிருக்க வேண்டுமென்ற யோசனையைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்ற கழக அரசாங்கத்தை டிஸ்மிஸ் பண்ணிய வுடனே இங்கே நடந்த பொது கூட்டத்திலே பிரதமர் இந்திரா காந்தி, அவர்களுடைய தலைவி அந்தப் பொதுக் கூட்டத்திலே கூறினார், வீராணம் திட்டம் எல்லாம் உழல் தான் பயன் படாது, ஆனால் கிருஷ்ணா நதித்திட்டம் உண்மையிலேயே பயன் தரக் கூடியது அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இதற்கு, மாறுதலாக அதைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கிற போது அவர்களுடைய தலைவி சொன்னது தப்பா நீங்கள் சொல்வது தப்பா? எது சரி? எது தப்பு ?

Thiru. K. S. G. HAJA SHERIFF : I am not prepared to enter into any controversy with my esteemed comrade on my left. I only want to say whatever. the thing that hac happened.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு திரு உமாநாத் அவர்கள் ஒரு பிரச்சனையை இங்கே எழுப்பினார்கள். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னையில் நடைபெற்ற ஒரு பொது கூட்டத்தில், அதாவது கழக ஆட்சி கலைக்கப் பட்டதற்கு பிறகு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வீராணம் திட்டம்பற்றி அந்தக் கருத்தைச் சொன்னது உண்மை என்ற போதிலும் குடிய யரசுத் தலைவர் ஆட்சியில் அதாவது எமர்ஜென்சி காலத்தில் இங்கே உள்ள கவர்னர் ஒரு கமிட்டியை நிறுவி வீராணம் திட்டத் தைப் பரிசீலிக்கச் சொன்னபோது அந்தக் கமிட்டி வீராணம் திட்டம் சாத்தியக்கூறான திட்டம் என்று அறிவித்திருக்கிறது என்பதை திரு உமாநாத் அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சித் தலை வருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழு சில நிபந்தனைகளை விதித்து, அவைகளை எல்லாம் செய்வதாக இருந்தால் இதைச் செய்யலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் எதை எதைச் செய்யவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்களோ—நேற்று இரவில் கூட நான் அது பற்றி படித்தேன்—அவைகள் எல்லாம் எதுவும் சாத்தியமில்லை. அதுமட்டுமல்லாமல் ஏற்கெனவே செய்யப்பட்ட குழாய்களை எல்லாம் ரீ-டெஸ்ட் செய்ய வேண்டும். மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று, அது பற்றியும் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குழாய்களைத் தவிர, வேறு குழாய்களும் போடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் பார்த்துத் தான் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : தலைவர் அவர்களே, இந்த மாதிரிதான் நீங்கள் பதில் கூறுகிறீர்கள். இது சாத்தியமில்லை, அது சாத்தியமில்லை, இது சரியாக வராது, அது சரியாக வராது என்றுதான் சொல்கிறீர்களே தவிர, காரியங்களை செய்ய முன்வரமாட்டேன் என்கிறீர்கள். ஆரிய கூத்தாடினாலும் காரியத்தில் கண் வையுங்கள் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீங்கள் கூத்தாடுகிறீர்களே தவிர, காரியத்தைச் செய்வதில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நாங்கள் மத்திய அரசிடத்தில் அரிசி கேட்கும் போது நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ? பரிசீலனை செய்கிறோம், இப்போது அனுப்புகிறோம், அப்போது அனுப்புகிறோம் என்றுதான் சொல்கிறீர்கள். உடனடியாக அனுப்பிவிடுவதில்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது மத்திய அரசை சம்பந்தப்படுத்தியெல்லாம் பேச வேண்டாம். பிரச்சினை இல்லாமல் பேச வேண்டும்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொல்வதெல்லாம் ஐந்து வருடங்களுக்கு முன்பே நீங்கள் வீராணம் திட்டத்தை கைவிட்டீர்கள். அப்போதே உங்களுக்கு ஞானம் தோன்றியிருக்கவேண்டும். இதுபோன்று மழை அடிக்கடி பொய்த்துவிட்டால் எப்படி மக்களுக்கு தண்ணீர் கொடுக்கமுடியும் என்பது உங்களுக்கு அப்போதே தெரிந்திருக்க வேண்டும். தண்ணீர் கொடுப்பதற்கே நீங்கள் திட்டம் போடவில்லை என்றால் மற்ற பெரும் பெரும் திட்டங்களை எப்படி நீங்கள் போட்டு மக்களை காப்பாற்றப் போகிறீர்கள்? என்பது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இப்போது இந்த மாதிரி சூழ்நிலையில்.





I want the Central Government to interfere here and appoint a special committee consisting of experts to find out what are all the best schemes that can be taken up immediately whether it is Veeranam or Krishna or Kattalai or Panjatti or whether we can tap the ground water which is considered to be available around the city of Madras. I want the Tamil Nadu Government should request the Central Government to send a team of experts to go into and give both long-term as well as short-term schemes so that we can consider and take up the schemes.

சார் இப்போது தண்ணீருக்காக மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது இங்கே மன்றத்திலே இருக்கிற அங்கத்தினர்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். நேற்று மாலையில் கூட லாயிட்ஸ்ரோட்டில் இருக்கிற காலனிக்கு ஒருவிசேஷத்திற்குப் போயிருந்தேன். அங்கே அவர்களால் நடத்தப்படுகிற ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. 450 சிறுவர், சிறுமியர் இரண்டாவது ஸ்டாண்டர்டிலிருந்து 6-ஆவது ஸ்டாண்டர்டு வரை படித்து வருகிறார்கள். அவர்கள் சொல்வது நான்கு, ஐந்து நாட்களுக்கு ஒருமுறைகூட தண்ணீர் வருவதில்லை. எவ்வளவோ இதுபற்றி எடுத்துச் சொன்னோம். யாரும் கவனிக்கவில்லை என்கிறார்கள். 4 ஆயிரம் மக்கள் அங்கே அந்தக் காலனியில் இருந்து வருகிறார்கள். பல கிணறுகள் இருந்தாலும் இரண்டு கிணறுகளைத் தவிர மற்ற கிணறுகள் சரியாக இல்லை என்று தெரிவிக்கிறார்கள். இப்போதே பார்க்கிறோம். எவ்வளவு மக்கள் தண்ணீருக்காக ஒரு மைல், இரண்டு மைல் என்று சொல்லி ஒரு குடம் தண்ணீர் எடுத்து வருகிறார்கள். இப்பொழுதே இந்த நிலைமை இருக்குமானால் போகப் போக அடுத்து வருகிற இரண்டு, மூன்று மாதங்களில் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். You must take emergency measures to see that water is supplied by any means to the public in the city of Madras.

ஐந்து நாள், ஆறு நாளுக்கு ஒரு தடவை கூட யாரும் குளிக்க மாட்டார்கள் போல இருக்கிறது. டிரை வாஷிங்தான் செய்து வரவேண்டும். அப்படி இருக்கிற நிலைமையில் நீங்கள் அஜாக்கிரதையாக இல்லை ; நீங்களும் கூடுமானவரையில் நடவடிக்கைகளை. எடுத்து வருகிறீர்கள். இருந்தாலும் இதைவிடத் துரிதமாக பல மடங்கு அதிகமாக செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு ஸ்லம்களிலும், ஒவ்வொரு ஸ்ட்ரிட்கார்னரிலும் பெரிய டாங்க் வைக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் தண்ணீர் நிலைமையை சமாளிக்க முடியுமே தவிர, மற்றபடி முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Or you can even arrange through Private people some water to hotels and other institutions and also to the ships at the ports so that it may be possible for them to give money and take the water so that these difficulties can be mitigated to a very considerable extent.

(முற்பகல் 10—20)

சார், பவர் ஷார்ட்டேஜுக்கு வருகிறேன். பவர் மினிஸ்டரும் உள்ளே நுழைந்து கொண்டிருக்கிறார், நல்ல வேளையாக, அவரும் இதை கவனிப்பார் என்று நான் நம்புகிறேன்.

I will be happy if the Hon. Minister says that there is no shortage or there is not going to be any shortage. This commodity has become a scarce. People have spent hundreds and thousands of crores in our State on industries.

இந்த வகையில் உங்களுக்கு அதிக ரெவின்யூ தந்திருப்பது சேல்ஸ் டாக்ஸ். எவ்வளவுதூரம், பிசினஸ்மென், இண்டஸ்ட்டிரியலிஸ்ட் டிரேடர்ஸ், இன்னும் மற்றவர்கள் கஷ்டப்பட்டு உழைத்திருந்தால் கிட்டத்தட்ட ரூபாய் 840 கோடி சேல்ஸ் டாக்ஸ் வந்திருக்கும்? நீங்கள் இந்த பவரை முழுமையாகக் கொடுத்திருந்தால், இந்த ரெவின்யூ ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் போயிருக்குமே. ஏன் இதை நீங்கள் கொடுக்கவில்லை. இதிலே நீங்கள் முன் ஜாக்கிரதையாக இல்லையென்றுதான் நான் திரும்பவும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹைடல் கிடையாது, மழை இல்லாத காரணத்தால். ஏன், தெர்மலை நீங்கள் சரியாக மெய்ன்டெய்ன் செய்ய மாட்டேனென்கிறீர்கள். பெல்லைச் சேர்ந்தவர்கள் வந்தால், உடனே அது ஓடுகிறது, இரண்டு நாளைக்கு. அவர்கள் போய்விட்டால், உடனே பழுதடைந்து விடுகிறது. ஒன்று பெல்லைச் சேர்ந்தவர்களை இங்கேயே வைத்துக்கொண்டு, அவற்றை ஓடச் செய்யுங்கள். அல்லது, எல்லா பவர் ஸ்டேஷன்களையும் பெல் நிறுவனத்தார்களிடமே ஒப்படைத்துவிடுங்கள்.

'All right, you do the job and run the institution.,

என்று சொல்லுங்கள். நீங்கள் இரண்டையும் விட்டுவிட்டு, 40 சதவீதம் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால், 20 சதவீதம் தான் வருகிறது. அவரவர்கள் ரூபாய் 100 கோடி, ரூபாய் 200 கோடி, ரூபாய் 30 கோடி, ரூபாய் 40 கோடி என்று செலவு செய்து திட்டங்களைப் போட்டு, இப்பொழுது எல்லோரும் கடுமையான பாதிப்புக்குள்ளாகி, ஜெனரேட்டர் செட்டுக்குப் போகிறார்கள். ஜெனரேட்டர் செட்டுக்குப் போவதில் ஏகப்பட்ட கஷ்டங்கள் இருக்கின்றன. அதற்கு ஆயில் வேண்டும்; ஆயில் கிடைப்பதில்லை. ஆயில் இன்ஜின் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரியான கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன. இதற்கு என்ன ஒரு விவரமான ஏற்பாட்டை நீங்கள் செய்யப் போகிறீர்கள் என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால், அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று பெரிய திட்டங்களை எடுத்திருக்கிறோம்





என்று சொல்லியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால், இந்தத் திட்டங்களை எப்பொழுது முடிக்கப்போகிறீர்கள்? கேட்டால், சென்ட்ரல் கவர்ன்மென்ட் எங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. அவர்கள் அனுமதி கொடுப்பதற்குத் தாமதமாகிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்லுகிறார்கள்.

That is not correct, Mr. Minister, Sir,

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அனுமதி கொடுக்கவில்லையென்பது உண்மை. வாங்கித் தந்தால் மாண்புமிகு ஹாஜாசெரீப் அவர்களுக்குத் தமிழ்நாடு ரொம்பக் கடமைப்பட்டிருக்கும். ஏனென்றால், ஒன்றுமில்லை, ஒரு கேஸ் டர்பைன் வாங்குவதற்கு 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து தமிழ்நாடு அரசின் சார்பாக திரும்பத் திரும்ப நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதைக் கொடுத்திருந்தால் ஒரே வருஷத்திலே நாம் நிறுவியிருக்கலாம். இந்தப் பிரச்சினையெல்லாம் வந்திருக்காது. நீங்கள் டீசல் செட் வாங்க வேண்டியதில்லை. அந்நியச் செலவாணிகள் மிச்சப்படுத்தியிருக்கலாம். ஆக என்ன காரணத்தாலோ தர மாட்டேன் என்கிறார்கள். நாங்கள் என்னதான் செய்வது?

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்:** சார், வாங்க வேண்டிய அக்கறை யாருக்கு? நாம் இப்பொழுது ரூபாய் 5 கோடி, ரூபாய் 10 கோடி முதலீடு போட்டு ஒரு இன்டஸ்ட்ரீயை ஸ்டார்ட் செய்து, அது வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்றால், நாம் தான் அதற்கு உழைத்து, பாடுபட்டு, வெற்றிகரமாக நடக்க என்ன, என்ன செய்ய வேண்டுமோ, அதையெல்லாம் செய்ய வேண்டும். அப்படி இல்லாவிட்டால் ........

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, யாருக்கு அக்கறையில்லையென்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. திரும்பத் திரும்ப நாம் சொல்லிவிட்டோம். நேரிலேயும் சந்தித்துச் சொல்லிவிட்டோம். கேட்ட கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிட்டோம். கல்லிலே கூட நாறு உரிக்கலாம் போலிருக்கிறது. ஆனால், மத்திய அரசிடத்திலேயிருந்து அனுமதி பெற முடியாது போல இருக்கிறது.

**Thiru K. S. G. HAJA SHAREEF:** I am sorry, Mr. Speaker Sir, I differ from the Hon. Minister. I cannot agree with his statement that he is not able to get sanction from the Central Government. The Central Government has to look into the requirements of 22 States; and they are not there only for our State. It is our responsibility; it is our interest and it is our duty to see that the schemes are expedited. I am glad that the Minister has come out with a Statement that he is going to establish not only power stations; but also going to expand some of the existing power stations. I have got one suggestion to make. Gas turbines to work with oil will be more feasible.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1983 மார்ச் 14

We are also interested in the development of our State. It is our State because we are born and brought up here and this fact cannot be disputed. We want that our State should function well. Our State should come up as No. 1 State in the entire India so that we can take pride about it.

என்னென்ன திட்டங்களுக்கு அனுமதி கேட்டோம். எவை எவைகளுக்கு அனுமதி வரவில்லை என்பதைப் பற்றி ஒரு அறிக்கை கொடுத்தால்....

I am prepared and the members of my Party are prepared to go at their own cost and fight out the issue and try to help the State. It is not necessary that only the Congress Party should be there to industrialise the State. I am confident that you are as much interested as any other to industrialise the State. I want this to be taken into consideration and see that the impediments that stand in the way of industrial growth should be removed and that you try to industrialise the State as much as possible.

இப்பொழுது ஒரு நுழைவு வரி என்று அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நுழைவு வரி என்றால், என்ன என்று எனக்கே புரியவில்லை. எங்கிருந்து கொண்டு வந்திருக்கிறீர்கள், யார் இதற்கு அட்வைஸ் பண்ணியது என்று தெரியவில்லை. உங்களுடைய ரிப்ளையில், இந்த ஸ்டேட்டில் இதை அவசியம் நுழைய விட மாட்டோம் என்று சொன்னால் நாங்கள் மிகவும் கடமைப்பட்டவர்களாக இருப்போம். அதைப் பற்றி நாம் எவ்வளவோ அறிந்திருக்கிறோம்.

I am getting many letters and telegrams from every nook and corner. This is a very wrong tax. This will completely jeopardise the growth and development of the business here. On the day when the Hon. Minister told this, I told him that this is going to increase your difficulties and this is going to increase the cost.

எப்படி சார், இது முடியாது, புரொட்யூசர்ஸ் தான் கொடுக்கிறார்கள். புரொட்யூசஸ், அல்ல; அவர்கள் படுகின்ற அவஸ்தை அவர்களுக்கே தெரியும் மிகவும் ஜாஸ்தி. பவர் இல்லை, தண்ணீர் ஷார்ட்டேஜ், இவ்வளவு கஷ்டத்திலும் நீங்கள் இதைக் கொண்டு வந்து விட்டீர்கள். ஏதாவது இருக்கிற இண்டஸ்ட்ரீஸ் வளர வேண்டுமா அல்லது ஒரேடியாக அவரவர்கள் மூடிவிட்டுப் போக வேண்டுமா? இந்த நுழைவு வரியை நுழைய விட மாட்டோம் என்று அமைச்சரவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று சொல்லி 15 கோடி ரூபாய் ஒதுக்கிட்டிருப்பதாகச் சொல்கிறீர்கள்.



1983 மார்ச் 14] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

I do not know how it is possible to give employment for one individual per family at a cost of rupees fifteen crores. I think the Government is aware that our population is 4.75 crores. At this stage about one crore of people are devoid of this facility and even if you are going to give 50 lakhs of people at the rate of one person per family, how much this is going to cost and how you are going to do it—it is not known.

65 லட்சம் பிள்ளைகளுக்கு நீங்கள் உணவு பரிமாற எடுத்துக் கொண்டதால் தான் இவ்வளவு சங்கடங்கள் எல்லாம் வருகின்றன. அதற்கு பதிலாக ஆயிரக்கணக்கான தொழில்கள், இண்டஸ்ட்ரீஸ்கள் உருவாக்குவதற்கு ஆன சூழ்நிலைய உண்டாக்கினால், அதுவே ஒரு பெரிய நன்மையாகும். நிறைய எம்பிளாய்மெண்ட் ஆபர்ச்சுனிட்டி வரும், சேல்ஸ் டாக்ஸ் வரும், இன்கம் டாக்ஸ் வரும், எக்சைஸ் டியூட்டி வரும். வேறு வருமானமும் பெருகும். இதை விட்டு விட்டு, சும்மா இருப்பவர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொன்னால்,

I cannot understand the efficasy of your policy and kindly see that some explanation is given, how you are going to implement this Scheme.

சார், நேற்று அமைச்சரவர்கள், குழந்தைவேலு அவர்கள், எல்லா லீடர்ஸ் கான்பெரன்ஸ் வைத்தார்கள். நான் எதெது சொல்கின்றேனோ, அப்பொழுது அந்த அந்த மந்திரிகள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

I am very happy about it. I do not know he could have called-us to sacrifice the only day we can get only to say after three hours that he will report the matter to the Chief Minister and try to let us know what is the decision taken. Is it correct? Is it fair? He has called the Leaders of Parties conference. They all have come. I was present but I have not received the invitation. I fought for the Invitation and I got it. I never got the invitation on Friday and Saturday and I told his P.A.and others that I never got the invitation and that I have been asked by the Hon'ble Chief Minister to attend the Conference. Will you kindly send the invitation or otherwise I will take up the matter with the Chief Minister? While I was sitting here on Saturday they came and gave me a cover addressed to the President of the Indian National Congress, not even as Haja Shareef I am not the President of the Indian National Congress. Srimathi Indira Gandhi is the President of the Indian National Congress. I am just bringing this to your notice that your department has furnished this incorrect information. I attended the meeting and I told them

நீங்கள் அந்த மாதிரி யோசனை சொல்வீர்கள் என்றால் நான் வந்திருக்கவேமாட்டேன்.

I do not know about the economy of it. The Hon. Minister who is also an Electrical Engineer knows about it.

அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்குத் தெரிந்தவரையில் இந்த கேஸ் டர்பைன் எவ்வளவு பெரிய மெகாவாட்டாக இருந்தாலும் நாம் எஸ்டாபிலி செய்ய அதிக சீக்கிரத்திலும் செய்யலாம். குறைந்த விலையிலேயும் செய்யலாம்; சிக்கனமாகவும் செய்யலாம்; எஃபிஷியண்டாகவும் இருக்கும் என்பதை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

இதைத் தவிர எல்லாவிதமான பவர் ஜெனரேட்டர் களையும் செய்யவும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

It is not only hydel and thermal power generators but also from biogas, and through windmill and under which many small scale industries are run in Maharastra. I want this to be taken into consideration. Another things is, the Government has stated that each house is entitled only for 250 units per month. Over and above that they have to pay a surcharge of 100 per cent.

இந்த சர்சார்ஜ் மிகுதியாக வசூலிக்கப்படுவதில்லை என்று நான் சிலர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதை நீங்கள் எடுத்துவிட்டீர்களா? அல்லது பிறகு மொத்தமாக பில்லை அவரவர்களுக்கு அனுப்பப் போகிறீர்களா என்பது தெரியவில்லை. இதைப்பற்றிய விளக்கத்தைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது சம்மர் மாதங்கள் வரவிருக்கின்ற காரணத் தினால், 250 யூனிட் என்பது மிகவும் குறைவானதாகும். அதை உயர்த்தி, 500 யூனிட் என்று கொண்டு வந்து, அதற்கும் மேலே பயன்படுத்துகிறவர்களுக்கு நார்மல் சர்சார்ஜுக்கு மேலே 30 சதவீதம் போட்டால்கூட நலமாக இருக்கும். அதை எல்லா மக்களும் வரவேற்பார்கள்; தோத்திரம் செய் வார்கள்.

Least I talk about the industrial development, I think Mr. Speaker, Sir, it is better for me. Hon. Minister for Industries, the young Minister is not here. I wish he is here. What are the big industries that we have developed here.

மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொன்னீர்கள். இன்டஸ்ட் ரீசுக்குச் செய்வதில்லை என்று சொன்னீர்கள். 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகு மத்திய அரசு பெருமளவிற்கு இன்டஸ்ட் ரீசுக்கு அவர்களுடைய இன்டஸ்ட்ரீசை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 700 கோடி, 800 கோடி ருபாய்க்கு மேலே அதற்காக முதலீடு போட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.



The Neyveli Thermal Station they have run and various other industries at Trichy, the Heavy Electrical Boiler plant and they have been expanded. All these industries are sufferring for want of power. So power is the main criteria.

சென்ற மாதம் நான் டெல்லியில் இருக்கும்பொழுது ஒரு டின்னருக்குப் போயிருந்தேன். பல தொழில் பிரமுகர்கள் அங்கே வந்திருந்தார்கள். அந்த டின்னருக்குப் போயிருந்த பொழுது நான் ஒருவரிடத்திலே சொன்னேன், நீங்கள் தமிழ் நாட்டுக்கு வாருங்கள்; பெரிய சௌகரியங்களெல்லாம் செய்து கொடுக்கிறோம்; அங்கே வந்து இன்டஸ்ட்ரீசை ஸ்டார்ட், செய்யுங்கள் என்று சொன்னதற்கு, அவர் சொன்னார் ''ஹாஜா, என்னிடத்திலே இரண்டு இன்டஸ்ட்ரீஸ் இருக் கின்றன; நான் படும் அவஸ்தை எனக்குத்தான் தெரியும்; இன்றைக்கு பவர் கொடுக்கமுடியும் என்று கியாரண்டி கொடுங்கள்; ஆறு மாதங்களில் பத்து இன்டஸ்ட்ரீசை கொண்டு வருகிறேன்'' என்று அவர் சொன்னார். அவர் அவ்வாறு செய்யக் கூடியவர்தான்; அவ்வாறு செய்வதில் அவர் வல்லுநர்.

I want the Hon. Ministers to take into consideration these aspects to see how best we can infuse the confidence in the minds of insdustrial entrepreneurs to come and establish industries here. I am very eager that thousands of small scale and medium scale industries should come here because it is our State. How are we going to give employment to thousands of educated people, both diploma and degree holders. Do you want them to go out of our State and eke out their livelihood elsewhere. Unless you industrialise, you will perish, I can say this in no small terms.

It is what Dr. Visvesvaraya said that if you do not industrialise, you will perish. The Government of India has industrialised the country considerably. What is our state prior to 1950 or prior to Independence. We have expanded considerably in industrial sphere. You cannot say that the Government of India is sitting in an inactive manner. Then how you could have achieved this self-sufficiency in everything. It is the provincial Government that should take considerable interest to see that industries are being developed.

(முற்பகல் 10.30)

ஒரு குறிப்பு அவர்கள் மத்திய அரசுக்குக் கொடுத்திருந்தார்கள், அதிலே 80–81ல் இவ்வளவு கேட்டோம்—1/3 தான் வந்தது— 81–82லே இவ்வளவு கேட்டோம்—அதற்கும் 1/3 தான் வந்தது; அது நீங்கள் நடத்தும் இன்டஸ்ட்ரீசா அல்லது பிரைவேட் செக் டர்கள் கேட்டு, நீங்கள் செய்ததைச் சொல்கிறீர்களா என்ன வென்று புரியவில்லை. இண்டஸ்ட்ரீகளைப் பற்றி நீங்கள் சொல் கிறீர்களே தவிர, அதைப்பற்றி எதுவும் செய்ததாகத் தெரிய வில்லை. இதைப்பற்றி ஒரு வெள்ளை அறிக்கை * * வைத்து, அதை இரண்டு, மூன்று நாட்கள் விவாதித்தால் நன்றாக இருக்கும்.

நீங்கள் வந்தபின்னர்தான் அந்த மீட்டிங் கூட்டினீர்களா? இந்த மாதிரி எண்ணம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அந்த மாதிரி நிலைமை இருக்காது என்று நான் கருதுகிறேன்.

நான் இந்த அவையில் கேட்கிறேன். நீங்கள் எப்போது தமிழ் நாட்டில் உள்ள முனிசிபாலிட்டிகளுக்கு, கோவை, சென்னை மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தப்போகிறீர்கள்? அதை இந்த அவையில் உடனே அறிவித்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அமைப்புகளுக்கு எலெக்ஷன் நடக்காததால் அங்கே எலெக்டெட் பாடி இல்லாததால் எவ்வளவு நஷ்டம், கஷ்டம் ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதைத் தெரிந்து இருந்தும், நீங்கள் இந்தத் தேர்தலை நடத்தாமல் இருந்தால், அதை மக்கள் வேறு விதமாக எடுத்துக்கொள்வார்கள். நீங்கள் பயப்படுகிறீர்கள் என்று நான் சொன்னால், 'பயப்படுகிறோம்' என்ற வார்த்தை எங்களுடைய அகராதியில் இல்லை என்று சொல்லிவிடுகிறீர்கள். அப்படியானால் தயவு செய்து சிட்டி கார்ப்பரேஷனுக்கும் தேர்தல் நடத்தும் வேலையை உங்கள் அட்டவணையில் கூறியுள்ளதுபோல், ஏப்ரல் 1 ஆம் தேதியே எடுத்துக் கொள்ளவேண்டும். முனிசிபாலிட்டிகளுக்கும் எலெக்ஷன் நடத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

நான் இதை வலியுறுத்திச் சொல்கிறேன் என்றால், சிட்டி ரொம்ப ரொம்ப மோசமாக இருக்கிறது. தண்ணீர் இல்லை, சாக்கடைகள் சரியாக போவது இல்லை, கொசுத்தொல்லை (மஸ்கிடோ) அதிகமாக இருக்கிறது. இதைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இதைத் கேட்டால் கார்ப்பரேஷனுக்கு 24 கோடி தான் வருமானம் வருகிறது. அதிலே 22 கோடி நிர்வாக செலவாகிவிடுகிறது என்று சொல்லிவிடுவீர்கள். எனவேதான் சொல்லிக்கொள்கிறேன். எலெக்டெட் பாடி இருந்தால் அவர்கள் இதற்கு ஆலோசனை சொல்வார்கள். எல்லா ஆலோசனைகளும் நமக்கே தெரியும் என்று எண்ணிவிட முடியாது. அங்கே வருகின்ற அங்கத்தினர்கள் எப்படிப்பட்ட முறையில் இவற்றைச் சமாளிக்கலாம் என்று ஆலோசனைகளைச் சொல்கிற வகையில் இருப்பார்கள். ஆகவே, இந்தத் தேர்தலை தள்ளிப் போடாமல், விரைவிலேயே இந்த மே, ஜுன் மாதத்திலேயே சிட்டி கார்ப்பரேஷனுக்கு வைக்கவேண்டும்.

At least by August you must conduct the election for all the Municipalities. I hope the Hon'ble Minister and the Leader of the House will do this.





திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : சபையில் உள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான மரியாதைதான் உண்டு. மாண்புமிகு அமைச்சர்கள் இடைமறித்துப் பேச வாய்ப்பு அளிப்பது போல் எனக்கும் தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அனுமதிக்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிற போது, அதை அனுமதிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா ஷெரீப் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இப்போது நான் அதை அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் நான் சொல்வதைக் கேட்கவில்லையென்றால், நான் வேறுவிதமாக நடக்க வேண்டியிருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் கொடுங்கள் என்று கேட்டதற்காக, தாங்கள் வேறுமாதிரியாக நான் நடப்பேன் என்று சொல்வதின் அர்த்தம் என்ன? ரூல்ஸ் எடுத்துப் பாருங்கள். எப்போது வேண்டுமானாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல்ஸ் பற்றி மாண்புமிகு உறுப்பினர் எனக்குச் சொல்லத் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அமைதியாக அமரவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : ஒரு முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முக்கியமான கேள்வியாக இருந்தால், பின்னர் கேட்டுக்கொள்ளலாம். இப்போது அமர வேண்டும். தொடர்ந்து திரு. ஹாஜாசெரீப் பேசுவார்.

THIRU K.S.G. HAJA SHAREEF : I will quickly finish Mr. Speaker Sir. I am getting telegrams after telegrams, telephone after telephone and personal letters about what is going on in Tiruchendur now, particularly after the advent of the recent election. You have won. I congratulate you for having won the election. I know how the election had been won.

We want the elections to be conducted, and we are given a Time Table. You start the elections for the Municipalities begining from 1st April and you complete it. In the meantine please conduct the elections to the City and the Coimbatore Corporations. What is the diffieulty in conducting the elections ?

மாண்புமிகு ப. திரு. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை கூட்டி முடிவுகள் எடுக்க வேண்டும் என்பதற்காகவும், அனைத்துக் கட்சித் தலைவர்களின் மேலான யோசனைகளைக் கேட்டு, அரசாங்கம் நகராட்சி, மாநகராட்சிகளுக்குத் தேர்தல்கள் எப்போது வைத்துக்கொள்ளலாம் என்ற முடிவினை எடுத்து அறிவிக்கவேண்டும் என்பதற்காக அந்தக் கூட்டம் நடைபெற்றது. இங்கே இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பில், எங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் மாண்புமிகு மேலவை உறுப்பினர் திண்டிவனம் இராமமூர்த்தி அவர்களும், இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் திருமதி யசோதா அவர்களும் கலந்து கொள்வதாகத்தான் எங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்த, இந்திரா காங்கிரஸ் தலைவராக இருக்கக் கூடிய மதிப்பிற்குரிய ஹாஜா செரிப் அவர்கள் திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் வருவதற்கு முன்பே இவர்கள் வந்துவிட்டார்கள். ஆகவே அவர்களுக்கு முன்பு இவர்கள் வந்துவிட்ட காரணத்தால், இவர்களுக்கு அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டது. நேற்று அவர்களுடைய மேலான யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அரசாங்கம் முடிவுகளை—சட்டமன்றப்பேரவை நடந்து கொண்டிருக்கிற காரணத்தால், அவையிலே சொல்லாமல் வெளியிலே சொல்லக் கூடாது என்பதற்காகவும், மேலும் இந்த அனைத்துக்கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தினுடைய தேதியைக் கூட இந்த மன்றத்திலேயும், மேலவையிலேயும் நான் அறிவித்ததன் காரணமாக அந்த முடிவுகளை இங்கேதான் சொல்லவேண்டுமே தவிர அங்கே இருக்கக்கூடிய பத்திரிகைக்காரர்களுக்கு வெளியே சொல்லக்கூடாது என்ற காரணத்திற்காகவும்தான், நேற்றே நான் சொல்லவில்லையே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஆகவே அந்த முடிவுகளை நாம் அறிவிக்க இருக்கிறோம்.

Thiru K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker Sir, what the Hon'ble Minister has said, is not correct. This subject was discussed on the floor of this Assembly. It was I who raised this issue whether you are afraid of concucting the elections.

நீங்கள் சொன்னீர்கள். பயம் என்ற ஒரு பொருளே எங்கள் அகராதியில் இல்லை என்று சொன்னீர்கள். அப்படியானால் எலக்ஷன் வையுங்களேன் என்று நான் சொன்னேன். பிறகு ஆல் பார்ட்டி மீட்டிங் கூட்டுகிறோம் என்று சொன்னீர்கள்.



எனக்கு அல்லவா நீங்கள் இன்விடேசன் அனுப்பி இருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி மரகதம் சந்திரசேகருக்கு இன்விடேசன் அனுப்பினால் என்ன அர்த்தம். எனக்கு நீங்கள் அனுப்பியிருக்க வேண்டும். நான் வந்திருக்க வேண்டும். நீங்கள் 10-30 மணிக்கு என்று குறிப்பிட்டு இருந்தீர்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யார் பார்ட்டியிலே பேசுகின்றார்களோ அவர்களுக்கு எல்லாம், அரசாங்கத்தின் மூலமாக, அவர்களுக்கு எல்லாம் கடிதப் போக்குவரத்து செய்யவேண்டும் என்று நினைத்தால், உண்மையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் 27 அல்லது 28 பேர்கள் இந்த மசோதாக்களின் மீது பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் அனுப்பவில்லை. ஆனால் நாம் கட்சித் தலைவர்கள் என்ற முறையிலேதான் அனுப்பியிருக்கிறோம். வேறு ஒன்றும் அல்ல. ஆகவே இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரைக்கும், யார் யாருக்கு அவர்கள் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்ட போது நாங்கள் இன்னின்னாரைத்தான் அனுப்புகிறோம் என்று எங்களுக்கு கடிதப்போக்குவரத்து மூலமாக தெரிவித்திருக்கிறார்கள். உங்களுக்கும் திண்டிவனம் இராமமூர்த்திக்கும் என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் இந்திரா காங்கிரஸ் சார்பிலே திண்டிவனம் இராமமூர்த்தி அவர்களும் திருமதி யசோதா அவர்களும் கலந்து கொள்கிறார்கள் என்று எங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது.

(முற்பகல் 10.40)

THIRU K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker Sir, I am sorry. I cannot accept the Minister's explanation. I am the Leader of my party in this Assembly. I should have been given the invitation. If you wanted you could have also given an invitation to Smt. Maragatham Chandrasekar, the President of Tamil Nadu Congress Party. It was I who raised the subject here on the floor of the Assembly. On that point you said that you are going to convene an All Party meeting.

It was scheduled to be held at 10.30 a.m. I was there at 10.25 a.m. sharp. I left the hall only at 12.50 p.m. I met Mr. Dindivanam Ramamoorthy also.

நான் தான் இந்த மீட்டிங் கூட்டவேண்டும் என்று சொன்னேன். அதற்குப் பின்னாலே தான் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டம் கூட்டப்பெற்று, அதிலே கருத்துக்கள் சொல்லப்பட்ட பின்னாலே, முதலமைச்சர் அவர்களிடத்தில் விஷயத்தை அறிவித்து விட்டு, பின்னாலே நான் அதைப் பற்றிச்சொல்கிறேன் என்று சொன்னால், அந்தக் கூட்டம் கூட்டியது 'வேஸ்[illegible]ப் டைம்' என்ற முடிவுக்கு

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1983 மார்ச் 14

We were all on the spot. I do not why anybody be questioned the previlege of working to any party he likes and to vote to whomsoever? he likes. Simply because the Muslims supported fully the D.M.K. Party they are put to lot of inconvenience. Is it correct?

If you intimate and if you coerce, is it correct? Will it not tell upon the Government on whom the people have got a very heavy confidence? In a house of 234 members you are 131. It does not speak any good to the Government at all. The Government should be very very patient and see that they do not intimate people and get extracted whatever they want. For heaven's sake please leave this way of trying to put foised cases upon even gentlemen and very good people who have been running industries and others. It will create a hell of aversion amongst the minority community and other people who have been doing very good service to the society.

Mr. Speaker Sir, as you have stated that the time is very short, I conclude this speech. I want that the reply of the Honourable Finance Minister should be one that speaks about the Food problem, about the power, about the water, about the Law and Order and about the City Elections. If he gives a very favourable reply to all these points I will be very grateful to him.

*டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1983—84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றத் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை கூறுகின்ற வாய்ப்பைப் பெற்றதற்கு நான் நன்றியுடையனவாக இருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டபோது பத்திரிகையாளர்கள் என்னையும் மற்றுள்ள கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து கருத்துக்களைக் கேட்டபோது இந்த நிதிநிலை அறிக்கை இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஏற்பட்டுள்ள கொடுமையான வறட்சிக்கு தீர்வு காண்பதற்குரிய வகையிலோ துன்பப்படுகின்ற மக்களுக்கு நல்வாழ்வை அளிக்கின்ற விதத்திலோ அமையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

குறிப்பாக அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதையும் கோடிட்டு காட்டியிருக்கிறோம்.

குடும்பம் ஒன்றுக்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்று பல நாளாக இந்த அரசின் சார்பில் முழங்கப்பட்டு வருகின்ற அந்த முழக்கம் 15 கோடி ரூபாய் ஒதுக்கிடு செய்வதன் மூலமாக எப்படி நிறைவேற்றப்பட இயலும். அது சாத்தியக்கூறு அல்ல.



1983 மார்ச் 14] [டாக்டர் மு. கருணாநிதி]

எனவே இது மக்களை திசை திருப்புகின்ற அல்லது ஏமாத்துகின்ற ஒரு அறிவிப்பாகத்தான் இருக்கமுடியும் என்பதையும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலும் மற்றும் உள்ள கட்சிகளின் சார்பிலேயும் எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

பொதுவாக நிதிநிலை அறிக்கையில் ஆண்டு தோறும் வருவாய் உயர்ந்துக் கொண்டே போகின்ற நிலையை நம்மால் காண முடிகிறது. நான் கடந்த ஆண்டு கூட எடுத்துக் கூறியிருக்கிறேன். 1966—67 இந்த ஆண்டில் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்தக் கால கட்டத்தில் இந்த மாநிலத்தினுடைய வருவாய் கணக்கு 188 கோடி ரூப.யாக இருந்தது.

(முற்பகல் 10-50)

1968—69லே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலக் கட்டத்திலே வருவாய் ரூ. 248 கோடியாக இருந்தது. 1975—76-ஆம் ஆண்டு கழக ஆட்சிக் கலைக்கப்படுவதற்கு முன்பு, இந்த மன்றத்திலே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின்படி, மாநிலத்தினுடைய வருவாய் ரூ. 501 கோடியாக இருந்தது. இன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைத்துள்ள இந்த அறிக்கையில் அந்த 501 கோடி ரூபாய் மூன்றரை மடங்காக உயர்ந்து 1774 கோடி ரூபாயாக பெருகியிருக்கிறது அல்லது வளர்ந்திருக்கிறது. இந்தப் பெருக்கத்திற்கு அல்லது வளர்ச்சிக்கு காரணம், 1975—76லே 98 கோடி ரூபாயாக இருந்த விற்பனை வரி, இப்போது 710 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும், 1975—76-ல் 50 கோடியாக இருந்த மது ஆயத் தீர்வை இப்போது 160 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும், 1975—76ல் 13 கோடி ரூபாயாக இருந்த மோட்டார் வண்டி வாகன வரிகள், இன்றைக்கு 82 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும், 1975—76ல் 21 கோடி ரூபாயாக இருந்த முத்திரைத் தாள் வருமானம் இப்போது 62 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இவைகளின் காரணமாக 1774 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நம்முடைய நிதிநிலை அறிக்கை மூன்றரை மடங்கு உயர்ந்து இருக்கிறது என்று குறிப்பிட்டாலும் கூட, பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1975—76-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட அளவிற்காவது ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், உதாரணத்திற்கு என்று எடுத்துக் கொண்டாலும் கூட கல்வித் துறைக்கு 1975—76-ல் 118 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மூன்றரைமடங்கு வருமானம் பெருகியுள்ள இந்தநேரத்தில் 403 கோடி ரூபாய் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒதுக்கப்பட்டுள்ளது 355 கோடி தான். அதாவது 8 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அந்த வகையிலே விகிதாச்சார கணக்குப் பார்த்தால், முக்கியமான துறைகளில் 1975–76லே ஒதுக்கப்பட்டதைவிட, இப்போது குறைவான தொகையே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் காணலாம். கல்வித் துறையில் 1975–76-ல் 23.64 சதவீதம் ஒதுக்கப்பட்டது. இப்போது வைக்கப்பட்டுள்ள 1983–84ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 20.01 சதவீதம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையில் 1975–76-ல் 6.19 சதவீதம், இப்போது 5.13 சதவீதம் தான். கூட்டுறவுத் துறையில் 0.92 சதவீதம், இப்போது 0.56 சதவீதம் தான். தொழில்கள், ஊரகத் தொழில்கள் போன்றவைக்கு 1975–76ல், 0.79 சதவீதம், இப்போது 0.58 சதவீதம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் நலனில் 1975–76-ல் 0.67 சதவீதம் ஒதுக்கப்பட்டது. இப்போது 0.56 சதவீதம் தான்.

பாசனத் துறைக்கு 1975–76ல் 3.94 சதவீதம் ஒதுக்கப்பட்டது. இப்போது 2·32 சதவீதம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. சாலைகள், பாலங்கள், இவைகளுக்கு 1975–76–ல் 4.20 சதவீதம் தான் ஒதுக்கப்பட்டது. இப்போது 3.80 சதவீதம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காட்டு வளத்திற்கு 1975–76-ல் 0.66 சதவீதம் ஒதுக்கப்பட்டது. இப்போது 1983–84ல், 0.57 சதவீதம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறைச்சாலைகளில் செலவழிப்பதற்காக கைதிகளின் வசதிகள் போன்றவைகளுக்காக 1975–76-ல் 0.88 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 0.40 சதவீதம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறைக்கு 1975–76-ல் 5.30 சதவீதம், இப்போது 4.29 சதவீதம், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு 1975–76ல் 1.16 சதவீதம், இப்போது 0.58 சதவீதம் தான்.

501 கோடி ரூபாய் வருமானம் வந்த 1975–76-ல் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற போது, 1983–84-ல் அதாவது இப்போது 1774 கோடி ரூபாய் வருமானம் வருகின்றபோது 15 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கி இருக்கவேண்டும். ஆனால் 5 கோடிரூபாய் குறைவாக பிற்பட்டோர் நலனுக்காக 10 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இவை, வளர்ச்சி பணிகளில் அல்லது பல்வேறு துறைகளில் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நிலைகளை உருவாக்குவதற்குப் பயன்பட முடியாது என்பது என்னுடைய குறைபாடாகும்.

திட்ட ஒதுக்கீடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. 1982–83-ஆம் ஆண்டிலே திட்டத்திற்காக ஒதுக்கீடு, மத்திய ஒப்புதல் 711 கோடி ரூபாய் நமக்குக் கிடைத்தது. ஆனல்1982–83-ம் ஆண்டுக்கான செலவுகள் 795.93 கோடி ரூபாய் என்று நிதியமைச்சரே பத்திரிகையாளர்களிடத்திலே அறிவித்திருக்கிறார். நிதிநிலை அறிக்கையிலேயும் குறிப்பிட்டிருக்கிறார். ஒப்புதல் கிடைத்தது 711 கோடி ரூபாய்க்கு 982–83-ல். ஆனால் அதற்கும் மாறாக நாம் செலவழிக்க





வேண்டிய மொத்தத் தொகை. அது 795.9 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 796 கோடி ரூபாய் செலவாகி இருக்கின்ற நேரத்தில் 1983–84-ஆம் ஆண்டுக்கு ஒரு ஆயிரம் கோடி ரூபாயாவது கேட்டிருந்தால்தான் இன்னும் அதிகத் திட்ட உதவியை, ஒப்புதலை நாம் பெற்றிருக்க முடியும். ஆனால் என்ன காரணத்தாலோ நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் இறுதியில் 27 அல்லது 28-ஆம் தேதி வாக்கில் திருச்சியிலே பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது அவர்கள் கேட்ட கேள்விக்கு விடையிறுத்த நேரத்தில் 800 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் கேட்கப் போவதாகக் கூறினார்கள். 1982–83லே 796 கோடி ரூபாய் திட்ட செலவாகி இருக்கும்போது 800 கோடி ரூபாய்க்குத் தான் அதாவது 796 கோடி ரூபாயுடன் 4 கோடி ரூபாய் உயர்த்தித்தான் நாங்கள் கேட்பதாக இருக்கிறோம் என்று நவம்பர் மாதத்திலே கூறிவிட்டு பிறகு திட்டக் குழுவினை டெல்லிக்குச் சென்று சந்திக்கின்ற நேரத்தில் 845 கோடி ரூபாய் தான் நம்மால் பெற முடிகின்றது என்றால் அதற்குக் காரணம் நாம் முன்கூட்டியே செய்த தவறுதான் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பத்திரிகையாளரிடத்திலே பேசும்போதும் அல்லது இந்த அவையில் பேசுகின்ற நேரத்திலும் ஆயிரம் கோடி அல்லது 1200 கோடி ரூபாய் அளவுக்கு திட்டத்திற்கான ஒப்புதல் தேவை என்று நிதியமைச்சரோ மற்றவர்களோ ஆளும் கட்சி சார்பிலே எடுத்துக்கூறி இருப்பார்களேயானால் 845 கோடி ரூபாய் என்று ஒரு குறைந்த திட்ட ஒதுக்கீட்டிற்கான ஒப்புதலைப் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, நிதிநிலை அறிக்கையிலே நாவலர் அவர்கள் கோடிட்டுக் காட்டுகிறார். 845 கோடிக்கு திட்டக்குழு ஒப்புதல் அளித்திருக்கின்றது என்றாலும் கூட செலவு 893 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று குறிப்பிடுகின்றார். இப்படி 893 கோடி ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்ற நேரத்தில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கேட்டிருந்தால்தான் நாம் 900 கோடியாவது பெற்றிருக்க இயலும். எனவே தான் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசியபோது 800 கோடி ரூபாய் எங்களுக்குப் போதுமானது, எனவே அதைத்தான் கேட்பதாக இருக்கிறோம் என்று திருச்சியிலே நிதியமைச்சர் அவர்கள் கூறியது நமக்கு வரவேண்டிய ஒப்புதல் தொகைக்கு ஒரு இடையூறாக குறுக்கீடாக • அமைந்துவிட்டதோ என்று ஐயுறுகிறேன்.

மாநிலங்களுக்கு மத்தியிலிருந்து தரப்படுகின்ற உதவியைப் பற்றி, அதாவது நபர்வாரியாகக் கணக்கீடு செய்து தரப்படுகின்ற அந்த உதவியைப் பற்றி மத்திய திட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். பி. சவான் அவர்கள் பாராளுமன்றத்திலே ஒரு அறிக்கையைத் தரும்போது குறிப்பிடுகிறார். மாநிலங்களுக்கு நபர்வாரி உதவியைப் பொறுத்த வரையில் இராஜஸ்தானுக்கு ரூபாய் 60; உத்தரப் பிரதேசத்திற்கு ரூபாய் 48; மேற்கு வங்கத்திற்கு இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்

முதல் இரண்டு ஆண்டுகளுக்கு 32 ரூபாய் தான் கொடுத்தார்கள். அவர்கள் வாதாடி, போராடியதன் காரணமாக மேற்கு வங்கத்திற்கு கிடைத்த நபர்வாரி மாநில உதவி 65 ரூபாய். இராஜஸ்தானுக்கு 60 ரூபாய். உத்தரப் பிரதேசத்திற்கு 48 ரூபாய். மேற்கு வங்கத்திற்கு 65 ரூபாய்; தமிழ்நாட்டுக்கு 34 ரூபாய்; எனவே இந்த நிலையிலே இருக்கும்போது நம்முடைய கோரிக்கை குறைவாக இருந்ததால்தான் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய மத்திய உதவி கிடைக்காமல் போய் விட்டது என்ற குறைபாட்டை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

அரசாங்கத்தினுடைய சார்பில் நடைபெறுகின்ற தொழில்கள், கார்ப்பரேஷன்கள் இவைகள் எல்லாம் எப்படி நடைபெறுகின்றன என்பதை நான் அல்ல இதே அவையில் 27–1–83 அன்று வைக்கப்பட்டுள்ள Comptroller and Auditor-General of India அவர்கள் தந்த அறிக்கை என்ன கூறுகிறது என்பதை கொஞ்சம் கவனத்தில் நாம் கொள்ள வேண்டும். தமிழ் நாடு சிமெண்டு கார்ப்பரேஷன் 1979–80-ம் ஆண்டு நஷ்டம் 273 இலட்ச ரூபாய். 1980–81 நஷ்டம் 258 லட்ச ரூபாய்.

அந்த அறிக்கை 1980–81 வரையில்தான் முடிவுற்று 1983 ஆம் ஆண்டு இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அந்த அளவு கணக்கைதான் அந்த அறிக்கையின் மூலம் பெற முடிந்தது. லாபம் வந்து கொண்டிருந்த சில போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இப்போது நடக்க தொடங்கியிருக்கின்றன என்ற கணக்கினையும் அந்த அறிக்கை எடுத்து இயம்ப தவறவில்லை. சேரன் போக்குவரத்துக் கழகம் 1979–80-ல் 1.41 லட்சம் ரூபாய் லாபத்தில் நடைபெற்றது. 1980–81-ல் 1.06 லட்சம் ரூபாய் நஷ்டம் அடைகின்ற அளவுக்கு தாழ்ந்து போயிருக்கிறது. சோழன் போக்குவரத்துக் கழகம் 1979–80-ல் லாபம் 18.33 லட்ச ரூபாய். 1980–81 நஷ்டம் 117.74 லட்ச ரூபாய். அண்ணா போக்குவரத்துக் கழகம் 1979–80-ல் லாபம் 2.13 லட்ச ரூபாய். 1980–81-ல் நஷ்டம் 17.85 லட்ச ரூபாய். பெரியார் போக்கு வரத்துக் கழகத்தில் 1979–80-ல் நஷ்டம் 50.90 லட்ச ரூபாய். 1980-81 ல் நஷ்டம் 117.26 லட்ச ரூபாய். பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் 1979–80-ல் லாபம். 1.90 லட்ச ரூபாய். 1980–81-ல் நஷ்டம் 57.74 லட்ச ரூபாய். தமிழ் நாடு பாரஸ்டு பிளான்டேஷன் கார்ப்பரேஷன் 1979–80-ல் நஷ்டம் 9.11 லட்ச ரூபாய், 1980-81-ல் நஷ்டம் 20.89 லட்ச ரூபாய். இதுபோல மொத்தம் 19 தொழில்களில் ஏற்பட்டுள்ள நஷ்டம் 1979–80-ல் 7 கோடி ரூபாய் என்றும், 1980–81-ல் 9 கோடி ரூபாய் என்றும் இந்த அவையில் அரசின் சார்பில் வைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. இதற்கு அடுத்த ஆண்டுகளில் மேலும் மேலும் நஷ்டம் இருக்கக்கூடும். இப்படிப்பட்ட நஷ்டத்தை நாம் இங்கே எடுத்துக்காட்டுகின்ற காரணத்தால்





போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடு செய்ய நாங்கள் கட்டணங்களை உயர்த்த வேண்டிய அவசியம் இருக்கிறது. எதிர்க்கட்சி தலைவரே நஷ்டங்களை சுட்டிக் காட்டியிருக்கின்ற காரணத்தினால் நாங்கள் அதை ஈடு செய்ய வேண்டிய அவசியத்திற்கு பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டியிருக்கிறது என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் கூற மாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த நஷ்டங்களுக்குக் காரணம் கட்டணத்தை உயர்த்தாதது அல்ல என்பதையும் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறாத காரணத்தினால்—நிர்வாக இயந்திரத்தில் பழுது இருக்கிற காரணத்தினால்—ஆக்கப்பூர்வமான பணிகள் இந்தத் தொழில்களில் நிர்வாக ரீதியாக நடைபெறாத காரணத்தால் இத்தகைய நஷ்டத்திற்கு இந்தத் தொழில்கள் ஆளாகியிருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்று மிகப் பெரிதாக இந்த மாநிலத்தில் விவாதிக்கப் படுகின்ற பிரச்னை உணவுப் பிரச்னை. நான் இந்த உணவுப் பிரச்னை குறித்து சில கருத்துக்களை விவரமாகக் கூற விரும்பு கிறேன். அதற்கு முன்பு, நான் ஏதோ மத்திய அரசுக்குச் சார்பாக வாதாடுகிறேன் என்று யாரும் தயவுசெய்து கருதிக் கொள்ளவேண்டாம். இப்போது அவர்கள் 5 ஆயிரம் டன் அரிசியும் 5 ஆயிரம் டன் கோதுமையும் அனுப்பியிருப்பது எதிர் கட்சித் தரப்பில் உள்ளவர்களும், ஆளும் கட்சித் தரப்பில் உள்ளவர்களும் எடுத்துக் காட்டியதுபோல் ''யானைப் பசிக்கு சோளப் பொறிபோல்'' என்பதை நான் மறுக்கவில்லை. ஏற்றுக் கொள்கிறேன். எத்தனை தவறுகள், குறைபாடுகள் மாநில அரசு மீது மத்திய அமைப்பால் அல்லது மத்திய அரசால் சுட்டிக்காட்டப்பட்டால்கூட இந்தியா ஒரு நாடு என்கிற கொள்கையை கடைப்பிடிக்கின்ற தேசிய உணர்வுக்கு முக்கியத் துவம் தருகின்ற மத்திய அரசு மாநில மக்களுடைய கஷ்டங் களை அறிந்து உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்க உடனடியாக முன்வர வேண்டும் என்பதிலே இரு வேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

5 ஆயிரம் டன் அரிசி அனுப்பியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 7 மணி நேரம் உண்ணாவிரதம் இருந் தார்கள். அடையாளமாக ஒரு 7 ஆயிரம் டன்னாவது அனுப்பி யிருக்கலாம். அதுகூட அனுப்பாமல் 5 ஆயிரம் டன் அரிசியை அனுப்பியிருக்கிறார்கள். இப்போது பெரிய பிரச்னை மத்திய தொகுப்புக்கும் மாநில அரசுக்கும் இடையே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வாதப்பிரதிவாதங்கள். மத்திய தொகுப்பு என்றால் ஏதோ டெல்லியிலே களஞ்சியங்கள் கட்டி வைத்து அதற்கு எல்லா மாநிலங்களிலும் இருக்கிற அரசுகள் அரிசியையோ அல்லது உணவு தானியங்களையோ அனுப்பி

வைக்க வேண்டுமென்பது பொருள் அல்ல. அந்த அந்த மாநிலங்களிலே மத்திய தொகுப்பு களஞ்சியங்களும் அலுவலகங்களும் இருந்து அந்த அந்த மாநிலங்களில் உள்ள உபரியான தானியங்களை அந்தத் தொகுப்புகளுக்கு அளிப்பதும் அப்படி சேகரிக்கப்பட்ட உணவு தானியங்களை இந்தியாவிலே எப்போது ஒரு மாநிலத்தில் ஸ்கேர்சிட்டி, உணவுப் பற்றாக்குறை, வருகிறதோ அந்த நேரத்திலே உணவு தானியங்களை அந்த மாநிலங்களுக்கு அளிப்பதுதான் மத்திய தொகுப்பின் வேலையே தவிர வேறல்ல. ஏன் என்றால் மத்திய அரசுக்கு இந்த மாநிலங்களிலே இருக்கிற நிலங்களைத் தவிர வேறு தனியாக நிலங்கள் சாகுபடி செய்வதற்கு இல்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே மத்திய தொகுப்புக்கு ஒவ்வொரு மாநிலமும் தருகிற அரிசி அல்லது உணவு தானியம் இவையெல்லாம் பற்றாக் குறை மாநிலங்களுக்காக முன்னேற்பாடாக முன்னெச்சரிக்கையாக தரப்படுகிற ஒன்றே தவிர வேறு அல்ல.

மேலவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்ணா நோன்பு இருப்பதாக அறிவித்த அந்தக் கட்டத்தில் ஒரு அறிக்கையைப் படித்தார்கள் அல்லது பேசினார்கள். அது ஏடுகளிலே வெளிவந்திருக்கிறது. அப்போது அவர்கள் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். 1971-இல் 50 ஆயிரம் டன் அரிசி தமிழ் நாட்டிலிருந்து மத்திய தொகுப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1972–73-ஆம் ஆண்டில் 1 லட்சத்து 11 ஆயிரம் டன் தமிழ் நாட்டிலிருந்து மத்திய தொகுப்புக்கு தரப்பட்டது. 1975–76-இல் 2 லட்சத்து 93 ஆயிரம் டன் தமிழகத்திலிருந்து மத்திய தொகுப்புக்கு தரப்பட்டது. இவைகளைக் கூறிவிட்டு 1979-ஆம் ஆண்டிலே கொடுத்த 2½ லட்சம் டன் அரிசியை மைய அரசு பெற்று கொள்ள தாமதம் காட்டியது அல்லது தயக்கம் காட்டியது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையிலே பேசினார்கள், உண்ணாவிரதத்திற்கு முதல் நாளென்று பேசினார்கள். எல்லா ஏடுகளிலும் அந்த செய்தி வெளிவந்திருக்கிறது. தமிழக அரசு மத்திய தொகுப்புக்குக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆண்டுகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசு இங்கே கோலோச்சிய ஆண்டுகள் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மறந்து இருக்கமாட்டார்கள். அவைத் தலைவர் அவர்களே, தாங்களும் மறந்திருக்க மாட்டீர்கள், நம்முடைய மின்துறை அமைச்சரும் மறந்து இருக்கமாட்டார்கள். ஆகவே 1971-ஆம் ஆண்டு 50 ஆயிரம் டன் அனுப்பியதானாலும் 1972–73-ஆம் ஆண்டு 1 லட்சத்து 11 ஆயிரம் டன் அனுப்பியதானாலும் 1975–76 ஆம் ஆண்டு 2 லட்சத்து 93 ஆயிரம் டன் அனுப்பியதானாலும்





அது கழக ஆட்சிக் காலத்திலே அனுப்பப்பட்ட அரிசியாகும். 1979-ஆம் ஆண்டிலே கொடுத்தோம், எடுத்துக்கொள்ளவில்லை, தயக்கம் காட்டினார்கள் என்றெல்லாம் முதலமைச்சர் சொல்கின்ற அந்த காலகட்டத்தில் மத்தியில் இருந்த அரசு ஜனதா அரசு என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. 1970–71 இல் கழக ஆட்சிக் காலத்திலே 50 ஆயிரம் டன் மத்திய தொகுப்புக்குத் தந்தபோது தமிழ் நாட்டினுடைய உணவு உற்பத்தி எவ்வளவு? நான் 1971-ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் உள்ள நிதிநிலை அறிக்கைகள் அத்தனையையும் இங்கே கைவசம் வைத்திருக்கிறேன், சந்தேகம் ஏற்பட்டால் சான்று காட்டுவதற்காக. அதன்படி 1970–71-இல் கழக ஆட்சியிலே உணவு உற்பத்தி எவ்வளவு என்று நிதிநிலை அறிக்கையிலே அன்றைக்கு சுட்டிக்காட்டப்பட்டது 70 லட்சம் டன். அந்த 70 லட்சம் டன்னிலேதான் 50 ஆயிரம் டன் மத்திய தொகுப்புக்கு தரப்பட்டது.

(முற்பகல் 11–10).

முதலைச்சர் குறிப்பிட்டபடி 1972–73-ல் ஒரு லட்சத்து 11 ஆயிரம் டன் தரப்பட்டபோது தமிழகம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, தஞ்சை, தென்னாற்காடு போன்ற பல மாவட்டங்களில் கழனிகள் எல்லாம் கரைபுரண்டு வந்த ஆற்று வெள்ளத்தால் மண் மேடிட்டு, பல கோடி ரூபாய் செலவிடப்பட்டு அந்த மண்மேடுகளை எல்லாம் கரைத்து, வெட்டியெடுத்து மீண்டும் வயல்களை காண வேண்டிய ஒரு பயங்கரமான சூழ்நிலை. அந்த சூழ்நிலையில் கூட 1972–73-ல் முதலைச்சர் அவர்கள் சுட்டிகாட்டியதைப் போல 1 லட்சத்து 11 ஆயிரம் டன் அரிசியை கழக அரசு மத்திய தொகுப்பிற்கு தந்துள்ளது. 1975–76 வறட்சி காலம். அப்போது இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையை படித்த நான் இப்படியே சொல்லியிருக்கிறேன். வறட்சி துயர்தணிப்புப் பணிகளுக்காக திட்டத்திற்கு அப்பால் மேலும் 20 கோடி ரூபாய், 1975–76 வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது, என்று நான் குறிப்பிட்டதிலேயிருந்து, அது வறட்சி காலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நாடும் அறியும், ஆனால் அந்த வறட்சி காலத்திலே முதலமைச்சர் மேலவையிலே குறிப்பிட்டதைப் போல 1975, 1976-ல், 2 லட்சத்து 93 ஆயிரம் டன் தமிழக அரசு மத்திய தொகுப்பிற்கு ஒதுக்கியிருக்கிறது. 1979-ல் அன்றுள்ள அரசு, கொடுத்ததை ஏற்றுக்கொள்ளவில்லை; தாமதம் காட்டினார்கள் என்று சொல்லப்பட்டாலும் கூட, 1978-ல் கொடுத்தார்களா என்றால், இல்லை. 1978-லே உணவு உற்பத்தி குறைவா என்றால், கிடையாது. 1978-ம் ஆண்டு 74 லட்சம் டன் உணவு உற்பத்தி என்று நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. 1970 71-லே 70 லட்சம் டன் உற்பத்தி

[டாக்டர் மு. கருணாநிதி] [1933 மார்ச் 14

ஆகக்கூடிய சூழ்நிலையிருந்தபோது நாம் 50 ஆயிரம் டன் அன்றிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கொடுத்திருக்கிறது. ஆனால் 74 லட்சம் டன் உற்பத்தியானபோது 1978-ல் அன்றுள்ள அரசு கொடுக்கவில்லை என்பதை மறந்துவிட இயலாது. 1978–79 நிதிநிலை அறிக்கையின்படி 87 லட்சம் டன் உற்பத்தி. 87 லட்சம் டன் உற்பத்தியான போதும் இந்த அரசு மத்திய அரசு தொகுப்பிற்கு அரிசி அனுப்பவில்லை. 1980–81-ல் நம்முடைய நாவலர் அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையின்படி, உணவு உற்பத்தி 89 இலட்சம் டன். அப்போது மத்திய தொகுப்பிற்கு இந்த அரசு அரிசி தரவில்லை. 1981–82 ஆம் ஆண்டில் நாவலர் அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையின்படி அறிவித்தது 92 இலட்சம் டன் உற்பத்தியாகும் என்று ; ஆனால் உற்பத்தியானதாக பிறகு சொல்லப்பட்டது 85 இலட்சம் டன். அப்போதும் மத்திய தொகுப்பிற்கு இந்த அரசு அரிசி அனுப்பவில்லை. 1982–83 ஆம் ஆண்டு அறிக்கையில் 96 இலட்சம் டன் எதிர்பார்க்கப்படுகிறது என்று சொன்ன போதிலும் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படவில்லை என்பதையும், வறட்சியால் இந்த மாநிலம் பாதிக்கப்பட்டது என்பதையும் நாங்கள் மறந்து விடவில்லை ; ஆனால் நான் கேட்பதெல்லாம், 1978–79, 1980–81, 1981–82 ஆகிய மூன்று ஆண்டுகளில் மத்திய அரசின் தொகுப்பிற்கு ஏன் அனுப்பவில்லை ? இங்கே வேளாண்மைத் துறை நல்லமுறையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. வேளாண்மைத் துறையில் ஆண்டிற்காண்டு வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. என்றெல்லாம் நிதி நிலை அறிக்கையில் பெருமையாகக் கூறிவிட்டு மத்திய தொகுப்பிற்கு வழங்கவேண்டியதை ஏன் வழங்கவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டாகும்.

1982–83 ஆம் ஆண்டில் இந்த அவையில் வைக்கப்பட்ட "நுகர் பொருள் வழங்கல் கொள்கை விளக்கக் குறிப்பு" என்னுடைய கையில் இருக்கிறது. அதிலே அரசின் சார்பில் என்ன குறிப்பிட்டிருக்கிறீர்கள் ? "மாநிலத்தின் பல பகுதிகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு, வழக்கமான உபரி மாவட்டங்களான வடாற்காடு, செங்கல்பட்டு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் நெல் மற்ற பொருள்கள் உற்பத்தி குறைந்து விட்ட இந்த நேரத்திலும் நிலைமை கட்டுக்கடங்காமல் போக அனுமதிக்கப்படவில்லை ; இந்திய அரசின் மத்திய தொகுப்பிலிருந்து அதிக அளவில் ஒதுக்கீடு செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன் ஒதுக்கீடு செய்யப்பட இந்த அரசு மத்திய அரசைக் கேட்டு வந்தது. அவர்கள் மாதம் ஒன்றுக்கு 60 ஆயிரம் டன் என்ற அளவிற்கு ஒதுக்கீடு



1983 மார்ச் 14] [டாக்டர் மு. கருணாநிதி]

செய்தார்கள். இந்த அளவு நாம் கேட்டதை விட குறைவாக இருந்தாலும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தக்க தருணத்தில் செய்த உதவிக்கு இந்த அரசு நன்றி கூறிக் கொள்கிறது. ஆக சென்ற ஆண்டு 60 ஆயிரம் டன் மாதம் ஒன்றுக்கு மத்திய தொகுப்பிலிருந்து தமிழக அரசிற்கு அரிசி தரப்பட்டிருக்கிறது, என்பது இந்த அவையிலே வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பின் மூலமே உணர்த்தப்படுகிறது. அப்படி 60 ஆயிரம் டன் கொடுத்தவர்கள் இந்த ஆண்டு ஏன் கொடுத்திருக்கக் கூடாது ? அதாவது தமிழக அரசு மத்திய தொகுப்பிற்கு தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் கொடுக்காதிருந்த போதே, 60 ஆயிரம் டன் கொடுத்த மத்திய தொகுப்பு, அல்லது மத்திய அரசு இப்போதும் ஏன் தந்திருக்கக் கூடாது என்கிற கேள்வி இயல்பாக எழும்.

ஆனால், அப்படிப்பட்ட கேள்வி வேகமாக, அல்லது உணர்வு பூர்வமாக எழுகிற நேரத்தில், அதைத் தடுக்கிற வகையில், அல்லது அந்தக் கேள்விக்கு ஒரு தயக்கத்தை ஏற்படுத்துகின்ற வகையில், டெல்லிக்குச் சென்று திரும்பிய, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பத்திரிகை நிருபர்களிடையேயான பேட்டி அமைந்து விட்டது என்பதை நான் கூறாமல் இருக்க முடியாது. 18–2–1983 அன்று டெல்லியிலிருந்து திரும்பிய முதலமைச்சர் அவர்களை நிருபர்கள் சந்தித்துக் கேட்கிறார்கள். நிருபர் : 85,000 டன் அரிசியில் ஓரளவாவது ஈடுகட்ட வேண்டுமென்று கேட்டீர்களா ? அதற்கு முதலமைச்சருடைய பதில் "அதை இப்பொழுது சொல்ல முடியாது. அவர்களுக்கே நெருக்கடி இருக்கிறது. இந்தியா முழுவதற்கும் சென்ற ஆண்டு கையிருப்பிலிருந்த அரிசியை விட இப்பொழுது அவர்களிடத்திலே அரிசி குறைவு."

இப்படிச் சொல்லிவிட்ட பிறகு நாம் எங்களுக்கு அரிசி தர வேண்டுமென்று போராடுவதற்கான உரிமையை, நம்மை அறியாமல் விட்டுக் கொடுத்து விடுகிறோமா இல்லையா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உணவுத் துறையிலே, மிக முக்கியமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்ற— நல்ல முறையிலே என்று சொல்ல மாட்டேன். ஏதோ நிறைவேற்றப்பட்டு வருகின்ற—சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 134 கோடி செலவழிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே நாவலர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

ஆந்திராவில் ஏறத்தாழ—இங்கே 67 இலட்சம் அல்லது 65 இலட்சம் பிள்ளைகள் என்றால், ஆந்திராவிலேயும்—63-லிருந்து 64 இலட்சம் பிள்ளைகளுக்குச் சத்துணவு—ரொட்டியும், பாலும்

— தருவதற்கு ரூ. 80 கோடி செலவாகும் என்று ஆந்திர நிதி அமைச்சர் அண்மையிலே வெளியிட்ட கருத்து, எல்லா ஏடுகளிலும் வந்திருக்கிறது.

இதிலே, இன்னொரு வேடிக்கை. சத்துணவிற்காக, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் மாதந்தோறும் சுமார் 20,000 டன் அரிசி வாங்கப்படுகிறது. இந்த அரிசி எந்த விலைக்கு வாங்கப் படுகிறது என்றால், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் 1 கிலோ ரூ. 4-க்கு வாங்குகிறது. ஆனால், சத்துணவுத் திட்டத்திற்காக, அதை அரசுக்கு, அல்லது அரசினுடைய துறைகளுக்குக் கொடுக்கும்போது, ஒரு ரூபாய் 75 காசுக்குக் கொடுக்கிறது. அதாவது, ஒரு கிலோவிற்கு, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு ரூ. $2\frac{1}{4}$ நஷ்டம் என்றால், மாதத்திற்கு 20,000 டன்னுக்கு, ரூ. $4\frac{1}{2}$ கோடி ; ஆண்டுக்கு ரூ. 50 கோடி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு நஷ்டம். அந்த நஷ்டத் த ஈடுகட்ட வேண்டியது அரசின் பொறுப்பு என்று நாம் எடுத்துக் கொள்வோமேயானால், 134 பிளஸ் 50 ஆக, சத்துணவிற்காக ரூ. 184 கோடி செலவழிக்கப்படுகிறது.

இதை நான் சொல்கிற காரணத்தாலேயே, திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர்கள் சத்துணவிற்கு இந்தத் திட்டத்திற்கு— எதிரிகள் என்று இங்கும் பேசலாம்— வெளியிலும் பேசலாம். ஆனால், இந்த மன்றத்திலே அவைக் குறிப்பிலே என்னுடைய பேச்சு ஏறியிருக்கிறது. சத்துணவுத் திட்டம் பற்றி சில மாற்றுக் கருத்துக்களை நாங்கள் சொன்னோமே தவிர, புறம்பான கருத்துக்களை நாங்கள் எடுத்துக் கூறவில்லை. இந்த முறையினால் ஊழல்கள் பெருகிடக் கூடும், தவறுகள் நடந்திடக் கூடும். எனவே, இதற்குப் பதிலாக வேறு ஒரு மாற்றுக் முறையின் மூலம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கலாம் என்ற கருத்தைத் தான் இந்த அவையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆனால், இங்கும் வெளியிலும் தேர்தல் பிரச்சாரங்களிலும் 'சத்துணவு போடுகின்ற முதலமைச்சருக்கா ? அல்லது சத்துணவு வேண்டாம் என்கிற கருணாநிதிக்கா' என்கிற அளவுக்குக் கேள்விகள் விசுவரூபம் எடுத்து ஏதோ சத்துணவு திட்டத்திற்கே நாங்கள் விரோதிகள் என்பதைப் போன்ற ஒரு பாவனை, அதற்குக் காட்டப் பட்டதை, உள்ளபடியே நான் வேதனையோடு குறிப்பிடுகின்றேன். சத்துணவு சத்துணவாக இருக்க வேண்டுமென்பது எங்களுடைய கருத்தே தவிர வேறு அல்ல.

5,000 அல்லது 10,000 அல்லது 20,000 ரூபாய்க்கு ஒரு சத்துணவுக் கூடம் கட்டப்படுகிறதென்றால், அந்தக் கூடத்தினுடைய திறப்பு விழாவுக்கு, ரூ. 2 இலட்சம், ரூ. 3 இலட்சம் செலவழிக்கப்பட்டால், இந்த வீண் விரயங்கள் எல்லாம் தவிர்க்கப் படக் கூடாதா என்று நாங்கள் கேட்பது சத்துணவுத் திட்டத்திற்கு நாங்கள் எதிரிகள் என்று ஆகிவிடாது.





நம்முடைய நிதியமைச்சர், ரேஷன் கார்டுகளுக்கு இருபது கிலோ அரிசி மாதம் ஒன்றுக்குத் தரப்படுகிறது என்று குறிப்பிட்டார். ஆனால் நம்முடைய நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னிடத்திலே ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார்கள். அதாவது, தென்னாற்காடு மாவட்டத்தில் 1–2–1983 முதல் 15 நாட்களுக்கு ஒரு கார்டுக்கு மூன்று கிலோ அரிசிதான் தரப்படுகிறது. அதாவது 1–2–1983 முதல் மூன்று கிலோ அரிசி 15 நாளைக்கு ; மாதத்திற்கு ஆறு கிலோ அரிசி தான் தரப்பட்டது. அதையும் இப்பொழுது மாற்றி 1–3–1983 முதல் இரண்டு கிலோ அரிசிதான் தரப்படுகிறது 15 நாளைக்கு ; மாதத்திற்கு நான்கு கிலோ அரிசிதான் தரப்படுகிறது என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

(முற்பகல் 11–20).

தமிழகத்தை உலுக்கிக் கொண்டிருக்கின்ற உணவுப் பிரச்சினையைப் போல, மின்சார வெட்டுப் பிரச்சினை. இதன் காரணமாக எந்த அளவிற்கு இந்த மாநிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மீண்டும் மீண்டும் இங்கே விரிவாக எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். மழை பெய்யவில்லை, எனவே புனல் மின்சாரம் இல்லை என்று காரணம் காட்டப்பட்டாலும், புனல் மின்சாரம் இல்லாவிட்டால் என்ன, அனல் மின்சாரத்தையாவது நீங்கள் அக்கறை காட்டி அதைப் பெருக்கி வசதிகளைத் தந்தீர்களா என்றால் இல்லை என்ற பதில் தான் இன்றைக்கு எங்களுக்குக் கிடைக்கிறது.

நான் கேள்விப்படுகிறேன், அது ஒருவேளை தவறாக இருக்குமேயானால் பிறகு மின்துறை அமைச்சரவர்கள் நிதியமைச்சரிடத்தில் சொல்லி திருத்தம் கூடத் தரலாம். நான் கேள்விப்பட்டவரையில், மத்திய அரசு, "கோல் இந்தியா லிமிடெட்" வாயிலாக தூத்துக்குடி, எண்ணூர் மின்நிலையங்களுக்கு 1,80,000 டன் மாதந் தோறும் நிலக்கரி ஒதுக்கீடு செய்திருப்பதாகவும், இதில் 80,000 டன் கூட நாம் எடுத்து வருவதாகத் தெரியவில்லை என்றும் எனக்குத் தகவல்.

கல்கத்தாவில் "கரன் சந்த் தாப்பா" என்ற ஒரு கம்பெனிக்கு தான் இந்தக் கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே பலர் டென்டர் கேட்டும்கூட, குறிப்பாக கல்கத்தாவிலே "கரன் சந்த் தாப்பாவுக்கு" ஐந்தாண்டு காலமாக அவரே கான்ட்ராக்ட் எடுக்கின்ற சூழ்நிலை உருவாகயிருக்கிறது.

அந்தக் கம்பெனி வேறு பல மின்சார வாரியங்களுக்கு, டெல்லியிலே உள்ள மின்சார வாரியங்களுக்கு, எல்லாம் இந்த நிலக்கரியை சப்ளைசெய்ய வேண்டியிருப்பதால் நம்முடையதேவையைநிறைவு,

செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். இப்பொழுது மறுபடியும் டெண்டர் போட்டபொழுது ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஒரு டெண்டர் போட்டபொழுது, வேறு சிலர் குறைந்த தொகைக்கு டெண்டர் கேட்டாலும் ட அவர்களுக்கு டெண்டர் தரப்படாமல் அதே ''கரன் சந்த் தாப்பா'' என்ற இந்தக் கம்பெனியை அழைத்து அவர்களை குறைத்துக் கொள்ளச் சொல்லி, ஐந்தாண்டுக் காலமாக எந்த அளவு டெண்டர் அவர்கள் போட்டு வாங்கிக் கொண்டிருந்தார்களோ அதை அவர்கள் குறைத்துக் கொண்டு, அவர்களுக்கு மறுபடியும் தரப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படித் தரப்பட்டிருந்தால் இந்த ஐந்தாண்டுக் காலமாக நாம் அதிகமாகக் கொடுத்தது வீண் நஷ்டம் தானே, இழப்பு தானே என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

இதை அவையிலே நான் முதலில் குறிப்பிடத்தைப்போல 27—1—83-இல் வைக்கப்பட்ட, Comptroller and Auditor General of India தந்த அறிக்கையில் 1980 81-ஆம் ஆண்டுக்கான நிலவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அடுத்தடுத்த ஆண்டுக்கான அறிக்கைகள் பிறகு வெளிவரக்கூடும். 1980-81-இல் மட்டும் எவ்வளவு நிர்வாக சீர்கேடுகள் இருந்தன என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

Against the normal item of 35 to 45 days for erection, more than 6 months were taken for erection in a large number of cases; in a few cases, the delay in erection was 1 to 4 years resulting in locking up of large, funds for longer periods.

அதாவது 35 முதல் 45 நாட்களுக்குள் நடைபெற்று முடியவேண்டிய பவர் டிரான்ஸ்ஃபார்மர் நிறுவுகிற பல வேலை ஆறு மாதங்களுக்கும் மேலும் சிலவற்றில் ஓராண்டு முதல் நான்காண்டு வரையிலும் நடைபெற்று நீண்ட நாட்களுக்கு அதிகமான பணம் முடங்கப்பட காரணமாக இருந்திருக்கிறது என்று

Comptroller and Auditor General of India.

அறிக்கை குற்றம் சாட்டுகிறது.

Thirty-eight transformers of small capacity with an aggregate capacity of 37.25 MVA were lying idle.





38 டிரான்ஸ்ஃபார்மர்கள் வேலையில்லாமல் தூங்கிக்கிடக்கின்றன.

There was considerable delay in repairing failed transformers. As on 28th February 1981, 36 transformers were awaiting repairs for periods for more than one to three years.

ஆகவே, 164 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 36 டிரான்ஸ்பார்மர்கள் பழுது பார்க்கப்படுவதற்கு மூன்று ஆண்டு காலம் வரையில் காத்துக் கிடந்தன என்றும் அந்த அறிக்கை குற்றம் சாட்டுகிறது. இந்த மின்சாரத் துறையில் எந்த அளவுக்கு காரியங்கள் தாமதமாக நடைபெறுகின்றன என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. அதே அறிக்கையில் 103 ஆம் பக்கத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 46 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கனடா நாட்டுக் கம்பெனியால் விற்கப்பட்ட 2 டிரான்ஸ்பார்மர்கள் கொரட்டூரில் 25–11–1976-ல் பழுதுபட்டன. எண்ணூர் மின்நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட ஜுன் 1977 வரையில் டிராக்டர்கள் கிடைக்காததால், தாமதமாக எடுத்துச்செல்லப்பட்டது. எப்போது செப்டம்பர் 1977-ல். அதிலே ஒருடிரான்ஸ்பார்மர் சோதிக்கப்பட்டு அதற்குத் தேவையான துணைக் கருவிகள் நிச்சயிக்கப்பட்டன. நிச்சயிக்கப்பட்ட பிறகு, கனடா கம்பெனிக்கு, அந்தத் துணை கருவிகளுக்கான விலைப் பட்டியல் கேட்டு, பிப்ரவரி 1978-லே எழுதினார்கள். ரிப்பேர் ஆனது 1976-ல். அந்த ரிப்பேருக்கான டிரான்ஸ்பார்மருக்கு துணைக் கருவிகள் கேட்டது, பிப்ரவரி 1978-ல். இரண்டு துணைக் கருவிகள் விலைப் பட்டியலிலே சேர்க்கப்படவில்லை என்பது பிறகு ஞாபகத்திற்கு வந்து, மறுபடியும் அது குறித்து தகவல் கேட்டு, 1979 ஜனவரியில் தகவல் கிடைத்தது. பிறகு இறக்குமதி உரிமம் 1981 ஜனவரியில் கிடைத்து, துணைக் கருவிகள் வந்து சேர்கின்றன. அதற்குப் பிறகும், இந்த அறிக்கை தயாரிக்கப்பட்ட 1982 பிப்ரவரி மாதம் வரையில், அந்தக் கருவிகள் பொருத்தப்படவில்லை. அந்த டிரான்ஸ்பார்மர் அப்படியே கிடக்கிறது. இது ஒரு டிரான்ஸ்பார்மருடைய நிலை. பழுதான இன்னொரு டிரான்ஸ்பார்மர் 1982 பிப்ரவரி மாதம் வரை சோதனை செய்யப்படவேயில்லை என்று அறிக்கை கூறுகிறது. ஆக 1976-ல் பழுதான டிரான்ஸ்பார்மர்கள் இரண்டு, பழுது பார்க்கப்பட, 1976-லிருந்து எடுக்கப்பட்ட முயற்சிகள் தாமதமாகி, தாமதமாகி, எடுத்த முயற்சிகள் முறையாக எடுக்கப்படாத காரணத்தால், 6 ஆண்டுகளுக்குப் பிறகு 1982-ஆம் ஆண்டிலிருந்து தான் அந்த வேலைகள் என்றால், இன்னமும் முடிந்ததா என்று அந்த அறிக்கையில் வைக்கப்படுகிற வரை தெரியவில்லை என்று சொல்கின்ற அளவுக்கு அந்த அறிக்கை அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது.

The stock of sick transformers had increased from 692 as on 31st March 1978 to 1,362 as on 31st March 1980 due to insufficiency of repairing facilities and inadequancy of staff.

1978-இல் 692 ஆக இருந்த பழுது பட்ட டிரான்ஸ்பார்மர்கள் 1980-ல 1362 ஆக பெருகிவிட்டன என்றும் அறிக்கை குறை கூறுகிறது.

Due to delay in processing the tenders for purchase of transformers and making purchases of additional requirement from another firm at higher rate resulted in an additional expenditure of Rs. 13·63 lakhs to the Board.

டிரான்ஸ்பார்மர் வாங்குவதில், டெண்டர்களைப் பரிசீலிக்க ஏற்பட்ட தாமதத்தால், 13 இலட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே அறிக்கையில் 149 ஆம் பக்கத்தில் மின்சாரம் சப்ளை செய்யும் பொழுது இடையிலே அதிகமான அளவிற்கு வீணாக்குவதை, விரயத்தை, தடுப்பதற்காக ஷென்ட் கெபாசிட்டர்ஸ் பொருத்துவது என்ற முடிவு எடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 44 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 ஷென்ட்கெபாசிட்டர்ஸ் வரவழைக்கப்பட்டு, 1977 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இது பெறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஷென்ட் கெபாசிட்டர்ஸ் பொருத்தப்பட்டதா என்றால், இல்லை. 1977 செப்டம்பர் மாதம் வரையிலே பொருத்தப்படவில்லை. பிறகு தலைமைப் பொறியாளர் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார். இன்னும் 6 மாதத்திற்குள்ளே பொருத்தப்படாவிட்டால் அந்த இயந்திரம் கெட்டுவிடும் என்று அவர் எச்சரித்திருக்கிறார். இதற்குப் பிறகும், இன்னும் சீரான செயல் முறைத் திட்டம் இல்லாததால், 1981 ஆம் ஆண்டு இதில் 3 இயந்திரங்கள் மாத்திரம் பொருத்தப்பட்டு, இன்னும் ஒன்று பிப்ரவரி 1982 வரை பொருத்தப்படவில்லை என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இப்படிப்பட்ட நிர்வாகச் சீர்கேடுகளால், புனல் மின்சாரம் நமக்குக் கிடைக்காவிட்டாலும், அனல் மின்சாரத்தை நாம் பெற முடியாத அளவுக்கு, நாம் முயற்சிகளிலே தயக்கம் காட்டியதும், பல்வேறு நிர்வாகக் கோளாறுகள், முறைகேடுகள் ஏற்படுவதன் காரணமாகவும், இன்றைக்கு மின்வெட்டினால், இலட்சக்கணக்கான தொழிலாளர் கள, அவதிப்படுகின்றார்கள். கிராமப் புறத்திலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30.)

அது மாத்திரம் அல்ல. இந்த மாநிலத்திலே ஆக வேண்டிய உற்பத்தி எத்தனை கோடி ரூபாய்க்கு இன்றைக்கு ஆகாமல் பெரு நஷ்டத்திற்கு இந்த மாநிலம் ஆளாகியிருக்கிறது என்பதையும் நாம் கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 26 கோடி ரூபாய்க்கு வரிகளை விதித்து அறிவித்திருக்கிறார்கள். 1 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை, 26 கோடி ரூபாய்க்கு வரிச் சுமை. இதிலே நுழைவு வரி ஒன்று விதிக்கப்பட்டிருக்கிறது. இது நுழைவு வரியா, அல்லது குழைவு வரியா என்பது விரைவிலே தெரியும்.





போகப் போகத் தெரியும். நிதி அமைச்சர் அவர்கள் பதிலிலே தெரியும். இது 1852 ஆம் ஆண்டு பாளையக்காரர்களுடைய காலத்திலே இப்படிப்பட்ட ஒரு வரி போடப்பட்டதாக கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகள் எழுதிய நூல் ஒன்றில் காணப்படுகிறது. 1852 ஆம் ஆண்டு பாளையக்காரர்களுடைய காலத்திலே போடப்பட்ட இந்த வரி, கிட்டத்தட்ட 131 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆட்சியில் போடப்பட்டிருக்கிறது. நாவலருக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். ஒன்றாக இருந்த காலத்தில், கழக ஆட்சி நடைபெற்ற காலத்தில் மறைந்து விட்ட மேயர் முனுசாமி அவர்கள் இந்த வரி போட வேண்டுமென்று பல முறை என்னிடத்தில், நாவலர் இடத்திலே, பேராசிரியர் இடத்தில், அமைச்சர்கள் இடத்தில் வாதாடியிருக்கிறார்கள். அந்த வரியை, அதிலே வருகின்ற பலனை, அரசு அனுபவிக்கக்கூடாது என்றும், மாநகராட்சி மன்றத்தினுடைய பணிகளுக்காக அந்த வரி மூலமாக கிட்டுகின்ற வருமானம் செலவிடப்பட வேண்டும் என்றும், எனவே, அந்த வரியை விதிக்க வேண்டும் என்றும் என்னிடத்திலே நண்பர் முனுசாமி பல முறை கேட்டும் கூட நான் இதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்துவிட்டோம். அந்த வரி விதிக்கப்படவில்லை. இப்போது விதிக்கப்பட்டு இருக்கிறது. சர்க்கரை, துணி, புகையிலை, சிமென்ட், காகிதம், மருந்து ஆகிய இத்தனை பொருட்கள் மீது, எல்லா வணிகர்களும் இன்றைக்கு சேர்ந்து கோரஸ் பாடுகிறார்கள். பஜனை பாடுகிறார்கள, இனிமேல் எங்களுடைய வாழ்வே போயிற்று. ரகுபதி ராகவ ராஜாராம், பதீத பாவன சீத்தாராம் என்று, தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆகவே இப்படி அவர்கள் பஜனை பாடிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அளவிற்கு கடைகள் அடைப்பு என்றும், பேரணிகள் என்றும் வியாபாரிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த வரியை நீக்க வேண்டுமென்பது என் கருத்து மாத்திரமல்ல நுழைவு வரி என்ற தலைப்பே நீக்கப்படவேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து மாத்திரம் அல்ல. இந்த வரிசையிலே அமர்ந்திருக்கின்ற அத்தனை பெயர்களுடைய கருத்து என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் நான் அதிக வேகமாகப் பேசுகின்ற காரணத்தால் ஒருவேளை ஆதாயம் வேறு யாருக்காவது போய்ச் சேரக் கூடும். என்றாலும் கூட நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. யாராவது ஆதாயம் பெறட்டும். நகர்ப்புறங்களிலே வாழ்கின்ற நண்பர் திரு. நெடுமாறன் எடுத்துக்காட்டியதைப்போல, 33 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக வணிகர்கள் தங்களுடைய சுய லாபத்திற்காக என்ன விலை கொடுத்தாலும், என்ன தியாகம் செய்தாலும் அதை அவர்கள் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற

முயற்சியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எல்லாம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆளும் கட்சிக்கு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். எனவே இந்த வரியை நீக்க வேண்டு மென்பதில் எதிர்க்கட்சிகள் அனைத்துக்கும் சாதாரண வணிக மக்களுடைய பிரதிநிதிகள் இந்த அவையிலே இல்லாமல் இருந்தாலும் கூட, அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி வருகிறார்கள் என்பதை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரிக்குப் பதிலாக, அதற்கு ஈடான தொகையை நீங்கள் பெறுவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. நான் நிருபர்கள் கேட்டபோதுகூட பட்ஜெட்டைப் பற்றிக் கேட்டபோதுகூட சொன்னேன். இந்த பிளென்டிங், பாட்டலிங் தொழிற்சாலைகளை மாவட்ட சாராய விற்பனை உரிமங்களை அரசே நடத்தி அல்லது கூட்டுறவுத் துறை மூலம் நடத்தினால், தனிப்பட்டோர் அடிக்கின்ற கொள்ளை லாபங்களைத் தடுத்து நிறுத்தலாம் என்று கூறி இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நான் ப்ளன்டிங் அன்ட் பாட்டிலிங் என்று ஆரம்பிக்கிற நேரத்தில், தயவுசெய்து யாரும் குறுக்கிடவேண்டாம். அது குறித்த பல விவரங்கள் இராமமூர்த்தி கமிஷனில் ஆய்வில் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். அதைப் பற்றி நான் எதுவும் பேசப்போவது இல்லை. சில புள்ளி விவரங்களை மாத்திரம் நான் தெரிவிக்க விரும்புகிறேன். எதிர்க்கட்சி, ஆளும் கட்சி, மற்றும் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

ப்ளன்டிங் அன்ட் பாட்டிலிங் தொழிற்சாலைக்கு, 750 எம். எல். கொண்ட பாட்டில் கொண்ட சாராயத்திற்கு, அரசு நிர்ணயித்துள்ள விலை 7 ரூ. 41 காசு. 750 எம். எல். கொண்ட ஒரு பாட்டிலுக்கு ப்ளன்டிங் அன்ட் பாட்டிலிங் தொழிற்சாலைக்கு இந்த அரசாங்கம் அனுமதித்துள்ள விலை 7 ரூ. 41 காசு. இதிலே சில ப்ரேக்-அப் சில சில பகுதிகளாக சில சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ரூ. 7.41 காசில் எக்சைஸ் டியுடி 3 ரூபாய்.-நியாயம். விற்பனை வரி 44 காசு.-ஏற்றுக்கொள்ளுகிறேன். சர்சார்ஜ் 2 காசு-தவறு இல்லை. வரியாக 3 ரூபாய் 46 காசு மொத்தம். 7 ரூபாய் 41 காசில் இந்த 3 ரூபாய் 46 காசு போனால் மீதமுள்ள 3 ரூபாய் 95 காசு இருக்கிறதே, அதை நாம் கவனிக்கவேண்டும். இந்த 3 ரூபாய் 95 காசில் காஸ்ட் ஆப் ஸ்பிரிட்-எரிசாராயத்தின் விலை அந்த ப்ளண்டிங் தொழிற்சாலைக்கு 85 காசு. காலி பாட்டிலுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை 2 ரூபாய். அந்த பாட்டிலுடைய மூடிக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை 25 காசு.





லேபிள் போட அரசு அனுமதித்துள்ளது 5 காசு. பேக்கிங் மெட்டிரியல்—அரசு அனுமதித்துள்ளது 17 காசு. டிரான்ஸ்போர்ட் 30 காசு. வேஸ்ட் 4 காசு. இவையன்னியில் வெளிப்படையாகவே அவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ள லாபம் 29 காசு. ஆக, ரூ. 3.95 காசு என்ற வகையில் அது வருகிறது.

காலி பாட்டிலுக்கு 2 ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதிலே மாத்திரம் அவர்களுக்கு 1.25 ரூபாய் லாபம் கிடைக்கிறது. அந்த அதிபருக்கு லாபம் கிடைக்கிறது. ஏனென்றால் குறைந்த விலைக்கு பழைய பாட்டில்களை அவர்கள் கடைகளில் இருந்து வாங்கிக் கொள்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் அவர்கள் வாங்கியிருக்கின்ற பாட்டில்களின் கணக்கைப் பார்த்தால்—அவர்கள் 60,000 பாட்டில்கள் வாங்கினோம், ஒரு லட்சம் பாட்டில்கள் வாங்கினோம் என்று எழுதியுள்ள கணக்குகளைப் பார்த்தால்—அவர்கள் திருப்பித் திருப்பி அந்த பழைய பாட்டில்களைக் கடையில் இருந்து வாங்கியிருப்பார்கள்—புதிய பாட்டில்களை வாங்கியிருப்பது குறைவாகத்தான் இருக்கும். அப்படியே புதிதாகப் போய் பாட்டில்களை வாங்குகிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும், ஒரு பாட்டிலுக்கு விலை 1 ரூபாய் தானே தவிர, இரண்டு ரூபாய் அல்ல. ஆகவே, 1 ரூபாய் லாபம் அதிலே கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம்.

மூடிக்கு 25 காசு என்று அனுமதிக்கப்பட்டுள்ளது. இதிலே அதிகபட்சம் அந்த மூடிக்கு 15 காசு என்று வைத்துக்கொள்ளலாம். ஆகவே, அதிலே 10 காசு லாபம் கிடைக்கிறது. பேக்கிங் மெட்டிரியல்ஸ்—இது வார்த்தை அலங்காரம் தானே தவிர, பேக்கிங் மெட்டிரியல்ஸ் என்று என்ன செய்யப்படுகிறது. நம்முடைய சோடா, கலர், ஆரஞ்சு வியாபாரிகள் போட்டு அனுப்புகிறார்களே அப்படிப்பட்ட மரப்பெட்டிகளில் அவைகள் வைக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. அதற்கு 17 காசா! அதிலே 15 காசு மிச்சம். காரணம் நிரந்தரமாக அந்தப் பெட்டியை அவர்கள் செய்து வைத்து இருக்கின்றார்கள். இவ்வளவு லாபம் போதாது என்று அதிகாரப் பூர்வமாக வெளிப்படையாக—நாம் அவர்களுக்கு அனுமதித்துள்ள லாபம் 29 காசு. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துப் பார்த்தால்—நான் சொன்ன கணக்குப்படி — காலி பாட்டிலுக்கு 1.25 காசு லாபம், மூடியில் 10 காசு லாபம், பேக்கிங் மெட்டிரியல்ஸ் மூலம் 15 காசு லாபம், அனுமதிக்கப்பட்ட லாபம் 29 காசு— இந்த அடிப்படையில் — ஒரு பாட்டில் சாராயத்திற்கு 1 ரூபாய் 79 காசு லாபம் கிடைக்கிறது. 1 ரூபாய் 79 காசு என்று வந்தாலும் அதிலே ஒரு 29 காசு குறைத்துக்கொண்டாலும் 1 ரூபாய் 50 காசு லாபம் என்று வைத்துக்கொண்டால், எவ்வளவு லாபம் வரும்?

ஒரு மாதத்தில் எத்தனை பாட்டில் விற்பனை ஆகிறது ? நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரை விவாதத்தின் போது பதில் அளிக்கின்ற நேரத்தில்— நான் எதிரே தான் அமர்ந்திருந்தேன்—சொன்ன கணக்கு சென்ற ஆண்டு 52 லட்சம் லிட்டர் சாராயம் விற்பனையானது. இந்த ஆண்டு 84 லட்சம் லிட்டர் சாராயம் விற்பனையானது என்று சொன்னார். அண்ணா சமாதியில் ஆண்டுதோறும் உறுதிமொழி எடுத்துக்கொண்டாலும், 52 லட்சம் லிட்டர், 84 லட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்ந்து இருக்கிறது, அது வேறு விவகாரம். இந்த 84 லட்சம் லிட்டர் சாராயம்—நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அளித்த அந்தக் குறிப்பின்படி பார்த்தால்—750 எம். எல். கொண்ட பாட்டில்களில் அடைக்கப்பட்டால், 1 கோடியே 12 லட்சம் பாட்டில் ஆகிறது. முதலமைச்சர் கொடுத்த குறிப்புப்படி 84 லட்சம் லிட்டர் 750 எம். எல். கொண்ட பாட்டில்களில் கொடுத்தால், 1 கோடியே 12 லட்சம் பாட்டில்கள் ஆகின்றன.

(முற்பகல் 11–40.)

முதலிலே சொன்ன இலாபம் ஒரு பாட்டிலுக்கு $1\frac{1}{2}$ ரூபாய். ஒரு கோடியே 12 இலட்சம் பாட்டிலுக்கு ஒரு மாதம் மட்டும் ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாய், ஆண்டு ஒன்றுக்கு இலாபம் 20 கோடியே 16 இலட்சம் ரூபாய்**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, இந்த விஷயம் இராமமூர்த்தி கமிஷனிலே இருக்கிறது என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியும். அதற்குப் பிறகு யார் நடத்துகிறார், கொடுத்தது தவறா இல்லையா என்ற விவரங்களைச் சொல்ல வேண்டியது இராமமூர்த்தி கமிஷன். இப்போது அதுபற்றி விவரங்களைச் சொல்வது நீதிவிசாரணைக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதால் யார் நடத்துகிறார் என்பதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** சார், அது ஏற்கெனவே கெசட்டில் நோட்டிஃபை செய்யப்பட்டிருக்கிறது. அதைத்தான் ரெஃபர் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, இராமமூர்த்தி கமிஷன் இதுபற்றி நீதிவிசாரணை நடத்தி வருகிறது. அது நாங்களே போட்ட கமிஷன் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் கொடுத்ததிலே தவறு இருந்தாலும் சரி அல்லது யாரிடத்திலே கொடுத்தோம் என்பதிலே தவறு இருந்தாலும் சரி, என்ன தவறு நடந்திருக்கிறது அல்லது நடக்கவில்லை என்பதைப்பற்றி கமிஷன் விசாரிக்கிறது. இதிலே ஒரு உள்நோக்கம் வைத்துக் கூறப்படுகிற காரணத்தால் அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது அதில் இருக்கிறது. மேலும் இதுபற்றி பலமுறை பேசப்பட்டிருக்கிறது.

**டாக்டர் மு கருணாநிதி :** ** ** பெயரை எடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, இதுபற்றி எல்லாம் சொல்லும்போது, உள்நோக்கத்தோடு கூறப்படுகிறது. இராமமூர்த்தி கமிஷன் விசாரிக்கிறது. அந்தக் கமிஷன் விசாரணைக்கு இடையூறு செய்வதுபோல் இருக்கிறது. ஆகையால் நாங்கள் கொடுத்தோமா. இல்லையா, யாருக்குக் கொடுத்தோம், எவ்வளவு கொடுத்தோம் என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** பெயரைத்தான் சொல்லக்கூடாது ; பெயரை எடுத்துவிடலாம் என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** ** ** ** என்பதும் விசாரணையில் இருக்கிறது.

**திரு. துரைமுருகன் :** கன்சர்ன்டு மினிஸ்டர் சொல்லிவிட்டார் ; அதன்பிறகு ஏன் இவர் குறுக்கிடவேண்டும் ? அப்படியானால் நாங்களும் குறுக்கிட வேண்டிவரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் சொன்னதை எதிர்க்கட்சித் தலைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். பெயரை நீக்குவதோடு* * என்பதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, * * * எல்லாம் இராமமூர்த்தி கமிஷன் விசாரிக்கின்ற காரணத்தால் உள்நோக்கத்தோடு கூறப்பட்ட அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : மந்திரி சொன்னால் உடனே நீக்கிவிட வேண்டுமா ?

டாக்டர் மு. கருணாநிதி : * * * *

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, அவை எல்லாம் அந்த என்குயரியில் வரும் அதனால்தான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று சொல்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : பினாமியில் பெற்றிருந்தால் அதுவும் 'டெர்ம்ஸ் ஆஃப் என்குயரி'யில் வரும் என்று அமைச்சர் திருநாவுக்கரசு சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * * *

என்றெல்லாம் போடப்பட்ட குற்றச்சாட்டுகளைத்தான் உண்டா இல்லையா என்று விசாரிக்கத்தான் என்குயரி கமிஷன் போடப்பட்டிருப்பதாலே, அதைக் குறித்து பொதுவாகத்தான் பேச வேண்டும். ஆகவே, இது சம்பந்தமாகக் குறிப்பிட்டுச் சொன்னவைகளை எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இதிலே ஒன்றும் ஆட்சேபணையில்லை என்று கருதுகிறேன். ஆகவே, அந்தக் கருத்துக்கள் நீக்கப்படுகின்றன.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எந்தக் காரணத்திற்காக ராமமூர்த்தி கமிஷன் போடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் * * அப்படி வரும் . . . . சமயத்தில்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தாங்கள் எந்தக் கருத்தை நீக்கச் சொன்னீர்களோ, அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரும்பவும் கூறிய காரணத்தால், அதையும் நீக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவும் நீக்கப்படுகிறது.

டாக்டர் மு. கருணாநிதி : ஸ்பிரிட்டிலே தண்ணீர் கலந்து கொடுப்பதனால் 20 கோடி ரூபாய் லாபம். உண்மை என்னவென்றால் இன்னும் கொஞ்ச காலத்தில் தண்ணீர்தான் விலை உயர்ந்த பொருளாக இருக்கும். அதனால் எவ்வளவு லாபம்வரும் என்று சொல்ல முடியாது—அத்தோடு மாவட்ட மொத்த சாராய வியாபாரம், உரிமம் சிலருக்குத் தரப்பட்டிருக்கிறது. அதிலே உள்ள பிரச்சனைகளும் ராமமூர்த்தி கமிஷனிலே இருக்கிற காரணத்தால், அவைகளைப் பற்றியும் பேச விரும்பவில்லை. பிளண்டிங் பாட்டில்களை யூனிட்டிலே வாங்கி, சில்லரை வியாபாரிகளுக்குக் கொடுக்கிற வேலைகளுக்கு மாத்திரம் ஒரு பாட்டிலுக்கு அந்த மாவட்ட சாராய மொத்தவிற்பனை நிலையம் இருக்கிறதே, அதற்கு அரசு அனுமதித்துள்ள லாபம் 51 காசு; அதன்படி 1 கோடியே 12 லட்சம் பாட்டில்களுக்கு, மாதத்திற்கு, 50 லட்சம் ரூபாய் அவர்களுக்கு லாபம் வருடத்திற்கு 6 கோடி ரூபாய். நான் முதலிலே சொன்ன 20 கோடியும், இந்த 6 கோடியையும் இணைத்தால் 26 கோடி ரூபாய்.

ஆக அதை அரசு உடைமையாக ஆக்கிவிட்டால் அல்லது கூட்டுறவுத் துறையின் மூலம், அந்த விற்பனையை நடத்தினால், அந்த 26 கோடி ரூபாய்க்கு வரி விதிக்க வேண்டிய நிலைமை நம்முடைய நாவலர் அவர்களுக்கு ஏற்பட்டு இருக்காது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கழக ஆட்சி காலத்திலே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இப்போது

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருப்பதைப் போல ஓரளவு ரத்து செய்யப்பட்ட நிலை அப்போது அல்ல. ஒத்திவைககப்பட்டது, பிறகு 2, 3 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் முழுமையாக மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது கூட யோசித்தோம். அரசின் சார்பாக நடத்தலாமா என்று. 2, 3 வருடத்திற்குள்ளாக அரசு இப்படிப்பட்ட பெரிய தொழிலை எடுத்து நடத்துவது என்பது அரசுக்குப் பெரிய நட்டத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தால், அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டோம். இப்போது அரசே எடுத்து நடத்துவதற்கு, எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அரசைப் பற்றிக் கூறப்படுகிற அந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் கூட—கமிஷன்கள் எல்லாம் கூட வேண்டாம்—இப்போதே ஒரு அறிவிப்பு—அத்தனை பிளண்டிங் பாட்டில் தொழிற்சாலைகளையும், சாராய மது வியாபாரங்களையும், அந்த ஐ.எம்.எஃப். எஸ். தொழிற்சாலைகளையும் அரசே எடுத்து நடத்தலாம் அல்லது கூட்டுறவுத் துறை மூலம் நடத்தலாம் என்று வருமேயானால், உங்கள் மீது தூவப்படுகிற மாசுகூட மறைந்துவிடும், அதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களே என்பதைத்தான் நிதியமைச்சர் அவர்களின் இறுதி உரையிலிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இதில் ஒரு வேடிக்கையான விவரம். 750 எம்.எல். பாட்டில் 2 ரூபாய். ஆனால் 375 எம்.எல். பாட்டில் 1 ரூ. 50 காசு. 750 எம்.எல். அளவில் பாதியளவே உள்ள 375 எம். எல். பாட்டில் விலை ரூ. 1.50 காசு. ஆனால் 150 எம்.எல். பாட்டில் விலை 1. ரூ. 25 காசு. எப்படி? ஒவ்வொன்றும் விலையில் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்—750 எம்.எல்.—2 ரூபாய். 375 எம்.எல்.ரூ.1.50 காசு., 150 எம்.எல்.ரூ.1.25 காசு. இப்படி கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடிக்கிறார்கள். தனியார்களுடைய அந்தக் கொள்ளை முயற்சிகளைத் தடுத்து, அவைகளிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு, நம் மாநிலம் விடுபடுவதற்கு, பொருளாதாரத்திலே நமக்கு ஒரு நல்ல சூழ்நிலை உருவாவதற்கு, இந்தத் தொழிலை அரசே ஏற்று நடத்தவோ அல்லது கூட்டுறவுத் துறை மூலமாக நடத்தவோ முன் வருமா என்ற வினாவை நமது நிதியமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11.50)

நான் இரண்டு விஷயங்களை மாத்திரம் இங்கே குறிப்பிட்டுவிட்டு என்னுடைய உரையை முடித்துவிடலாம் என்று கருதுகிறேன். இன்று இந்தியா முழுவதும் பிற்படுத்தப்பட்ட மக்களாலே, தாழ்த்தப்பட்ட மக்களாலே, அவர்களுடைய பிரதிநிதிகளாலே குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகளாலே வலியுறுத்தப்படுகின்ற ஒன்று, மண்டல் கமிஷனுடைய பரிந்துரையை உடனடியாக மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதாகும். கர்நாடக



மாநிலத்திலே அமைந்துள்ள புதிய அரசின் சார்பிலே கவர்னர் அவர்களாலே படிக்கப்பட்ட அந்த உரையில் மண்டல் கமிஷன் அறிக்கை பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. மண்டல் கமிஷனின் சிபாரிசுகளை அமல்படுத்தவேண்டுமென்று கர்நாடக அரசு மத்திய அரசை வலியுறுத்தும் என்று கர்நாடக அரசின் சார்பாக அளிக்கப்பட்ட கவர்னர் உரையின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் முதலமைச்சராக இல்லாத கர்நாடக மாநிலத்தில், பிற்பட்ட சமுதாயத்தைச் சேராத ஒருவர் முதல்வராக இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே, அந்த ஜனதா ஆட்சியிலே மண்டல் கமிஷன் சிபாரிசுகளை மத்திய அரசு உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்ற ஒரு கொள்கைக் குறிப்பைக் கவர்னர் வாயிலாகத் தந்திருக்கிறார்கள். ஆனால் அண்ணாவின் பெயரால் நடைபெறுகின்ற அறக்கட்டளைகளிலிருந்து வருகின்ற வார இதழ்களில் கூட—நான் வேதனையோடு சொல்கிறேன்—அதிலே கூட மண்டல் கமிஷன் அறிக்கைக்கு விரோதமான கருத்துக்கள் எழுதப்படுகின்ற அந்தக் காட்சியைக் காண்கின்றபோது எத்தகைய முரண்பாடு அண்ணாவின் பெயரால் நடைபெறுகின்றது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லாமல் இருக்க முடியவில்லை. மண்டல் கமிஷன் அறிக்கையைத் தயாரித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களிடம் அளித்தபோது, திரு. மண்டல் அவர்கள் கூறிய உருக்கம் மிகுந்த வாசகத்தை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். ''இந்திய அரசியல் சட்டம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வகை செய்திருந்தும் பதவிகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் பங்கு மிகவும் பரிதாபகரமான நிலைமையில் இருக்கின்றது. உயர் நீதிமன்ற நீதிபதி பதவிகள், வெளிநாட்டு தூதர் பதவிகள், மத்திய மாநில தேர்வாணைக் கழக பதவிகள், பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் பதவிகள் ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். மேலும் எனக்கு முன்னால் அமைக்கப்பட்ட கலேல்கர் கமிஷன் பரிந்துரைக்கு ஏற்பட்ட கதிதான் என்னுடைய கமிஷன் பரிந்துரைக்கும் ஏற்படுமோ என்று என்னிடம் சாட்சியம்அளித்த பெரும்பான்மையோர் கவலை தெரிவித்திருக்கிறார்கள், இந்தியக் குடிமக்களில் பெரும்பான்மையோராக உள்ளவர்களின் சமூக ரீதியாலும், கல்வித் துறையாலும் பிற்படுத்தப்பட்டவர்களாக உள்ளவர்களின் நம்பிக்கை சிதறடிக்கப்படுமோ என்ற கவலையோடு இருக்கிறேன்'' என்று பரிந்துரையை திருமதி இந்திரா காந்தி அவர்களிடத்திலே கொடுத்து இப்படிக் கருத்துக்களைச் சொன்னார்கள். திரு. மண்டல் அவர்கள் காலமாகிவிட்டார்கள். அவர்களுடைய பரிந்துரையும் காலமாகிவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. அதை வலியுறுத்தக்கூடிய மிகப்பெரும் பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு.

சில புள்ளிவிவரங்களைப் பார்த்தால் இது எவ்வளவு முக்கியமான பணி என்பதை நாம் அறிவோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இட ஒதுக்கீடு என்பதற்குச் சில ஆபத்துக்கள் இடையிலே வந்து பிறகு நீங்கி இன்றைக்கு இட ஒதுக்கீடுகள் இருக்கின்றன. இது மாநிலத்தைப் பொறுத்த மட்டில் உள்ள நிலை. என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் கூட தமிழ் நாட்டிலே இட ஒதுக்கீடு நடந்துகொண்டிருக்கின்றது என்று நிருபர்கள் கூட்டம் ஒன்றில் பதிலளித்து மண்டல் கமிஷன் அறிக்கையை நான் வரவேற்கிறேன் என்று கூட அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு அதற்கு முரணான பல கருத்துக்கள் சில அமைச்சர்களால் எடுத்துக் கூறப்பட்டு இருக்கின்றன. அந்தப் பயத்தின் காரணமாக ஒன்றைச் சொல்கிறேன். இது மத்திய அரசின் சார்பாகச் செய்யவேண்டிய காரியமாக நாம் வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். சில புள்ளி விவரங்கள், மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அலுவலகங்கள், அமைச்சகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் எல்லாம் பணியாற்றுகின்றவர்களின் விவரத்தைப் பார்த்தால் கிரேட் ஒன் என்ற முதல் நிலை அதிகாரிகளின் பதவிகள் மொத்தம் 1,74,043. இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 9,885. அதாவது ஒரு இலட்சத்து 74 ஆயிரம் பேரில் தாழ்த்தப்பட்டவர்கள் 9,885 பேர். அதாவது 5.68 சதவீதம்தான். பிற்படுத்தப்பட்டவர்கள் 8,162 பேர். அதாவது ஒரு இலட்சத்து 74 ஆயிரம் பேரில் பிற்படுத்தப்பட்டோர் 8,162 பேர்தான் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் இருக்கிறார்கள். இரண்டாம் நிலை அதிகாரிகளின் பதவிகள் மொத்தம் 9,12,786. அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 1,65,964. அந்த 9 இலட்சத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் 97,029. அதாவது தாழ்த்தப்பட்டவர்கள் 18 சதவீதம். பிற்படுத்தப்பட்டோர் 10.63 சதவீதம்.

மொத்த பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களின் எண்ணிக்கை அதாவது எல்.ஐ.சி. போன்ற மத்திய சார்புடைய பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களின் எண்ணிக்கை, முதல் நிலை அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 80,994. அதில் தாழ்த்தப்பட்டவர்கள் 3,652, பிற்படுத்தப்பட்டவர்கள் 3,719 அதாவது தாழ்த்தப்பட்டவர்கள் 4.51 சதவீதமும் பிற்படுத்தப்பட்டவர்கள் 4.59 சதவீதமும் தான். இரண்டாம் நிலை அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 3,65,785. அதில் தாழ்த்தப்பட்டவர்கள் 68,566 அதாவது 18.74 சதவீதம், பிற்படுத்தப்பட்டவர்கள் 36,242 அதாவது 9.97 சதவீதம். இன்னொரு வேதனை மத்திய அரசினுடைய அமைச்சகங்கள் செகரட்டேரியட் துறைகளில் மோசமான நிலை, அதிகாரிகள் பதவிகள் மொத்தம் 11,707. அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 840. 11,707-லே தாழ்த்தப்பட்டவர்கள் 840 பேர் மத்திய அரசு அமைச்சகங்களில் செகரட்டேரியட் துறைகளில் பொறுத்தவரை



யில் இன்னும் கேவலம் பிற்படுத்தப்பட்டவர்கள் 303 பேர். இரண்டாம் நிலை அதிகாரிகள் பதவிகள் மொத்தம் 43,803, அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 5,985, பிற்படுத்தப்பட்டவர்கள் 1,742. மூன்றாம் நிலை நான்காம் நிலை அலுவலர்களின் எண்ணிக்கை மத்திய அரசு அமைச்சகங்களில் செகரட்டேரியட்களில் 17,829, அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 5,518, பிற்படுத்தப்பட்டவர்கள் 1,500 பேர். ஆக இந்திய திருநாட்டில் 52 சதவீதம் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். தாழ்த்தப்பட்ட மலை ஜாதி மக்கள் 22.5 சதவீதம். இந்த 52 சதவீத பின்தங்கிய மக்களில் மத்திய அரசு வேலைகளில் அவர்களுக்கு 12.55 சதவீதம் இன்றைக்குக் கிடைக்கிறது என்பதை மனதிலே கொண்டு அவர்களுக்கு மண்டல் பரிந்துரை கூட குறைவானது. 27 சதவீதம் ஒதுக்கவேண்டும் என்று கூறிவிட்டு அதன்னியில் பொதுத் தொகுதியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மலை ஜாதி மக்களுக்கும் அவர்கள் தகுதி மூலம் வருவது தடுக்கப்படக்கூடாது என்பதை மண்டல் கமிஷன் மிக முக்கியமாக பரிந்துரையைச் செய்திருக்கிறது. இந்தப் பரிந்துரையை மாநில அரசு ஒரு கொள்கைக் குறிப்பாக கவர்னர் உரையிலும் குறிப்பிடவில்லை. நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய வரவு-செலவுத் திட்டத்திலும் குறிப்பிடவில்லை என்பது வருந்தத்தக்கது. நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலாவது மண்டல் கமிஷன் அறிக்கையை வலியுறுத்துகின்ற வகையில் மாநில அரசு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுசரணையாக இருக்கிறது என்ற கருத்தை எடுத்துக்கூறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

இறுதியாக மாநில சுயாட்சி பற்றி இந்த அவையில் ஒரு விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே தனியார் மசோதா மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தரப்பட்ட ஒரு விவாதம் இந்த நிதிநிலை அறிக்கையிலும் அந்த விவாதம் தொடர்ந்து இருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் 7 ஆம் பக்கத்தில் தன்னாட்சி தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேரா வண்ணம் போதிய அதிகாரங்களோடு கூடிய தன்னாட்சி உரிமையை மாநிலங்கள் பெற வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். நேற்றையதினம் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் திரு. சங்கரைய்யா அவர்கள் சொன்னார்கள் தி.மு க.வும் அ.தி.மு.க.வும் மாநில சுயாட்சி பற்றிப் பேசுவது குறித்து நான் மெத்தவும் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன், இது இன்றைக்கு நாங்கள் பேசுகின்ற பிரச்சனை அல்ல. என்றைக்குப் பிரிவினைக் கொள்கைக்யை கைவிட்டோமோ அன்று முதல் மாநில சுயாட்சி குறித்து 'திராவிட முன்னேற்ற கழகம் பேரறிஞர் அண்ணா

[டாக்டர் மு. கருணாநிதி] [1983 மார்ச் 14

அவர்கள் தலைமையில் இயங்கிய அந்தக்காலம் தொட்டு இந்தக் காலம் வரையில் மாநில சுயாட்சிக் கொள்கையை மிகத் தீவிரமாக வலியுறுத்தி வருகின்றது. இது அண்ணா சொன்னாரா என்று 1974-ம் ஆண்டு இங்கே கேட்கப்பட்டு அண்ணா அவர்கள் மறைவுக்குப் பிறகு கழக ஆட்சியில் ராஜமன்னார் தலைமையில் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தராக இருந்த பெரியவர் லஷ்சுமணஸ்வாமி முதலியார் அவர்களையும் முன்னாள் நீதிபதியாகஇருந்த சந்திராரெட்டி அவர்களையும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு மத்திய மாநில உறவுகள் ஆராயப்பட்டு அவர்களுடைய மிக விரிவான பெரிய அறிக்கை அரசுக்குத் தரப்பட்டு அந்த அறிக்கை கட்சியின் சார்பிலே திருவாளர்கள் செழியன், மாறன் இவர்களைக் கொண்ட ஒரு குழுவின் மூலம் ஆராயப்பட்டு, பிறகு அமைச்சரவையிலே விவாதிக்கப்பட்டு இந்த அவை

(நண்பகல் 12-00)

யிலே தீர்மானமாக முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டு பெரும்பாலான வாக்குகளில் அந்தத் தீர்மானம் 1974 ஆம் ஆண்டில் இந்த அவையில் நிறைவேறியது. அப்படி நிறைவேறியபோது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி பற்றிக் குறிப்பிடவில்லை, என்று எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தீர்மானத்தை அவர்கள் ஆதரிக்கவும் முன்வரவில்லை. அது மாத்திரமல்ல, மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரிப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கரத்தை வலுப்படுத்துவதாகும் என்று அப்படிப்பட்ட கருத்தைக்கூட அன்றையதினம் உள்ளேயும் வெளியேயும் எடுத்துச் சொல்லப்பட்டதாக எனக்கு நினைவு. ஆனால் இப்போதுகூட அண்ணா அவர்கள் விளக்கமாகச் சொல்லவில்லை என்ற ஒரு கருத்து ஆளுங்கட்சி உறுப்பினர்களால் இந்த அவையிலே கூறப்பட்டதை நான் இந்த அவையிலே இல்லாமல் உடல் நலக்குறைவின் காரணமாகப் பத்திரிகைகளில் மாத்திரம் படித்துத் தெரிந்துகொண்டேன். அண்ணா அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். 'வலுவான மத்திய அரசு பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்பது தவறு, மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களானால் அளவுக்குமீறி அதிகாரங்களை தாங்கித் தாங்கி பாதுகாப்பு போன்ற விஷயங்களில் சோடை போய்விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம். மேல் அதிகாரம் அனைத்தும் டெல்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது. 28-7-1968-இல் அறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி மாநாட்டில் பேசியது. அது மாத்திரமல்ல, இன்னும் தீவிரமாக அந்த மாநாட்டிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'நாட்டுப்



1983 மார்ச் 14] [டாக்டர் மு. கருணாநிதி]

பாதுகாப்பு தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தும் பெற சிந்திப்போம் மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக்கொள்ளலாம், பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை நான் தலைவராகவும் நாவலர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் இருந்த காலத்திலே அந்தக் கருத்தை ஒரு புத்தமாகவே 'அண்ணா மாநில சுயாட்சி முழக்கம்' என்ற தலைப்பிலே வெளியிட்டிருக்கிறோம். அதை மறந்துபோகாமல் நிதியமைச்சர் அவர்கள் அவர்களுடைய நிதி நிலை அறிக்கையிலே தன்னாட்சி வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார்கள். தன்னாட்சி வேறு, தனியாட்சி வேறு, எத்தனையோ மேடைகளிலே நாங்கள் இதைப் பற்றி விளக்கங்களை அளித்திருக்கிறோம். இந்த இரண்டு கட்சிகளும் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றாக இருந்த போது வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே ' இந்திய அரசியல் முறை — பெடரலிசம்—கூட்டாட்சி முறை என்று வர்ணிக்கப்பட்டாலும் அந்தத் தராசு மத்திய அரசின் பக்கம் அதிகபட்சம் சாய்ந்திருப்பதால் அதிகாரத் துறையிலே நிதித் துறையிலே மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால் அதே நேரத்திலே இந்தியா வலுப்பெற்று இருக்கவேண்டுமென்ற லட்சியத்திற்கு ஊறு தேடாமல் எந்தெந்த துறையிலே வலுவாக இந்தியா இயங்குவதற்கு மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்து விட்டு இதர அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்குகின்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கருதுகிறோம். அந்த நோக்கத்தோடு அரசு அமைத்த வல்லுநர் குழு அறிக்கை கொடுத்த பிறகு அந்த அடிப்படையில் அகில இந்திய ரீதியிலே மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் இயக்கத்தைக் கழகம் மேற்கொள்ளும் என்று 1971 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால் தன்னாட்சி, சுயாட்சி என்று கூறப்படுகிற நிலை இருந்தபோதிலும் மாநில சுயாட்சி பற்றி இந்த அவையில் பலர் பேசிய போதிலும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அண்ணா அப்படிச் சொன்னாரா என்று கேள்வியை எழுப்பிய நேரத்திலேயும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொச்சிக்குச் சென்றபோது அங்கே நிருபர்கள் கூட்டத்திலே அவர்கள் அளித்த பதில் இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து ஆகிய பத்திரிகைகளிலே வந்து இருப்பதை மாத்திரம் நான் படிக்கிறேன்.

'The Tamil Nadu Cheif Minister Mr. M. G. Ramachandran said here to-day that he would welcome any move for a joint effort by the States for more powers to States. Any such move would have the

டாக்டர் மு. கருணாநிதி: மாநில சுயாட்சி கேட்பது நாட்டுப் பிரிவினை என்று யாராவது கூறுவார்களானால் அவர்களுக்கு மாநில சுயாட்சி கொள்கைக்கு அடிப்படையிலே விரோதிகளாக இருக்கிறார்கள் என்று தான் பொருள். மாநில சுயாட்சி கேட்டு அப்போதே இந்த வாதம் இருந்த காரணத்தால் தான் நாவலர் அவர்கள் இந்த விளக்கம் அளித்து நான் படித்துக் காட்டினேன் அதேபோல அண்ணா அவர்களும் இதே அவையிலே பேசினார்கள். 27–6–67 ல் அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் திராவிட நாடு கோரிக்கையை விட்டு விட்டேன். ஆனால் திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக் கூட விட்டுவிட வில்லை. அதிலே ஒளிவு மறைவு இல்லை. அதைச் சொல்வதற்கு வெட்கப்பட ஒன்றுமில்லை. திராவிட நாடு என்பது தனியாக இருந்தால் தான் தொழில் வளர்ச்சி பெற முடியும் என்று சொன்னோம். திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்குக் காரணம் இங்கே தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும். அதை விட்டுவிடவில்லை. அடுத்து மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்குத் திராவிட நாடு கேட்டோம் மொழி பாதுகாப்புக் கொள்கையை விட்டுவிடவில்லை. மாநில சர்க்கார் பல அதிகாரங் களை பலவிதங்களில் பெற வேண்டும் என்பதற்காக கேட்டோம் அதை நாங்கள் விட்டுவிடவில்லை என்று இந்தக் காரணங்களை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திய அண்ணா அவர்கள் அன்றைக் குச் சொன்னார். அண்ணா சொன்னாரா என்று அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாகக் கேட்டபோது இங்கே அமர்ந்திருக்கின்ற மின்துறை அமைச்சர் அவர்கள் எழுந்து நின்று, இதோ பாருங்கள் அண்ணா சொல்கிறார் என்று இல்லஸ்ட்ரேட்டட் பத்திரிகையை சான்றாகப் படித்துக் காட்டினார்கள்.

(பிற்பகல் 12—10)

அண்ணா அவர்களுடைய அழகான வண்ணப் படத்தைப் பாருங் கள் இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி 26–9–1965ல் ஆக, மாநில சுயாட்சி அங்கேயும் எவ்வளவு மறைமுகமாக இருக்கின்றது என்பதை நான் நினைவூட்டுகிறேன். அண்ணாவை இல்லஸ்ட் ரேட்டட் வீக்லி நிருபர் கேட்கிறார்.

'What are the main aims of the D.M.K.?'

1965 ஆம் ஆண்டு கேட்கிறார். அண்ணா சொல்கிறார்:

'A Dravida Union within the Indian Constitution.'





திராவிடக் கூட்டுறவு அல்லது திராவிடக் கூட்டமைப்பு என்று சொன்னாரே தவிர, அண்ணா அப்பொழுதும் அகில இந்தியா என்பதை, இந்தக் கட்சியை அகில இந்தியக் கட்சியாக ஆக்க வேண்டுமென்பதை, அண்ணா அன்றைக்கும் ஏற்றுக் கொள்ளவில்லை. கடைசி வரையிலே ஏற்றுக் கொள்ளவில்லை. அடுத்து வருகிறார்.

'The re-shaping of the Constitution, so it becones effectively federal, fuller autonomy to the States. Proportional representation which seeks to solve the problem of Communal miniorities, democratic socialism and eradication of castes.'

இது அண்ணா அவர்கள் அன்றைக்கு அந்த வாரப் பத்திரிகை ஆசிரியருக்குச் சொன்ன பதில். அது மாத்திரமா? அந்த நிருபர் கேட்கிறார் மறுபடியும்:

'Am I right in assuming that the D.M.K. has never had any idealism and is having always based its policy on expediency rather than on principles?

கொள்கைகளைவிட சாதாரண விஷயங்களுக்கு, அவ்வப்போது சந்தர்ப்பத்துக்கேற்ப தி. மு. க. நடந்து கொள்கிறது என்று நான் மதிப்பிடலாமா என்று கேட்டபோது அண்ணா சொல்லியிருக் கிறார்

'Your assumption is wrong'

உங்களுடைய மதிப்பீடு தவறு

'Federalism—Full autonomy'.

முழுமையாக சுயாட்சி, தன்னாட்சி வெறும் அதிகாரமல்ல.

'Full autonomy for the State egalitarianism and are these not principles ?'

இவைகள் எல்லாம் கொள்கைகள் அல்லவா? நாங்கள் கேட்கின்ற முழுமையான மாநில சுயாட்சியும் சமத்துவமும் சமதர்மமும் உங்களுக்குக் கொள்கையாகப்படவில்லையா என்று அண்ணா அவர்கள் திரும்ப, நிருபரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள். எனவே மாநில சுயாட்சிக்கு 1974 ஆம் ஆண்டு இங்கே தீர்மானம் நிறைவேற்றிய பொழுது அப்பொழுது எதிரே இருந்த அண்ணா தி. மு. க. உறுப்பினர்கள் சொன்னார்கள், 'நீங்கள்

[டாக்டர் மு. கருணாநிதி] [1983 மார்ச் 14

full support of he Tamil Nadu Government. He said answering to questions to a crowed press conference, but we are not for State autonomy, he clarified.

நாங்கள் மாநில சுயாட்சி என்ற அந்தக் கொள்கைக்கு ' Far அல்ல ஆதரவு அல்ல என்ற வகையில் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு விளக்கமும் நான் அங்கே சொன்னேன். அந்த பத்திரிகையிலே வராததற்கு நான் பொறுப்பல்ல. ஸ்டேட் அட்டானமி என்று சொன்னாலே பிரிவினை என்ற ஒரு பொருள் அதிலே தொக்கி நிற்பதாக விளம்பரப்படுத்தப்பட்டது. ஆகவே அந்த வார்த்தையை நான் மறுக்கிறேன் என்று சொன்னேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதை ஹிந்துவில் சரியாகப் போட்டிருக்கிறார்கள்.

'Differentiating between autonomy and additional powers for States Mr. Ramachandran said he was hesitant to use the term 'more autonomy' because it was being understood as separation.

மாநில சுயாட்சி என்று சொன்னால் அது பிரிவினை வாதம் ஆகிவிடும் என்பதற்காக அப்படிச் சொல்லத் தயங்குவதாக முதலமைச்சர் சொன்னதாக இப்போது சொன்ன கருத்தைச் சரியாக வெளியிட்டிருப்பதாகக் கருதுகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு நம்முடைய நாவலர் அவர்கள் பதில் அளிக்கிறார்கள். இது முரசொலி மாறன் அவர்கள் எழுதிய மாநில சுயாட்சி. இதற்கு நாவலர் அவர்கள் முன்னுரை எழுதியிருக்கிறார்கள். அந்த முன்னுரையில் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்தியா ஒரு நாடல்ல. அது பல்வேறு மொழிவழி தேசிய இனங்களைக் கொண்ட ஒரு துணைக் கண்டம் என்பதையும் வரலாற்றுச் சூழ்நிலையின் காரணமாக இந்தியா ஒரு நாடாக ஆக்கப்பட்டுள்ளதால் மொழி வழி தேசிய இனங்கள் அமைந்த பகுதிகள் இந்தியாவின் உள்ளடங்கிய தனித்தனி மாநிலங்களாகக் காட்சியளிக்கின்றன என்பதையும் மாநில சுயாட்சி கேட்பது பிரிவினை கேட்பதாகாது என்பதையும், இந்தியாவில் மாநிலங்கள் எவ்வளவுக்கெவ்வளவு சுயாட்சித் தன்மை பெறுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு இந்தியா வலிவு பெற்ற நாடாகத் திகழும் என்பதையும் நம்முடைய நாவலர் அவர்கள் அந்த முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



1983 மார்ச் 14]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எனக்கு விளக்கம் தந்ததற்காக அல்ல, என்னுடைய பேச்சுக்கு அவரே விளக்கம் தந்ததற்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன். தன்னாட்சி என்பதோ தனியாட்சி என்பதோ அது பற்றி நான் எதுவும் பேச விரும்பவில்லை. என்றாலும், அதிக அதிகாரம் வேண்டும் என்பதில் இந்தக் கட்சி யாருக்கும் பின்வாங்கவில்லை என்பதைக் குறிப்பிடும்போது மாநில சுயாட்சி என்பதை நாட்டுப் பிரிவினை என்ற பெயரிலே ஆங்கிலத்திலே அதற்கு அர்த்தம் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதற்காக அதை நான் கூறவில்லை என்பதை அங்கே குறிப்பிட்டேன் என்று சொன்ன பிறகும், ஏதோ நான் அதிக அதிகாரங்கள் கூடாது என்ற வகையிலே அப்படிப்பட்ட ஒரு கருத்திற்கு நான் சொந்தக்காரனாகிக் கொண்டிருக்கிறேன் என்பது போன்ற நினைப்பை ஏற்படுத்த முயல வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் தெளிவாக, திட்டவட்டமாக மாநில சுயாட்சிக் கொள்கையிலே இருக்கிறது. நாம் எல்லாம் ஒன்றாக இருந்தபோது நாம் அளித்த தேர்தல் அறிக்கையிலே மாநில சுயாட்சி என்று குறிப்பிட்டதை இப்போது திராவிட முன்னேற்றக்கழகம் திரும்பப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை. விரும்பாது. அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படவே ஏற்படாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சுயாட்சிக்கும், தன்னாட்சிக்கும் வித்தியாசம் இல்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதிலே நாங்களும் பின்வாங்கவில்லை.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படியானால் மாநில தன்னாட்சி என்ற வார்த்தையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என் வாயால் சொல்வதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கருதுகிறார் என்று எண்ணுகிறேன். நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன். அதிக அதிகாரம் தன்னாட்சி உரிமை என்பதை இந்த அரசு, இந்தக் கட்சி நிச்சயமாக விரும்புகிறது என்பதையும், ஆனால் நாட்டுப் பிரிவினை என்பதை நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்பதற்காக அந்த விளக்கம் தருவதையே நாங்கள் எதிர்க்கிறோம் என்பதையு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டு சட்டமன்றத்திலே அந்தத் தீர்மானம் வந்த பொழுது நடந்த நிகழ்ச்சிகளை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் 1964 ஆம் ஆண்டிலே ஏற்பட்ட நேரத்திலேயிருந்து அது தன்னாட்சிக் கொள்கையை வலியுறுத்தி வந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிடக் கூடிய 71–76 ஆம் ஆண்டுக் கால கட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு சட்டப் பேரவையில் இடம் பெற்றிருக்கவில்லை. ஆகவே, அதை ஆதரிப்பதற்கு எங்களுக்கு அன்றைக்கு வாய்ப்பில்லை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சட்டமன்றத்தில் அப்பொழுது இடம் பெறாத மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றி நான் எதையும் சொல்லவில்லை. சட்டமன்றத்தில் இடம் பெற்றிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அரசியல் சட்டத்தை அதற்காகத் திருத்த வேண்டும் மாநில சுயாட்சிக்காக என்பதை அன்றைக்கு எதிர்த்தது என்பதைதான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், மாநில சுயாட்சி சம்பந்தமான தீர்மானத்தின் மீது 1974 ஆம் ஆண்டு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் கம்யூனிஸ்ட் கட்சியும் இதை எதிர்த்த நிலையை எடுத்தது என்ற முறையிலே குறிப்பிட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்ட மட்டில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்பதை எந்தச் சந்தர்ப்பத்திலும் அது எதிர்த்தது கிடையாது.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரம் என்பது மட்டுமல்ல, அதிகமான அதிகாரங்கள் தேவை என்பதையே கம்யூனிஸ்ட் கட்சி துவக்க காலத்திலிருந்து வற்புறுத்தி வருகிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசின் சார்பாக இப்பேரவையின் ஏற்புக்காக வைக்கப்பட்ட 1982–83 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகள், 1983–84 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் ஆகியவற்றின்மீது நடைபெற்ற விவாதத்தில் 58 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு தத்தமக்குரிய போக்கு, நோக்கு ஆகியவற்றினுடைய அடிப்படையில் கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கின்றார்கள்.





நல்லெண்ணத்துடனும், நல்ல நோக்கத்துடனும் ஆதரவு காட்டி, பாராட்டுரைகள் வழங்கி, இந்த நிதி நிலை அறிக்கையிலுள்ள கருத்துக்களுக்கு ஆதரவு நல்கிய உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(பிற்பகல் 12-20)

எதிர்க் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும், மற்றவர்களும் சிலர், நிதிநிலை அறிக்கையின் சில பகுதிகளை ஆதரித்தாலும், சில பல கருத்துக்களை எதிர்த்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான, வழிவகைகளை எடுத்துக் காட்டியதற்காகவும், அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையிலே, பல்வேறு கருத்துக்களைச் சுட்டிக்காட்டி, அரசினுடைய கவனத்தை ஈர்த்து, அதுமட்டுமல்லாமல், தன்னாட்சிக் கொள்கைகளுக்கு உறுதுணை நிற்கின்ற கருத்துக்களுக்கு ஆதரவாக இங்கே கருத்துக்களை எடுத்து வழங்கியிருக்கிறார்கள். அதைப் போன்று மாண்புமிகு எதிர்க்கட்சி வரிசையில் உள்ள தலைவர்கள் பலரும் சில பல கருத்துக்களை எதிர்த்தாலும், சில பல கருத்துக்களுக்கு ஆதரவு நல்கி இருப்பதற்கு, அத்தனை பேருக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால் இந்த பட்ஜெட்டிலே எதுவுமே இல்லை என்று கூறி சிலர் தங்கள் தங்கள் பாணியிலே இழிவான நடையிலே எடுத்துச் சொன்னாலும், அவர்களிடத்திலே நான் அவ்வளவுதான் எதிர்பார்க்கமுடியுமே தவிர, அதற்கு மேலே எதிர்பார்ப்பதற்கு இல்லை என்ற காரணத்தாலே அவர்களுக்கு எதையும் சொல்ல முடியாத நிலையில் நான் இருக்கிறேன். இந்த ஆட்சி அமைய வேண்டுமென்று அரும்பாடுபட்டவர்களும், இந்த ஆட்சி நிலைத்து இருக்கவேண்டுமென்று விழைபவர்களும் இந்த அரசின் முயற்சிகளைப் பாராட்டுகிறார்கள். கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நல்லவர்களும், நாட்டின் நலனில் அக்கறை கொண்டவர்களும் பாராட்டுகிறார்கள் என்பதை எண்ணும்போது மன நிறைவு ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களுடைய நம்பிக்கையையும், நன்மதிப்பையும், அன்பையும், அரவணைப்பையும் என்றும் பெறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்ற காரணத்தாலே, கடமையிலே ஊக்கம் செலுத்துவதற்கு அவைகள் எல்லாம் வழிவகைகளாக அமைகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த ஆட்சியிடத்திலேயும், இந்த அரசினிடத்திலேயும் கொண்டிருக்கின்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும், மாச்சரியத்தின் காரணமாகவும், கண்டனக் கணைகளை வீசியும், காழ்ப்புரைகளை பகர்ந்தும், இங்கே இழிவுரைகள், பழிப்புரைகள், கேலியுரைகள், கிண்டல் உரைகள் ஆகிய பலவற்றையெல்லாம் தங்கள் தங்கள் பாணிக்கு ஏற்ப வழங்கியிருக்கிறார்கள் என்றாலும், அவைகள் அத்தனையும் அவர்களுக்கே நான் திரும்பத் தந்துவிட்டு, சில பல ஐய

கேட்கிற காரணத்தால், கருணாநிதி கேட்கிற காரணத்தால் நாங்கள் மாநில சுயாட்சிக்கு ஆதரவளிக்க முடியாது என்று, அப்பொழுது இன்றைய முதலமைச்சர் அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எம். ஜி. ஆர். அவர்களும் மாநில சுயாட்சி தேவையில்லை, மக்கள் சுயாட்சி என்கின்ற ஒரு கருத்தை நாட்டில் பரப்பி வந்தார்கள் அந்த அடிப்படையிலே அன்றைக்கு அண்ணா தி.மு.க. எம். எல். ஏக்கள் 'கருணாநிதி கேட்கிற காரணத்தால் நாங்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது' என்று சொன்னார்கள். அப்பொழுதே நான் சொன்னேன். 'ஒரு காலத்திலே நீங்கள் ஆளுங்கட்சியாக வந்து நாங்கள் எதிர்க்கட்சி யாக அமர்வோமேயானால், இப்படி ஒரு தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றுவீர்களேயானால் அதை வரவேற்கிற முதல் ஆளாகக் கருணாநிதி இருப்பான்' என்று நான் அன்றைக் கும் சொன்னேன், இன்றைக்கும் நான் அரசுக்குச் சொல்கிறேன். மாநில சுயாட்சித் தீர்மானத்தை, அரசின் சார்பில் இந்த அவை யில் நிறைவேற்றுவதற்கு விரைவிலே ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வாருங்கள். அதை நிறைவேற்றித்தர, ஏகமனதாக நிறைவேற்றித்தர திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூறக்கடமைப் பட்டிருக்கி றேன்.

இறுதியாக, குடிக்கத் தண்ணீரின்றி மக்கள் குமுறுகின்ற சூழ் நிலைக்கு விடிவுகாணாமல், விலைவாசி ஏற்றம் விஷம் என ஏறுவதற்குப் பரிகாரம் காணாமல், அரிசிக்கும் மண்ணெண்ணெய்க் கும் க்யூ அங்கிங்கெனாதபடி நிற்கின்ற அவல நிலையை அகற்று வதற்கு வழிவகை காணாமல், இருட்டறையில் உள்ளதடா நாடு என்று பாவேந்தர் பாடியது போல் தமிழ்நாடு இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறது. அதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்காமல் தொழிலாளிக்குத் தொல்லையும், விவசாயிக்கு வேதனையும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கு மிரட்டலும் நிறைந்த ஒரு நிலையிலே இந்த வரவு-செலவுத் திட்டம் வந்திருக்கிறது. வெறும் விளம்பரத்திற்கு மாத்திரம் இந்த அரசு தன்னைப் பயன்படுத்திக் கொள்கிறதே அல்லாமல், நற் பணிகளுக்குத் தன்னைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

கடைசியாகச் சொல்கிறேன். இதோ என் கையிலே இருப்பது இந்திய வரலாறு 6 ஆம் வகுப்புப் புத்தகம். இந்திய வரலாறு நூலில் அலெக்சாண்டர் வருகிறார், சமண, பௌத்த மதங்கள் வருகின்றன, எல்லோரும் வருகிறார்கள். எல்லோரும் வந்து சுதந் திரம் வருகிறது. சுதந்திரம் வந்த பிறகு, இந்தச் சரித்திரப் புத்தகத்தில் நேரு இந்தியாவினுடைய பிரதமர் ஆகிறார்.



இராஜாஜி கவர்னர்-ஜெனரலாகிறார். அதோடு இந்த வர லாறு முடிகிறது. அதற்குப் பிறகு இந்தியத் துணைக் கண் டத்திலே ஏற்பட்ட எமர்ஜென்சிக்கு இடம் உண்டா ? கிடையாது அந்த எமர்ஜென்சிக்குப் பிறகு ஏற்பட்ட ஜனதா ஆட்சிக்கு இந்த இந்திய வரலாற்றுப் புத்தகத்திலே இடம் உண்டா ? கிடையாது. திடீரென்று மாறுகிறார்கள். இராஜாஜி கவர்னர்-ஜெனரலாக வந்ததோடு முடித்து விட்டு, அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் என்று போட்டு, இந்திரா காந்தி தலைமையில் புதிய மந்திரி சபை டெல்லிமாநகரில் 1980 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதி பதவியேற்றது என்பதோடு நிறுத்தியிருக்கிறார்கள்.

காமராஜர் இங்கு ஆண்டது பற்றி அந்நூலில் கிடையாது. இங்கே பெரியவர் பக்தவச்சலம்ஆண்டதுற்றிப்கிடையாது.அண்ணா ஆட்சி புரிந்தது கிடையாது. அடியேன் தலைமையிலே ஆட்சி நடந்தது, அது கிடையாது. அது வேண்டாம். அது வராது. ஏனென்றால் அன்னை அஞ்சுகம் நிலையங்களெல்லாம் மாற்றப்படுகிற நேரத் தில் என்னுடைய பெயர் இதிலே வரும் என்று நான் எதிர் பார்க்க முடியாது. அதிலே திடீரென்று 80 ஆம் ஆண்டு மே மாத இறுதியில் ஒன்பது மாநிலங்களில் சட்டமன்றங்களுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. தமிழ் நாட்டில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையின்கீழ் மந்திரிசபை அமைந் தது என்று அவருடைய படம், பெரிய படம் பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது. காமராஜருடைய படம் உண்டா ? பக்தவத்ச லத்தினுடைய படம் உண்டா ? இவைகளெல்லாம் கிடையாது. இவர்கள் இடையிலே ஆட்சியிலே இருந்திருக்கின்றார்கள். நான் பாவி, என்னுடைய படம் தேவையில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் படம் பெரிய அளவில் வெளியிடப்பட்டிருக்கிறது. வெளியிடப்பட்டு, கீழே குறிப்பு என்ன தெரியுமா ? நீங்களே செய்யுங்கள் குறிப்பு. இந்தியப் பிரதமர், தமிழ் நாட்டு முத லமைச்சர் ஆகியோருடைய படங்களைச் சேகரித்து உங்கள்படத் தொகுப்புப் புத்தகத்தில் ஒட்டி வைத்துக் கொள்ளவும். "இதை யும் சேர்த்து இந்திய வரலாறு ஆறாம் வகுப்புப் பாட நூல் வெளி வந்திருக்கிறது என்றால் வெறும் விளம்பர வெளிச்சத்திற் காக நடைபெறுகின்ற அரசாங்கமாக இருக்கிறதே தவிர நாட்டிலே இருக்கின்ற வேதனைகளைப் போக்குகின்ற அரசாக இது இல்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு கூறி அமைகின்றேன். வணக்கம்.

திரு. என். சங்கரய்யா: ஒரு தன்னிலை விளக்கம். பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும்பொழுது நான் பேசுகையிலே திராவிட முன்னேற்றக்கழக மும், அண்ணா திராவிடமுன்னைற்றக்கழகமும் இந்தத்தன்னாட்சிக் கொள்கையை ஆதரிப்பதை வரவேற்கிறேன் என்று கூறினேன் என்று சொல்லி எவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கொள்கையை வைத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு 74 ஆம்

வினாக்கள் அரிய வினாக்கள், அறியா வினாக்களுக்கு மட்டும் விளக்கம் தருவது பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். இங்கே தண்ணீர்ப் பற்றாக்குறை, மின் பற்றாக்குறை உணவுப் பற்றாக்குறை போன்றவைகளை எதையும் குறைத்து மதிப்பிடாமல், மூடி மறைக்காமல் உள்ளது உள்ளபடியே இந்த மாமன்றத்திற்கு எடுத்துவைக்கவேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில் தான் நிதிநிலை அறிக்கையிலே நான் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருக்கிறேன். எந்த அளவிற்கு இந்த நிலையை சமாளிக்க வேண்டியிருக்கிறது என்பதை இந்த மன்றம் உணர்ந்து கொள்ளவேண்டும். அதன் காரணமாகத்தான் எதிர்காலத்திலே நல்லபல திட்டங்களை வகுப்பதற்கு உறுதுணையாக அமையும் என்ற காரணத்தாலேயும், எந்த அளவுக்கு மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து சமாளிக்க இயலும் என்பதைப் பற்றியும், எந்த அளவுக்கு மாநில அரசு சமாளித்து வருகிறது என்ற சூழ்நிலைகளையும், எந்த அளவுக்கு மத்திய அரசு உதவி புரிய முன் வரவேண்டியிருக்கின்றது என்பதை நான் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். எங்கள் வரவு—செலவுத் தன்மைகளை ஆராய்ந்து எடுத்துச் சொல்லிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், இங்கே ஆண்டுக்காண்டு செலவினம் வளர்ந்து வருகின்ற அத்தகைய சூழ்நிலையில், எந்தெந்த இனத்திற்கு எவ்வளவு செலவழிக்கப்பட்டனவோ அந்த அளவிற்கு விகிதாசார அடிப்படையிலே செலவழிக்கப்படவில்லை என்பதற்கான புள்ளிவிவரங்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். முழு விவரங்களையும் எடுத்துச் சொன்னார்கள். அவை 1975-76 ஆம் ஆண்டு இந்தெந்த இனங்களுக்கு, இன்னென்ன வகைகளிலே செலவழிக்கப்பட்டன. அதே அளவுக்கு விகிதாச்சார அடிப்படையிலே செலவழிக்கப்படவில்லை என்ற கருத்தையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அதே திட்டங்களை மட்டுமே தொடர்ந்து நாம் வைத்துக்கொள்வது என்று நாம் வைத்துக் கொள்வோமேயானால், எவ்வளவு துறையில் ஒவ்வொரு துறைக்கும் விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்கினோமோ செலவினத்தின் வரவினம் வளரவளர அதனை எவ்வளவு செலவிடமுடியுமோ அதையும் விகிதாச்சார அடிப்படையில் நாம் செலவழித்து வரலாம். 1975-76-ஆம் ஆண்டிலே இந்த மாநில அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகள், போட்ட திட்டங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணின. நல்வாழ்வுத் திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றினுடைய அளவை கணக்கிடுகின்றபொழுது, ஆண்டுக்காண்டு அது வளர்ந்துகொண்டுவருகிற பாங்கினை நீங்கள் காணலாம். வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்திலிருந்து தொடர்ந்து நாம் பார்த்துக்கொண்டு வருவோமேயானால், வெள்ளைக்காரர் விட்ட இடத்திலேயே இந்த இனங்கள் எல்லாம் இல்லை. அதைப் பெருக்குவதிலும், விரிவாக்குவதிலும், கூடுதலாகப் பல்வேறு திட்டங்களைச் சேர்ப்பதிலும் அரசு தொடர்ந்து ஈடுபட்டுவந்திருக்கின்றது என்பதையும்



1975-வது ஆண்டிற்கும், 1983-வது ஆண்டிற்கு இடையேயும் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் எல்லாம் நாம் கொண்டுவந்ததன் காரணமாக, ஆகிய இவைகளுக்கெல்லாம் நாம் விகிதாச்சாரம் ஒதுக்குகின்றபொழுது ஆக விகிதாச்சாரத்தின் அடிப்படை 1975-76-ல் ஒதுக்கப்பட்ட அளவு இருக்கவேண்டுமென்றால், வேறு எந்த ஒரு புதிய திட்டத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது போய்விடும். ஆகவேதான் அந்த வளர்ச்சிக்கு ஏற்ற, வரவுக்கு ஏற்ற எவை எவற்றுக்கு முக்கியத்துவம் தரவேண்டுமோ அந்த அளவுக்குத் தரவேண்டுமென்ற பொறுப்பு உணர்ச்சியின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை நாம் வகுத்துத் தந்திருக்கிறோம். உள்ளபடியே கிடைக்கின்ற வருமானம், நிதி ஆதாரங்களை அடிப்படையாக வைத்து, செலவினங்களை வைக்கவேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். துறைகளின் மூலமாக நிலையாக ஆற்றவேண்டிய பணிகளுக்கு நாம் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டியிருக்கிறது. தொடங்கப்பட்டு முடியாமல் இருக்கும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது. திட்டப் பணிகளுக்காகவும் நாம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது. வறட்சித் துயர் தணிப்புக்கான நிதி ஒதுக்கீடும், கடனாகவும், முன் பணமாகவும் வழங்குவதன்காகவும், நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுவதன் காரணமாகவும்தான் இந்த பெரும் செலவுகளை வரவு—செலவுத் திட்டத்தில் கணக்கிட்டு செய்ய வேண்டியிருக்கின்றது. ஆனால் இந்த அரசு இயன்றவரையில் எங்களுக்குக் கிடைத்த, 'ஆழ அமுக்கி முகைக்கின் ஆழ்கடலில் நாழும் நுகவாது நானாழி' என்பதற்கு இணங்க எவ்வளவுதான் அமுக்கி அமுக்கி முகர்ந்து எடுத்தாலும்கூட, ஒரு நாழிகையிலே ஒரு நாழித் தண்ணீர்தான் வருமே தவிர, அதிகமாக வராது. இத்தகைய நிதிகளை ஒதுக்கி, எங்களுடைய அறிவுக்கு ஏற்றபடி எங்களுடைய ஆற்றலுக்கு ஏற்றபடி, எங்களுடைய திறமைக்கு ஏற்றபடி எல்லா ஆட்சிகளும், எந்த அரசு அதிகாரிகளையும், அலுவலர்களையும் வைத்து அவர்களுடைய உதவி பெற்று, உறுதுணையைப் பெற்று போட்டுக் கொண்டு வந்ததோ, அந்த அடிப்படையிலேதான் நானும் போட்டிருக்கிறேன். ஆனாலும்கூட, எடுத்த எடுப்பிலே எதிர்க்கவேண்டுமே என்ற உணர்ச்சியின் அடிப்படையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்று நான் சொல்லவில்லை, அல்லது முன் வரிசையிலே உள்ள தலைவர்கள் என்று நான் சொல்லவில்லை, கொஞ்சம் பின் வரிசையிலே உள்ளவர்களைப் பற்றி நான் சொல்லவிரும்புகிறேன். சில பலர் பேசுகின்றபோது கூட இது கையாளாகாத அரசு, இதற்கு திட்டமே இல்லை, எதையுமே செய்யவில்லை, ஆகவே நிதி ஆதாரங்களை எல்லாம் சரியாகச் செய்யவில்லை என்பதை எல்லாம் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகின்ற பாங்குகளை எல்லாம் நாம் இங்கே கண்டோம். அந்த வகையிலே காணுகின்றபோது, பல்வேறு சூழ்நிலைகளை, பல்வேறு தன்மைகளை எல்லாம் நாம் எடுத்துச் சொல்லுகின்றபோது, இந்த நிதி நிலை

அறிக்கையிலே எப்படி நிதி ஆதாரங்கள் வருகின்றன. எந்த அளவுக்கு போகின்றன என்பதை எல்லாம் நாம் எடுத்துச்சொல்லி இருக்கிறோம். சென்ற ஆண்டு மட்டும். கணக்கிட்டுப் பார்ப்போமானால் மத்திய அரசிடத்திலேயிருந்து நாம் கேட்டிருக்கிறோம் எதற்கு எடுத்தாலும் மத்திய அரசிடத்திலே எதிர்பார்க்கிறீர்களே, எதிர்பார்க்கிறீர்களே என்கிறார்கள். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டமே எதிர்பார்க்கத்தான் சொல்லுகிறது. அவர்கள் நம்மிடத்திலே எதிர்பார்க்கின்ற நிலைமையிலே இல்லை ஆனால் அவர்கள் நினைத்தால் எந்த அரசையும் அவர்கள் எடுத்துக் கொள்ளலாம். நினைத்தால் இந்த ஆட்சியை மாற்றி மத்திய ஆட்சியின் கீழே கொண்டு வந்து விடலாம். ஆனால் நாம்தான் அவர்களை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. இது இதற்கு எதிர் பாருங்கள் என்று சொல்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நாம் அவர்களை எதிர்பார்க்கவேண்டிய கட்டாயங்கள் வருகின்றன. ஆகவேதான் ஒரு சூப்பர்வைசிங் என்று சொல்லுகின்ற அந்த அளவுக்குத்தான் இருக்கிறது. மத்திய அரசுக்கு என்று தனி மக்கள் கிடையாது. மாநில அரசுக்கு என்று தனி மக்கள் இல்லை. 22 மாநிலங்கள் சேர்ந்துதான் மத்திய அரசு. மத்திய அரசு என்ற அளவிற்கு தனி மக்கள் கிடையாது. மக்களுடைய அன்றாடத் தேவைகளை, மக்களுடைய அன்றாட குறைபாடுகளையும், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற தேவைகளை உடனடியாக கவனிக்கவேண்டிய முழுப் பொறுப்பையும் மாநில அரசுகள்தான் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே எல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்களானால், மத்திய அரசினுடைய நிதி நிலை அறிக்கையிலே கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோடி ரூபாய் அவர்கள் செலவழிக்கக்கூடிய ஒரு பொறுப்பை மத்திய அரசு எடுத்துக் கொள்ளுமேயானால் 22 மாநிலங்களிலும் சேர்த்து கணக்கிட்டுப் பார்ப்போமானால், 16 ஆயிரம் கோடி ரூபாய்தான் எல்லா மாநிலத்திற்கும் சேர்த்து வருகிறது. ஆகவே, மூன்றிலே ஒரு பங்கு எல்லா மாநிலங்களுக்கும் செய்கின்றது. மூன்றிலே இரண்டு பங்கு மத்திய அரசு செலவழிக்க வேண்டிய அளவிற்கு இருப்பதன் காரணமாகவும், மொத்தத்திலே இரண்டு பங்கு வைத்திருப்பதன் காரணமாகவும் நாம் கேட்டுப் பெற்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சமயத்திலேதான் இருக்கின்ற நிதியின் அடிப்படையிலே நாம் ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் நாம் மத்திய அரசை பார்த்து நிதி தாருங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கின்ற அவசியம் ஏற்படுகிறது. அதைத்தான் திரும்பத் திரும்பத் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 1975-76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வைக்கும்போது கூட குறிப்பிட்டார்கள். மத்திய அரசு வரம் தரும் கடவுளாக உட்கார்ந்துக் கொண்டிருக்கின்றது. வரம் கேட்கும் பக்தர்களாக மாநிலங்கள் எல்லாம் இருக்கின்றன என்று அப்போது சொன்னார்கள். அந்த





அடிப்படையிலேதான் அவர்கள் வரம் கொடுப்பவர்களாகவும், நாம் வரம் கேட்பவர்களாவும் இருப்பதன் காரணமாக, கொஞ்சம் வரம் கேட்பது நாம் அடிக்கடி கேட்கவேண்டியிருக்கிறது. சில சமயங்களில் வரத்தை உடனடியாகக் கொடுத்துவிட்டால் நல்லது.

(பிற்பகல் 12.30)

ஆனால் கிடைக்காத சூழ்நிலை ஏற்படும்போது கேட்டு, கேட்டு பெற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆக, பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை என்பது இப்போது எல்லா மாநிலங்களுக்கும் உகந்த ஒன்றாக இருக்கிறது. 5, 6 நாட்களுக்கு முன்னால் வந்த செய்திகளைப் பார்த்தால் தெரியும். ஆந்திராவில் 115 கோடி ரூபாய் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை; பீகாரில் 121 கோடி ரூபாய் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கின்ற நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. அவற்றை எல்லாம் சமாளிக்கத்தான் நியாயமான அடிப்படையிலே நாம் பல்வேறு திட்டங்களை வகுத்து, இங்கே சொல்லியிருக்கிறோம்.

பலவற்றை எடுத்துச் சொல்லும்போது, மாநில அரசினுடைய தன்மையை எடுத்துச் சொல்லும்போது, கையாலாகாத எதையும் கூறவில்லை என்று கூறும்போது நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நிதிநிலையைப் பொறுத்தவரையில் இந்த மாநிலம் மிகத் திறமையோடு இருந்து பணியாற்றி வருகிறது என்று இங்கே இருக்கிற எதிர்க் கட்சியினர் பாராட்டா விட்டாலும் யார் பாராட்ட வேண்டுமோ அவர் பாராட்டி இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

13—7—1982 அன்று பாராளுமன்ற நிதி அமைச்சர் மாண்புமிகு பிரணாப் முக்கர்ஜி அவர்கள் "தமிழக அரசு நிதி நிருவாகத்தைச் செம்மையாக நிருவகிக்கிறது; அதற்காகத்தமிழக அரசைப் பாராட்டுகிறேன். மாநிலங்கள் அதிகப்பற்று வாங்கும்போது சில கண்டிப்பான விதிமுறைகளை மத்திய அரசு கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. ஆனால் தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை இதற்குந தேவையில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இது பாராட்டுவதற்கு உரிய ஒன்று" என்று சொல்லி அவர்களே பாராட்டியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. நம் நிதிநிலையைப் பொறுத்தவரையில் இது கையாலாகாத அரசு, நிதி நிர்வாகத்தைப் பேணத் தவறிவிட்ட அரசு என்ற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்த கருத்துக்கள் அடிப்படையில் பார்க்கும்போது கூட, இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநில அரசுகளுடைய

நிதிநிலைகளையும் ஆராய்ந்து அறிந்து கருத்துக்களை வழங்கக் கூடிய தலைமைப் பொறுப்பிலே இருக்கக்கூடிய ரிசர்வ் வங்கி கவர்னர் அவர்கள் 13–10–1982 அன்று சென்னைக்கு வந்த போது இங்கே நிருபர்கள் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள். ''தமிழக அரசு பொருளாதாரத் திட்டங்களை மற்ற மாநிலங்களைவிடப் பாராட்டத்தக்க வகையில் செயல்படுத்தி வருகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், தமிழகம் எல்லா வகையிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். விவசாயிகளுக்கு கடனுதவி அளிப்பது, அதனை வசூலிப்பது பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவது, ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு திறம்பட செயல்பட்டு வருவதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவிலேயே அதிகப்பற்று (ஓவர் டிராப்ட்) வாங்காத மாநிலம் தமிழகம் என்பது பாராட்டுக்குரியது. இந்த நிலை தொடர்ந்து நீடிப்பதை நான் விரும்புகிறேன்'' என்று சென்ற ஆண்டு அக்டோபர் 13-ந் தேதி ரிசர்வ் வங்கி கவர்னர் பாராட்டியுள்ளார்.

அது மட்டுமல்ல. இந்தத் திங்கள் அதாவது மார்ச் 8-ந் தேதி கூட இங்கே வந்த மத்திய ரிசர்வ் வங்கி கவர்னர் திரு. மன்மோகன்சிங் அவர்கள் 'இந்தியாவிலேயே அதிகப்பற்று வாங்காமல் நிதி நிருவாகத்தைச் செம்மையாக நிருவகித்து வருவது தமிழ்நாடுதான்' என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற திட்டங்களை செம்மையாக, சீராக அவற்றின் நோக்கம் ஈடேறுகின்ற வகையில் நிறைவேற்றி வந்திருப்பதைப் பார்க்கும்போது, 20 அம்சத் திட்டத்தை மாற்றியமைத்தபடி நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசு வற்புறுத்தி எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னபோது, 20 அம்சத் திட்டத்தை நாம் நல்லமுறையிலே நடைமுறைப் படுத்தி, அல்லது அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம். 1982 சனவரி திங்கள் முதல் 1982 டிசம்பர் வரையில் மத்திய திட்டக்குழு இந்த காலகட்டத்தில் ஒரு மாநிலத்தில் எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறது என்று ஆய்வு செய்து கூறியிருக்கிறது. ''இருபது அம்சத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்தியாவிலுள்ள மாநிலங்களில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று சொல்லியிருக்கிறது.

அது மட்டுமல்ல. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் 150 சதவீதம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் 75 சதவீதம், கொத்தடிமை மறுவாழ்வு 100 சதவீதம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் 100 சதவீதம்.



மலைவாழ் மக்களின் குடும்பத்திற்கு உதவி அளித்தல் 80 சதவீதம், உபரி நில விநியோகம் 79 சதவீதம், மரம் நடுதல் பணியில் 73 சதவீதம், கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதில் 72 சதவீதம் என்ற அளவுக்கு சாதனை எட்டியுள்ளது. இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்று மத்திய திட்டக்குழு பாராட்டியிருக்கிறது.

ஏன் நான் சொல்கிறேன் என்றால் சில பல குறைபாடுகள் இருக்கும். அந்தக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டவேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமை. அந்தக் குறைபாடுகளைக் களைய வேண்டியது ஆளும்கட்சியின் கடமை.

The opposition has its Say and the ruling party has its way.

என்று ஆங்கில நாட்டில் ஒரு பண்பாடு உண்டு. ஆகவே, எதிர்க் கட்சிகள் எடுத்துச்சொல்கிற அளவிற்கு, குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற தன்மையின் அடிப்படையில், அதைக் கண்டறிந்து, அதை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பை ஆளும்கட்சி ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்று சொல்லத்தக்க அளவிற்கு நிலைமைகள் உண்டு. ஆனால், அடியோடு ஒன்றுமே நடைபெறவில்லை என்று கீழேபோய் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் தவறானவை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத் தான் இவற்றைச் சுட்டிக்காட்டுகிறேன்.

சிறு சேமிப்புத் திட்டங்களைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் 1981–82-ஆம் ஆண்டில் ரூபாய் 213 கோடியே 15 லட்சம் அளவிற்கு நாம் வசூல் செய்து மிகப்பெரியதொரு சாதனையை நிறைவேற்றி இருக்கிறோம் என்ற பாராட்டுதலை நாம்பெற்று இருக்கிறோம். இதே போன்று பல பாராட்டுரைகளை நாம் பெற்று இருக்கிறோம்.

தாழ்த்தப்பட்டோர் நலனைப் பற்றி எடுத்துச் சொல்லுகிறபோது மத்திய அரசின் சிறுபான்மை—தாழ்த்தப்பட்டோர்—நலிவுற்றோர் நல உயர்மட்டக் குழு எடுத்து தெரிவித்து இருப்பது—''சிறுபான்மை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வட மாநிலங்களை விட தெற்கு மாநிலங்களில் உள்ள அரசுகள் பல நன்மைகளைச் செய்திருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட சிறுபான்மை மக்களுக்காக முழு அளவில் தமிழக அரசு செயல்படுகிறது என்பதை, அந்த மக்களைச் சந்தித்ததிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இந்த விஷயத்தில் தமிழக அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. இதைப் பாராட்டுகிறோம்'' என்று 11–1–1982-ல் நிருபர்கள் கூட்டத்தில் அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் சொல்லி

மக்களுக்கு வீட்டு வசதியைச் செய்து கொடுக்க உலக வங்கி 22 நாடுகளுக்குக் கடன் கொடுத்துள்ளது. உலக வங்கி பின்தங்கிய நாடுகள், வளர்ச்சி பெறுகின்ற நாடுகள் என்ற வகையில் 22 நாடுகளுக்கு கடன் உதவி அளித்து இருக்கிறது. இந்த 22 நாடுகளில் தமிழகம் மட்டுமே அதைச் சிறப்பாகச் செய்து இருக்கிறது. பெற்ற தொகையைத் திருப்தி ஏற்படும் வகையில் செயல்படுத்தியுள்ளது என்று உலக வங்கி அறிக்கை நமக்குப் பாராட்டுதல் தெரிவித்து இருக்கிறது. தமிழக அரசு ஆண்டு தோறும் வீட்டு வசதிக்கு ரூ. 30 கோடி ஒதுக்கி வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், ரிசர்வ் வங்கி பாராட்டுகின்றநேரத்தில்— ''3–10–1981-ல் தஞ்சையில் நடைபெற்ற பாங்க் துறை குறித்த ஆலோசனை மதிப்பீட்டுக் குழுக் கூட்டத்தில், ரிசர்வ் வங்கியின் பார்வையாளரும் பிரதிநிதியுமான திரு. எஸ்.ஆர். பேசியதாவது :

''விவசாயிகளுக்கு கடன் வசதியை அளிக்கும் திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்திய மாநிலம் தமிழ் நாடு ஆகும். இந்த வகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தை வகிக்கிறது. இரண்டாவது இடத்தைக் கருநாடகமும், மூன்றாவது இடத்தை ஆந்திர மாநிலமும் பெற்றுள்ளன. விவசாயிகளுக்கு அரசுத் துறை வங்கிகள் அளிக்கக் குறிப்பிட்ட கடன் குறியளவை நிறைவு செய்த மாநிலம் தமிழ்நாடுதான்'', என்ற தன்மையில் அவர்கள் பாராட்டுக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

கைத்தறி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் எடுத்துச் சொல்கிறபோது, 14–4–1982-ல் சென்னையில் நடைபெற்ற கைத்தறிக் கண்காட்சியில் கலந்து கொண்டு மத்திய வாணிகத் துணை அமைச்சர் திரு. சர்மா அவர்கள் பேசியதாவது:— கைத்தறி வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே முன்னணியாக உள்ளது. இதற்காக நான் தமிழக அரசைப் பாராட்டுகிறேன். 1981–82-ல் கைத்தறி வளர்ச்சிக்காக மைய அரசு ரூ. 111 கோடி ஒதுக்கியது. இதில் ரூ. 51.8 கோடி தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டது. தமிழ் நாட்டுக் கைத்தறித் துணிகள் மிகவும் தரமாக உள்ளன. தமிழக நெசவாளர்களின் கைத்திறன் மிகவும் பராட்டுவதற்குரியது'' என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. பல்வேறு தன்மைகளில் நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கு சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு கூட ரிசர்வ் வங்கியிடமிருந்து பாராட்டுதலைப் பெற்று இருக்கிறோம்.



இவற்றையெல்லாம் எதற்காகக் குறிப்பிட்டுக் காட்டுகிறேன் என்று சொன்னால், நிதித்துறையிலே ஆதாயம் இல்லாமல், கையாலாகாததன்மையில், திறமையின்மையில் இந்த அரசு நடைபெற்று வருகிறது என்ற குற்றச்சாட்டுக்கு இடம் இல்லை என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே வறட்சி நிலை பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த வறட்சி நிலைமையின் தன்மையைப் பற்றி ஆராயும் போது கூட, நான் வறட்சி நிவாரணப் பணிகளை, எடுக்க வேண்டிய பணிகளை, எடுக்கவேண்டிய காலத்தில் முறைப்படி எடுத்துக்கொண்டு வந்து இருக்கிறோம் என்பதை அவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாம் கணக்கிட்டுப் பார்த்தால் 1901 முதல் 1983 வரையில் இந்த 82 ஆண்டுகாலத்தில் மொத்தம் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஆண்டுகள் என்று கணக்கிட்டுப் பார்த்தால் 39 ஆண்டுகள். அதிலே கடுமையும், கொடுமையும்—சிவியர் அன்ட் டிசாஸ்ட்ரஸ்—என்று போட்டு இருக்கிற ஆண்டுகள் 12 ஆண்டுகள். விட்டு விட்டு இந்த ஆண்டுகள் வந்து இருக்கின்றன. பெரும் அளவிலே சிறிய அளவிலே—லார்ஜ் அண்ட் மாடரேட்—என்ற அளவிலே—27 ஆண்டுகள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, பல்வேறு ஆண்டுகளில் இந்த வறட்சி தமிழ் நாட்டில் வந்து இருக்கிறது. திடீரென்று இந்த ஆட்சியில் மட்டும் வந்துவிடவில்லை. தொடர்ந்து பல்வேறு ஆண்டுகள் வந்து இருக்கின்றன. ஓரளவிற்கு அவ்வப்போது அவைகளைச் சமாளித்துக்கொண்டு வந்து இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12–40)

ஆக வறட்சி நிலை ஏற்பட்டபோது கூட, வறட்சி நிலையைப் பற்றி உரிய காலத்தில் இந்த அரசு மத்திய அரசுக்கு அறிவிக்கவில்லை. முன் கூட்டியே அறிவித்திருந்தால், அந்த அரசிடத்திலிருந்து நமக்குப் போதுமான அளவுக்கு தொகை வந்திருக்கக் கூடும் என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் இந்தியாவிலே இருக்கிற பகுதிகளை நீங்கள் காணுவீர்களேயானால், பருவ நிலை பகுதிக்குப் பகுதி மாறும். வட பகுதி மாநிலங்களுக்கும் தென் பகுதி மாநிலங்களுக்கும் இடையிலேயே பார்க்கிறபோது, அவர்களுக்கு கோடையாக இருக்கிற காலத்திலே, தென்மாநிலத்திலே உள்ள நமக்கு மழைக் காலமாகும். மேற்குப் பகுதி மாநிலங்களுக்கு மழைக் காலமாக இருப்பது நமக்கு கோடைக் காலமாகக்கூட ஆகும்.

அதற்குப் பிறகு, மத்திய அரசின் ஆய்வுக் குழுவினர் தமிழகத்தின் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட 1969 மார்ச் இறுதி வாரத்தில் வருகை தந்தனர். இப்போதாவது மார்ச் முதல் வாரத்தில் வந்து சுற்றிப் பார்த்திருக்கின்றனர். அப்போது மார்ச் இறுதி வாரத்தில்தான் வந்து சுற்றிப் பார்த்தார்கள். மத்திய அரசு முதலிலே ஒதுக்கீடு செய்த தொகை ஒரு கோடியே 25 லட்சம். முழு விவரம் அடங்கிய வறட்சி நிலை அறிக்கை தயாரித்து அளிக்க தமிழக அரசு முடிவு எடுத்து நாள் 9–4–1969. இந்தியப் பிரதமர் இடத்திலே முழு அறிக்கையைக் கொடுத்த நாள் 17–4–1969. தமிழக அரசு வறட்சித் துயர் தனிப்பிற்காகக் கேட்ட தொகை 22 கோடியே 24 லட்சம் ரூபாய். இரண்டாவது மத்திய ஆய்வு குழு ஒன்று தமிழகத்தை சுற்றிப் பார்க்க 1969-லே ஜூலையிலே மறுபடியும் ஒரு குழு வந்து சுற்றிப் பார்த்தது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது போன்று ஒரு குழு வந்து பார்த்துச் சென்றதற்குப் பிறகு வறட்சி மிகவும் அதிகம் என்று சொன்னதற்காக அவ்வாறு மீண்டும் வலியுறுத்தியதன் காரணமாக இரண்டாவது குழு அமைக்கப்பட்டது. இரண்டாவது குழு பரிந்துரை செய்த தொகை 15.74 கோடி. மத்திய அரசால் மொத்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 11.75 கோடி. மற்றவற்றை மாநில அரசே சமாளிக்க வேண்டிய தன்மை ஏற்பட்டது. 1974–75 ஆம் ஆண்டின் வறட்சி நிலையினைப் பற்றிய வருவாய்த் துறை வாரியத்தின் அறிக்கை அர்சுக்கு அனுப்பப்பட்டது 9–12–1974 அன்று அறிக்கை அமைச்சருக்கு அனுப்பப்பட்டது 9–12–1974 முதலமைச்சரால் ஏற்பளிக்கப்பட்ட நாள் 12–12–1974 மாநில அரசு குடிநீர் வழங்குவதற்கு உடனடியாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியது. சிறிய நீர்ப்பாசனங்களுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியது. வருவாய்த் துறை வாரியத்தால் முழு விவர அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது 23–1–1975 அன்று மத்திய அரசு ஒதுக்கீடு செய்த தொகை 7.5 கோடிதான். அதிலேதான் தகராறு கூட வந்தது. 7.5 கோடிக்கு மேலே தரமாட்டேன் என்று சொன்னார்கள். எனவே இருக்கின்ற நிலைமையை வைத்தே இங்கே சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசுக்கு பிப்ரவரித் திங்கள், மார்ச் திங்கள், ஏப்ரல் திங்களிலேதான் முழு விவரத்தையும் நாம் கொடுக்க முடியும். அந்த வகையிலேதான் பிப்ரவரித் திங்களிலே இந்த மாநில அரசு தந்த அந்த அடிப்படையில்தான் நாம் செய்கிறோம்.

இங்கே நாம் கணக்கிட்டு முழு விவரத்தைத் தந்ததன் அடிப்படையில் முதலிலே 190 கோடி ரூபாய் என்று சொன்னோம். ஆனால் அதற்குப் பிறகு ரிவைஸ்ட் எஸ்டிமேட் என்ற அளவுக்கு வந்து கிட்டத்தட்ட 217 கோடியே 79 இலட்சம் வேண்டும் என்ற





அளவுக்கு வந்து அதுபற்றி மத்திய அரசுக்கு இப்போது நாம் அனுப்பி இருக்கிறோம். இந்த வகையிலே 20 ஆயிரம் குழாய்க் கிணறுகள் அமைக்க 50 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். ஏரி கண்மாய்கள், கிணறுகள் போன்றவை அமைப்பது மற்றும் பல்வேறு திட்டங்களுக்காக நாம் மொத்தம் 217 கோடியே 79 இலட்சத்திற்கு அனுமதிக்கவேண்டும் கேட்டிருக்கிறோம். அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்து பார்த்துவிட்டுச் சொன்னபோது தமிழக அரசு எந்த காலதாமதமும் செய்யவில்லை என்பதை திருச்சி நிருபர்கள் கூட்டத்தில் பேசிய போது கூட அந்தக் குழுவின் தலைவர் ஸ்ரீவஸ்தவா அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் அவரே நேரடியாக வந்து பார்த்துவிட்டு குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகின்ற அளவுக்கு பல கஷ்டமான நிலைகள் ஏற்பட்டிருப்பது உண்மைதான், இதை உடனடியாகத் தீர்ப்பதற்கான உதவி செய்ய வேண்டியதுதான். என்னுடைய சொந்த மாநிலமாகிய பீகாரிலே கூட இப்படிப்பட்ட கடுமையான நிலைமை இல்லை. ஆகவே இதைப் போக்கித்தான் தீரவேண்டும் என்ற கருத்தை அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இங்கே நாம் 190 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம், 217 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம் என்று சொன்னால் பல உறுப்பினர்கள் தவறாகக் கூட எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த 217 கோடி ரூபாயினை மத்திய அரசு நமக்குத் தருகின்றது, அதை வைத்துக்கொண்டு இவற்றை எல்லாம் நாங்கள் செய்திருக்கிறோம் என்று. ஆனால் இதிலே உள்ள நிலைமைகளை மன்றம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆண்டுதோறும் வறட்சி, வெள்ள நிவாரணத்திற்கு என்று பட்ஜெட்டிலே 8.59 கோடி ரூபாய் கட்டாயம் ஒதுக்கி வைக்கவேண்டும். ஒவ்வொரு வருஷம் அவ்வாறு வந்து ஏதேனும் ஒரு வருஷத்திலே வெள்ளம் அல்லது வறட்சி வந்தால் சேர்த்து செலவழித்துக்கொள்ளலாம். ஆகவே 1982–83 ஆம் ஆண்டு 8.59 கோடி ரூபாய், 1983–84-லே 8.59 கோடி ரூபாய். ஆக மொத்தம் 17 கோடியே 18 இலட்சம் ரூபாய் இந்த வகையிலே நாமே செலவழிக்கவேண்டியிருக்கின்றது. இது நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள வகையில் செலவழிக்கவேண்டி வருகின்றது. 1983–84 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீட்டிலே ஒதுக்கீடு செய்தது போதாது என்று சொன்னால் வறட்சி நிலை இதைவிட மீறி நிற்குமேயானால் மத்திய அரசு திட்டச் செலவுக்கு எவ்வளவு அனுமதித்திருக்கிறார்களோ அதிலே 5 சதவீதம் வரையிலும் நாம் செலவழித்துக் கொள்ளலாம். அதற்குத்தான் அவர்கள் அனுமதிக்கிறார்கள். 845 கோடி ரூபாய் இந்த ஆண்டு செலவழிக்க ஒதுக்கி இருக்கிறார்கள். அதிலே 42 கோடியே 25 இலட்சம் வரையிலும் நாம் செலவழித்துக்கொள்ளலாம். செலவழித்துக்கொள்ளலாம் என்று சொன்னால் இந்தப் பணத்தை

ஆனால் தமிழகத்தின் பருவமழையைப் பொறுத்தமட்டில், இரண்டு பருவக் காற்றுகளை நம்பித்தான் தமிழகமே வாழ்கிறது. ஒன்று தென் மேற்குப் பருவக் காற்று, மற்றொன்று வடகிழக்குப் பருவக் காற்று. தென் மேற்குப் பருவக் காற்று, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களிலே எதிர் பார்க்கலாம். ஆகவே, மேற்கு தொடர்ச்சி மலைகளின் மூலமாக பெய்வதன் காரணமாக, அது கேரளாவிற்கும் பயன்படுகிறது என்பது மட்டும் அல்லாமல், மேற்குத் தொடர்ச்சி மலையின் மூலமாக உற்பத்தியாகிற ஆறுகள் மூலமாகவும் தமிழகம் பயன்படுகிறது. அதில் குறிப்பாகச் சொல்ல கூடிய காவிரி போன்ற ஆறுகள் பயன் பெறுவது, தென் மேற்குப் பருவக் காற்றில் பெய்கின்ற மழையை ஒட்டித்தான். அதற்குப் பிறகு நாம் நவம்பர் டிசம்பர் மாதங்களில் வட கிழக்குப் பருவ காற்றை எதிர் பார்க்கிற நேரம். ஆகவே தான் தமிழகத்தைப் பொறுத்தவரையில், வறட்சியினுடைய அளவை அதனுடைய. கடுமையான தன்மையை நாம் கணக்கிடுவது, ஜனவரி மாதத்திற்குப் பிறகுதானே தவிர, வறட்சி ஏற்பட்ட உடனேயே நாம் ஒரு கணக்கிட்டு, மத்திய அரசிடத்திலே நிதி உதவி தாருங்கள் என்று கேட்பது பொருத்தமாக இருக்காது.

இந்த ஆண்டு கூட, தென் மேற்குப் பருவக் காற்றுத்தான் பொய்த்துவிட்டது, வடகிழக்குப் பருவக் காற்றாவது பெய்யாதா என்று எதிர் பார்க்கிற நேரத்தில், நவம்பர் திங்கள் முதல் வாரத்தில், சென்னையிலும் மழை பெய்தது, கடற்கரை ஓரப் பட்டணங்களில் எல்லாம் மழை பெய்தது. எப்போதும் பெய்யாத அளவுக்கு இராமநாதபுரம் மாவட்டங்களில் கூட மழை பெய்தது. அது தொடர்ந்து வரும் என்று நாம் எதிர் பார்த்தோம். ஆனால் நவம்பர் திங்கள் ஒன்றிரண்டு வாரங்களுக்கு பெய்த பிறகு, அடியோடு நின்றுவிட்டதன் காரணமாக, மொத்தத்திலே பெய்ய வேண்டிய அளவிலே 60 சதவீதத்திற்கு ஏறக்கூட பெய்ததே தவிர, 40 சதவீதத்திற்கு மேலே பொய்த்துவிட்டது. ஆனால் வறட்சியினுடைய நிலைமையைப் பற்றி நாம் தகவல் அனுப்பியிருக்கிறோம்.

ஆக, பெய்ய வேண்டிய மழை பெய்யவில்லை என்று, வாரக் கணக்கு மாதக் கணக்கு என்று சொல்லக்கூடிய அளவுக்கு, கணக்குகள், மேதகு ஆளுநர் அவர்களின் மூலமாகவும் அனுப்பப் பட்டிருக்கிறது. அரசும் அவ்வப்போது அனுப்பிகொண்டிருக்கிறது. மழையினுடைய அளவு எந்தெந்த அளவு பெய்தது. சென்ற ஆண்டு எவ்வளவு? இந்த ஆண்டு எவ்வளவு? எந்தெந்த இடங்களில் பெய்தது என்பதைப் போன்ற விவரங்களை அவ்வப்போது நாம் அனுப்பிக் கொண்டேயிருக்கிறோம். தகவல்களை நாம்கொடுத்துக் கொண்டேயிருக்கிறோம். ஆனால் எந்த அளவுக்கு வறட்சி நிலைமை பிடித்து இருக்கிறது, அதற்கு



எவ்வளவு பணம் ஈடு கட்டவேண்டும் என்று கணக்கிட வேண்டும் என்றால் ஜனவரிக்குப் பிறகுதான் கணக்கிட வேண்டுமே தவிர, அதற்கு முன்னாலே கணக்கிட்டு எடுத்துச் சொல்கின்ற வாய்ப்பு என்றும் இருந்தது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்டவிரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன் 1968-69லே வறட்சி வந்தது. ஆனால் அப்போது வந்த காலத்தில் கணக்கிடுகிறபோது கூட, வறட்சி நிலை பற்றி மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்ட நாள் 19–2–1969. ஆகவே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்கள் வரையில் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு வறட்சியிருக்கிறது என்பதை அறிவிக்கிறோம். தகவல்கள் சொல்கிறோம். ஆனால் அது பற்றிய முழு விவரங்கள் தர வேண்டும் என்றால் ஒவ்வொரு பகுதியாக எடுத்து, எந்த அளவுக்கு அந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, எந்த அளவுக்கு மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், எந்த அளவுக்குப் குடிதண்ணீர் பாதிக்கப் பட்டிருக்கிறது, எந்த அளவுக்கு மக்களுடைய வருமானம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்கிற கணக்கெல்லாம் எடுக்க வேண்டுமென்றால், இந்த அளவு காலம் ஆகும் என்பதை கடந்த காலநிகழ்ச்சிகளே சுட்டிக் காட்டுகின்றன.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1969-லே ஏற்பட்ட வறட்சியின் போது, நானே நேரிலே டெல்லிக்குச் சென்று, பாரதப் பிரதமர் அவர்களை அழைத்து, அவர்களே நேரில் வந்து பல பகுதிகளைப் பார்வையிட்டு வறட்சி நிவாரண நிதியை அப்போது வழங்கியிருக்கிறார்கள் என்பதை நினைவு படுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் அதற்குப் பிறகு அந்த இடத்திற்கு வருகிறேன். வறட்சி நிலையைப் பற்றி மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்ட நாள் 19-2–1969-ல் என்று சொன்னேன்.

The decision taken at a high level meeting and the Government of India was informed on the drought situation on 19–2–1969.

19–2–1969-ல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் குற்றமாகச் சொல்லவில்லை. அதுதான் முடியும் என்பதற்காகச் சொல்கிறேன். நீங்கள் ஏன் அக்டோபரில் சொல்லியிருக்கக்கூடாது. நவம்பரில் சொல்லியிருக்கக்கூடாது என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டதற்காகச் சொல்கிறேனே தவிர, அப்படிச் செய்தது தவறு என்று சொல்லவில்லை. அதுதான் செய்ய முடியும். அதைத்தான் கடைப் பிடிக்க முடியும் என்பதற்காகச் சொல்கிறேன்.

உடனே கொடுத்து விட்டு இரண்டு மூன்று ஆண்டுகளில் அவர்கள் கழித்துக்கொள்வார்கள். மாநில அரசு பொறுப்பேற்கவேண்டிய தொகை 59 கோடியே 43 இலட்சம் ரூபாய். இந்த 59 கோடியே 43 இலட்சத்திற்குக் குறைவாக வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டும் என்றால் நாம் தான் செய்ய வேண்டுமே தவிர மத்திய அரசின் உதவி வராது. 59 கோடியே 43 இலட்சத்தைத் தாண்டிப் போகுமேயானால் அதற்குமேல் வருகின்ற தொகையிலேதான் மத்திய அரசு உதவி செய்ய வருகின்றது. உதாரணமாக இந்த ஆண்டு 200 கோடி கேட்டிருக்கிறோம். அவர்கள் ஒரு 100 கோடி கொடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். 100 கோடி அனுமதிக்கின்றபோது 60 கோடியைத் தள்ளிவிடுவார்கள். மீதி 40 கோடி ரூபாய்தான்.

(பிற்பகல் 12–50)

அந்த 40 கோடி ரூபாய் உதவியாக வராது. 40 கோடியிலே 20 கோடி கடனாகத்தான் அளிக்கிறார்கள். நாம் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். 20 கோடி மத்திய அரசிடமிருந்து மானியமாக வரும். ஆக 100 கோடிக்கு அனுமதி ஏற்படுகிறது என்று சொன்னால் மீதித் தொகை அத்தனையும் நாம் தான் செலவழிக்க வேண்டி வரும். அந்த அடிப்படையில் தான் நாம் செலவழித்துக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால் மாநில நிதியிலிருந்து செலவழித்துக்கொண்டு வரும். மத்திய அரசு 217 கோடிக்கு அனுமதி தருமானால் அதன் மூலமாக அவர்களுடைய கடனாகவும் அவர்கள் நமக்கு மானியமாக தருகின்ற தொகை உடனடியாகப் பயன் படும். இதில் நமக்கு இருக்கிற லாபம் என்னவென்று சொன்னால் உடனடியாக அவர்கள் பணம் தருவார்கள், அந்தப் பணத்தைப் பெற்று உடனடியாக இந்தத் துயரங்களை நாம் போக்க முடியும். இதனை திருப்பிக் கட்டுகின்ற பொறுப்பை நாம் வருகின்ற ஆண்டுகளில் ஏற்றுக் கொள்கிறோம் என்ற அடிப்படையில் இந்த நிலைமை ஏற்படுகிறது. ஆகவே தான் இப்போது குழுவினர் வந்துவிட்டு சென்று இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லா நிலமைகளையும் தெளிவுபட விளக்கப்பட்டிருக்கிறது. நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்ன என்பதை அவர்களுக்கு சுட்டிக் காட்டியிருக்கிறோம். இது வரையில் எவ்வளவு செலவழித்து இருக்கிறோம் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம். எவ்வளவு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம். அவர்களும் நல்ல தன்மையிலே தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய சிபாரிசினுடைய அடிப்படையில்தான் மத்திய அரசு எவ்வளவு தருகிறது என்பதை விரைவிலே முடிவு செய்யும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது விரைவிலே வரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அது மட்டும் அல்ல. அடுத்தபடியாக உணவு நிலைமை பற்றி எல்லாம் இங்கே மாண்புமிகு





உறுப்பினர்கள் பலரும் பேசினார்கள். இந்த உணவுப் பிரச்சனையைப் பொறுத்த அளவில் இந்த பொது பங்கீடு முறை என்ற ஒரு முறை வந்தது நாட்டினுடைய சாதாரண ஏழை எளிய மக்களுடைய நன்மைக்காக என்கிற கருத்தை ஏற்றுக்கொண்டு தான் தொடர்ந்து நாம் பணியாற்றிக் கொண்டு வருகிறோம். அந்த வகையிலே நாம் மத்திய தொகுப்பிலிருந்து மாநில தொகுப்பிற்கு அரிசி கிடைக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருவதைப் பற்றி பலரும் பல வகையிலே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கூட ஆண்டுக்காண்டு உற்பத்தியான தன்மைகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் மொத்த உணவு உற்பத்திக் கணக்கை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் அரிசி, கம்பு, கேழ்வரகு, சோளம் எல்லாம் சேர்ந்த கணக்கை எடுத்துச்சொன்னார்கள். அரிசி கணக்கு தான் இப்போது நமக்கு முக்கியமான கணக்காக இருக்கிறது. மத்திய அரசுக்கும் நமக்கும் இந்த தொகுப்பிலிருந்து பெறுகின்ற தன்மையிலே சாதரணமாக நாம் பார்ப்போமானால் 1977–78-ல் 57 லட்சத்து 5 ஆயிரம் டன் நமக்குக் கிடைத்தது. 1978–79-ல் 61 லட்சத்து 75 ஆயிரம் டன் நமக்குக் கிடைத்தது. 1979–80-ல் 61 லட்சம் டன் கிடைத்தது. 1981–82-ல் 55 லட்சத்து 78 ஆயிரம் டன் நமக்குக் கிடைத்தது. 1982–83-ல் 28 லட்சம் டன் தான் தமிழகத்தில் உற்பத்தி ஆகியது. ஆக கிட்டத்தட்ட 61 லட்சம் டன் விளைய வேண்டிய தமிழகத்திலே 28 லட்சம் டன் மட்டுமே உற்பத்தியான காரணத்தினாலே அதிலே நாம் கொள்முதல் செய்வதை வைத்து 1 கோடியே 17 லட்சம் குடும்ப அட்டைகளுக்கும் அந்த அரிசியை தரமுடியாது என்ற காரணத்தால்தான் மத்திய தொகுப்பிலிருந்து தர வேண்டும் என்கின்ற தன்மையை நாம் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கொண்டு வருகின்றோம். ஆக கேட்கவேண்டிய வழியிலே அவர்களை கேட்டிருப்பார்களேயானால் மத்திய அரசு தந்திருக்கும் இல்லாவிட்டால் எப்படி தருவார்கள். இப்போது கேட்டால் எப்படி தருவார்கள் என்ற பிரச்சனையை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்து வைத்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலவையிலே ஆளுநர் உரைக்கு பதிலுரை அளிக்கின்ற போது இந்த நிலமைகளை எல்லாம் மிகத் தெளிவாக அங்கே விளக்கிக் காட்டினார்கள். இந்த மாநிலத்தினுடைய பங்கீட்டு முறையை பொறுத்த வரையில் நாம் எவ்வளவு சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறோம் என்பதை மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு திரு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் ராஜ்ய சபையிலே பேசுகின்ற போது

Tamil Nadu, Kerala, West Bengal and Maharashtra have been very efficient in implementing the public distribution scheme.

என்று தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்கள் மிகத் திறமையான முறையில் பொது வினியோக முறையை நடைமுறைப்படுத்தி வருகின்றன என்று அவர்கள் சொன்னார்கள். நம் பொது வினியோக முறையிலே நடைமுறைப் படுத்துவதிலே கோளாரோ மற்ற நிலமைகள் இல்லை. சிலபல குறைபாடுகள் இருக்கக்கூடும். முறைகளிலே கோளாறுகள் எதுவுமில்லை. மத்திய தொகுப்புக்கு எவ்வளவுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமோ அவ்வளவுக்கு அவ்வளவு கொடுத்து இருக்கிறோம். கொடுக்கமுடியாத நேரங்களிலே கொடுக்க முடியாமல் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலவையிலே எடுத்துச் சொன்ன புள்ளி விவரங்களை வைத்து இங்கே சுட்டிக்காட்டினார்கள். 1971–72-ல் 50 ஆயிரம் டன் தமிழகம் மத்திய அரசுக்கு தந்திருக்கிறது. 1972–73-ல் 1 லட்சத்து 11 ஆயிரம் டன் தந்திருக்கிறது.

1973-74 இல் மத்திய அரசுக்குத் தரமுடியவில்லை. தரக்கூடிய நிலையில் தமிழக அரசு இல்லை. 1974 75 இல் இல்லை. தரக்கூடிய மாதிரி தமிழக அரசின் சூழ்நிலை இல்லை. 1975-76 இல் 2 லட்சத்து 93 ஆயிரம் டன் தந்தது. அப்போது தரக்கூடிய சூழ்நிலை தமிழகத்திற்கு ஏற்பட்டது. 1975-76 இல் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றது. குடியரசுத் தலைவர் ஆட்சி நடக்கிற காலத்திலே மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் எங்களுக்கு தொகுப்புக்கு அரிசியே தர மறுக்கிறது தமிழக அரசு என்று குற்றஞ்சாட்டியது பொருந்தாது என்பதற்காகச் சொல்கிறேன். குடியரசுத் தலைவர் ஆட்சி 1975-76 ஆம் ஆண்டு நடக்கிறபோது ஒரு கிலோ கூட தரவில்லை. காரணம் அப்போது முடியவில்லை. இங்கே இருந்தால் தருவோம். 1977-78 இல் இல்லை. 1978-79 இல் 2 லட்சம் டன்கள் தந்தோம். 1975க்கு முன்னாலே தர முடிந்தது என்ற ஒரு காரணத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்தார்கள். 1975க்கு முன்னாலே நமக்கு ஒரு சட்டம் இருந்தது. மாநிலத்தை விட்டு உணவு அரிசி மற்றவைகள் வெளி மாநிலத்திற்கு போகக்கூடாது என்று போடுகிற சட்டம் நமக்கு இருந்தது. ஆனால் 1976-இல் குடியரசுத் தலைவர் ஆட்சியிலே இந்தியா முழுவதும் ஒரே சோன் ஆக ஆக்கிவிட்டு ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் லெவி கொடுத்து விட்டுப் போகலாம் என்று ஆக்கி விட்டார்கள். ஆகவே தமிழகத்திலே விளைகின்ற உணவுப் பொருள் அத்தனையும் இங்கே தங்கியிருக்குமானால், தமிழக எல்லையைவிட்டுப் போகக்கூடாது என்ற ஒரு கட்டுப்பாடு 1976க்கு முன்னாலே இருந்ததைப்போல் இருக்குமானால் நாம் கூட சில பல நேரங்களில் சேமித்து மிச்சப்படுவதை கூட அனுப்பியிருக்க முடியும். ஆனால் 1978–79-ல் ஒரு சோன் என்று ஆக்கிவிட்ட நிலையிலே ஒரு மாநிலத்தை விட்டு லெவி கொடுத்துவிட்டு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்



லலாம் என்ற நிலையில் நாம் 2 லட்சம் கொடுத்தோம். அதைத் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். கொடுக்கவில்லை கொடுக்கவில்லை என்று அவர்கள் சொல்கிறபோது 2 லட்சம் நாம் ஒதுக்கினோம், மொத்தத்திலே 7 மாதங்கள் கழித்து மத்திய அரசு 3 ஆயிரத்து சில்லரை எடுத்துக்கொண்டார்கள். நாம் 7, 8 தடவைகள் கடிதங்கள் எழுதினோம், இருப்பிலே அதை வைத்திருக்கிறோம் என்று. அதிலே தமிழகத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு எடுத்துக் கொள்ளும் என்று நம்முடைய கிடங்குகளிலே நாம் வைத்திருந்ததன் காரணமாக ஏற்பட்ட வாடகை நட்டம் மட்டும் 4 கோடியே சில்லரை ரூபாய். இவ்வளவு வாடகை நட்டத்தை ஏற்றுக் கொண்டு கடைசியிலே நாம் கேட்டோம். வேலைக்கு உணவுத் திட்டத்தின் அடிப்படையிலே நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று மத்திய அரசிடத்திலே அதற்கு அனுமதி வாங்கி 73 ஆயிரம் டன் எடுத்துக் கொண்டோம். மீதியை பப்ளிக் டிஸ்ட்ரிபியூஷன் என்று சொல்லப்படுகிற பொது வினியோகத்திற்காக நாம் செலவழித்தோம். ஆனால் அவர்கள் காரணம் சொல்கிற போது அது சொத்தை ஆகவே எடுத்துக்கொள்ளவில்லை என்றார்கள். அது சொத்தையாக இருந்தால் 73 ஆயிரம் டன்களை வேலைக்கு உணவுத் திட்டத்திலே நாம் எடுத்திருக்கமாட்டோம். மீதியை நாம் பொது வினியோகத்திற்கு என்று சொன்னோம். ஒரு குறைபாடுகூட அதிலே வரவில்லை. நெல்லை சிலபல நேரங்களிலே நாம் காப்பற்றலாம், ஆனால் அரிசியைக் குறிப்பிட்ட காலத்திற்குத்தான் காப்பற்ற முடியும். அந்தச் சூழ்நிலையில் 1979–80-இல் இல்லை, 1980–81-இல் இல்லை. 1981–82-இல் கொடுக்கமுடியவில்லை. கொடுக்கவில்லை. அது மட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். கொள்முதல் செய்வதை நாமும் செய்யலாம், மத்திய அரசும் செய்யலாம், தனிப்பட்ட வியாபாரிகள் தான் செய்யமுடியாதே தவிர புரக்யூர்மென்ட் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் மத்திய நுகர் பொருள் வாணிபக் கழகமும் செய்தோம். நாமும் செய்து நம்மிடத்திலே மிச்சப்பட்டால் தரலாம். மத்திய அரசு கொள் முதல் செய்வதை தமிழகத்திலே தடுக்கவே முடியாது. அப்படி கொள் முதல் அவர்கள் செய்யாமல் இருந்து இருக்கிறார்களா என்றால் 1980–81-இல் 11 ஆயிரம் டன் மத்திய நுகர் பொருள் வாணிபக் கழகம் தமிழகத்திலே கொள்முதல் செய்து இருக்கிறார்கள். அதற்கு அடுத்த ஆண்டு அவர்கள் கொள்முதல் செய்யவில்லை. ஆனால் மீதிப்படுமானால் கொள்முதல் செய்து லெவி விலைக்கு வாங்கிவைத்து இருப்போமானால் மக்களுடைய விநியோகத்திற்குத் தந்திருக்க வேண்டும். கொடுத்தது போக மீதியிருக்குமானால் தமிழக அரசு மீதியை என்ன செய்ய முடியும்? ஒன்று அனுமதி கேட்டு மற்றவர்களுக்குத் தந்திருக்க வேண்டும். வெளி நாடுகளுக்கு நாம் அனுப்ப முடியாது. மத்திய அரசு அனுமதி இல்லாமல் வேறு மாநிலத்திற்கு அனுப்ப முடியாது. மிச்சப்

பட்டால் மத்திய தொகுப்புக்குத்தான் தரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கக்கூடும். இங்கே லெவி நிலைமையை ஏற்படுத்தியதன் காரணமாக நாம் சென்ற ஆண்டு வறட்சி நிலை தமிழகத்திலே இப்போது ஏற்பட்டு தமிழகத்திலே அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக மத்திய தொகுப்புக்குத் தந்து விட்ட பிறகு நீங்கள் அதை வேறு மாநிலங்களுக்குக் கொடுத்து விட்ட பிறகு எங்களுக்குத் தேவைப்படுகிற போது நாங்கள் கேட்கிறபோது பஞ்சாப்அரியானா போன்ற மாநிலங்களுக்குஒதுக்கபட்டதற்கு பிறகு எடுக்கிற காலம்வந்து, அதற்குப்பிறகு வேகன்கள் ஒதுக்கி, வேகன்கள் நாங்கள் கேட்டு ஏற்கனவே இடர்பாடுகள் எல்லாம் ஏற்பட்டு தமிழகத்தின் அனுபவத்தின் காரணமாக உங்களிடம் தந்துவிட்டு பிறகு கேட்கிறபோது வாங்குகிற நிலையில் பல சங்கடங்கள் எல்லாம் வருகின்றன.

[பிற்பகல் 1-00]

ஆகவேதான் எங்களுக்கு பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தாலே இங்கேயே அதைப் பயன்படுத்திக்கொள்கிற தன்மை வேண்டுமென்றுதான் நாம் வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். இதை முன்கூட்டியே சொல்லியிருந்தால் மத்திய அரசு தந்திருக்குமே என்று குற்றச்சாட்டாக எடுத்துச் சொன்னார்கள். வெளியிலும் எடுத்துச் சொல்கிறார்கள். இங்கேயும் சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே எவ்வளவு கேட்டும் கொடுக்காத சூழ்நிலையில், மே திங்கள் வ ரயில் நாம் கேட்ட அளவிற்கு தரா விட்டாலும், 80 ஆயிரம் கேட்கிற இடத்தில் 20 ஆயிரம், 25 ஆயிரம், 30 ஆயிரம், 40 ஆயிரம் என்றும் வறட்சிக் காலத்தில் 50 ஆயிரம் வரையில் தந்திருக்கிறார்கள். அலாட்மெண்ட் செய்த அளவிற்குக் கூட, ஒதுக்கீடு செய்த அளவிற்குக் கூட நம்மிடத்தில் வரவில்லை. ஆகவே சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்நது வராத காரணத்தால் சென்ற மாதத்தோடு போய்விட்டது என்று அவர்கள் சொன்னார்கள். இந்த அளவிற்கு நாம் கேட்காமலேயே சென்ற ஆண்டு அதாவது 82 மே திங்கள் வரையில் கொடுத்துக் கொண்டிருந்த மத்திய அரசு திடீரென்று ஜூலிலேயிருந்து கொடுப்பதை நிறுத்திய காரணமாகத்தான் நாம் வற்புறுத்த வேண்டி வந்தது. நாம் அதற்கு முன்னாலே 80–81-ல் கொடுக்கவில்லை ; 81–82-ல் கொடுக்கவில்லை ; அப்படி கொடுக்காமல் கொடுத்துக் கொண்டிருந்த மத்திய அரசு, 82 மே வரையில் கொடுத்த அரசு, நாம் கேட்ட முழுவதையும் தராவிட்டாலும் ஓரளவிற்காவது கொடுத்த அரசு திடீரென்று நிறுத்தி விட்டதன் காரணமாகத்தான் நமக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. நான் இந்த அவையிலே திரும்ப திரும்பச் சொன்னேன். பஃப்பர் ஸ்டாக் என்று மூன்று மாதங்களுக்கு குடும்ப அட்டைகளுக்கு





தருகிற அளவிற்கு வைக்க வேண்டும். அடிக்கடி கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வற்புறுத்தியுள்ளார்கள். 28 கிலோ ஒரு குடும்ப அட்டைக்கு மாதா மாதம் தந்துகொண்டு இருந்தீர்கள். அதை திரும்ப கொடுக்க வேண்டும் ; இப்போது 24 கிலோவாக்கி, 20 கிலோவாக்கி விட்டீர்களே என்று அடிக்கடி இந்த அவையிலே கேட்டிருக்கிறார்கள். 28 கிலோ தந்தோம். முடியவில்லை என்பதால் 24 கிலோ ஆக்கினோம். 24 கிலோவாக்கி பிறகு இருக்கிற இருப்பை பங்கிட்டுத் தரமுடியாது என்பதால் 20 கிலோவாக ஆக்கினோம். ஆகவே இருக்கிற இருப்பில் இருந்து தான் நாம் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியிருப்பதால் 28-ஐ 24-ஆக குறைத்தோம் ; பிறகு 20 கிலோ ஒரு கார்டிற்கு என்று கொடுத்து வருகிறோம். இப்போது கூட மாண்புமிகு உறுப்பினர்கள் 15 நாட்களுக்குத் தான் தருகிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்போது செய்ய வேண்டிய நிலைமைகள் என்னவென்றால், தஞ்சாவூரிலே முழுவதும் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியத்திற்கு ஆளானதற்கு காரணம், தஞ்சை பூராவும் வேறு யாரும் கொள்முதல் செய்யக் கூடாது என்று சட்டம் போட்டதற்குக் காரணம், மத்திய அரசிலிருந்து நமக்கு அரிசி வராத காரணத்தாலே அந்தப் பணியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் வந்தது. மத்திய அரசினுடைய தொகுப்பிலேயிருந்து அரிசி தொடர்ந்து நமக்கு வந்திருக்குமேயானால் தஞ்சை மாவட்டத்திற்கு 50 சதவீதம் லெவி வைத்திருப்போம். 50 சதவீதம் நெல்லை வெளி மாவட்டங்களுக்குக் கொண்டுபோய் அதை ஓப்பன் மார்க்கெட்டிலே விற்பதற்கு வழி இருக்கும். இப்போது தஞ்சை மாவட்டத்திலேயிருந்து வெளி மாவட்டங்களுக்கு அரிசி செல்லதா நிலை ; முழு அரிசியும் நாம் தான் கொள்முதல் என்று வைத்திருக்கிறோம். 15, 20 நாட்களுக்கு முன்பு தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல, அதனுடைய எல்லைப் பகுதிகளிலே இருக்கிற திருச்சி மாவட்டத்தினுடைய பகுதியிலும் இப்போது நாம் தான் கொள்முதல் செய்ய வேண்டுமென்று வைத்ததன் காரணமாக, வெளி மார்க்கெட்டிற்கு அரிசி இப்போது ஆந்திராவிலிருந்து கொண்டு வந்தால் தான், வெளி இடங்களிலிருந்து வியாபாரிகள் கொண்டு வந்தால் தான் உண்டே தவிர வேறு வகைகளிலே கொண்டு வரமுடியாது. மத்திய அரசு மே திங்களிலிருந்து நிறுத்தி வைக்காமல், ஜூன், ஜூலையிலும் அது கொடுத்துக் கொண்டே வந்திருக்குமானால் நம்முடைய கொள்முதலையும் சேர்த்து, மத்திய அரசு கொடுப்பதையும் சேர்த்து வைத்திருப்போமேயானால் தஞ்சை மாவட்டத்தில் நூற்றுக்கு நூறு சதவீதம் கொள்முதல் நாம் வற்புறுத்தி இருக்க மாட்டோம். 50 சதவீதம் தான் வைத்திருப்போம். பொது மக்களுக்கும் பரவி கிடைக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கும். இருக்கிற சூழ்நிலைகளில் எப்படியாவது நிலைமையை சமாளிக்க வேண்டுமென்று நிலை ஏற்பட்டது. கொள்முதல் குவிண்டாலுக்கு 125 ரூ, 130 ரூ. என்று வருகிற போது, அதற்கு மேலே செலவு எல்லாம் போய் குறைந்த விலைக்கு வந்து விடுகிறது. அதிக விலைக்கு வாங்கி மக்களிடத்திலே குறைவான விலைக்குக் கொடுக்க வேண்டி

இருக்கிறது. இப்போது கூட ஆந்திரா மாநிலத்தில் அதனுடைய முதல்வர் என். டி. இராமராவ் அவர்கள் சொல்கிற போது ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு தருவோம் என்கிறார். அதுவும் யாருக்கு கொடுப்போம் என்றால் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு கீழே வருமானம் உள்ளவர்களுக்கு கொடுப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நாமோ ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கு கீழே உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 1.75 என்று கொடுக்க வேண்டியிருக்கிற காரணத்தால் மிகப் பெரிய நஷ்டம் ஏற்படுகிறது. ஒரு ஆண்டிற்கு கணக்குப் போட்டு பார்த்தால் மிகப் பெரிய தொகையான 47 கோடி ரூபாய் கொடுத்து இந்த முறைகளை காப்பாற்ற வேண்டியிருக்கிறது. இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு காரணம் கிட்டத்தட்ட 1 கோடியே 17 இலட்சம் கார்டுகளுக்கு நாம் கொடுக்க வேண்டியிருக்கிறது. தொழில் வாணிப கழகத்திற்கு அரசாங்கம் கொடுக்க வேண்டியத் தொகை மட்டும் 46 அல்லது 47 கோடி ரூபாய் வருகிறது. அந்த வகையில் இவ்வளவு செலவு செய்து இந்த முறைகளை எல்லாம் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. காரணம் 1 கோடியே 17 இலட்சம் குடும்ப கார்டுகளுக்கு 20 கிலோ அரிசி வழங்குகிறார்கள் என்று வைத்துக் கொண்டால் நமக்கு ஒவ்வொரு மாதத்திற்கும் தேவை 2 இலட்சத்து 34 ஆயிரம் டன்.

இப்பொழுது ஏன் அவ்வவு பேரும் வாங்கவில்லையென்று சொன்னால், தஞ்சை மாவட்டம் மற்றும் வேறு பல இடங்களிலே கூலியாக நெல் வாங்குபவர்கள், ரேஷன் கடைகளுக்குப் போய் வாங்குவதில்லை. மிராசுதாரர்களும் மற்றவர்களும் தங்களுக்குச் சொந்த நெல் வைத்திருப்பவர்கள் ரேஷன் கடைக்குப் போய் வாங்குவதில்லை. ஆகவே, 25 காசு, 30 காசு, 40 காசு, 50 காசு அதிகமாக இருந்தாலும் வெளியே வாங்கிக் கொள்ளலாம் என்று வாங்கிக் கொள்வதன் காரணமாக, 95,000 கார்டுகளோடு இப்பொழுது நிற்கிறது. இல்லாவிட்டால், எல்லோரும் சேர்ந்து, கட்டாயம் வாங்கித்தான் தீர வேண்டுமென்று வந்துவிடுமானால், மாதா மாதம் 2.40 இலட்சம் டன் ஒவ்வொரு மாதமும் தேவைப்படும். இவ்வளவு கார்டுகளுக்கு நாம் கொடுக்க வேண்டிய தன்மைகள் இருக்கின்றன். இதை நாம் வற்புறுத்தாமலும் இல்லை. அவ்வப்போது வற்புறுத்துகிறோம். இருக்கிற தன்மைகளை எடுத்துக் கூறி எவ்வெப்போது வற்புறுத்த வேண்டுமோ, அவ்வப்போது வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1982 அக்டோபர் திங்களில் டில்லிக்குச் சென்று, பிரதமரைச் சந்தித்து, அரிசி ஒதுக்கீடு செய்யக் கோரி, நேரில் கடிதம் கொடுத்து, தமிழகத்தினுடைய நிலைமைகளையும், எதிர்பார்க்கப்படுகிற நிலைமைகளையும் எடுத்துச் சொன்னார்கள். 7–1–1983 அன்று, பிரதமருக்கு மீண்டும் நினைவுபடுத்தி மற்றொரு கடிதம் எழுதியுள்ளார்கள்.





நான் நிதியமைச்சர் என்ற முறையில் 14–10–1982-ல் டில்லிக்குச் சென்று வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு ராவ் பிரேந்திர சிங் அவர்களைக் கண்டு கோரிக்கையை வலியுறுத்தினேன். நீங்கள் எங்களுடைய தொகுப்புக்கு அரிசி தராவிட்டால், பின்னால் பெரும் நஷ்டத்தை, சிரமத்தை அனுபவிக்க வேண்டிவரும். ஆகவே, ஓரளவுக்குத் தாருங்கள் என்று நான் வற்புறுத்திக் கடிதம் கொடுத்துவிட்டு வந்தேன். 8–11–82ல் அவருக்கு மீண்டும் நினைவுபடுத்திக் கடிதம் எழுதினேன். 13–11–1982-ல் மறுபடியும் ஒரு தடவை டில்லிக்குச் சென்று, வேளாண்மைத் துறை அமைச்சரையும், அப்பொழுது இணை அமைச்சராக இருந்த திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்களையும் நேரில் கண்டு இந்தக் கோரிக்கையை நான் வற்புறுத்தினேன். 13–11–1982 அன்று மாண்புமிகு திரு. பகவத்ஜா ஆசாத் அவர்கள் கூட்டிய பொது வினியோக அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, கோரிக்கையை வலியுறுத்தினேன். 7–1–1982ல் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி, நிலைமையை தெளிவுபடுத்தி, கடிதம் எழுதப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

உணவுத் துறை செயலாளரையும் டில்லிக்கு அனுப்பி அங்கே இருக்கிற அதிகாரிகள் மட்டத்திலே பேச்சு வார்த்தைகள் நடத்தி, மாநிலத்தினுடைய நிலைமையை எடுத்துச் சொல்லி, இந்த மாநிலத்திற்குத் தேவை என்பதை எடுத்துச் சொல்லி, அவர்களிடத்திலே வற்புறுத்தி வாங்கவும் சொன்னோம். அந்த வகையில், 8–9–1982, 19–9–1982, 18–10–1982, 12–11–1982, 22–12–1982 ஆகிய நாட்களில், உணவுத் துறைச் செயலாளரும் டில்லிக்குச் சென்று அங்கே இருக்கிற அதிகாரிகளைக் கண்டு பேசிவிட்டு வந்தார்.

உணவுத் துறை இணைச் செயலாளரும் டில்லிக்குச் சென்று அங்கே இருக்கிற அதிகாரிகளைக் கண்டு பேசிவிட்டு வந்தார். உணவுத் துறை இணைச் செயளாலரையும், சில சமயங்களில் அனுப்பி, 1982 நவம்பரிலும், 1982 டிசம்பரிலும், இந்த ஆண்டிலே 21–1–1983-லும் இந்த ஆண்டிலும் மத்திய அரசு அதிகாரிகளைக் கண்டு பேசி கோரிக்கைகளை வற்புறுத்திச் சொன்னோம்.

23–10–1982-ல் முன்னாள் மத்திய வேளாண்மை இணை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் சென்னைக்கு வந்து, கோட்டையில், வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியவர்களோடு பேச்சு வார்த்தை நடத்திய பொழுதும், அரிசி நிலைமை குறித்து விளக்கப்பட்டு, கோரிக்கை வற்புறுத்தப்பட்டது.

10—1—1983 ஆம் தேதி அன்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு ராவ் பிரேந்திர சிங் கடைசியிலே எழுதினார்கள். "தமிழ்நாட்டில் இருக்கின்ற அரிசியை நலிந்த பிரிவினருக்கு மட்டும் நியாயமாகக் பங்கீடு செய்வதன் மூலம் குலைமையைச் சமாளியுங்கள்" என்று நாங்கள் அரிசி கேட்கப் போக, கடைசியிலே ஒரு அறிவுரை வந்து எங்களுக்குச் சேர்ந்தது. அந்த அறிவுரைதான் நலிந்த பிரிவினருக்கு மட்டும் தாருங்கள், "வல்னரபுள் செக்ஷன்ஸ்"ஊுக்கு மட்டும் தாருங்கள் என்று சொல்லி, குறையுங்கள் என்று சொல்லி கடிதம் வந்ததற்குப் பிறகு வேறு வழியில்லாத நாம், தந்து கொண்டிருக்கிற அரிசியையும் குறைத்துக் கொடுக்க வேண்டிய நிலையில், ஆயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும்தான் என்ற ஒரு முறையை ஏற்படுத்தியதற்குக் காரணமே அந்த நிலைமையில் தான்,

அது மட்டுமல்லாமல், 9—2—1983 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உண்மையை மத்திய அரசு உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதற்காக, உண்ணா நோன்பு மேற்கொண்டார் என்பதை எல்லோரும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். செய்தித் தாள்கள் வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் மைய அரசுக்குக் கொடுக்கவில்லை, கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள் என்பதற்காக, முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக, உண்ணா நோன்பு இருக்க வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டது. உடனே வந்து நேரில் பேசுங்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு, 15—2—1983 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்று பிரதமரையும் வேளாண்மைத் துறை அமைச்சரையும், உணவுப் பங்கீட்டுத் துறை அமைச்சரையும் கண்டு நிலைமையைத் தெள்ளத் தெளிவாக விளக்கிவிட்டு, மத்திய தொகுப்பில் இருந்து அரிசி கொடுக்க வேண்டியதன் இன்றியமையாமையை விளக்கிவிட்டு வந்தார்கள். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிந்து கொண்டிருக்கிற அளவுக்கு 5,000 டன் அரிசியும், 5,000 டன் கோதுமையும் ஒதுக்கியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1—10)

எப்பொழுது என்றால் ஏப்ரல் திங்களுக்கு. இந்த ஒதுக்கீடு ஏப்ரல் திங்களுக்கு என்று ஒதுக்கியிருக்கிறார்களே தவிர, இந்த நடைமுறைத்திங்களுக்கும், சென்ற திங்களுக்கும் இருக்கின்ற தன்மைகளைப் பற்றி இல்லை. வழக்கமாக மாதந் தோறும் 4,000 டன்கள் கோதுமை ஒதுக்கிக்கொண்டு வருகிறார்கள். இந்த 4,000 டன்கள் பிளஸ் இந்த 5,000 டன்கள் ஆக 9,000 டன்கள். ஏற்கனவே கொடுத்து வந்த 4,000 டன் கோதுமை, இப்பொழுது கொடுக்கின்ற 5,000 டன் கோதுமை ஆக 9,000 டன்தான் வரும்.



ஆனால், அரிசியைப் பொறுத்த வரையில் ஏப்ரல் திங்களுக்கு 5,000 என்று ஒதுக்கியிருக்கின்றார்கள். இதை மட்டும் வைத்துக் கொண்டு உணவுப் பங்கீட்டு முறை வருகிறபோது சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. 15 நாட்களுக்கு ஒரு தடவைதான் அரிசி கொடுக்கவேண்டிய நிலைமையிருப்பதற்குக் காரணம், நாம் கொள்முதல் செய்யச் செய்ய கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக ஆக்கி ஆங்காங்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நாம் அனுப்ப வேண்டியிருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ; நெல்லிக்குப்பத்தில் 15 நாட்களுக்கு இரண்டு கிலோதான் தருகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் குறைக்கச் சொல்லி நாங்கள் உத்தரவு எதுவும் போடவில்லை. எங்கேயாவது அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்குமேயானால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிக் காட்டியதைப்போல் இருந்தால் கவனித்து ஆவன செய்யலாம். சில பல இடங்களில் குறைத்துக் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

ஆகவே இரண்டு பங்கு, நான்கு பங்கு என்று கொடுக்க வேண்டியதற்குக் காரணம், நாம் இப்பொழுது கொள்முதல் செய்திருக்கின்ற இரண்டரை லட்சம் டன், குறுவையிலும் மற்றவைகளிலும் கொள்முதல் செய்திருப்பதை உடனடியாக அறைத்து மறுநாளே தருகின்ற அளவிற்கு அறவை ஆலைகள் நம்மிடத்திலே இல்லை. மற்றவர்களிடத்திலே தருகிறோம். நம்முடைய அறவை ஆலைகளிலேயும் செய்து கொண்டு வருகிறோம். அறைக்க அறைக்க ஆங்காங்கு அனுப்புவதன் காரணமாகத்தான், ஏற்கனவே ஒரு மாதத்திற்குத் தேவையான இருபது கிலோவைக் கொடுத்தயிடத்தில் ஒரு மாதத்திற்குத் தேவையான இருபது கிலோவைக் கொடுக்க முடியாத சூழ் நிலையிலே, அறவை ஆலைகளிலே அறைத்து அறைத்து அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்புகின்ற நிலைமையிலே, 20 கிலோ என்று கொடுக்கிறோம் என்றால், 15 நாட்களுக்கு 10 கிலோ 7 நாட்களுக்கு 5 கிலோ என்று கொடுங்கள், மாறி மாறி கொடுங்கள் என்று சொல்கிறோமே தவிர இந்தத் திட்டத்தை மாற்றவில்லை. குறைக்க வேண்டுமென்ற நிலைமை வரவில்லை குறைக்க வேண்டாமென்ற சூழ்நிலையிலே தான் நாங்கள் இருக்கிறோம்.

Thiru K. S. G. HAJA SHAREEF: Mr. Deputy Speaker Sir, I want a point of information. May I know from the Hon'ble Minister as to what is the stock position on food-grains, both rice and whcat as on date.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோதுமையைப் பொறுத்த வரையில் நம்மிடத்தில் எந்த இருப்பும் கிடையாது

ஆனால் அரிசியைப் பொறுத்த வரையில் தஞ்சை மாவட்டத்திலே கட்டாயக் கொள்முதல் மூலமாகக் கொள்முதல் ஆக ஆக சேர்த்துக் கொண்டு வருகிறோம். ஆனால் இன்றைய நிலையில் எவ்வளவு இருக்கிறது என்பதை உடனடியாகச் சொல்வதற்கு இல்லை. உணவு மானியக் கோரிக்கை வருகிறபொழுது வேண்டுமானால் இது பற்றிய நிலைமைகளையும் மற்றவைகளையும் நான் சொல்கிறேன்.

மக்களுக்கு உள்ள கஷ்டத்தை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். எனவே, அவர்கள் கஷ்டப்படாமல் இருக்கின்ற அளவிற்கு வைக்க வேண்டும் என்றால் ஒரளவுக்கு வந்துதான் தீர வேண்டும். இப்பொழுது நமக்குத் தேவைப்படுவது கூட இருந்தாலும் 85,000 டன்னாவது கொடுத்து இப்பொழுது கொள்முதல் செய்த நம்முடைய அரிசியையும் சேர்த்துப் பயன்படுத்தினால் ஒரளவுக்குச் செய்ய முடியும். எல்லோருக்கும் இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கின்ற பொழுது வெளி மார்க்கெட்டிலே 3 ரூபாய் $3\frac{1}{2}$ ரூபாய், 4 ரூபாய், $4\frac{3}{4}$ ரூபாய் என்ற அளவிற்கு ஏறுகின்ற பொழுது 1 ரூபாய் 75 காசு, 2 ரூபாய் 25 காசுக்குக் கிடைக்கின்ற இடத்தில்தான் வாங்க வேண்டுமென்ற உணர்வு பலருக்கும் வந்துவிட்ட காரணத்தால், எல்லோரும் இங்கே வருவதன் காரணமாக அரிசியைப் பங்கிட்டுத் தர வேண்டிய அவசியம் அதிகமாக ஏற்படுகிறது. ஆகவேதான் நாம் மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறோம். இதில் ஒன்றும் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும், மாச்சர்யமோ, சண்டை சச்சரவோ கிடையாது. மாநில அரசுக்கு இருக்கின்ற பொறுப்பு, மத்திய அரசுக்கு இருக்கின்ற பொறுப்பு என்பதால்தான் இந்த நிலைமை.

மத்திய அரசு சொல்லும் அளவிற்கு, அதிகமான அளவிற்கு நெல் விளைச்சல் ஆகி செலவாகாமல் இருப்பது பஞ்சாப். 30 இலட்சம் டன்னை—கமர்ஷியல் கிராப்தான்— அங்கேபயன்படுத்துகிறவர்கள் இல்லை. விளையும் நெல் முழுவதையும் கொள்முதலுக்கு எடுத்துக் கொள்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அரியானாவிலும் பெரும்பகுதி அப்படி.

ஆந்திராவிலே உபரியாக வருகிறது. இவர்கள் உபரி மாநிலங்கள். இன்றைக்கு பிற மாநிலங்களுக்கு, தொகுப்புக்குப்போய் மற்றவர்களுக்குப் பங்கீடு செய்யும் முறை.

மேற்கு வங்காளம், கேரளம், குஜராத், மகாராஷ்டிரம், தமிழ்நாடு போன்றவைகளெல்லாம் என்றைக்கும் பிற மாநிலங்களை எதிர் பார்த்தே வாழ வேண்டிய அளவிற்கு இருக்கிறது. தமிழகத்தில் ஒரளவுக்குச்சமாளிக்கிறோம். என்றாலும்கூட, நீண்ட பெரும் காலமாக, வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து **ஆந்திரா** அரிசி வந்து வந்து இன்னும் சென்னையில் **இருப்பவர்**





களுக்கு நெல்லூர்அரிசிதான் பிடிக்குமே தவிர தஞ்சையிலிருந்தோ மதுரையிலிருந்தோ அரிசியை இங்கே கொண்டு வந்து விட்டால் இன்றைக்கும் சென்னைக்காரர்களுக்கு அது பிடிக்காது. காரணம் தலைமுறை தலைமுறையாக நெல்லூர் அரிசியைப் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள். ஆகவே, ஆந்திரா அரிசியையும் தமிழகத்திற்கு வந்து தமிழகத்தினுடைய குறைபாட்டை ஒரளவுக்குப் போக்குகின்றது. இது சாதாரண காலத்தில் உள்ள நிலைமை, ஆகவே, இதைப் பொறுத்தவரைக்கும், சண்டை சச்சரவு எதுவும் கிடையாது. ஒரு நியாயத்தின் அடிப்படையில்தான் சொல்கிறோம்.

ஆனால் பல மாநிலங்களிலேயும் உள்ள வறட்சியைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான குறிப்புகளையும் மற்றவைகளையும் எடுத்துத் தந்திருக்கின்றார்கள். ஆனால் பல மாநிலங்கள் இருந்தாலும், மத்திய அரசு அவர்களிடத்தில் சொல்லியது என்றால் மறுப்பதற்கில்லை. மாநாடு கூட்டி ஒரு மாநிலத்திலேயும் உள்ள நிலைமையைச் சொல்கிறார்கள். உணவு அமைச்சர்களுடைய மாநாட்டில்கூட, மேற்கு வங்காளத்தினுடைய அமைச்சர் கலந்து கொள்ளும்பொழுது, எங்களுக்கு அறவே நெல் இல்லை என்றாலும் மாதத்திற்கு இந்த மூன்றே முக்கால் இலட்சம் டன் அரிசியாவது எங்களுக்குத் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் $1\frac{1}{2}$ லட்சம் டன்தான் தந்துகொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி கேரளா 14 லட்சம் டன் வேண்டுமென்று கேட்கிறார்களா. கேரளா உணவு அமைச்சர் $1\frac{1}{2}$ லட்சம் டன் கேட்டால் அவர்கள் கிட்டத்தட்ட ஒரு லட்சம் டன்னுக்கு குறைவாகத்தான் தருகிறார்கள் என்று அவர்களும் நம்மைப்போல்தான் கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசிற்கு இருக்கிற நிலைமையைப் பொறுத்து, பஞ்சாபிலே, அரியானாவிலே, ஆந்திரத்திலே, மற்ற இடங்களிலிருந்து கொள்முதல் பண்ணி, மத்திய அரசு வைத்திருக்கிறது இவ்வளவு, எல்லோரும் கேட்கிறது இவ்வளவு, நீங்கள் கேட்கிறது. எல்லா மாநிலத்தினுடைய நியாயத்தை, மத்திய அரசு வேண்டுமானால் ஆராயட்டும். எல்லா மாநிலத்திற்கும் இவ்வளவு தேவை என்று அறிந்து, எங்களிடம் இருக்கின்ற இருப்பிலே சென்ட் பெர்சென்ட் தர முடியாது, அல்லது 80 பர்சன்ட்தான் தர முடியும், 75 பர்சன்ட்தான் தர முடியும் அல்லது 50 பர்சன்ட்தான் தர முடியும் என்ற நியதியை வைத்து, ஆக எல்லா மாநிலத்திற்கும் நாங்கள் 50 பர்சன்ட்தான் தருகிறோம்—கேட்கிறதிலே—ஆகவே தமிழகத்திற்கும் 50 பர்சன்ட் நாங்கள் தருகிறோம் என்கிற நியாயத்தை அவர்கள் சொல்வார்களேயானால், நமக்கு நல்லது. ஆக கொடுக்கவில்லை, அதனால் நாங்கள் தரவில்லை. நியாயமில்லை. ஆக இருக்கும்பொழுது கொடுக்கலாம். இல்லாவிட்டால் கொள்முதல் அரிசியை வைத்துக் கொண்டு தமிழக அரசு எதையும் தனியாக செய்து விட முடியாது. (குறுக்கீடு)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப் : சார், பட்ஜெட்டில் 4—வது பக்கத்தில் '' அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி கிடையாது. தமிழ்நாட்டு நுகர்பொருள் வாணிபக் கழகமோ அல்லது தமிழ்நாட்டு வியாபாரிகளோ வெளிமாநிலங்களில் அரிசியை அதிக விலை கொடுத்துக் கொள்முதல் செய்து கொண்டு வர வேண்டியிருக்கிறது.'' என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். அந்த மாதிரி வெளி மாநிலத்திலிருந்து கொண்டு வருகிற அளவு எவ்வளவு? ஒரு மாதத்திற்குக் குறைந்தது ஒரு 10 ஆயிரம் டன் நீங்கள் கொண்டு வருகிறீர்களா என்ற விவரம் தெரிந்தால் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நுகர்ப் பொருள் வாணிபக் கழகம், ஆந்திர பிரதேச நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்தோடு மிகக் குறைந்தவிலையில் கொள்முதல் கொடுக்கிற நிலைமையில் இருந்து, அந்த நுகர்வோர் வாணிபக் கழகம் மற்றொரு நுகர்வோர் வாணிபக் கழகத்தோடு கலந்து கொண்டு, அப்படிப்பட்ட நிலைகளை ஏற்படுத்தக் கூடாது என்ற தடை உத்தரவை போட்டு விட்டார்கள். ஆனால் வியாபாரிகள் போய் கொள்முதல் செய்கிறார்கள். ஆந்திராவினுடைய நிலை என்ன வென்று கேட்டால் ஆந்திர மாநிலம், மத்திய அரசு விதித்திருக்கிற படி 50 பர்சென்ட் கொள்முதல் செய்து, அது தவிர, தன்னுடைய திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவதற்காக மேற் கொண்டு 25 பர்சன்ட் லெவி போட்டு, 75 பர்சன்ட் லெவியை ஆந்திரத்திலே எடுத்துக் கொண்டு, 25 பர்சன்ட் லெவியை வியாபாரிகள் வாங்க வேண்டியிருக்கிறது. அப்படி இந்த வியாபாரிகளுக்கு ஏற்படுகிற நஷ்டத்தை, இவர்கள் விற்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாகத்தான், வெளி மார்க்கெட்டிலே கூட அதிகமான அளவுக்கு விலை ஏறியிருக்கின்ற நிலை இருக்கிறது. ஆக அரசுக்கு அரசு தொடர்பு கொண்டு, அரசுக்கு ஒரு கட்டுப்படி ஆகக் கூடிய விலையை தருகின்ற நிலைமை இருக்குமேயானால், அது நல்லது. 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த நிலை இருந்தது. இந்த ஆண்டு அதையும் தடுத்து விட்டார்கள். ஆகவே இதை வழங்குங்கள் என்று நாங்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த அரசு சத்துணவுத் திட்டத்திற்காக 65 இலட்சம் மாணவர்களுக்கும், 2 இலட்சம் முதியோர் ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கும், நம் அரசு ஒதுக்கீடு செய்ததை இந்த இருப்பிலே இருந்து தான் தருகிறோமே தவிர,—வெளியிலே கடைகளுக்கு கொடுக்கிறபோது ஏற்படுகிற நஷ்டமோ—ஆக கொள்முதலிலே எப்படி 1.75 காசுக்குத் தருகிறோமோ, அதே அளவிலே 1.75 காசுக்கு இந்த மதிய சத்துணவுத் திட்டத்திற்கு நாம் வழங்குகிறோம். ஆக, கிட்டத்தட்ட 17 ஆயிரம் டன் அரிசி மாதம் ஒன்றுக்கு



வழங்க வேண்டி வருகிறது. அதைத் தனியார் இடத்திலே 4 ரூபாய்க்கு வாங்கி அதிலே ஏகப்பட்ட நஷ்டம் வருவதால் அதன் அடிப்படையில் தரவில்லை என்பதையும், இந்தக் கொள்முதல் பண்ணுகிற லெவி அரிசியைக் கொண்டுதான் தருகிறோம். மற்றைய பொது மார்க்கெட்டில் ஏற்படுகிற நஷ்டம் எவ்வளவோ, அதுதான் இதிலே ஏற்படுகிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் உயர்திரு. ஆர். வெங்கட்ராமன் பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார்கள்—பத்திரிகையிலே வந்ததை நான் கத்தரித்து வைத்திருக்கிறேன். அவர் சொல்லியிருக்கிறார்—மத்திய அரசுடன் போராடித்தான் எந்தத் திட்டத்தையும் பெற வேண்டும். அப்படித்தான் போராடிப் பெற்றேன். நீங்களும் போராடுங்கள் என்கிறார். அதுதான் முறை. இனி மேல் அதைக் கடைப்பிடிக்க வேண்டும். அதைத்தான் மாண்புமிகு கம்யூனிஸ்ட் மெம்பர்கள் திரும்பத்திரும்பச்சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். செய்யுங்கள், செய்யுங்கள் என்கிறார்கள். ஆக போராடிப் பெற வேண்டும் என்று இல்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உண்ணா நோன்பு இருந்தது—அந்த நிலைமைகளை உணர்த்துவதற்குத் தானே தவிர, போராட்டக் கட்டமே அல்ல. போராடித்தான் பெறவேண்டுமென்ற நியதியில்லை. இந்த நியதியின் அடிப்படையிலே வரும்பொழுது அத்தகைய நிலைமைகள் இருக்கக்கூடாது என்பதுதான். 1980–81-லே கூட மத்திய அரசு இங்கே 11,800 டன் அரிசியைக் கொள்முதல் செய்திருக்கிறார்கள்—தமிழகத்தில்.

(பிற்பகல் 1–20)

1982 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்வதற்கு அவர்கள் வரவில்லை. ஆனால், நம்மால் முடிந்த அளவிற்கு நாம் கொள் முதல் செய்திருக்கிறோம். நாம் இப்போது எதிர்பார்ப்பது என்ன வென்றால் நியாயத்தின் அடிப்படையிலே இந்தியா முழுவதும் உள்ள எல்லா மாநிலத்திற்கும் தரவேண்டியதற்கு இல்லை என்றாலும் எல்லா மாநிலங்களும் கேட்கின்ற அளவிற்கு தரமுடியாது என்றாலும், கேட்பது முழுவதும் தரமுடியாது என்றாலும், ஒரு நியாயத்தின் அடிப்படையிலே எல்லா மாநிலத்திற்கும் 60 சதவிகிதம் தான் கொடுக்க முடியும், அல்லது தரமுடியும்—கேட்பது கூட வேண்டாம்—அவசியத்தின் அடிப்படையிலே ஒரு குழு வந்து ஆராய்ந்து ஒரு மாநிலத்திற்கு எவ்வளவு தேவை என்பதை ஆராய்ந்து உணர்ந்து தேவைகள் முழுவதையும் தீர்ப்பதற்கு இன்னும் 1 இலட்சம் டன் தேவை என்று, சொல்லியிருப்பதன் காரணமாகவும், நாங்கள் தர முடிந்தது 80 சதவீதம் தான், அல்லது 60 சதவீதம் தான் என்று அவர்கள் சொல்வார்களேயானால்கூட அதை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு நியதியைச் செய்யாமல் இருப்பது வருந்துவதற்குரியதாக இருக்கிறது. இதிலே வேறு எந்த மாச்சரியமும் இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் நிலக்கரி மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் டன் ஒதுக்கப்படுவதாகவும், அதைக்கொண்டு, வர பொறுப்பேற்றுள்ள கரம்சந்த் தாபர் என்ற அந்த நிறுவனம் சரிவர செயல்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிலக்கரி வந்து சேர்வதில், நிலக்கரி ஏற்றப்படும், மேற்கு வங்காளத்தில் உள்ள ஹால்டியா துறைமுகத்தில்தான் சங்கடம் ஏற்படுகிறதே தவிர, வேறு எங்கும் இல்லை. இருப்பினும் கடந்த மாதம் 2 இலட்சம் டன் நிலக்கரி வந்துள்ளது. ஆகவே, அவர்கள் செய்யவில்லை என்பது சரியல்ல. கரம்சந்த் தாபர் என்ற அந்த நிறுவனத்திடம் ஒப்படைத்ததன் காரணம் அவர்கள்தான் மிகக் குறைந்த கட்டணம் கேட்டுள்ளார்கள் என்பதால்தான். கன்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். கனடா நாட்டிலேயிருந்து மின் மாற்றுக்கான துணைப் பொருள்களை இறக்குமதி செய்வதில் அயல்நாட்டு கம்பெனியால் காலதாமதம் ஏற்பட்டது. ஹன்டிங் கெபாசிட்டர்ஸ் அனைத்தும் பொறுத்தப்பட்டுவிட்டன. கட்டிடங்கள் கட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டது. சுமார் ரூபாய் 400 கோடி செலவு செய்யும் ஒரு பொது நிறுவனத்தில் இது மிகச் சிலவே. என்னும் கன்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜென்ரல் அறிக்கையின்மீது மின் வாரியம் தனது பதிலைத் தரும். அதை பொது நிறுவனங்கள் குழு மூலம் ஆய்வு செய்யலாம். இதன் மூலம் மின் வாரியம் மேற்கொள்ளும் முடிவுகளை பரிசீலனை செய்ய சட்டப் பேரவையின் குழுவிற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதிலே வேண்டுமென்றோ, வேறு எந்த வகையிலோ தவறு நடக்கவில்லை. ஆகவே இருக்கின்ற சூழ்நிலைகளை ஒட்டித்தான் அந்த நிலைமைகள் ஏற்பட்டது. இதை ஆய்வதற்கும், மற்றவைகளுக்கும் இடம், இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டம். இதைப் பற்றி பல உறுப்பினர்கள் நம்முடைய கொள்கையை ஆதரிக்கிறோம் மற்றவைகளை ஆதரிக்கிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். அதனுடைய சூழ்நிலைகளைப் பற்றியும், அது நடைபெறமுடியாத சில சூழ்நிலைகளைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள் குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். கிட்டத்தட்ட நாம் இன்றைக்கு 67 இலட்சம் பேர்களுக்கு, 365 நாளும் கொடுக்கின்ற பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தாலும், இது அடிமட்டத்திலே இருந்து சிறப்பாகவும், செம்மையாகவும், ஒழுங்காகவும், நடைபெறுவதற்கு பொதுமக்கள் எல்லாவிதமான ஒத்துழைப்பையும் நமக்குத் தரவேண்டுமென்று அடிக்கடி இந்த மன்றத்தின் மூலம் நாம் வற்புறுத்தி எடுத்துச் சொல்லி வருகிறோம். ஆகவே, நாம் போட்டு இருக்கின்ற திட்டத்திற்கும் ஆந்திராவிலே மாண்புமிகு முதல்வர் என்.டி.ஆர். அவர்கள்





திட்டத்திற்கும் சிறு வேறுபாடு உண்டு. அவர்கள் பன், பால், தருவதற்காக 80 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை பள்ளி மாணவர்களுக்கும், துவக்கப்பள்ளியிலே படிக்கிற மாணவர்களுக்கும் மத்திய உணவு தரவேண்டுமென்று கொள்கையை ஏற்று, அது சத்துணவாக இருக்க வேண்டுமென்பதையும் ஏற்று, அது பாலாகவும் பன்னாகவும் இருக்கவேண்டுமென்று கருதி, அவர்கள் 6 வயதிலேயிருந்து 11 வயது வரை உள்ள துவக்கப்பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள் என்று வைத்திருக்கிறார்கள். நாம் வைத்திருக்கிற திட்டம், 2 வயதிலேயிருந்து 11 வயதுள்ள குழந்தைகளைச் சேர்த்து, மாணவர்களைச் சேர்த்து நாம் வைத்திருக்கிறோம். அவர்கள் வைத்திருப்பது, ஆந்திராவிலே 220 நாட்களுக்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் வைத்திருப்பது 365 நாட்களுக்கும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்பது. அப்போதுதான் அவர்களுக்கு சிறந்த நிலைமைகள் ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். காப்பிடங்கள் மட்டும் 26,617, துவக்கப்பள்ளிகள் 33,356, ஆக மொத்தம் 59,973. ஆதாவது கிட்டத்தட்ட 60 ஆயிரம் இடங்களிலே இந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. பலன் பெறும் குழந்தைகள் 65 இலட்சம். பலன் பெறும் முதியோர் பென்ஷன் பெறுவோர் 2 இலட்சம்—ஆக 67 இலட்சம் பேர் இதன் மூலம் பயன் பெறுகிறார்கள். பலபேருக்கு வேலை வாய்ப்புத் தரும் வகையில் இது பயன்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் இதிலே விதவைகளுக்கு முதலிடம் தருகிறோம், இரண்டாவது அனாதைகளாக இருக்கும் பெண்களுக்குத் தருகிறோம், மூன்றாவதாக எந்த வேலையும் இல்லாது கஷ்டப்படும் மகளிருக்குத் தரவேண்டும் என்று—இப்படி தர வாரியாக அளிக்கப்படுகிறது—1 இலட்சத்து 80 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு தரப்பட வேண்டும். அப்படி தரப்படவேண்டியது பெண்களாக இருக்க வேண்டும் என்ற முறையில் இது கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தைச் சீரும், சிறப்புமாக நடத்த வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அது வெற்றி பெற அரசாங்கத்தோடு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். அவற்றில் எந்த ஒரு குறைபாடும் வராத அளவிற்குப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். ஆங்காங்குள்ள ஊர் பொது மக்கள் அதற்காக உதவி செய்கிறார்கள். முழு ஒத்துழைப்பு பொதுமக்கள் தரவேண்டும். சில பல இடங்களில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், சில பல இடங்களில் நல்ல முறையில் அவைகள் செய்யப்பட்டுள்ளன. சாதாரணமாக சில குறைபாடுகள் இருந்தால், அவற்றை எடுத்துச் சொன்னால் நாம் அதைக் களையலாம். நாம் இந்தத் திட்டங்களையெல்லாம் பலரை நம்பித்தான் செய்ய வேண்டி இருக்கிறது,

ஆகவே, அதிலே குறைபாடுகள் வர வாய்ப்பு இருக்கிறது. அவ்வளவு பெரிய ஏசுநாதரே 13 பேரை நம்பினார். அந்த 13 பேரிலே ஒருவன் காட்டிக்கொடுக்கும் நிலைமை வந்தது. அவ்வளவு பெரிய ஏசுநாதருக்கே அப்படிப்பட்ட கதி என்றால் நமக்கு உள்ள நிலைமையை எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட திட்டம். மக்களுக்குத் தேவையான திட்டம். ஆகவே, அந்த வகையில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறபோது, அனைத்து மக்களின் ஒத்துழைப்பும் நமக்குத் தேவை. குறைபாடுகள் இல்லாமல் இதை நிறைவேற்ற எண்ணுகிறோம். குறைபாடுகள் ஆங்காங்கு ஏற்பட்டால் அதைக் களைய நடவடிக்கை எடுக்கிறோம். மாதத்திற்கு ஒரு முறை அந்தச் செயற்குழு கூடி ஆங்காங்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை ஆராய்ந்து வருகிறது.

இதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆசிரியர்களுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன. தலைமை ஆசிரியர்கள் கணக்கு வைத்துக்கொண்டிருந்தார்கள். தற்போது பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் அந்த வேலையை கவனித்துக்கொண்டு வருகிறார்கள். கிட்டத்தட்ட 33,356 பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சங்கடங்கள் சில சில இருக்கலாம். அவைகள் எல்லாம் மெல்ல மெல்ல போக்கும் பொறுப்போடு நாம் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

அண்மையில் மத்திய அரசு நடத்துகிற "யோஜனா" என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது.

"Qualitative Dimension of the Population problem".

டாக்டர் கோபாலன் என்கிற Nutrition Expert குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றி அந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார். அவர் எழுதியுள்ளதை அப்படியே ஆங்கிலத்தில் படிக்கிறேன்.

Thus, of the nearly 23 million children, who will be born in our country in 1983, nearly 3 million, may be expected to die, before they reach the first year ; another one million more, will drop by the wayside before they complete their childhood. Of the remaining 19 million, nearly nine miilion will emerge into adulthood, with impaired physical stamina,low productivity and poor mental abilities because of serious under-nutrition and ill-health during their childhood ; yet another 7 million who will





suffer milder forms of malnutrition may reach adulthood, with less. striking physical and mental impairment. Only less than 3 million of the 23 million children, to be born in the year 1983 will become truly healthy; physically fit, productive and intellectual citizens of this Country. Thus the full genetic potential for growth, physical and mental development would have been achieved by less than 15 per cent of the children born. என்று கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது நமது நாட்டில் 1983 ஆம் ஆண்டில் பிறக்கக்கூடிய சுமார் 2 கோடியே 30 இலட்சம் குழந்தைகளில், சுமார் 30 இலட்சம் குழந்தைகள் முதல் ஆண்டு முடிவதற்குள்ளாகவே இறந்துபட்டு விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர மேற்கொண்டு 10 இலட்சம் குழந்தைகள் குழந்தைப் பருவத்தைத் தாண்டுவதற்கு முன்பே வீதியோரங்களில் அனாதைகளாக விடப்பட்டு வருகிறார்கள். மீதியுள்ள 1 கோடியே 90 இலட்சம் குழந்தைகளில் சுமார் 90 இலட்சம் குழந்தைகள், அவர்களின் குழந்தைப் பருவக் காலத்தில், மிகக் குறைவான ஊட்டச்சத்து காரணமாகவும், உடல் நலக் குறைவின் காரணமாகவும், உடல் உறுதிப்பாடு இன்மையாலும், குறைந்த ஆற்றலுள்ளவர்களாகவும், மிகக் குறைந்த மன வளர்ச்சி உள்ளவர்களாகவும், வயதுவந்தோர் நிலைக்குப் போய்ச் சேருவார்கள். மற்றும் 70 இலட்சம் குழந்தைகள் சற்றுக் குறைந்த ஊட்டச் சத்து காரணமாக அவதிப்படுபவர்களாக மாறுவார்கள். அப்படிப்பட்டவர்கள் சற்று உடல் நலம், மனநலம் அற்றவர்களாகவே காணப்படுவார்கள். 1983 ஆம் ஆண்டில் பிறக்கக்கூடிய 2 கோடியே 30 இலட்சம் குழந்தைகளில், 30 இலட்சத்திற்கும் குறைவான குழந்தைகள் மட்டுமே உண்மையிலேயே நலமுடையவர்களாகவும், உடலுறுதியுடையவர்களாகவும், அறிவுத் திறன் வாய்ந்த குடிமக்களாகவும் இந்நாட்டில் அமைவார்கள்.

பொது வளர்ச்சி, உடல்—மனம் பற்றிய வளர்ச்சி ஆகியவற்றைப் பிறப்பிலே அமையும் ஊட்டக் கூறுபாடுகள் காரணமாகப் பெறுகிறவர்கள், பிறக்கின்ற குழந்தைகளிலே 15 சதவிகிதத்திற்கும் குறைவானவர்களாகத்தான் இருப்பார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) கிட்டத்தட்ட 1/10 அல்லது 1/12 பங்கு என்று வைத்துக் கொள்ளலாம் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில். இப்படிப்பட்ட குறைபாட்டால், ஊட்டச்சத்து குறைபாட்டால் உடல் நல, மனநலக் குறைபாடு ஏற்படுவதைத் தடுக்கின்ற வகையிலே எதிர்காலத்திலே அந்த குழந்தைகள் நல்லமுறையிலே வாழ வேண்டுமென்ற அடிப்படையிலே நாம் கொண்டு வந்திருக்கிற இந்த சத்துணவுத் திட்டம் ஓரளவு அடிப்படையாக அமையும் என்பதால் அதிலே அக்கறை காட்ட வேண்

டும்; இந்தத் திட்டத்தை எப்படியேனும் நிறைவேற்ற வேண்டும் என்ற கடமை உணர்ச்சியுடையவர்களாக இன்றைக்கு நாங்கள் இருக்கிறோம். ''தி இன்வஸ்ட்மென்ட் வித் ஹியூமன் பீயிங்ஸ்'' என்று சொல்லத்தக்க அளவுக்கு நாம் மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு செலவழிக்கிற ஒன்று இது. உள்ளபடியே மற்ற இனங்களைவிட மேலான இனமாக மனித இனத்தைக் குறிப்பிட வேண்டும். அந்த இனம் நல்ல முறையில் வாழ நாம் பாடுபடுகிறோம்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையில் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இன்றைக்கு ரஷ்யாவை எடுத்துக்கொண்டால் அவர்கள் போடும் பட்ஜெட்டில், பல கோடிக்கணக்கான ரூபாய் திட்டத்தில், கிட்டத்தட்ட 1/10 பகுதியை குழந்தைகளுக்கு மட்டுமே செலவழித்து, அவர்கள் பெரியவர்களான பிறகு கவலைப்படாமல் இருக்கிறார்கள். செய்ய வேண்டிய சலுகைகள் அத்தனையும் குழந்தைப் பருவத்திலேயே செய்துவிடு கிறார்கள். 1/10 பகுதியை குழந்தைகளுக்குச் செலவிட்டு, பிறகு முதியோருக்கு எந்த சலுகையும் காட்டுவதில்லை. ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்றால் குழந்தைப் பருவத்தில் அவர்கள் நல்லமுறையில் வளர்ந்தால் பின்னால் அவர்களைப் பற்றிய கவலையே தேவையில்லை. அந்த அடிப்படையில்தான் நாம் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களின் ஆதரவும் இந்த நாட்டு மக்களின் ஆதரவும் நல்லமுறையிலே இருக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்று, இங்கே குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்த நுழைவு வரி போடவேண்டுமென்ற முயற்சி எங்களுக்கு இல்லை. வேறு வழியே இல்லாமல், இருக்கின்ற நிலைமையை சமாளிக்கின்ற வகை இல்லாம லிருக்கிற ஒரு நிலைமையில் இந்த வரியைப் போடவேண்டி யிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும்போது கடந்த 4, 5 ஆண்டு காலத்தில் பார்த்தால் கூட மொத்தத்தில் 150 கோடி ரூபாய்க்குமேல் வரி போகாது. ஆனால் இந்த காலத்தில் மத்திய அரசு 'டாக்ஸ்' என்ற இனத்தைப் பார்த்தால் கிட்டத்தட்ட 3,000 கோடி ரூபாய்க்குமேல் வருகிறது. இதிலே இரயில்வே கட்டணத்தைச் சேர்க்கவில்லை, மற்ற வரிகளைச் சேர்க்கவில்லை. அவை எல்லாம் பாதிக்காமல் இருக்கும்போது இப்போது நாம் போடும் வரியால் பாதிப்பு வந்துவிடும், நாடு அழிந்துவிடும், வியாபாரம் போய்விடும், கடைகள் அடைக்கப்பட்டுவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள்.



காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஹாஜா செரிப் அவர்கள் சொல்லும்போது இதை எங்கே போய் பிடித்துக்கொண்டு வந்தீர்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் ஆளும் மாநிலங் களிலிருந்துதான் பிடித்துக்கொண்டு வந்தோம் (சிரிப்பு). வேறு எங்கும் போய் பிடிக்கவில்லை. இந்த வரியைக் கொண்டு வர வேண்டுமா வேண்டாமா என்ற கருத்து இருந்தாலும் 'ஆக்ட்ராய்' என்று சொல்லக்கூடிய வரியை பல மாநிலங்களில் எடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். எந்த மாநிலத்தி லும் எடுக்கவில்லை. எடுக்கிற மாதிரியும் இல்லை. ஆனால் இதை எடுக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக் கிறது என்பது உண்மை.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி வரியே முழுமையாகப் போட வேண்டாம் என்று எண்ணினாலும், அந்த எண்ணம் உண்டு; 1980-லே எண்ணி விட்டதும் உணடு ; 1981—லே எணணி விட்டதும் உண்டு. கடைசியில் எந்த வகையிலே போடலாம் என்று வந்தபோதுதான் இருக்கின்ற நிலைமையை ஓரளவுக்கு சமாளிக்க இந்த யோசனையைச் சொல்லி, இந்த வரியைக் கொண்டுவருகிறோம். இருந்தாலும் கூட 25 கோடி ரூபாய் குறைத்துப் பார்த்தாலும் 150 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கிறது. மத்திய அரசு கூட இந்த ஆண்டு போட்டிருக்கிற வரியைப் பார்த்தால், வரி என்ற இனத்தில் மட்டும் 800 கோடி ரூபாய்க்குப் போட்டிருக்கிறது. 2, 3 மாத காலமாகவே ஆணைகள் மூலமாக ஆயத் தீர்வை மற்றவைகளை ஒட்டி அதிலே 500 கோடிக்குப் போட்டு முடித்திருக்கிறது. அதைத் தவிர இரயில்வே கட்டணத்தை 488 கோடிக்குப் போட்டு, அதிலே ஒரு 57 கோடிக்கு சலுகை தந்து, பிறகு கீழே இறக்கிக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். அப்போதும் 430 கோடிக்கு மேலே அது வந்துவிட்டது. டெலிபோன் மற்றைய வகைகளை ஒட்டி 70 கோடிக்கு போட்டிருக்கிறார் கள். எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 2,400 கோடி மக்க ளுடைய சுமையாக இந்த ஆண்டு வருகிறது. இந்தியா வினுடைய சுமை 2,400 கோடி வருகிறது என்று சொன்னால், தமிழகத்தினுடைய சுமை கிட்டத்தட்ட 240 கோடியிலிருந்து 250 கோடி வரை வரும்........

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரிப் : சார், 1982—83 ஆம் வருஷத்தில் ரெவின்யூ ரெசிப்ட் 1569.49 ஆக இருந்தது. அது ரிவைஸ்டு எஸ்டிமேஷனிலே 1681.98 ஆக இருந்திருக்கிறது. அப்போது,

It shows that by your able administration, you have increased the revenue but at the same time the expenses have gone up because of two reasons you have given : one is Chief Minister's Nutrition Programme

and the other is construction of public latrines. So, I am sure, by your continued efficiency in the administration, you can certainly get more revenues. For Heaven's sake, drop this "Nuzhaivu vari". நுழைவு வரி நுழையவேக் கூடாது என்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மீதியிருக்கிற 150 கோடி பற்றாக்குறையை நீக்குவதற்கு மாண்புமிகு ஹாஜா ஷெரிப் சொன்ன, யோசனையை மனதிலே வைத்துக் கொள்கிறேன். அதை எப்படி எப்படிக் குறைக்கலாம் என்ப தற்கு அப்போது பார்த்துக் கொள்கிறேன். இப்போது இருக்கிற நிலைமையை விளக்கவேண்டும் என்பது என்னுடைய கடமை என்பதற்காக நான் சொல்கிறேன். இங்கே கூட அதை எடுத்துச் சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்களோ, அல்லது நெடுமாறன் அவர்களோ பேசுகிறபோது குறிப்பிட்டார்கள்—நாம் 7-வது கமிஷனிலே எடுத்துச் சொல் கிறபோது, அந்த ஆக்ட்ராயை நாங்கள் போடவில்லை, நாங்கள் போட மாட்டோம்—என்று எடுத்துச் சொன்னதாக சொன்னார்கள். நாங்கள் போடவில்லை என்ற கருத்தை வற்புறுத்தியுள்ளோம். ஆனால் போடவேமாட்டோம் என்ற கருத்தை எடுத்துச் சொல்லவில்லை. அதிலே எப்படி இருக் கிறது என்றால்,

In this connection, we may also point out that unlike many other States, Octroi is not levied in Tamil Nadu. This revenue is a significant source to other States such as Maharashtra, Gujarath, West Bengal, Madhya Pradesh, Karnataka, Uttar Pradesh. It is against this background, that we would urge the Finance Commission to give special weightage to urban population in their scheme of devolution for shareable taxes and duties.

ஆக அதிலே, 7-வது நிதிக் கமிஷன்—அந்தக் குழுவிடத்திலே எடுத்துச் சொல்கிறபோது, மற்றவர்கள் எல்லாம் ஆக்ட்ராய் மூலமாக பெறுகிறார்கள். நாங்கள் ஆக்ட்ராயைப் போட வில்லை. ஆகவே இதனை ஈடுகட்டுகிற அளவுக்கு எங்களுக்கு அதிகமான நிதி உதவியைத் தருகிற சூழ்நிலையை இந்தக் கமிஷன் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று, அந்தக் கமிஷன் மூலமாக எடுத்துச் சொல்லப்பட்டது.

உள்ளபடியே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே எடுத்துச் சொல்கிறபோது, இது வேறு எங்கேயும் இல்லை. இங்கேதான் வந்தது. இது காட்டுமிராண்டித்தனக் காலத்திலேதான் இருந் தது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் அது எங்கெங்கே இருக்கிறது என்று சொல்கிறேன். இன்னும்கூட





எனக்குத் தகவல் வரவேண்டும். எனக்குத் தகவல் கிடைத்திருக் கிற அளவுக்கு சொல்கிறேன். கர்நாடகம், மகாராஷ்டிரா, ஒரிஸ்ஸா, குஜராத், ராஜஸ்தான், உ.பி. அரியானா, பஞ்சாப், வெஸ்ட் பெங்கால், மணிப்பூர், ஹிமாச்சல் பிரதேஷ், ஜம்மு, காஷ்மீர் ஆகிய 12 மாநிலங்களிலும் ஆக்ட்டிராய் இருக்கிறது.

ஆக்ட்ராய் என்பதை இப்போது எல்லோரும் என்ட்ரி டாக்ஸ் என்று பெயர் மாற்றிக் கொண்டு வருகிறார்கள். முதலிலே ஆக்ட்ராய் என்றுதான் இருந்தது. அதை சில மாநிலங்களிலே எல்லாம் வைத்து விட்டார்கள். சிலர் மாற்றுகிற நிலைமையிலே இருக்கிறார்கள் ......(குறுக்கீடு)

திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் கூறுவது போல பல்வேறு மாநிலங்களிலே அந்த வகையிலே போடப்பட்டிருப்பது உண்மை. ஆனால் நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, அது சரியான மாடர்ன் அல்ல என்ற காரணத்தால் எல். கே. ஜா அவர்களை தலைவராகக் கொண்டு, என்டரிங் டாக்ஸ் என்குயரி கமிட்டி என்று கமிட்டி போட்டு, அதில் அவர் இது அவுட் மாடர்ன் ஆகவே இது தேவை யில்லை என்று சொல்லி, அந்த கமிட்டியின் பரிந்துரையை எல்லா மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அவர் தான் இந்தியன் எக்கனாமிக்கல் கவுன் சிலுக்கும் சேர்மன். ஆகவே, இப்போது அது அந்த நிலைமைக்கு வந்திருக்கிற காரணத்தால் இது இப்போது இங்கே தேவை தானா என்பதுதான் பிரச்னை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதிலுமே அவசரப்படுகிற மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இதிலேயும் அவசரப் படுகிறார்கள். நான் அவர் கூறுகிற கட்டத் திற்கு வர இருக்கிறேன். ஜா கமிஷன் போடப்பட்டு, அது இந்த டாக்ஸ்களை நீக்கிவிட வேண்டும் என்று எடுத்துச் சொன்னதாகச் சொன்னார்கள்.

The Jha Committee recommended that Octroi (Entry Tax) should be abolished in stages and that alternative sources of revenue would have to be found for their replacements.

(பிற்பகல் 1-40)

படிப்படியாக அந்த ஆக்ட்ராய் என்ற நுழைவுக் கட்டணத்தை நீக்கிவிட வேண்டுமானால் அதை ஈடுகட்டுகின்ற அளவுக்கு வருமானத்தைத் தேடித் தருகின்ற வழிமுறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அதன் அடிப்படை யிலே, ஜனதா கட்சி ஆட்சியிலே இருந்தபோது நிதியமைச்சராக இருந்த திரு. எச். எம். படேல் அவர்கள்

On this recommendation, the then Union Finance Minister, Thiru H.M. Patel announced the policy of the Union Government in his budget speech on the 20th February 1978 as follows:—

பட்ஜெட்டிலே பேசுகின்றபோது 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20ம் நாள் பாராளுமன்றத்திலே பேசினார்கள்.

Octroi revenues are at present going to local authorites. Quite understandably they will seek from the State Governments reimbursement for the loss of revenue and in turn, the State Governments will no doubt, claim compensation from the Centre.

என்று திரு. எச். எம். படேல் குறிப்பிட்டார்கள். அவர்கள் நிதி அமைச்சராக இருந்தபோது இப்போது ஆக்ட்டிராய் வருமானங்கள் உள்ளாட்சி மன்றங்களுக்குப் போய்ச் சேருகின்றன. எனவே அந்த வருவாய் இழப்புக்கு மாநில அரசுக்கு ஈடுகட்டவேண்டும் என்று விரும்புவது உணரப்பட வேண்டிய ஒன்றாகும். ஐயப்பாட்டுக்கு இடம் இல்லாமல் மாநில அரசினுடைய இழப்பை ஈடு செய்ய மத்திய அரசிடம் இருந்து எதிர்பார்க்கும் என்பதும் உணரப்படவேண்டியது என்று உரையிலே சொல்லி விட்டு அமர்ந்துவிட்டார்கள். அந்த பேஸிஸிலே அந்த மத்திய நிதியமைச்சர் எடுத்துச் சொன்னதன் அடிப்படையிலே

A meeting of the Chief Ministers was held.

எல்லா மாநில முதலமைச்சர்களையும் அழைத்து எச். எம். பட்டேல் பாராளுமன்றத்திலே எடுத்துச் சொன்ன அடிப்படையில் கூட்டம் கூட்டப்பட்டது.

Then all the Chief Ministers stated that the Central Government should compensate the State Governments on the loss of revenue due to the abolition of Octroi.

ஆக ஆக்ட்டிராய் எடுப்பதற்கு நாங்கள் தயார். ஆனால் அதற்கான இழப்பீட்டை மத்திய அரசு தரவேணடும் என்று எல்லா மாநில முதலமைச்சர்களும், காங்கிரஸ் மாநில முதலமைச்சர்கள் உட்பட வற்புறுத்தினார்கள்.

Thiru R. Venktaraman, the then Union Minister of Finance said there is no point in the suggestion that the centre should compensate the States on the abolition of the Entry Tax.





ஆகவே நுழைவு வரியை நீக்கும் வகையில் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு இழப்பீடு அளிக்கவேணடும் என்று சொல்வதில் பொருள் எதுவும் இல்லை. ஆகவே மத்திய அரசு இதன் இழப்பீட்டை ஏற்காது என்று திட்டவட்டமாக அவர்கள் சொல்லி விட்டதற்குப் பிறகு

Therefore, the proposal of abolition of Octroi was dropped and the States which levied Octroi continue to levy it.

ஆக ஆக்ட்டிராயை ஒழிப்பது இல்லை என்ற முடிவுக்கு வந்து அதைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம் என்று முடிவுக்கு வந்தார்கள். அது மட்டுமல்லாமல் இப்போது நாம் போட்டிருக்கிறோம் என்றால் இவற்றை எல்லாம் நாம் ஆராய்ந்து பார்த்ததற்குப் பிறகு போட்டிருக்கிறோம் என்றால் அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதிலே ஒரு காரணம் என்றைக்காவது ஒருநாள் மத்திய அரசு கூப்பிட்டு ஆக்ட்டிராபாலே உங்களுக்கு எவ்வளவு நஷ்டம் வந்தது, சொல்லுங்கள், நாங்கள் தருகிறோம் என்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அப்போது நாமும் கேட்டு வாங்கலாம். அதுவும் இப்போது போட்டால்தான் கேட்க முடியும். போடவில்லை என்றால் நீதான் ஆக்ட்ராயே போடவே இல்லையே, உனக்கு இழப்பே இல்லையே, உனக்கு ஏன் தரவேண்டும் என்று கேட்பார்கள். அந்தக் கட்டங்கள் இப்போது வளர்ந்துகொண்டு வருகின்றது. அது வளரவேண்டும் என்பதில் மகிழ்ச்சியும் உண்டு. ஆகவே மற்றைய 12 மாநிலங்கள் போய் நிற்கின்றபோது தமிழகமும் கூடப் போய் நின்றால் எங்களுக்கு இவ்வளவு இழப்பு, ஆகவே தாருங்கள் என்று கேட்கக் கூட இது ஒரு வழியாக இருக்கும். இல்லை என்றால் அப்போதே நீ போட்டிருக்கக்கூடாதா, போட்டால் அல்லவா இப்போது இழப்பு என்ற சங்கதி வரும், உங்களிடம்தான் அறவே இல்லையே, ஏது இழப்பு என்று சொல்லிவிடுகிறார்கள்.

மதுவிலக்கு கொள்கையை ஏற்கவேண்டும் என்பதில் கூட காம்பென்சேஷன் தரவேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும், இன்றைய முதலமைச்சர் அவர்களும் வற்புறுத்தியபோது மதுவிலக்கை நாங்கள் அமல்படுத்துவதன் காரணத்தால் இழப்பீட்டுத் தொகை தரவேண்டும் என்று சொன்னபோது' அமல்படுத்தினால்தானே இழப்பீடு வரும், நீங்கள்தான் அமல்படுத்தவே இல்லையே, பிறகு ஏன் இழப்பீடு தரவேண்டும் என்று மத்திய அரசிலே இருப்பவர்கள் அடிக்கடி எடுத்து வைத்தார்கள். ஆகவே ஆக்ட்டிராய் இருப்பவர்களுக்குத்தான் இழப்பீடு தரவேண்டும், இல்லாவிட்டால் இழப்பீடு இல்லை என்று சொல்கின்ற ஒரு காரணம் பொதிந்து கிடக்கின்றது. ஆனால் மற்றைய மாநிலங்கள் போட்டிருக்கின்ற அளவுக்கு— கர்நாடகாவிலே எல்லா நகரத்திற்கும் போட்டிருக்கிறார்கள். சில பல இடங்களில் எல்லா நகராட்சிகளுக்கும் போட்டிருக்கிறார்

கள். கர்நாடகாவிலே எல்லா முனிசிபாலிடிக்கும் 2 சதவீதம் என்று போட்டிருக்கிறார்கள். ஒரு நகராட்சி கூட விடவில்லை. எந்த நகராட்சியாக இருந்தாலும் 2 சதவீதம் நுழைவு வரி என்று போட்டியிருக்கிறார்கள். மகாராஷ்ட்டிரத்தில் ½ சதவீதத்திலிருந்து 6 சதவீதம் வரையிலும் இந்த நுழைவு வரியைபோட்டிருக்கிறார்கள். வெஸ்ட்பெங்கால் கல்கத்தாவில் 1½ சதவீதத்திலிருந்து 8 சதவீதம் வரையிலும் போட்டியிருக்கிறார்கள். இமாச்சல் பிரதேசத்திலும் ஜம்மு காஷ்மிரிலும் போட்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் கிட்டத்தட்ட 15—16 இனங்களிலிருந்து 60 இனங்கள் வரை போட்டியிருக்கிறார்கள். நம் தமிழ்நாட்டில் போட்டிருப்பது 13 இனங்களுக்குத்தான். நாம் போட்டிருக்கிற இனங்கள் கூட 16 நகரங்களுக்குத்தான் போட்டிருக்கிறோம். எல்லா நகரங்களுக்கும் போடவில்லை. எல்லா ஊர்களுக்கும், எல்லா இடங்களுக்கும் போடவில்லை, சென்னை, மதுரை, கோயம்பத்தூர் போன்ற மாநகராட்சிகளுக்கும் ஈரோடு, சேலம், வேலூர் திருச்சிராப்பள்ளி போன்ற சிறப்பு நிலை நகராட்சிகளுக்கும் பொள்ளாச்சி, திருப்பூர், நாகர்கோவில், திண்டுக்கல், கும்பகோணம், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, உதகமண்டலம் போன்ற செலக்ஷன் கிரேடு, தேர்வு நிலை நகராட்சிகள் எல்லாம் சேர்ந்து 16 நகராட்சிகளுக்கு நாம் போட்டியிருக்கிறோம் இந்த 2 சதவீதம் நுழைவு வரியால் உயரும் என்று சொல்கின்ற அளவு ஒரு 5, 6 நாளைக்கு முன்னால் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையிலே வந்த ஒரு செய்தியை உங்களுக்கு குறிப்பிடவிரும்புகிறேன். 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாள் அன்று சிவிக் டாக்ஸஸ் இன் பாம்பே என்ற தலைப்பிலே எழுதப்பட்டுள்ள கட்டுரையிலே.

Octroi which along with property taxes, account for over 82 per cent of the total income of the Corporation and which together are its financial mainstay. Octroi is consistently yielded a higher revenue over the years. Without it to lean on the civic body would have found it hard to function.

Under the latest proposals the Octroi is sought to be applied as well as petrol and diesel on an ad valorem (value of goods) basis.

இதுவரையில் மெஷர்மென்டு அண்டு வெயிட்டிலே இருந்ததை மாற்றி அதனுடைய மதிப்பீட்டின் அளவிலே போட்டிருக்கிற அளவு பலயிடங்களிலே பொருள்களுடைய தன்மையை மாற்றி வந்திருக்கிறார்கள்.

In June last year, the Corporation amended the law to enable it to levy the Octroi on certain items on an ad valorem (value of goods) basis, as against the weight or measurement basis.





என்று பாம்பே கார்ப்பரேஷன் அதை மாறுதல் செய்திருக்கிறது. எதற்கு நான் சொல்கிறேன் என்றால் இப்போது நாம் போட்டிருக்கின்ற அளவுக்கு, இப்போது 2 சதவீத வரி உயருகிறது ஒத்துக்கொள்கிறேன். அது நாட்டை பாதிக்கும், வியாபாரிகளை பாதிக்கும், எல்லோரையும் பாதிக்கும் என்று சொல்வதை நான் ஏற்றுக்கோள்ள இயலாது. ஏன் என்று சொன்னால் இந்த 2 சதவீதம் மூலம் நாம் எதிர்பார்ப்பது 20 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 2,400 கோடிக்கு மத்திய அரசு போட்டு எல்லா மாநிலத்திலும், நம்முடைய மாநிலத்திலே 240–250 கோடிக்கு பாதிக்கப்படுகின்ற நிலமைகளில் வியாபாரிகளுக்கோ, மற்றவர்களுக்கோ ஆத்திரமும் மற்றவைகளோ வரவில்லை. இந்த ஆக்ட்ராய் போட்டவுடனே......

திரு. அ. ரகுமான்கான் ; மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்கள் இந்த வரியை போடுகின்றன. ஆகவே இவைகளை பின்பற்றுகிறோம் என்று சொல்கின்ற வாதம் சரியல்ல. 13 பொருள்களுக்கு இப்போது இந்த வரி போடுப்படுகிறது. இவைகளுக்கு ஏற்கனவே சேல்ஸ்டாக்ஸ், போன்ற பல்வேறு வரிகள் இருக்கின்றன. இவைகளில் முனிசிபாலிட்டிகளால் பல்வேறு நிலைகளில் வரிகள் போடப்படுகின்றன. இவைகளினால் கன்ஸ்யூமர்ஸ் வாங்குகிறவர்கள் தலையிலே தான் விழும். அந்த விலைவாசி ஏற்றத்தை அவர்கள் முதலாக வைத்து விற்க வேண்டிய நிலமை இருக்கிறது. இதனால் ஏற்கனவே ஓட்டல் பண்டங்களின் விலைவாசி ஏறியிருக்கின்றன. அன்றாட அத்தியாவசிய பண்டங்களின் விலைகள் ஏறியிருக்கின்றன. இந்த வரியை போடுவதன் மூலம் அது சாதாரண ஏழை, எளிய நடுத்தர மக்களின் தலையிலே சுமத்தப்படுகிறது. எனவே ஒரு நல்ல சமூக நலச் சர்க்கார் ஏழை, எளிய, நடுத்தர மக்களுடைய தலையிலே மீண்டும் இந்த பளுவை சுமத்துவதற்கான வாய்ப்பு இருக்கக்கூடாது. எனவே ரெவின்யூ சோர்ஸ் பார்ப்பது என்பது வேறு, மாநிலங்களை....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல்கின்ற வரிகள் அத்தனையும் எல்லா நகரங்களிலும் இதை விட கடுமையாக இருக்கின்றன. அவ்வளவு வரிகளுக்கு மேல் தான் 6 சதவீதம் 8 சதவீதம் அளவுக்கு கூட, போட்டிருக்கிறார்கள். பலயிடங்களில் எல்லா முனிசிபாலிட்டிகளுக்கும் போட்டிருக்கிறார்கள். அங்கே எல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆகவே போடுகிறோம் என்ற முடிவுக்கு நாம் வரவில்லை. அங்கே எல்லாம் போட்டிருக்கிறார்கள் ஆகவே நாமும் போடலாம் என்ற முடிவுக்குத்தான் வருகிறேமே தவிர அங்கே போடுகிற காரணத்தினாலே நானும் போட்டுதிருவேன் என்பதற்கு அல்ல. அதிலே ஓரளவுக்காவது வரு

மானத்தைப் பெறலாம் என்று போட்டிருக்கிறோம். வியாபாரிகள் கூட மகஜர்களை கொடுத்திருக்கிறார்கள், அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள், பத்திரிக்கைகளிலும் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்களும் தெளிவுபட எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இதனால் வாங்குபவர்கள் யாராக இருந்தாலும் ஏழை பணக்காரர்கள் பாதிக்கப்படுவார்கள்.

(பிற்பகல் 1—50)

இந்த வரி வியாபாரிகளைப் பாதிக்காது பொதுமக்களைத்தான் பாதிக்கும் என்ற அளவுக்கு வியாபாரிகளே தங்களுடைய அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால் வரி 2 காசு உயரும். ஆனால் அகில இந்திய ரீதியிலே வியாபாரிகளுக்கு மற்றவர்களுக்கு போடப்பட்டிருக்கின்ற ரெயில் கட்டண உயர்வினால், தபால்தந்தி கட்டண உயர்வினால் ஏற்பட்டிருக்கின்ற விளைவுகளைவிட அவர்கள் பாதிக்கப் படுவார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மத்திய அரசு இப்போது போட்டிருக்கின்ற வரியினால் கிடைக்கின்ற 716 கோடி ரூபாயிலே மாநில அரசுக்காவது அதிக வருமானம் வருகிறதா என்று நான் கணக்கு போட்டுப்பார்த்தேன். அந்த 716 கோடி ரூபாயிலே மாநிலங்களுக்குக் கிடைப்பது, 107 கோடிதான், எல்லா மாநிலங்களுக்கும். அதிலே நம்முடைய மாநிலத்திற்கு தரப்பட இருப்பது 7 கோடி ரூபாய்தான். அது தான் நம்முடைய மாநிலத்தின் பங்கு, மத்திய வரிகளின் மூலமாக இப்போது போடப்பட்ட வரிகளின் மூலம் கிடைக்கும் வருவாயில் . . . . .

திரு. குமரி அனந்தன் : ரெயில் துறையிலிருந்து நமக்கு வருமானம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது கிடையாது.

திரு. குமரி அனந்தன் : 1959ஆம் ஆண்டிலே 64 இலட்சம் ரூபாய் நமக்கு வந்திருக்கிறது என்று பட்ஜெட்டிலே பார்த்த போது தெரிந்தது. இப்போது அந்தப் பங்கு—488 கோடி ரூபாயில் உண்டா அல்லது இடையில் போய்விட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு காலத்திலே பங்கு இருந்தது. இப்போது அதிலிருந்து நமக்கு பங்கே கிடையாது. அந்த 716 கோடி ரூபாயிலே பல இனங்களுக்கு வராது, சில இனங்களுக்கு வரும். 716 கோடி ரூபாயிலே 101 கோடி ரூபாய் தான் எல்லா மாநிலங்களுக்கும் வரும், நமக்கு 7½ கோடி ரூபாய் தான் பங்கு வரும். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால்





எப்படியாவது போட்டே தீரவேண்டுமென்பதல்ல, பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன, அவ்வளவு வரிகளையெல்லாம் தாங்குகிற வலிவுபெற்ற வியாபாரிகள், மற்றவர்கள் ஒரே பிடிவாதமாக அதுவும் 16 நகராட்சிகளுக்கு மட்டுமே கிராமங்களுக்கோ மற்ற நகராட்சிகளுக்கோ கிடையாது. அதுவும் எல்லாப் பொருட்களுக்கும் அல்ல. எல்லா பொருட்களுக்கும் சேல்ஸ் டாக்ஸை தூக்கினால் எல்லாப் பண்டங்களுக்கும் போய்ச் சேரும். அல்லது மல்டிபாயின்ட் சேல்ஸ்டாக்ஸ் 1, 2 காசு தூக்கினால் எல்லா இடங்களிலும் உள்ள எல்லோரையும் பாதிக்கும் சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்று 1, 2 காசுகள் தூக்கினால் எல்லா இடங்களிலும் எல்லோரும் பாதிக்கப்படுவார்கள். ஆனால் இதிலே 13 பொருட்களுக்கு மட்டும், 16 நகராட்சிகளுக்கு மட்டும் போட்டிருக்கிறோம். சில பல நிலைமைகளை நான் விளக்கிக் கிக் காட்ட விரும்புகிறேன். மற்றவர்கள் கருத்தைக் கேட்கக் கூடாது என்பதல்ல. சிந்திப்பதற்கு சில பல நிலைமைகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்கிறேன். சில தன்மைகளைப் பற்றி நான் விளக்கிக் காட்ட விரும்புகிறேன். இப்போது நான் அறிவிப்பாகச் செய்வது பெட்ரோலியப் பொருள்களுக்கு இரண்டு சதவீதம் என்று போட்டிருக்கின்ற தன்மைகளிலே சாதாரண மக்களுக்கும் மற்றவர்களும் பயன் படுத்துகின்ற நிலைமை இருக்கிறது என்ற காரணத்தினாலும்—மண்ணெண்ணெய்க்கும் சேர்த்து மற்ற மாநிலங்களிலே போட்டு இருக்கிறார்கள்—நாம் இங்கே மற்றவர்கள் எடுத்து சொன்ன காரணத்தாலும் அந்தப் பொருட்களிலே மண்ணெண்ணெய்க்கு விலக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்கரை என்ற தலைப்பின் கீழ் சர்க்கரை மிட்டாய், கன்பக்ஷனரிஸ் போன்றவற்றிற்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது. மின்சாரப் பொருள்கள் என்ற தலைப்பின் கீழ் பல்புகள், குழாய் விளக்குகள், வயர்கள், ஹோல்டர்கள், ப்ளக்குகள், சுவிட்சுகள் போன்ற வீடுகளுக்கு எல்லாம் பயன்படுகின்ற அளவுக்கு இருக்கிற சிறு சிறு பொருள்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. அதனுடைய முழு விவரமும் பின்னாலே அறிவிக்கப்படும். மருந்துப் பொருட்களும் மருந்து வகைகளும் என்ற தலைப்பின் கீழ் சித்த மருந்துகள், யுனானி மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், அரிஷ்டம் அசவாசம் உட்பட நுழைவு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. துணிவகைகள் என்ற தலைப்பின் கீழ் கைத்தறித் துணிகள், கைத்தறிப் பட்டுத் துணி வகைகள், கதர் வகைகள் ஆகியவற்றிற்கு விலக்கு அளிக்கப்படுகிறது. அதை நடைமுறைப் படுத்தும் விதம் பின்னர் அறிவிக்கப்படும். நுழைவு வரியைப் பொறுத்த வரையில் பல பேர்களும் ஐயப்பாடுகளை வியாபாரிகளும் மற்றவர்களும் கிளப்பி இருக்கிறார்கள். இந்த நுழைவு வரி 16 நகராட்சி மன்றங்களிலே நுழையும் போது போடுகிற போது பல முறைகள் ஒவ்வொரு இடத்திலேயும் 2 சதவீதம், 2 சதவீதம் என்று போட்டு மல்டிபாயின்ட் வரியாகி 8 சதவீதம்

9 சதவீதம் ஆகிவிடுமோ என்று சொல்கிறார்கள். ஆகவே திட்ட வட்டமாக தெளிவாக ஐயப்பாடுகளை போக்க விரும்புகிறேன். இந்த நுழைவுவரி 2 சதவீதம் என்பது ஏதேனும் ஒரு கட்டத்தில் மட்டும் ஒரு இடத்தில் மட்டும் போடப்படும். அதற்கான விதி முறைகளும் மற்றவைகளும் வகுக்கப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். (குறுக்கீடு) எவ்வளவு குறைந்தாலும் தாங்க வேண்டும். இன்னமும் சொல்கிறேன். வியாபாரிகளும் மற்றவர் களும் முக்கியமான சிலவற்றை இன்றியமையாப் பொருள்கள் என்று கருதி ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னாலும்கூட பேச்சுவார்த்தை நடத்தி சிலபல தன்மை களைச் சிந்திப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றைய மாநிலங்களிலே இருக்கிறதாலே நாமும் போட வேண்டுமென்று போடவில்லை. அவர்கள் எல்லாம் பல்லாண்டு காலமாக வைத்திருந்தாலும் கூட தமிழகம் நீண்ட காலமாக போடவில்லை. சுலபமாக போடுகிற வகையிலே போடலாம் என்று வியாபாரிகள் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நிதி யமைச்சர் அவர்கள் சொன்ன கணக்குப்படி ஏறத்தாழ 10 கோடி ரூபாய் குறையும் வாய்ப்பு இருக்கிறது. வருமானமே இதில் 20 கோடி அளவில் தான் வரும். வசூல் பண்ணுகிற செலவை எல்லாம் பார்த்தால் இதை பூராவும் தள்ளிவிடுவது நல்லது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவ்வளவு குறையாது. கொஞ்சம் தான் குறையும். தம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு ரூபாயில் 83 காசுகள் செலவாகும் என்று கணக்குச் சொன்னார்கள். அந்த கணக்கு வராது. ஏற்கனவே சாவடிகளை வைத்திருக்கிறோம். பணியாளர்கள் கொஞ்சம் பேரைத்தான் நியமிக்க வேண்டி யிருக்கும். அடுத்த ஆண்டு கணக்குச் சொல்கிறபோது அந்த கணக்கையும் வேண்டுமானால் சொல்கிறேன். ஒட்டுமொத்தமாக பார்க்கிறபோது வேறு சுலபமான வழிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்த வழிவகைகளை இப்போது சொல்லா விட்டாலும் தனிப்பட்ட முறையிலே, வியாபாரிகளும், மற்றவர் களும் என்னிடத்திலே சொல்வார்களானால் மீதி இருக்கிற 159 கோடி ரூபாய் பற்றாக்குறையை போக்குவதற்கு வழிவகைகளை காணலாம். தீவிரமாக வசூல் செய்தால் 25 கோடியையும் வசூலிக்கலாம் என்று சொல்கிறார்கள். 159 கோடி ரூபாய் பற்றாக்குறையைப் போக்குவதற்கு வழிகளை ஏற்றுக் கொள்ள லாம். பல்வேறு காரணங்களை உத்தேசித்து வரிகளின்





தன்மை வந்திருக்கின்றன. இந்த வரி விதிப்பிலே சலுகைகளைத். தந்திருக்கிறோம் என்றாலும் இன்னும் சிலபல கஷ்ட நஷ்டங்கள் இருக்கின்றன. செவி கொடுத்து கேட்டு பொதுமக்களுக்கு நன்மை செய்ய, அதே சமயத்தில் அரசாங்கத்தின் நோக்கங்கள் நிறைவேறவும் சுமை அதிகமாக இல்லாமல் இருப்பதற்கு வழி வகைகளை காண்கிற அளவிற்கு எல்லோருடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியிலே உள்ள பலரும், பொதுமக்களும், வணிகப் பெருமக்களும் எவ்வளவோ எடுத்துரைத்தும் கூட மத்திய அரசு வரி போடும் போது நாங்கள் போடக்கூடாதா? என்ற வாதத்தை நிதியமைச்சர் அவர்கள் வைத்துள்ளது நியாயமாகத் தெரியவில்லை. ஏற்கெனவே மக்களை மத்திய அரசு கிணற்றிலே தள்ளி விட்டார்கள் என்றால், அவர்கள் கிணற்றிலே தள்ளிவிட்டிருக்கிறார்கள். நாங்கள் மேலே ஒரு கல்லை தூக்கிப் போடுகிற உரிமை எங்களுக்கு இருக்கிறது என்பது போல இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு போடுகிற காரணத்தால்தான் நாங் களும் போடுகிறோம் என்று சொல்லவே இல்லை. மற்ற மாநிலங்கள் போட்டிருக்கிறதால் நாங்களும் போடுகிறோம் என்று சொல்லவே இல்லை. மற்ற மாநிலங்களில் போட்டிருக்கிறார்கள் அதிலே நியாயம் இருக்கிறதால் அதை போடலாம் என்று சொல் கிறேன். ஆகவே வரிகள் போடுகிற தன்மை வருகிற போது அவர்கள் போடுகிற காரணத்தால் அல்ல. மத்திய அரசு போடுகிற 740 கோடியை தாங்குகிற வலிவோடு—அதற்கு ஊர்வலமோ, கடை அடைப்போ நடத்தாதவர்கள், 20 கோடி ரூபாயை தாங்க முடியவில்லை என்று நடத்துகிறார்களே! அதற்கு காட்டிய சலுகையை இதற்கு காட்டக் கூடாதா? ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று சொல்வார்கள்....

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 13 பொருள்களுக்குத்தான் போட்டிருக்கிறோம். அதிலும் 16 நகரங் களில்தான் இந்த வரி விதிக்கப்படுகிறது என்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டாலும் கூட, எத்தனையோ வரிகள் முதலிலே மிகக் குறைவாக தொடங்கி பிறகு அதிகமாக விரிவாகி மக்களை பாதிக்கிற சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதைப் போல இதுவும் ஒவ்வொரு ஆண்டும் விரிவு அடையக்கூடும் என்ற அச்சமிருக்கிறது. இவ்வளவு எடுத்துக் கூறியும், நுழைவு வரியை அறவே ரத்து செய்யாமல் இருப்பது ஊழலுக்கு நிச்சயமாக வழி வகுக்கும் என்பது உறுதியான ஒரு உண்மையாகும். பல்வேறு மாநிலங் களில் இந்த வரி இருப்பதாகச் சொன்னார்கள். அந்த மாநிலங் களில் எல்லாம் இந்த வரியின் காரணமாக பெரும் ஊழல்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே அதைப்போலவே நாங்

களும் தொடர்ந்து நடத்துகிறோம் என்று கூறுவது பொருத்த மல்ல. நுழைவு வரியை முழுமையாக எடுக்க அரசு முன் வராத காரணத்தால் அதை மறுத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட இந்த அரசுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் வரவு செலவு ஆகிறது. இதிலே 25 கோடி ரூபாய் வரிக்காக இதை போட்டு கஷ்டப்படுத்துவது மிகவும் மன வருத்தத்தைக் கொடுக் கிறது. இது பாமர மக்களை மிகவும் பாதிக்கும். 16 முனிசி பாலிட்டிகளில் போட்டாலும் அங்கே இருப்பவர்கள் ஏழை எளிய மக்கள்தான் ; பணக்காரர்கள் அல்ல. எவ்வளவு சொல் லியும் அரசாங்கம் இந்த வரியை விலக்கு செய்ய மறுப்பதன் காரணமாக நாங்களும் வெளி நடப்பு செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்).

(பிற்பகல் 2—00)

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய விரிவான விளக்கத்தை கேட்டபிறகும், தமிழகத்திலே ஏற்கெனவே போடப் படாமலிருக்கிற ஒரு வரியை அவர்கள் இப்பொழுது போடுவது மிகுந்த துயரத்தை மக்களுக்கு அளிக்கும் என்று நாங்கள் கருது கிறோம். இன்று மத்திய சர்க்காரிடத்திலே அதிக நிதியை வாங்குவதற்காக இந்த வரியைப் போடுகிறோம் என்று சொல் வதும் ஒரு சரியான பொருளாதாரக் கொள்கையாக இருக்காது. ஆகவே, அரசாங்கம் இன்று இதை நடைமுறைப் படுத்துகிற காரணத்தாலேயும், இது தமிழக மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்ற காரணத்தாலேயும், அரசாங்கம் இதைக் கைவிட வேண்டு மென்று மறுபடியும் வற்புறுத்துவதற்கும், இதை எதிர்ப்பதற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த வெளிநடப்பிலே பங் கெடுக்கிறது என்று கூறி வெளிநடப்பு செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரி என்பது, வர்த்தகர்களை அல்ல, மக்களை பாதிக்கின்றது என்று சட்டமன்றத்திலே இருக் கிற அனைத்து எதிர்க்கட்சிகளும் எடுத்துக் கூறிய போதிலும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதற்கு நியாயம் கற்பிக்கக்





கூடிய முறையிலே பேசி, மத்திய அரசு வரி விதித்திருக்கிறது பல மாநிலங்களில் இந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது, ஆகவே நம்முடைய பங்கிற்கு நாம் செய்கிறோம் என்ற முறையிலே அவருடைய வாதத்தினை எடுத்து வைத்திருக்கிறார். அவருடைய வாதம் எதுவாக இருந்தாலும், தமிழக மக்களுடைய நலன் களைப் பாதித்து, மக்கள் மீது அதிகச் சுமையை ஏற்றக்கூடிய முறையிலே இந்த வரி விதிப்பு இருக்கிற காரணத்தாலே, கம்யூ யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த வரி விதிப்புக்கு எதிர்ப்பைசி தெரிவிக்கக்கூடிய முறையிலே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த வரி விதிப்பை எதிர்த்து, கண்டனம் தெரிவித்து வெளி நடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர் )

திரு. குமரி அனந்தன் : துணை சபாநாயகர் அவர்களே, நுழைவு வரி என்ற பெயரில் போட உத்தேசிக்கப்பட்டு பிழைப் பைக் கெடுக்கும் வரி நுழைப்பை ரத்து செய்ய வேண்டுமென்று பாதிக்கப்படும் பொதுமக்கள், வியாபாரிகள், உற்பத்தியாளர், வாங்குவோர் அனைவரும் சொன்ன பிறகும் எதிர்க்கட்சியிலே இருக்கிற அனைவரும் கட்சி வேறுபாடின்றி அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்த பிறகும்கூட மத்திய அரசாங்கமும் மற்ற வர்களும் செய்திருக்கின்றது. ஒன்றை உதாரணம் காட்டுகின்ற பொழுதெல்லாம் நல்லவற்றிற்கு மட்டுமேகாட்டவேண்டுமே தவிர அல்லாதவற்றிற்கு காட்டக்கூடாது என்பதைக் கூட அரசாங்கம் கருத்தில் எடுத்துக் கொள்ளாமல் தொடர்ந்து இதைப் போட உத்தேசிக்கிற காரணத்தாலே, நுழைவு வரி விதிப்பதை எதிர்த் தும் அதனை மறுபரிசீலனை செய்து ரத்துசெய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்தும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் வெளிநடப்பு செய்கிறது.

(காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிதி அமைச்சர் அவர் கள் அறிவிக்கின்ற பொழுதுகூடச் சொன்னார்கள், வியாபாரிகளு டைய அறிக்கையைப் படித்துக் காட்டினார்கள். வியாபாரிகளைப் பாதிக்காது; இது சாதாரண மக்களைப் பாதிக்கின்ற வரி என்று அவர்களே சொல்லியிருக்கின்றார்கள் என்று ஞாபகப்படுத்திச் சொன்னார்கள். ஆகவே, அத்தனை தரப்பு மக்களையும் பாதிக் கின்ற நுழைவு வரி நீக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்த அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறேன்.

(அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி உறுப்பினர் வெளி நடப்புச் செய்தார்.)

[1983 மார்ச் 1

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரிக்கு எல்லாத் தரப்புலிருந்தும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது, எல்லா கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. வியாபாரிகள், பொதுமக்கள். எல்லோரும் எதிர்ப்புதெரிவித்திருக்கின்றனர். ஆனால் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், அவருடைய சாமார்த்தியமான வாதத்தின் மூலம் இதை நியாயப்படுத்த முயற்சி செய்தும்கூட அவரின்வாதம் எங்களுக்குத் திருப்தி அளிக்கவிலலை. அன்றைக்கு நெடுஞ்செழியப் பாண்டியன் நீதியைக் காத்தான். இன்றைக்கு நம்முடைய நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடைய மனசாட்சிகூட இந்தவரியை ஏற்றுக்கொள்ளாது. நிதிதிரட்டும் வேகத்தில் நீதியை மறந்து விட்டார். ஆகவே, எங்களுடைய எதிர்ப்பையும் தெரிவிக்கும் வகையிலே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. பொ. விஜயராகவன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இதுவரையிலும் நுழையாத இந்த நுழைவு வரியை இங்கே இந்தத் தமிழகத்தில் நுழைப்பதற்கு அரசு எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய இந்த முயற்சியை கண்டித்தும் எல்லோரும் வேண்டுகோள் விடுத்தும் அந்த வேண்டுகோளை நிறைவேற்றாமல் இருக்கிற அந்தப் போக்கைக் கண்டித்தும் ஜனதா கட்சியும் வெளிநடப்பு செய்கிறது.

(ஜனதா கட்சி உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார்.)

திரு. ஏ. சாகுல் ஹமீது ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அரசு ஏழை மக்கள் மீது சுமத்தி இருக்கிற இந்த நுழைவு வரியை எதிர்த்து, அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சித் தலைவர்களும் இந்த நுழைவு வரி தேவையில்லை, மக்களைப் பாதிக்கும் என்று கூறியும் ஒரே பிடிவாதமாகப் போட்டுத்தான் தீருவோம் என்ற அடிப்படையிலே, பிடிவாதமாக இருப்பதை எதிர்த்து, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பிலே நான் வெளிநடப்புச் செய்கிறேன். இது ஊழலுக்கு வித்திடும், இந்த நுழைவு வரியை நீங்கள் மாற்றுங்கள் மாற்றுங்கள் என்று கூறி, இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக்கின் சார்பாக நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்.)



1983 மார்ச் 14]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் நிதியையும் காப்பாற்ற வேண்டியிருக்கிறது நீதியையும் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த மாநிலத்தினுடைய அரசை நடத்திச் செல்லும் முழுப்பொறுப்பையும், முழுக் கடமையையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது அந்தக் கடமையும், அந்தக் கடமையைப் பொறுப்புணர்ச்சியோடு ஆற்ற வேண்டிய தன்மையும் இருப்பதால் தான் நியாயம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, இதைத் தவிர வேறு வழியில்லை என்பதற்கான காரணங்களால் தான் இந்த வரியைக் கொண்டு வருகிறோமே தவிர வரியைக் கொண்டு வருவதிலே நமக்கொன்றும் மகிழ்ச்சி கிடையாது. ஆனால் வேறு பல வழிகள் எல்லாவற்றையும் ஆராய்ந்த பிறகு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

எந்தவொரு வரி போட்டாலும் அந்த வரியையெல்லாம் ஏற்றுக்கொண்டு ஏதேனும் ஒருவரியையாவது வரவேற்றிருக்கின்றார்கள் ஆதரித்திருக்கின்றார்கள் என்ற வரலாறேஇலலை. ஆகவே, வேறு எந்த வரியையாவது போட்டிருந்தால் அதை முழுமனதோடு வரவேற்றிருப்பார்களா என்றால் அதையும் எதிர்த்துத்தான் இருப்பார்கள். ஆகவே, அவர்கள் அவர்களுடைய போக்கை, கடமைகளைச் செய்கிறார்கள். நமக்கு பொறுப்பும் கடமையும் இருப்பதன் காரணமாக இந்த அரசு இவற்றையெல்லாம் சிந்திக்கிறது.

ஆகவே, பல்வேறு தன்மைகளையெல்லாம் பார்க்கின்றபொழுது, நான் நிதி நிலை அறிக்கையைப் படிக்கின்ற பொழுது இருந்த நிலைமைக்கும், அதற்குப் பிறகு பல்வேறு தன்மைகளையெல்லாம் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, வியாபாரிகளும், மற்றவர்களும் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு நாம் கைத்தறிக்கு, மற்றவைகளுக்கெல்லாம் விலக்கு தந்திருக்கிறோம்.

நம்முடைய மாநிலத்தினுடைய கைத்தறி மகாராஷ்டிராவுக்கு போகும் பொழுது கைத்தறி துணிக்கு அரை சதவீதம் இந்த நுழைவு வரியை—ஆக்ட்ராய் வாங்குகிறார்கள். பட்டுக்கைத்தறித் துணிக்கு இரண்டு சதவீதம் வாங்குகிறார்கள். பாலீஸ்டர் கைத்தறித் துணிக்கு இரண்டு சதவீதம் வாங்குகிறார்கள்.

குஜராத்திலே நம்முடைய கைத்தறித் துணிக்கு ஒன்றரை சதவீதம் ஆக்ட்ராய் வாங்குகிறார்கள். பட்டுக் கைத்தறிக்கு மூன்று சதவீதம் வாங்குகிறார்கள். பாலிஸ்டர் கைத்தறித் துணிக்கு 3 சதவீதம் வாங்குகிறார்கள். நாம் போட்டிருப்பது இரண்டு சதவீதம்தான்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 14

டெல்லியிலே ஒரு குவிண்டாலுக்கு, கைத்தறித் துணிக்கு ஒரு ரூபாய் பதினெட்டுக் காசு வாங்குகிறார்கள். பட்டுக் கைத்தறித் துணிக்கு ஒரு குவிண்டாலுக்கு 3 ரூபாய் 86 காசு வாங்குகிறார்கள் பாலிஸ்டர் கைத்தறி துணிக்கு 3 ரூபாய் 86 காசு வாங்குகிறார்கள்.

உத்தரப்பிரதேசத்திலே ஒரு குவிண்டாலுக்கு கைத்தறித் துணிக்கு 6 ரூபாய் வாங்குகிறார்கள்; ஒரு குவிண்டால் பட்டுக் கைத்தறித் துணிக்கு 17 ரூபாய் வாங்குகிறார்கள். பாலிஸ்டர் கைத்தறித் துணிக்குகளுக்கு 17 ரூபாய் வாங்குகிறார்கள்.

ஒரிசாவிலே பருத்தி கைத்தறி துணிக்கு ஒரு பர்சென்ட், பட்டு கைத்தறித் துணிக்கு 2 பர்சென்ட், பாலிஸ்டர் கைத்தறித் துணிகளுக்கு 2 பர்சென்ட் வாங்குகிறார்கள்.

அரியானாவிலேயும் நம்முடைய பருத்தி கைத்தறித் துணிகளுக்கு 8 ரூபாய் 25 காசு குவுண்டாலுக்கு வாங்குகிறார்கள்.

பஞ்சாபிலே 16 ரூபாய் 50 காசு ஒரு குவிண்டாலுக்கு வாங்கிறார்கள்.

இராஜஸ்தானத்திலே 8 ரூபாய் குவிண்டாலுக்கு வாங்குகிறார்கள்.

நாம் அந்தஅளவிற்குக் கூட கைத்தறிக்கு பாதுகாப்பு தந்திருக்கிறோம். சிறிய பொருட்களுக்கு பாதுகாப்பு தந்திருக்கிறோம்.

மற்ற மாநிலங்களில் பல்லாண்டுக் காலமாக நடத்தி வந்த வரியை, வேறு வழியே இல்லாமல் கொண்டு வருகிறோமே தவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறபடி, மேற்கொண்டு சிலபல இன்றியாமயாப் பண்டங்கள், எழை எளிய மக்களை, சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய நிலைமையில் இருக்குமேயானால் அதைச் சிந்திக்கவும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதையும் நான் எடுத்துச் செல்லியிருக்கிறேன்.

இதிலே நியாயம் இருக்கிறது, தேவை இருக்கிறது, அவசியம் இருக்கிறது. இதிலே அக்கிரமம் எதுவும் இல்லை; இதிலே நியாயமற்ற தன்மை எதுவும் இல்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய வருமானத்தைப் வேறு பல வகைகளிலேயும் பெற, எப்படி இந்தப் பற்றாக்குறையைப் போக்கப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கின்ற வகையில், தமிழக அரசு தனியாக ஒரு இன்ஷ்யூரன்ஸ் அமைப்பை ஏற்படுத்துவது



1983 மார்ச் 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பற்றித் தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. தனியாக இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தை வைத்து சில பல மாநிலங்கள் நடத்திக் கொண்டு வருகின்றன. அந்த அடிப்படையிலேயும் தமிழகத்திற்கு என்று ஒரு தனி இன்யூரன்ஸ் அமைப்பை ஏற்படுத்துவது என்று தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. அதன் மூலமாக அரசுக்குக் கூடுதலான வருமானம் வருவதோடு, தமிழகத்தில் பரவலாக வேலை வாய்ப்பு வசதியும் பெருகும் வாய்ப்பு ஏற்படும்.

சத்துணவுத் திட்டத்திற்கு நிதி ஆதாரங்கள் சேர்க்கும் நோக்கத்துடன் இத்திட்டத்திற்கென தனியாக பரிசுச் சீட்டு நடத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இந்தப் பரிசு சீட்டு வாராவாரம் நடத்தப் படுவதோடு, கிராமப்புரங்களிலேயும், நகரப்புரங்களிலேயும் பலருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு எப்படி வகை செய்ய முடியுமோ அந்த வகையிலே செய்வதையும் பற்றி இந்த அரசு சிந்தித்துக் கொண்டு இருக்கிறது.

தமிழகத்திலே கூட்டுறவு நிறுவனங்களிலும், நுகர்பொருள் வாணிபக் கழகங்களிலும் உள்ள எல்லா நியாய விலைக் கடைகளையும் கண்காணிப்பதற்காக சிலபல முறைப்படி நடத்துவதற்காக ஒழுங்காக நடத்துவதற்காக, கண்காணிப்பதற்காக பணியாளர்களை ஆங்காங்கே புதிதாக நியமிக்கலாம் என்பதையும் இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 2—10)

இந்த மூன்று திட்டங்களாலே உருவாகும் வேலை வாய்ப்பு, குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தின் கீழ், அதற்கேற்றபடி, விதிமுறைகளும், மற்றவைகளும், வகுக்கப்பட்டு, நியமிக்கப்படுவார்கள். இந்த 15 கோடி ரூபாயை வைத்துக் கொண்டு வேலையைக் கொடுத்து விட முடியுமா என்று பல பேர்கள் கேட்டார்கள். இந்த ஓராண்டிலே நாட்டிலே இருக்கிற, வீட்டிலே இருக்கிற அத்தனை பேருக்கும் தந்து விடுவோம் என்பதாக—பொருள் அல்ல. எந்த ஒரு திட்டம் கொண்டு வந்தாலும், வேலை இல்லாமல்—யார் ஒருவரும் வேலை செய்யாமல் — ஒரு 4, 5 பேர் இருக்கிற ஒரு குடும்பத்திலே வருமானத்திற்கே வழி இல்லாமல் இருக்கின்ற, அதில் யாரேனும் ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டும். எப்படிப்பட்ட விதிகளுடைய அடிப்படையிலே நாம் திட்டங்கள் வகுத்தால் அந்த ஒருவருக்கு வேலை கிடைக்கும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டம். ஆகவே வேலையே இல்லாமல் இருக்கிற குடும்பத்தில், ஒருவருக்கு வேலை கொடுக்க இப்படிப்பட்ட திட்டம். அதற்கு இந்த ஆண்டு 15 கோடி ரூபாய். இந்த 15 கோடியை இந்த ஆண்டு முடித்து

விடுவோம் என்பது பொருள் அல்ல. இது பல்லாண்டு காலம் தொடர்ந்து நடைபெற வேண்டிய திட்டம். முதியோர் ஓய் வூதியம் தரமுடியும் என்று சொன்ன உடனேயே, திரு காமராஜ் அவர்கள் நாட்டிலே இருக்கிற 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட அத் தனை முதியோருக்கும் தந்து விடவில்லை. எடுத்த எடுப்பிலே 16 ஆயிரம் முதியோர்களுக்குத் தான் தந்தார்கள். கடைசியில் 51 ஆயிரம்பேருக்கு வந்து சேர்ந்தது. ஆட்சிப் பொறுப்பினை நாம் ஏற்றுக் கொள்ளும் பொழுது, இப்பொழுது அந்தத் திட்டம் ஏற் கின்ற அளவுக்கு வளர்ந்து இருக்கிறது. எந்த ஒரு திட்டமும் போடுகின்ற ஒரே ஆண்டிலே நிறைவேறாது. இந்த ஆண்டுக்கு 15 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். 15 கோடியிலே எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு நிறைவேற்று வோம். அதற்கு அடுத்தடுத்த ஆண்டிலே, இந்த திட்டத்திற்கு, ஆக்கமும், ஊக்கமும் தருவோம் என்ற முறையிலே இந்தத் திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன என்று எடுத்துச் சொல்லி இதற்காக இந்த அவையினர் தந்த தங்களுடைய முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும்—தமிழக அரசு எல்லாப் பணி களையும், நிதானமாகவும், ஒழுங்காகவும், முறையாகவும், யாரும் பாதிக்கப்படாத வகையில் நடத்திக் கொண்டு வருகிற பாங்குக்கு ஏற்ப தொடர்ந்து இந்த அவையினர் தங்களுடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குவிண்டால் என்று சொன்னீர்கள்—குவிண்டாலா, பேலா என்ற குறிப்பைச் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எடைபோட்டு குவிண்டாலிலும், ஆக்ட்ராய் விதிக்கிறார்கள். மெஷர்மெண்டில் பேலிலும ஆக்ட்ராய் விதிப்பது உண்டு. சில இடங்களில், வெயிட்-ஐக் கொண்டு ஆக்ட்ராய் போடுகிறார்கள். நாம் போட இருப்பது வேல்யூ-வின் மீது; மதிப்பீட்டின் மீது ஆக்ட்ராய் போட இருக்கிறோம். நான் முதலிலே சொன்னது போல, வேறு பல மாநிலங்களிலும் தற்போது பொருட்கள் மதிப்பீட்டின் மீது ஆக்ட்ராய் போட ஆரம்பித்துள்ளார்கள். பம்பாயில் இப்பொழுது இதுபோல மாற்றினார்கள் என்று குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 15—3—1983 காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—13 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

188. தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சி மருத்துவப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 8—10—1982 ஆம் தேதியிடப்பெற்ற 1522ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

189. தமிழ்நாடு மாநிலத்தில் தங்கியுள்ள அயல்நாடு மற்றும் காமன்வெல்த் வணிக ஆணையர்க்குச் சொந்தமான மோட்டார் வண்டிகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது சம்பந்த மாக, உள் துறையின் 24—12—1982 ஆம் தேதியிடப் பெற்ற 3187 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

190. தமிழ்நாடு உப்பு கழகத்தின் (வரையறுக்கப்பட்டது), 1980 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

191. தமிழ்நாடு உப்பு கழகத்தின் (வரையறுக்கப்பட்டது), 1981 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(எதுவுமில்லை.

## இணைப்பு.

(631-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 416 க்கான விடையைக் காண்க.)

| வரிசை எண். | பேருந்தின் பதிவு எண். மற்றும் பேருந்து உரிமையாளரின் பெயர். | பேருந்து செல்லும் வழித்தடம். |
|---|---|---|
| 1) | (2) | (3) |
| 1 | அ. டி. என். ஒ. 3450 தையல்நாயகி டிரான்ஸ் போர்ட்ஸ், முசிறி. | திருச்சியிலிருந்து சுங்கச் சாவடி நொச்சியம், மணச்சநல்லூர் திருப் பைஞ்சிலி, மூவனூர் டி. புதூர், முசிறி, குளித் தலை வழியாக கிருஷ் ணராயபுரம் வரை. |
| | ஆ. டி. என். வி. 3900 ஸ்ரீ முருகன் டிரான்ஸ் போர்ட்ஸ், திருச்சி. | திருச்சியிலிருந்து, சமய புரம் மணச்சநல்லூர், திருப்பைஞ்சிலி, சோ ழங்கநல்லூர், குருவப் பட்டி, சோமங்கலம், பூசாரிப்பட்டி, நெய் வேலி, பொன் சங்கம், பட்டி, டி. புதூர், வேளக்கா நத்தம், முசிறி குளித்கலை, கிருஷ்ண [illegible] வழியாக கரூ[illegible] |
| 2 | டி. என். ஒ. 2911 தையல் நாயகி டிரான்ஸ்போர்ட்ஸ் முசிறி. | கொப்பம்பட்டி, கொட்டப்பா[illegible] இராகுடி, [illegible]மை பேட்டை, [illegible]ாக தும்பலம், சி[illegible]டி பிரிவு சிட்டில[illegible]ல் யாக முசிறி வ[illegible] [illegible]2 |
| 3 | அ. டி. என். ஒ. 6130 அங்காளம்மன் டிரான்ஸ் போர்ட்ஸ், முசிறி. | திருச்சியிலிருந்து டி.டி. பேட்டை மேட் டுப்பாளையம் வழி யாக பில்லா பாளை யம் வரை. |



## இணைப்பு

| | (4) | (5) |
|---|---|---|
| | ஆ. டி. என். ஏக்ஸ் 4167 ஸ்ரீ லஷ்மி விலாஸ் பஸ் சர்வீஸ், ஆளத்துராயன் பட்டி. | தம்மாப் பட்டியிலிருந்து மங்கப்பட்டி, கொப்பம் பட்டி உப்பிலியாபுரம் முருகர் கூட்டு ரோடு, துறையூர், இராகு[illegible] பச்சப் பெருமாள்பட்[illegible] மேட்டுப் [illegible]ாளைய பில்லாபாளையம் [illegible] தேவி, மகாதேவி கூட்டு ரோடு, வரகூர் வழி யாக நாமக்கல் வரை. |
| 4 | டி. என். யு. 9012 திருமதி ஜே. சரோஜா, நாமக்கல். | டி. டி. பேட்டையிலிருந்து தும்பலம், முத்தம்பட் பட்டி, முசிறி, ஜம்பு நாகபுரம், இனாம் ஜெயங் கொண்டாம், குங்குமபுரம், கிளியம் பட்டி, பொன்சங்கம் பட்டி, கண்ணனூ[illegible] கூட்டுரோடு வழி[illegible] துறையூர் வரை. |
| | | [illegible]டில் டி[illegible] முசிறியி[illegible]ந்து குளித் [illegible]ல வழியாக கிருஷ் ணராயபுரம். |

## இணைப்பு

| பொதுமக்கள் புகார் பற்றிய விவரம். | எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய குறிப்பு. |
| --- | --- |
| (4) | (5) |
| கவுண்டம்பட்டி, மூவராயம்பாளையம் கிராம மக்கள் தையல்நாயகி மற்றும் ஸ்ரீமுருகன் டிரான்ஸ்போர்ட்ஸின் பேருந்துகள் இரண்டும் கடந்த ஒரு வார காலமாக கவுண்டம்பட்டி வழியாகச் செல்லாமல், திருப்பைஞ்சிலி வந்ததும் வேறு பாதையாக வாழ்மைமால்பாளையம், சோழங்கநல்லூர் குருவம்பட்டி சென்று பின் கண்ணுகுளம் வழியே வழக்கமான பாதையை அடைகிறது. என்று தெரிவித்து 13-8-1981 அன்று புகார் ஒன்றினை வட்டாரப் போக்குவரத்து அலுவலருக்குச் சமர்ப்பித்தனர். | பெரம்பலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் இப்புகார் பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுத்து, புகாரில் கூறப்பட்ட இரண்டு தனியார் பேருந்துகளும் குறிப்பிட்ட வழித் தடத்தில் ஒழுங்காக ஓடிக் கொண்டிருக்கின்றன. தற்போது மூவாரம்பாளையம் வழியாக இவ்விரண்டு பேருந்துகளும் செல்வதற்கு அனுமதி இல்லை. ஆகவே மூவாரம்பாளைய மக்கள் பயனடையும் அளவில் புதிய பேருந்து தடம் ஒன்றினை ஏற்படுத்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| சிட்டிலரை தரகம்பட்டி வழியாக அனுமதி இருந்தாலும் ஒழுங்காகக் குறிப்பிட்ட நேரத்தில் வருவதில்லை என்று சிட்டிலரை கிராமப் பொது மக்கள் 24-11-1981 அன்று புகார் மனு கொடுத்துள்ளனர். | இப்புகார் பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சிட்டிலறைக்கு எவ்வித டிரிப்பும் தவறாமல் ஓட்டும்படி பணிக்கப்பட்டு அவ்வாறு பேருந்தும் தவறாமல் ஓட்டப்பட்டு வருகின்றது. |
| பில்லாபாளையம் கிராம மக்கள் சார்பாக திரு. துரைசாமி என்னும் வழக்கறிஞர் மாவட்ட ஆட்சியாளர் மூலமாக 8-12-1981 அன்று புகார் மனு சமர்ப்பித்தார். கடந்த இரண்டு மாதமாக இக்கிராமத்தின் வழியாக அனுமதிக்கப்பட்ட இரண்டு தனியார் பேருந் | தனியார் பேருந்து உரிமையாளர் இருவரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அதன்படி டிரிப்புகள் ஏதும் தவறாமல் நடந்து வந்தனர். 1-1-1982 முதல் 24-8-1982 வரை அங்காளம்மன் டிரான்ஸ்போர்ட்டின் பேருந்து நிறுத்திக் கொள்ளப்பட்டதால் அவர் மீது |





| பொதுமக்கள் புகார் பற்றிய விவரம். | எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய குறிப்பு. |
| --- | --- |
| (4) | (5) |
| துகளும் ஒழுங்காக ஓடுவதில்லை என்றும் அவற்றிற்குப் பதிலாக அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விட வேண்டும் என்று கோரியுள்ளார். | மோட்டார் வண்டிகள் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே 1-2-1982 முதல் தற்காலிக உரிமங்கள் வழங்கி அக்கிராம மக்கள் பனயடையும் வகையில் இதர பேருந்துகள் அனுமதிக்கப்பட்டு ஓட்டப்பட்டு வருகின்றன. |
| முசிறியிலிருந்து ஜெயங்கொண்டான் வழியாக துறையூர் செல்லும் பார்வதி என்ற பெயருள்ள பேருந்து ஜெயங்கொண்டான் வழியாக செல்வதில்லை என்றும் அப்பேருந்து ஜெயங்கொண்டான் வழியாக ஒழுங்காகச் செல்ல உரிமையாளர் பணிக்கப்பட வேண்டுமென்று முசிறி ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து கடிதம் வந்துள்ளது. | பொதுமக்களிடமிருந்து புகார் ஏதும் வராமல் ஒழுங்காக தனது பேருந்தினை இயக்குமாறு பேருந்து உரிமையாளர் அறிவுறுத்தப்பட்டு அவ்வண்ணமே அவரும் ஒழுங்காக இயக்கி வருகிறார். |

135994
600 008.